# உதயன்

விலை வன்னி ரூபா.20 யாழ். ரூபா.30 பக்கங்கள் 52

சுடர் 30 — கதிர் 095 — வள்ளுவர் ஆண்டு 2046 — மாசி 17 ஞாயிற்றுக்கிழமை 01.03.2015


## இலங்கைக்கு இந்தியா ரூ. 500 கோடி ஒதுக்கீடு

கொழும்பு, மார்ச் 1

இந்தியாவின் புதிய வரவு–செலவுத் திட்டத்தில், இலங்கைக்கான உதவித் திட்டங்களுக்கு 500 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பா.ஜ.க தலைமையிலான மத்திய அரசின் நடப்பு மற்றும் அடுத்த ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் அருண் ஜெட்லி, நாடாளுமன்றத்தில் நேற்றுச் சமர்ப்பித்தார்.

கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியிலும், 19 சதவீதம் அதிகமான நிதி இந்திய வெளி

பக்கம் 25

## சீன நீர்மூழ்கிகள் அனுமதிக்கப்படா

**பீஜிங்கில் கூறினார் மங்கள**

கொழும்பு, மார்ச் 1

இலங்கைக் கடற்பரப்புக்குள் சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் நுழைவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்று, சீனத் தலைநகர் பீஜிங்கில் வைத்து வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கு இரண்டு நாள் பயணத்தை மேற்கொண்ட வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, சீனப் பிரதமர் லி கிகியாங், சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி ஆகியோரைச் சந்தித்

பக்கம் 25

# கனதி கொண்ட ஐ.நா அறிக்கை செப்ரெம்பரில்

## சம்பந்தனிடம் உறுதியளித்தார் ஐ.நாவின் அதிகாரி பெல்ட்மன்

கொழும்பு, மார்ச் 1

இலங்கை தொடர்பான விசாரணை அறிக்கை செப்ரெம்பரில், கனதியானதாக வெளிவரும். தமிழ் மக்கள் அது தொடர்பில் நம்பிக்கை இழக்கத் தேவையில்லை. வெளிவரும் அறிக்கையின் பரிந்துரைகளை, நடைமுறைப் படுத்தும் உத்தரவாதத்தை இலங்கை அரசிடமிருந்து ஐ.நா. சபை பெற்றுள்ளது.

–இவ்வாறு இலங்கைக்கு வந்துள்ள ஐ.நா. அரசியல் விவகார அதிகாரி ஜெப்ரி பெல்ட்மன், கூட்டமைப்பிடம் உறுதியளித்துள்ளார்.

இலங்கைக்கு நான்கு நாள் பயணமாக, ஐ.நா. பொதுச் செயலாளர் பான்கீ மூனின், அரசியல் விவகாரங்களுக்கான பிரதிச் செயலர் ஜெப்ரி பெல்ட்மன் வருகை தந்துள்ளார். இவர் முதல் சந்திப்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை நேற்று முற்பகல் 10.30 மணிக்குச் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பில், ஐ.நாவின் ஆசிய – பசுபிக் பிராந்தியத்துக்கான அரசியல் அதிகாரி, இலங்கைக்கான தூதுவர் சுபைனோ நண்டி ஆகியோரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில், தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தேர்தலின் பின் இலங்கையின் நிலைமையை மதிப்பீடு செய்வதற்

பக்கம் 26

## ஆணைக்குழுவின் அமர்வுக்கு எதிர்ப்பு

திருமலையில் நேற்றுக் கவனவீர்ப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 1

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுக்கு– உள்ளக விசாரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கவனவீர்ப்புப் போராட்டம் திருகோணமலையில் நேற்று நடத்தப்பட்டது. இந்தப் போராட்டம் இடம்பெற்றிருந்தாலும், 60 பேர் வரையில் ஆணைக்குழு முன்பாகச் சாட்சியமளித்துள்ளனர்.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு திருகோணமலையில் நேற்று ஆரம்பமானது. குச்சவெளிப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற அமர்வில், சாட்சியமளிப்பதற்காக 53 பேர் அழைக்கப்பட்டிருந்தனர்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகளைப் புறக்கணிக்

பக்கம் 26






## கியூ பொலிஸாரால் கிளி. இளைஞர் கைது

கச்சதீவு செல்ல முற்பட்டவேளை

கொழும்பு, மார்ச் 1

தமிழக அகதிமுகாமில் தங்கியிருந்த கிளிநொச்சியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், கச்சதீவு உற்சவத்துக்கு நேற்றுச் செல்ல முயன்றபோது,

பக்கம் 24

## புலமைப் பரிசில் ஓகஸ்ட் 23 இல்

கொழும்பு, மார்ச் 1

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. பழைய முறைமைக்கு அமையவே

பக்கம் 24

# கச்சதீவில் பக்தர் வெள்ளம்



கச்சதீவு, மார்ச் 1

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா 6 ஆயிரத்திற்கும் அதிகமான பக்தர்கள் பங்கேற்புடன் நேற்று ஆரம்பமாகியது. நெடுந்தீவுப் பங்குத் தந்தை அருட்திரு நேசகுமார் கொடியேற்றித் திருவிழாவை ஆரம்பித்து வைத்தார். இலங்கையில் இருந்து ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட பக்தர்களும், இந்தியாவில் இருந்து 4 ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட பக்தர்களும் திருவிழாவில் பங்கேற்றுள்ளனர்.

பக்தர்களுக்கு தேவையான

பக்கம் 26

## தமிழருக்கு புதிதாக எதுவும் தரவில்லை மைத்திரி அரசு

பறித்தவற்றையே திருப்பி எம்மிடம் வழங்குகிறது என்கிறார் முதலமைச்சர்

யாழ்ப்பாணம், மார்ச் 1

எம்மிடமிருந்து பறித்தவற்றையும், எமக்குச் சட்டப்படி வழங்க வேண்டியவற்றையுமே புதிய அரசு தருகின்றது. புதிதாக எதையும் தரவில்லை.

இவ்வாறு கொழும்பு அரசின் அமைச்சர்கள் முன்பாக, கருத்துத் தெரிவிக்கையில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.பொது நூலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற கலந்துரையாடலில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு அரசு வேண்டிய பண உதவிகளையும் அனுசரணைகளையும் வடக்கு – கிழக்கு மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க முன்வந்துள்ளது. அதனை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால் எமக்குத் தரப்படுவன யாவும் எமக்குச் சட்டப்படி கிடைக்க வேண்டியவை. அவை புதியன அல்ல என்ற எண்ணம் எங்கள் மக்கள் மனதில் எழாமல் இருக்க முடியாது.

காணி எங்களுடையது. அதை இதுவரை ஆக்கிரமித்து வைத்துத் திரும்பத்தர முயற்சிக்கின்றீர்கள். வரவேற்கின்றோம்.

பக்கம் 25




# முன்னரங்க வேலியை பின் நகர்த்தப் பணிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 1

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தினுள், இன்னமும் பாதுகாப்பு முன்னரங்க வேலி பின்நகர்த்தப்படவில்லை. இதனை நகர்த்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நேற்று ராணுவத்தினருக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

வலி.வடக்கு–வலி.கிழக்கு உயர் பாதுகாப்பு வலயங்களினுள் 6 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு முன்னோடியாக, விடுவிக்கப்படவுள்ள பிரதேசங்களை மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், அமைச்சின் செயலாளர், அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், பிரதேச செயலாளர்கள் ஆகியோர் நேற்றுக் காலை 8.30 மணிக்குச் சென்று நேரில் பார்வையிட்டனர்.

இதன்போது, விடுவிக்கப்படவுள்ள பகுதி முழுவதையும் அவர்கள் பார்வையிட்டுள்ளனர். பற்றைக் காடுகளாகவே பெரும்பாலான பிரதேசங்கள் காணப்படுகின்றன. வளலாயில் ஒரு பகுதி மாத்திரமே துப்புரவு செய்யப்பட்ட நிலையில் உள்ளது. மேலும், வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தை எல்லைப்படுத்தி அமைக்கப்பட்டிருந்த நிரந்தர பாதுகாப்பு வேலிக்குரிய தூண்கள் எதுவும் அகற்றப்படவில்லை. அத்துடன் உள்ளே அமைக்கப்பட்டிருந்த முன்னரங்க பாதுகாப்பு வேலியும் இன்னமும் அகற்றப்படவில்லை.

இவற்றை உடனடியாக அகற்றுமாறு, மீள்குடியேற்ற அமைச்சர், இராணுவத்தினருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். அத்துடன் மூன்று வாரங்களுக்குள் மக்களைக் குடியமர்த்துவதற்குரிய வகையில் சகலஏற்பாடுகளையும்மேற் கொள்ள வேண்டும் எனவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார். (த–5)

# அலரி மாளிகைப் பூக்கள் கம்பஹாவுக்கு மாற்றம்

கொழும்பு, மார்ச் 1

அலரி மாளிகையைச் சுற்றியுள்ள சுவரை அழகுபடுத்தும் வகையில் அங்கு வைக்கப்பட்டிருந்த பூந்தொட்டிகள் அனைத்தும் அகற்றப்பட்டுள்ளன.

2013ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு, கடந்த ஆட்சியாளர்களினால் இந்தப் பூந்தொட்டிகள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றைபராமரிப்பதற்கானசெலவு அதிகமாகக் காணப்படுவதன் காரணத்தினாலேயே இவையனைத்தும் அகற்றப்பட்டதாக பிரதமரின் ஊடக செயலாளர் தெரிவித்தார்.

அலரி மாளிகையிலிருந்து அகற்றப்பட்ட அனைத்துப் பூந்தொட்டிகளும் கம்பஹாவில் அமைந்துள்ள தாவரவியல் பூங்காவுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (த)

# தேர்தல் சீர்திருத்தம் 6 மாதங்கள் தேவை

## ஜயம்பதி விக்கிரமரட்ண கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 1

அரசின் நூறு நாள்கள் வேலைத் திட்டத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ள தேர்தல் சீர்த்திருத்தங்கள் மற்றும் அரச ஆட்சி அமைப்பு முறைமாற்றம் ஆகிய அரசமைப்பு திருத்தங்களை ஒரேகணத்தில் நடைமுறைக்கிடவேண்டும் எனச் சிலதரப்பினர் கோருகின்றனர். இதில் இணக்கம் காணப்பட்டால் நன்மையே. ஆனால், நிறைவேற்று அதிகாரமுறைமையை இல்லாதொழித்தலை உள்ளடக்கியதான 19ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முன்நிபந்தனையாகத் தேர்தல் சீர்திருத்தங்களைக் கோருவது தவறானவிடயம் எனத் தாம் கருதுவதாக பிரபல அரசமைப்பு சட்டத் தரணியும் தற்போதைய அரசமைப்பு திருத்தங்களை வரையும் குழவில் முக்கிய வகிபாகத்தை ஆற்றிவருபவருமான கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ண தெரிவிக்கின்றார்.

தற்போதைய நிலையில் அரச ஆட்சி அமைப்புமுறையில் மாற்றங்களைக் கொண்டுவருதல் மற்றும் சுயாதீன ஆணைக் குழுக்களை மீண்டும் கொண்டுவருதல் ஆகிய விடயங்களைத் தாங்கிய 19ஆவது திருத்தத்திற்கு அரசிலுள்ள அனைத்துக் கட்சிகள் மத்தியிலும் பூரண கருத்தொருமைப்பாடு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர், தேர்தல் சீர்திருத்தங்களைத் தாங்கிய 20ஆவது திருத்தத்தொடர்பில் இன்னமும் போதிய இணக்கப்பாடு ஏற்படவில்லை எனச் சுட்டிக்காட்டினார்.

தேர்தல் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு தனது கணிப்பில் இன்னமும் ஆகக்குறைந்தபட்சம் ஆறு மாத காலப் பகுதிசெல்லக்கூடும் எனவும் அவர் குறிப்பிட்டார்.



கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்துக்குச் செல்வதற்காகக் குறிகாட்டுவான் இறங்கு துறைமுகத்தில் யாத்திரிகர்களுக்கான பதிவு நடவடிக்கைகளில் இலங்கைக் கடற்படையினர் ஈடுபட்டனர். இதே வேளை, நேற்றுக் காலை 11 மணிவரை 8 படகுகளில் 700 இற்கும் மேற்பட்ட பயணிகள் குறிகாட்டுவான் இறங்குதுறை ஊடாகக் கச்சதீவுக்குச் சென்றனர். (த–14)

# லண்டன் விபத்தில் தமிழ்ப் பெண் சாவு

லண்டன், மார்ச் 1

லண்டனில் நேற்று நிகழ்ந்த வாகன விபத்தில் இலங்கை பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

லண்டனில் நேற்று மாலை நடந்த விபத்தில் 44 வயதான சுபாஹரி சோதிலிங்கம் என்ற இரண்டு பிள்ளைகளின் தாயே உயிரிழந்துள்ளார்.

ஹம்டனில் உள்ள தனது வீட்டுக்கு வெளியில் வேலைக்குச் சென்றுகொண்டிருந்தபோது பென்ஸ் கார் ஒன்று அவர் மீது மோதியுள்ளது. மேற்கு ஹம்டனில் இருந்து றோயல் பார்க் செல்லும் நோக்கில் பஸ்ஸில் ஏறுவதற்காக வீதியைக் கடந்து செல்லும்போது சுபாஹரி மீது கார் மோதியுள்ளது. அவர் மீது மோதிய கார் நிறுத்தப்படாமல் சென்றுள்ளது.

விபத்துக்காரணமாக தலையில் படுகாயம் ஏற்பட்டதுடன் அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுச் சிறிது நேரத்தில் உயிரிழந்துள்ளார்.

சமையல் தொழிலில் ஈடுபட்டு வரும் சுபாஹரி, 2006 ஆம் ஆண்டு லண்டனுக்குப் புலம்பெயர்ந்து சென்றார். (த–5)

# தென்மராட்சி பகுதியில் வாள் வெட்டு

கடைக்கு முன்னால் அமர்ந்திருந்த கடை உரிமையாளரும் அவரின் நண்பரும் இனம் தெரியாத நபர்களால் வாள் வெட்டுக்கு இலக்காகியுள்ள சம்பவம் ஒன்று நேற்று இரவு 9மணியளவில் சாவகச் சேரி கெருடாவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் இதே இடத்தை சேர்ந்த வர்த்தகரான சிவகுமார் சோபன் (வயது–27) அவரின் நண்பர் செல்வராசா ரவிந்திரன் (வயது –28) ஆகியோர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை மட்டுவில் பகுதியில் நடந்து வந்த குடும்பஸ்தரை மறைந்து இருந்த நபர் கொட்டனால் தாக்கியதில் குடும்பஸ் தர் படுகாயமடைந்தார்.

மட்டுவில் தெற்கை சேர்ந்த சிவலிங்கம் ஸ்ரீபன் (வயது –30) என்பவர் காயம டைந்த நிலையில் சாவகச்சேரி வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# ஐ.தே.க.வுடன் இணைய தயார்

## திஸ்ஸ அத்தநாயக்க செவ்வி

கொழும்பு, மார்ச் 1

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதற்கு தயாராகவே உள்ளேன். கட்சியில் மீண்டும் இணைந்து செயற்படுமாறு கட்சியின் அடிமட்டத்திலிருந்து அழைப்பு வந்த வண்ணமே உள்ளது. எனினும், கட்சியின் உயர்மட்டத்திலிருந்து இதுவரையில் எந்தவிதமான அழைப்பும் வரவில்லை.

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறிய திஸ்ஸ அத்தநாயக்க, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கினார். மஹிந்தவுக்கான தேர்தல் பிரசாரத்தின்போது அவர் பல கருத்துக்களை வெளியிட்டு சர்ச்சையில் சிக்கிக் கொண்டார்.

இந்தச் சர்ச்சை தொடர்பில் அவர் அண்மையில் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், அவர் வழங்கிய பிரத்தியேக செவ்வியின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:–

ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் இணைந்து செயற்படுமாறு கட்சியின் அடிமட்ட ஆதரவாளர்கள், நண்பர்கள், ஏற்பாட்டாளர்கள் என அனைவரும் தொடர்ந்து அழைப்பு விடுத்தவாறு உள்ளனர். எனினும், ஐக்கிய தேசியக் கட்சியின் உயர் மட்டத்திலிருந்து இதுவரை எந்த வித அழைப்பும் வரவில்லை.


பிறப்பிலிருந்தே ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளன் நான். எனது கட்சி அங்கத்துவத்தை நீக்குவதால் மாத்திரம் என்னை ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து பிரித்து விட முடியாது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நான் பாரிய அழுத்தங்களினாலேயே இந்தத் தீர்மானத்தை எடுக்க வேண்டி ஏற்பட்டது. தற்போது உருவாக்கப்பட்டுள்ள தேசிய அரசில் பொதுக் கொள்கையொன்று உருவாக்கப்படுமாயின் நான் இணைந்து செயற்பட தயாராகவே உள் ளேன் – என்றார்.

# போர்க்குற்றம் புரிந்தோர் தண்டிக்கப்படவேண்டும்

## சோபித தேரர் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 1



இறுதிப் போரில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்த உண்மைகள் கண்டறியப்படுவது நல்ல விடயம். போர் வெற்றியைக் காரணம் காட்டி குற்றமிழைத்த எவரும் தண்டனையில் இருந்து தப்பிக்கவோ அல்லது தண்டனை வழங்கப்படாமலோ இருக்க முடியாது எனச் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் கோட்டை நாக விகாரையின் விகாராதிபதியுமான மாதுளுவாவே சோபித தேரர் தெரிவித்தார்.

உண்மையைக் கண்டறிவதன் மூலமாக இவ்விடயத்தில் தெளிவைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாப்பரசர் முதற்கொண்டு உலகத் தலைவர்கள் பலரும் உண்மையைக் கண்டறிய வேண்டும் எனத் தெரிவித்த கருத்துடன் உடன்படுவதாகத் கூறிய சோபித தேரர், மறைப்பதற்கு இவ்விடயத்தில் ஏதுமில்லையல்லவா என்றும் தெரிவித்தார்.

இறுதிப்போரில் போர்க்குற்றங்கள் உட்பட மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதான குற்றச்சாட்டுக்கள் கடந்த 5 வருடங்களுக்கும் மேலாக இலங்கை மீது சர்வதேச அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றன. இந்நிலையில், இலங்கைக்கு அண்மையில் பயணம் செய்திருந்த பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸ் உட்பட உலகத் தலைவர்களும் இறுதிப்போரில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்த உண்மைகள் வெளிக்கொணரப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவ்விடயத்தில் உங்கள் நிலைப்பாடு என்னவென்று சோபித தேரிடம் வினவியபோது, உண்மைகள் கண்டறியப்படுவது நல்ல விடயமே. உண்மைகளைக் கண்டறிவதனூடாக நாம் தெளிவுபெறமுடியும் என்று குறிப்பிட்டார்.

போர் வெற்றியைப் பெற்றுக் கொடுத்தமைக்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த அனைத்துக் குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவிக்கப்படவேண்டும் என சில தரப்பில் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் குறித்து வினவியபோது, போர் வெற்றிக்கான கௌரவம் அவருக்கு வழங்கப்பட வேண்டும். ஆனால், அவர் ம்ட்டுமே போர் வெற்றிக்கு காரணமல்ல. அப்படியென்றால் சரத் பொன்சேகா தேங்காய் உரித்துக் கொண்டிருந்தாரா? போர் வெற்றியைப் பெற்றதற்காக வேறு குற்றங்களை இழைத்திருந்தால் தண்டனை வழங்காது இருக்க முடியாது. போதுமான சாட்சியங்கள் இருக்குமிடத்தில் குற்றச்சாட்டுக்களுக்கு தராதரம் பார்க்காது தண்டனை வழங்கப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு – என்றார்.(த)

# இரு தேசங்கள் ஒரு நாடு அடையப் போராடுவோம்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தீர்மானம்




வடமராட்சி, மார்ச் 1
சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட இரு தேசம் ஒரே நாடு என்ற எமது கொள்கையை அடைய, எமது கட்சியைக் கிராமம்தோறும் நிறுவி, புலம்பெயர்ந்துவாழும் எமது உறவுகளையும் தமிழக உறவுகளையும் ஒன்றிணைத்துப் போராடுவோம். இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சிகளின் வருடாந்த தேசிய மாநாடு யாழ்.கரவெட்டி பிரதேச சபை மண்டபத்தில் நேற்று சனிக்கிழமைகாலை 9 மணிக்கு தொடங்கி நடைபெற்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில், கட்சியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், கட்சியின் தேசிய அமைப்பாளர் மணிவண்ணன், வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள், தொண்டர்கள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

இந்த மாநாட்டின் இறுதியில் 7 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அவற்றின் விவரம் வருமாறு:–

01. சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட இரு தேசம் ஒரே நாடு என்ற எமது கொள்கையை அடைய எமது கட்சியைக் கிராமம்தோறும் நிறுவி, புலம்பெயர்ந்துவாழும் எமது உறவுகளையும் தமிழக உறவுகளையும் ஒன்றிணைத்து போராடுவோம்.

02. தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட, கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள பெரும் இன அழிப்புக்கு எதிராகச் சர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்தக்கோரி, எமது செயற்பாடுகளை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெருமளவில் முன்னெடுத்தல்.

03. காணாமற்போனவர்கள், அரசியல் கைதிகள் என்பவர்களின் விடுதலையை வலியுறுத்தியும், நில அபகரிப்புக்கு எதிராகவும் பன்முகப்படுத்தப்பட்ட போராட்டங்களை முன்னெடுப்போம்.

04. வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் தமிழ்த் தேசியப் பேரவையை நிறுவி, தமிழ் மக்களை நிர்வகிக்கும் ஒரு நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குவோம்..

05. போரினால் பாதிக்கப்பட்ட அவயவங்களை இழந்தவர்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பப் போராடுவோம்.

06. புலம்பெயர்ந்துவாழும் தமிழ் மக்களின் பேராதரவுடன் வடக்கு கிழக்கில் அபிவிருத்திப்பணிகளை முன்னெடுப்பதற்கு எமக்கான பொருளாதாரக் கொள்கையை வகுத்துச் செயற்படுவோம்.

07. எமக்கான கல்விக் கொள்கை, விளையாட்டுக்கொள்கை, கலை, பண்பாட்டுக்கொள்கை, சுகாதாரக் கொள்கை என்பவற்றை உருவாக்கி முன்னெடுப்போம். ஆகிய தீர்மானங்களே நிறைவேற்றப்பட்டுள்ளன. (த–173–105)

# வலி.தென்மேற்குப் பகுதியில் 10,000 பேருக்குக் குடிதண்ணீர்

## கழிவு ஒயிலால் வந்தது பாதிப்பு

வலி.தென்மேற்கு, மார்ச் 1
வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் பல கிணறுகளில் கழிவு ஒயில் கலந்திருப்பதையடுத்து கிணற்று நீரை குடிக்கவோ சமைக்கவோ பயன்படுத்த வேண்டாம் என்று பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சுகாதாரப் பிரிவினர் ஒலிபெருக்கி மூலம் அறிவித்துள்ளனர். இதனால் நான்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் பத்தாயிரத்திற்கு அதிகமான மக்களுக்கு குடிதண்ணீர் வழங்க வேண்டிய தேவை பிரதேச சபைக்கு ஏற்பட்டுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் சுதுமலை வடக்கு,தெற்கு சண்டிலிப்பாய் வடக்கு மத்தி ஆகிய கிராமங்களிலுள்ள 35இற்கும் மேற்பட்ட கிணறுகளில் கழிவு ஓயில் கலந்திருப்பதாக மக்கள் செய்த முறைப்பாட்டை அடுத்து சம்பத்தப்பட்ட அதிகாரிகளினால் சில கிணற்று நீர் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட போது கழிவு ஒயில் கலந்திருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து மேற்படி நான்கு கிராமங்களிலுள்ள கிணற்று நீரை குடிப்பதற்கோ சமைப்பதற்கோ பயன்படுத்த வேண்டாம் என்று சண்டிலிப்பாய் சுகாதார பிரிவினர் ஒலி பெருக்கி மூலம் அறிவித்துள்ள துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு பிரதேச சபையைக் கோரியுள் ளனர்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ள இரு பாடசாலைகள் உட்பட எட்டு இடங்களில் தற்பொழுது குடிநீர்தாங்கிகள் வைத்து பிரதேச சபையினால் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

ஏனைய பாதிக்கப்பட்ட இடங்களுக்கும் குடிதண்ணீர் வழங்குவதற்கான ஒழுங்குகளை பிரதேச சபை மேற்கொண்டுள்ளது. வலிகாமம் மேற்கில் உள்ளசங்கானைவைத்தியசாலையில் உள்ள குழாய்க்கிணறு உட்பட இரு கிணறுகளிலும் கழிவு ஒயில் கலந்திருப்பது பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து வலி.மேற்கு பிரதேச சபையினால்வைத்தியசாலைக்குகுடிதண்ணீர்வழங்கப்பட்டு வருகிறது.(த–115)

# விவசாயக் குடும்பங்களுக்கு நீர் விநியோகம் விரைவில்

வலி.தென்மேற்கு,மார்ச் 1
மாந்தைகிழக்குவவுனிக்குளம்இடதுகரையிலுள்ள விநாயகபுரத்தில் வசிக்கும் விவசாயக் குடும்பங்கள் விவசாயத்தில் ஈடுபடுவதற்கு வசதியாக சுமார் 2 கோடி 27 லட்சம் ரூபா செலவில் நீர் விநியோகம் செய்யப்படவுள்ளது. வடமாகாண சபையின் நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த வேலைத்திட்டத்தினால் அந்தக் கிராமத்தில் வசிக்கும் 130 குடும்பங்கள் நன்மையடையவுள்ளதாக பாண்டியன்குளம் கமநல சேவை நிலையத் தலைவர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

180 ஏக்கர் கொண்ட இந்தக் கிராமத்தில் 1964 ஆம் ஆண்டு குடியேறிய குடும்பங்கள் நீர் வசதியின்றி மேட்டுநிலப் பயிர் செய்ய முடியாமல் திண்டாடினார்கள். இந்த நிலை குறித்து பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு தெரி யப்படுத்தியிருந்த போதிலும் நீதி கிடைக்காத காரணத்தினால் நீர் விநியோகத் திட்டம் ஆரம்பிக்கப் படவில்லை. இதனால் இங்கு வாழ்ந்து வந்த குடும்பங்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டிருந்தன.

விவசாயம் செய்யக்கூடிய நிலம் தரிசு நிலமாக மாறி வருவது குறித்து வடமாகாண விவசாய அமைச்சருக்கு சுட்டிக்காட்டியுள்ள இந்தப் பகுதி மக்கள் வாழ்வாதாரத்தைக் கருத்திற் கொண்டு விவசாயம் செய்வதற்கு வசதியாக நீர் விநியோகத்தைச் செய்து தரும்படி கோரியிருந்தனர்.

இந்த மக்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட விவசாய அமைச்சர் வவுனிக்குளத்திலிருந்து 18 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள விநாயகபுரத்துக்கு குழாய் மூலம் நீர் வழங்குவதற்கு வசதியாக வடமாகாண சபை நிதியிலிருந்து 2 கோடி 27 லட்சம் ரூபா ஒதுக்கியிருந்தார்.

இந்த நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த வேலைத் திட்டம் விரைவாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. வேலை முடிவடைந்தது 180 ஏக்கர் மேட்டு நிலத்தில் விவசாயத்தில் ஈடுபடுவதற்கான ஒழுங்குகளை மக்கள் மேற்கொண்டுள்ளனர்.

வாய்க்காலில் இருந்து வரும் நீரை விரயமாக்காமல் பாதுகாக்கும் வகையில் விவசாயம் செய்யப்படவுள்ள தரைகளில் குழாய்கள் அமைக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. (த–115)

# பச்சிலைப்பள்ளி பிரதேச தவிசாளர் பதவி நீக்கம்

வலி.தென்மேற்கு, மார்ச் 1
தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் உட்பட ஆளுங் கட்சியைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்கள் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இது குறித்து பிரதேச சபைக்கு அறிவித்துள்ளார்.

இதையடுத்து 9 உறுப்பினர்களைக் கொண்ட பிரதேச சபையில் தற்பொழுது ஆறு உறுப்பினர்கள் அங்கம் வகிக்கிறார்கள். இவர்களில் மூன்று உறுப்பினர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்தவர்களாவர். ஏனைய மூன்று உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்களாவார்.

ஆளும் கட்சியைச் சேர்ந்த தவிசாளர் உட்பட மூன்று உறுப்பினர்களின் நடவடிககையில் அதிருப்தி கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் ஆனந்தசங்கரி, சுப்பிரமணியன் சுரேன், கிருஷ்ணன் வீரபாகதேவர், பெனாட் டொமினிக் அன்ரன் ஆகிய மூவரையும் கட்சியிலிருந்து நீக்கிவிட்டதாக யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளருக்கு ஏற்கனவே அறிவித்திருந்தார். இதையடுத்து மூவரையும் பிரதேச சபை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கி விட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இது குறித்து வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டதுடன் பிரதேச சபைக்கும் கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து தற்பொழுது ஆறு உறுப்பினர்களுடன் பிரதேச சபை இயங்கி வருகிறது. (த–115)

# சகல பாடசாலைகளும் வடக்கில் அபிவிருத்தி

## இராஜாங்க கல்வி அமைச்சர்

யாழ்ப்பாணம், மார்ச் 1
வடக்கில் குறிப்பிட்ட சில பாடசாலைகள் மாத்திரம் அனைத்து வசதிகளுடனும் இயங்குவதனால் தான் மாணவர்களை அனுமதிப்பதில் நெருக்கடி நிலவுகிறது. அந்த நெருக்கடியைத் தவிர்ப்பதற்காகத் தான் ஏனைய பாடசாலைகளை அபிவிருத்தி செய்து வருகிறோம் என்று தெரிவித்த இராஜாங்க கல்வி அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன், வடக்கில் பல பாடசாலைகள் தற்பொழுது தான் துளிர்விடத் தொடங்கியுள்ளன என்றும் தெரிவித்தார்.

யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நிர்மாணிக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வுகூடத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
வடக்கில் கல்வி வாசனை நன்றாக இருக்கிறது. தற்போது தான் பல பாடசாலைகள் துளிர்விடத் தொடங்கியுள்ளன. வடமாகாண சபை முன்னைய காலத்தைவிட தற்போது சுயமாகச் செயற்படக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

தற்பொழுது மாகாண மத்திய அமைச்சு திட்டமிட்டு இணைந்து செயற்பட்டு வருகிறோம். கல்வி அபிவிருத்தி தொடர்பில் மத்திய அமைச்சுக்குக் கூறினால் கல்வி அபிவிருத்தி நன்றாக இருக்கும். முன்னரைவிட கல்விக்கு 6 வீத நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் மூலமாக வடக்குக்கும் மத்திய அரசு ஒதுக்கிய நிதி இரண்டு மடங்காக வாசிப்புள்ளது.

> “ வடக்கில் இன்னமும் 90 தொழில் நுட்ப ஆய்வுகூடங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

தரம் 1, 6 வகுப்புக்களுக்கான அனுமதிக்கு அதிக பணம் அறவிடப்படுகிறது. அது மிக மோசமாகவுள்ளது. அது உள்ளிட்ட ஊழலற்ற அரசை உருவாக்கவே அவ்வாறு உத்தரவிடப்பட்டுள்ளது – என்று தெரிவித்தார்.

வேம்படி பாடசாலைக்கு மல்ரி புறொஜெக்ரர் புத்தகங்கள் உள்ளிட்ட பொருள்களையும் வழங்கியுள்ளார்.

வடமாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா உரையாற்றுகையில், பாடசாலைகளில் காணி உட்படப் பல பிரச்சினைகள் உள்ளன. அவற்றைத் தீர்க்க வேண்டும். வேம்படி பாடசாலைக்கும் காணியைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்– என்றார்.

வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் உரையாற்றுகையில்,
வடக்கில்நிர்மாணிக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வுகூடங்களில் 18 ஆவது பாடசாலையாக வேம்படிப் பாடசாலை அமைந்துள்ளது. இன் னும் 90 பாடசாலைகள் திறக்கப்படவுள்ளன–என்றார். (த–4)

# கோழிக்குஞ்சு உயிரிழப்பு எமக்குத் தொடர்பில்லை

தென்மராட்சி, மார்ச் 01
நாவற்குழிப் பிரதேச மக்களுக்கு வாழ்வாதாரத் திட்ட நிதி ஒதுக்கீட்டிலான கோழிக்குஞ்சுகள் விநியோகம் சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டதாகவும், கோழிக்குஞ்சுகள் விநியோகத்திற்கும் தமது அலுவலகத்திற்கும் தொடர்பில்லையென சாவகச்சேரி கால்நடை மருத்துவர் க.ரகுநாதன் அறிவித்துள்ளார்.

சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினால் வழங்கப்பட்ட கோழிக்குஞ்சுகளை மூடிய பெட்டிக்குள் வைத்து நாவற்குழிக்குக் கொண்டு சென்றதால் 20 கோழிக் குஞ்சுகள் இறந்ததாகவும் அவர் அறிவித்துள்ளார்.

சாவகச்சேரி கால்நடை மருத்துவர் பணிமனையினால் நாவற்குழி பிரதேச மக்களுக்கு வழங்கப்பட்ட கோழிக்குஞ்சுகளில் சில இறந்தமை தொடர்பாக வெளியான செய்தியையடுத்து கால்நடை மருத்துவர் இவ்வாறு அறிவித்துள்ளார்.

நாவற்குழிப் பிரதேச மக்களுக்க வழங்கப்பட்ட கோழிக் குஞ்சுகளில் இறந்த பல குஞ்சுகள் நாவற்குழி 300 வீட்டுத்திட்ட சான்றோர் சனசமூக நிலைய முன்றலில் வைக்கப்பட்டிருந்தமையும், இந்த கோழிக் குஞ்சுகள் விநியோகத்திற்கும் தமது அலுவலகத்திற்கும் தொடர்பில்லையெனவும் ஏற்கனவே தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (த–9)

# வேலைவாய்ப்பு

தொழில்கல்வி நிலையத்திற்கு போதனா ஆசிரியர் தேவை ( முல்லைத்தீவு மாவட்டம் )

**AIDE - ET - ACTION INTERNATIONAL SRI LANKA.**

கீழ்வரும் போதனா ஆசிரியர் வேலை வெற்றிடமாக ஒட்டுசுட்டான் இல் அமைந்துள்ள எமது தொழிற்கல்வி நிலையமான iLEAD (Initiative for Livelihood Education and Development ) இல் காணப்படுகின்றது

• **Electrician**

அனுபவமுள்ளவர்கள் தங்கள் தொடர்பு இலக்கத்துடன் கூடிய சுயவிபரக்கோவையை கீழ் வரும் முகவரிக்கு 08 . 03 . 2015 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும் ( மின்னஞ்சலும் செய்யலாம்)

**THE ADMINISTRATIVE OFFICER**
**23-1/1, Gregory's Road, Dehiwala.**
**E-Mail : ilead.colombo@gmail.com**

max adz

# டோஹா - கட்டாரில் முதற்தர கம்பனிகளில் வேலைவாய்ப்பு

01. உணவு தயாரிக்கும் கம்பனியில் (ஓமான்)

| தொழில் | என் | சம்பளம் QR ரூபா. |
|---|---|---|
| நீட்ட முகாமையாளர் | 05 | 220 - 75,600 |
| HSE உத்தியோகத்தர் | 03 | 140 - 48,100 |
| கேற்றரிங் மேற்பார்வையாளர் | 06 | 110 - 37,800 |
| ஆசிய உணவு பிரதம சமையலாளர் | 02 | 110 - 37,800 |
| அரேபிய உணவு பிரதம சமையலாளர் | 05 | 140 - 41,800 |
| பிரதம சமையலாளர் (சகல நாடு) | 08 | 140 - 41,800 |
| சமையல் உதவியாளர் | 06 | 70 - 24,000 |
| சலட் தயாரிப்பாளர் | 04 | 70 - 24,000 |
| இறைச்சி சமையலாளர் | 02 | 70 - 24,000 |
| வெதுப்பக, பேஸ்ரி தலைமையாளர் | 04 | 140 - 48,100 |
| பேஸ்ரி தயாரிப்பாளர் | 06 | 90 - 30,900 |
| உணவு பரிமாறுபவர் | 10 | 70 - 24,000 |
| சமையலறை சுத்திகரிப்பாளர் | 06 | 70 - 24,000 |
| களஞ்சிய காப்பாளர் | 06 | 110 - 37,800 |
| சப்பாடி தயாரிப்பாளர் | 04 | 70 - 24,000 |
| லோன்றி மான் | 04 | 70 - 24,000 |
| லோன்றி மேற்பார்வையாளர் | 03 | 70 - 24,000 |
| வீட்டு பராமரிப்பாளர் | 06 | 70 - 24,000 |
| வீட்டு பராமரிப்பு மேற்பார்வையாளர் | 03 | 110 - 37,800 |
| அராபிய சமையலாளர் | 03 | 140 - 48,100 |

நிபந்தனைகள்:
இரண்டு வருட ஒப்பந்தம், இலவச உணவு, தங்குமிடம், மருத்துவம், நாளொன்றுக்கு 8 மணித்தியாலம், வாரத்தில் 6 நாள் வேலை. ஒப்பந்த முடிவில் டோஹாவில் இருந்து கொழும்புக்கு வரும் விமான டிக்கட் இலவசம்.மற்றையவை டோஹா - கட்டார் நாட்டு தொழிலாளர் சட்டதிட்டங்களுக்கு அமைய. கட்டணம் SLBFE இனால் அங்கீகரிக்கப்பட்ட 82,000 ரூபா மட்டுமே.

**1QR =Rs. 344.09** (Add.app.No : AL/2769/10/15)

02. நிர்மாண / கட்டுமான கம்பனியில் (டோஹா)

| தொழில் | என் | சம்பளம் QR | ரூபா. |
|---|---|---|---|
| மேசன் | 09 | | 1200 - 43,600 |
| சட்டரிங்-தச்சதொழிலாளி | 07 | | 1200 - 43,600 |
| இரும்பு பொருத்துபவர் | 05 | | 1200 - 43,600 |
| குழாய் பொருத்துபவர் (பிளம்பர்) | 02 | | 1200 - 43,600 |
| பெயின்டர் | 05 | | 1200 - 43,600 |
| AC டெக்னீசியன் | 05 | | 1400 - 50,900 |
| சாரதி (கனரக) | 05 | 1500-1700 | 54,500 - 61,800 |
| எந்திர தொழில்நுட்பவியலாளர் | 02 | | 1400 - 50,900 |
| HVAC தொழில்நுட்பவியலாளர் | 04 | | 1600 - 58,200 |
| எலக்ட்ரோனிக் டெக்னீசியன் | 03 | | 1400 - 50,900 |
| HVAC மேற்பார்வையாளர் | 05 | 2000-2500 | 72,700 - 90,900 |
| மெக்கானிக்கல் கம்மனர் | 05 | 2000-2500 | 72,700 - 90,900 |
| சாரதி (இலகுரக) | 01 | | 1400 - 50,900 |

நிபந்தனைகள்:
இரண்டு வருட ஒப்பந்தம், இலவச உணவு, தங்குமிடம், மருத்துவம், நாளொன்றுக்கு 8 மணித்தியாலம், வாரத்தில் 6 நாள் வேலை. ஒப்பந்த முடிவில் டோஹாவில் இருந்து கொழும்பு வர விமான டிக்கட் இலவசம்.மற்றையவை டோஹா - கட்டார் நாட்டு தொழிலாளர் சட்டதிட்டங்களுக்கு அமைய. கட்டணம் SLBFE இனால் அங்கீகரிக்கப்பட்ட 100,000 ரூபா மட்டுமே.

**1QR = 36.38/=** (Add.app.No : AL/2769/10/15)

05. பாதுகாப்பு சேவை அதிகாரி (டோஹா)

| தொழில் | என் | சம்பளம் QR ரூபா. |
|---|---|---|
| பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண்) | 66 | 1200 - 43,600 |
| சாரதி (இலகுரக வாகனம்) | 01 | 1600 - 58,200 |
| பாதுகாப்பு உத்தியோகத்தர் (பெண்) | 10 | 1400 - 50,900 |

நிபந்தனைகள்:
இரண்டு வருட ஒப்பந்தம், தங்குமிடம், மருத்துவம் இலவசம். 200QR உணவுக்கு கொடுப்பனவு, நாளொன்றுக்கு 8 மணித்தியாலம், வாரத்தில் 6 நாள் வேலை. ஒப்பந்த முடிவில் டோஹாவில் இருந்து கொழும்புக்கு வர விமான டிக்கட் இலவசம்.மற்றையவை டோஹா - கட்டார் நாட்டு தொழிலாளர் சட்டதிட்டங்களுக்கு அமைய. கட்டணம் SLBFE இனால் அங்கீகரிக்கப்பட்ட 95,000 ரூபா மட்டுமே.

**1QR =Rs. 36.38/=** (Add.app.No : AL/2769/13/15)

04. சுத்திகரிப்புசேவை கம்பனியில் (டுபாய்)

| தொழில் | என் | சம்பளம் |
|---|---|---|
| சுத்திகரிப்பாளர் (பெண்) | 50 | 1000 - 36,000 |
| சுத்திகரிப்பாளர் (ஆண்) | 50 | 850 - 30,000 |

நிபந்தனைகள்:
இரண்டு வருட ஒப்பந்தம், தங்குமிடம், மருத்துவம் இலவசம். ஆண்களுக்கு உணவு வழங்கல், பெண்களுக்கு உணவு வழங்கப்படமாட்டாது. இருவழி விமான டிக்கட் இலவசம், மற்றையவை டுபாய் நாட்டு தொழிலாளர் சட்டதிட்டங்களுக்கு அமைய. கட்டணம் SLBFE இனால் அங்கீகரிக்கப்பட்ட 95,000 ரூபா மட்டுமே.

**1Dhs = Rs.36.07/=** (Add.app.No : AL/2769/13/15)

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: 037 494 5555, 077 45 74 555 (அசோக்)

இணையத்தளம் : www.prudentialagency.lk

**புருடென்ஷல்**
வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் (Pvt.) Ltd.

72/1,2 ஆவது மாடி, கொழும்பு வீதி, குருநாகல்.


## மருதனார்மடம் விபத்தில் இளைஞர் படுகாயம்


மருதனார்மடம் சந்திக்கு அருகாமையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் பலத்தகாயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தனது நண்பருடன் மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணத்தில் இருந்து தெல்லிப்பழை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது மருதனார்மடம் சந்திப் பகுதியில் டிப்பர் வாகனத்துடன் மோதுண்டே அவர் படு காயங்களுக்கு உள்ளாகி பின்னர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த மற்றைய இளைஞர் தூக்கி வீசப்பட்டதால் சிறுகாயங்களுடன் தப்பித்துக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று மாலை 4.45 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் ஆறுகால் மடத்தைச் சேர்ந்த சி.சுதர்சன் (வயது–22) என்பவரே விபத்தில் படுகாயமடைந்து வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். (த–ரி)


ஓம்சக்தி




மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு
ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கம் யாழ்ப்பாணம் நடாத்தும்

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர்பீட ஆன்மிககுரு அருள்திரு

**அம்மா அவர்களின் 75 ஆவது**
**பவளவிழா பெருமங்கல விழா**

காலம் : 03.03.2015 செவ்வாய்க்கிழமை நேரம் : காலை 8.00 மணி
இடம் : யாழ். பரமேஸ்வரி மண்டபம், நல்லூர்

அன்னையும் வருக! அருளமுதம் பெறுக!

உலகமெல்லாம் சக்திநெறி ஓங்க வேண்டும்!
ஒவ்வொருவர் மனக்குறையும் நீங்க வேண்டும்!
அன்னையின் பணியில்,
ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கம், யாழ்ப்பாணம், இலங்கை
தொ.பே: 071 8565662


## வென்றது யாழ்.லீக்

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட் டச் சுற்றுப் போட்டித் தொடரின் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் யாழ். உதைபந்தாட்ட லீக் அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

நேற்றுச் சனிக்கிழமை நீர்கொழும்பு சென்.மேரிஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் நீர்கொழும்பு உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து யாழ்.உதை பந்தாட்ட லீக் அணி மோதிக் கொண்டது. இதில் ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியினதலா 2 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. யாழ்.உதைபந்தாட்ட லீக் அணிக்கும் நீர் கொழும்பு உதைபந்தாட்ட லீக் அணிக்கும் இடையில் கடந்த வாரம் யாழ்ப்பாணம் அரியாலையில் அமைந்துள்ள உதைபந்தாட்டப் பயிற்சி மைதானத்தில் இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் யாழ்.உதை பந்தாட்ட லீக் அணி வெற்றி பெற்றமை குறிப்பிடதக்கது. இறுதியாட்டம் யாழ்ப்பாணத்தில் இடம் பெறவுள்ளது. (த–23)

## விபத்தில் மாணவன் காயம்

சாவகச்சேரி, மார்ச் 1

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் தனியார் கல்வி நிலையத்துக்கு சென்று விட்டு சைக்கிளில் வீடு திரும்பிய மாணவனை ஏ–9 வீதியில் வைத்து பஸ் மோதியதில் மாணவன் காயமடைந்துள்ளார்.

வரதன் நிறோஜன் (வயது– 19) என்பவரே சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். (த–9)

# வலி கிழக்கு பிரதேச சபை, புத்தூர் கேள்வி அறிவித்தல் - 2015

**கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கு இக்ராட் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.**

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி : 2015. 03.02 தொடக்கம் 2015.03.16 மு.ப. 10.00 மணிவரை.
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 2015.03.16 நண்பகல் 12.00 மணிவரை.
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 2015.03.16 நண்பகல் 12.00 மணி.
(கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் போது கேள்விப்பத்திரதாரரும் சமுகமளிக்கலாம்)

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர், வலி கிழக்கு பிரதேச சபை, புத்தூர்" என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலமாகவோ அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் நேரடியாகவோ எதிர்வரும் 2015.03.16 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைப்பதுடன் இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் எழுதப்படல் வேண்டும்.

| இல. | வேலையின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | VAT 12% NBT 2% |
|---|---|---|---|---|---|
| 1 | ஆழகிய வான்தோட்ட வீதி திருத்தம் கோப்பாய் | C10 | 10000.00 | 1000.00 | 142.40 |
| 2 | கொல்களம் திருத்தம், அச்சுவேலி | C9 | 17250.00 | 1000.00 | 142.40 |
| 3 | ஆனந்தபுரம் வீதி திருத்தம், கல்வியங்காடு | C10 | 10000.00 | 1000.00 | 142.40 |
| 4 | ஞானபாஸ்கரோதயா வீதி திருத்தம் கோப்பாய் | C10 | 10000.00 | 1000.00 | 142.40 |
| 5 | காளி கோயில் வீதி திருத்தம் பத்தமேனி | C10 | 10000.00 | 1000.00 | 142.40 |

மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**வ.க. துரைசிங்கம்**
**தவிசாளர்,**
**வலி கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம் , புத்தூர்.**
**27.02.2015**

## அல்வாய் ஸ்ரீலங்கா வலயச் சம்பியன்



கரணவாய்,மார்ச் 1
பலம்பொருந்திய தேவரையாளி இந்துக் கல்லூரியை 2–0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து வலயச் சம்பியனாகியது அல்வாய் சிறிலங்கா வித்தியாலய மகளிர் அணி.

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 19 வயதுப் பெண்களுக்கான ஆட்டத்தின் இறுதியாட்டத்தில் அல்வாய் சிறிலங்கா வித்தியாலயமும், தேவரையாளி இந்துக் கல்லூரியும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் ஆண்களுக்கு பெண்கள் சளைத்தவர்கள் அல்ல என்று நிரூபிக்கும் வகையில் இரு அணியினரும் சமபலத் துடன் மோதிக் கொண்டனர். முதல் பாதி ஆட்டத் தில் அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலய மாணவி விந்துஜா அருமையான கோல் போட ஆட்டத்தில் பரபரப்பு நிலை தொற்றிக் கொண்டது. தொடர்ந்து இரு அணியினரும் மாறிமாறி கோல் போட முயற்சித்த போதும் கோல்கள் போட முடிய வில்லை. இந்தச் சூழ்நிலையில் 1–0 என்று ஸ்ரீலங்கா வித்தியாலயம் முன்னிலை பெற்றிருந்த போது ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டிருந்தது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி விறுவிறுப்பாக இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போது அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலய வீராங்கனை டென்ஸியா 2 ஆவது கோலைப் போட 2:0 என்ற கோல் கணக்கில் அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயம் வென்று இந்த வருட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

இந்தப் போட்டியின் மூன்றாம் இடத்தினை நெல்லியடி மத்திய கல்லூரி பெற்றுக் கொண்டது. (த–108)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 1
நெடியகாடு இளைஞர் விளையாட்டு கழகம் யாழ் மாவட்ட ரீதியில் நடத்தும் யாழ்ப்பாணம் வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் றெட்றேஞ்சஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த–23)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 1
இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் ஏவ்.ஏ கிண்ணத்துக்கான 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டித் தொடரின் யாழ். உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை அரியாலையில் அமைத்துள்ள உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

(த–23)


STUDY MEDICINE AND ENGINEERING
AT VERY LOW COST



Spot Admission & Schlorship

MEDICAL UNIVERSITY OF SOFIA - EUROPEAN UNION,
BELARUSIAN STATE MEDICAL UNIVERSITY - BELARUS,
VICTOR BABES UNIVERSITY OF MEDICINE - ROMANIA,
TECHNICAL UNIVERSITY OF SOFIA - EUROPEAN UNION,

- SLMC, GMC-UK, USMLE-USA, AMC-Australia and WHO recognized Medical Universities World Wide
- 100 % guaranteed
- No hidden charges
- Complete refund due to any consultancy unit fault

T & C Apply

Students with A/L and Pending Results

STUDENT CONSULTANCY UNIT
RED CROSS CONSULTANCY SERVICES

Consultancy arm of the Sri Lanka Red Cross Society

3rd Floor, Red Cross BLDG, No. 106, Dharmapala Mw, Colombo 07
Tel : 011 434 7070 Mob : 076 671 6083, 077 670 2222, 077 670 0009
Fax : 011 268 2876 Email : admission@rcscu.lk Web : www@rcscu.lk



WATER TEC Husqvarna Einhell

சென்.அந்தனீஸ் ஹாட்வெயார் (பிறைவேட்) லிமிட்டெட்டின் கிளிநொச்சியில் அமைந்துள்ள காட்சிச்சாலைக்காக பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

காட்சிச்சாலை விற்பனை உதவியாளர் -Showroom Sales Assistant

- க.பொ.த. (உ/த.) பரீட்சையில் சித்திபெற்றிருத்தலுடன் சிறந்த கல்விப் பின்னணியொன்றை தன்னகத்தே கொண்டிருத்தல்.
- குறிபிட்ட துறையில் அனுபவம் இருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- வயது 30 க்குக் குறைந்திருத்தல் வேண்டும்.

சம்பளம் பேசித் தீர்த்துக்கொள்ள முடியும் என்பதுடன், குறிப்பிட்ட இலக்கை நிறைவேற்றும்போது விசேட சலுகைகளும் மற்றும் கொடுப்பனவும் வழங்கப்படும்.

உங்களைப் பற்றிய தகவல்களை அறிந்துகொள்ள உறவினரல்லாத இருவரின் பெயர் மற்றும் முகவரிகளுடன் இந்த அறிவித்தல் திகதியிலிருந்து ஏழு (7) நாள்களுக்குள் உங்கள் விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

The Manager HR & Administration,
St. Anthony's Hardware (Pvt) Ltd,
No: 524,Sri Sangaraja Mawatha, Colombo 10.
Fax: 011-2446554 E-mail: vacancy@stanthonys.lk

St.Anthony's
(சி/19960)(4.3.7)
Reaching for Excellence



யஜ்ஞோபவீத தாரணம்

வடகோவை சித்தாந்தபானு பிரம்மஸ்ரீ சோ-சுப்பிரமணியக் குருக்கள்,
கொழும்புத்துறை பிரம்மஸ்ரீ ச.தியாகராஜஐயர் ஆகியோரின்
ப்ரபௌத்திரனும்
பிரம்மஸ்ரீ சோ -சுசீந்திரராஜன் - கௌசல்யா
தம்பதிகளின் த்விதீய குமாரனுமாகிய
சிரஞ்சீவி சு-சுருதிலோஜிதசர்மா (சௌமியன்)
அவர்களின் யஜ்ஞோபவீததாரணம் (பூணூல் தரித்தல்) 02.03.2015 திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற ஆசீர்வதிக் கின்றோம்.

பிரம்மஸ்ரீ சு- சோமசுந்தரக்குருக்கள்
பிரம்மஸ்ரீ தி-சிவகுமாரசர்மா.
} தாத்தாமார்

(57389)(4.3.7)



vacancies in Jaffna

முன்னணி கல்வி நிறுவனத்தின் புதிதாக திறக்கப்படவுள்ள யாழ்ப்பாண வலையமைப்புடன் இணைந்துகொள்ளுங்கள்

1. English Teacher
Basic Salary : 20000/= to 55000/=
2. Foreign Language Teacher
French, Deautch, Dutch
2. Course Counselor
3. Lecturers
MSO, Graphics, H/W, Programing, Accounting
AutoCAD, Interior Designing, Q/S, Civil Engineering
4. Accounts Cleark
5. Receptionist

Dehiwala. Kandy. Galle. Jaffna. Vavuniya. Mannar.

தகுதியானவர்கள் ஒரு வாரத்தினுள் Email மூலம் விண்ணப்பிக்கவும்

BRITISH COLLEGE
23, Nallur kachcheri Rd, Jaffna.
Email : britishcollegekandy@gmail.com
Tel : 0777-596148



பணிநிலை வேண்டுகை

மக்களின் தேவையறிந்து வெளிநாடுகளிலிருந்து ஆடம்பரமிக்க அலங்கார, அன்பளிப்பு, அழகுசாதனப்பொருள்கள் மற்றும் வாசனைத் திரவியங்களை இறக்குமதி செய்து, விற்பனைத் துறையில் முன்னிலை வகிக்கும்

NEW LOVERS CORNER

தனது கிளைகளை விரிவுபடுத்திக்கொண்டிருப்பதனால் புதிதாக ஆரம்பிக்கவுள்ள கிளிநொச்சி கிளைக்கு ஒரு

1. பொது முகாமையாளர் (GENERAL MANAGER)

தகைமைகள் :-
1. கொள்வனவு, விற்பனவு, சந்தைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் துறையில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
2. G.C.E A/L சித்தி
3. கணினி அறிவு
4. மும்மொழித் தேர்ச்சி

2. கிளை முகாமையாளர் (பெண்) (BRANCH MANAGER)

தகைமைகள் :-
1. கொள்வனவு, விற்பனவு, சந்தைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் துறையில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.
2. G.C.E O/L சித்தி
3. கணினி அறிவு

3. விற்பனையாளர் (பெண்) (SALE GIRL)

தகைமைகள் :-
1. விற்பனவு துறையில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.
2. கணினி அறிவு

4. BEAUTY PARLOR GIRL

தகைமைகள் :-
1. அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனத்தில் அழகுக்கலை சம்பந்தமான சான்றிதழ் பெற்றிருத்தல்.
2. அழகுக்கலை துறையில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத தொழில் அனுபவம்.

விண்ணப்பதாரிகள் 02.03.2015 இற்கு முன்னர் சுயவிவரக் கோவையை nealoverscorner@gmail.com எனும் முகவரிக்கு அனுப்பவும்.

தொடர்புகளுக்கு : - 077 384 6330

(c16843)(5.3.7)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பழுதிலாத் திறனுடன் மனிதநேய உதவிகள் பல்கிப் பெருகட்டுமே!

இலங்கையின் வடக்கில், மன்னார் மாவட்டத்தில், நண்பகல்வேளையில், முப்பத்திநான்கு பாகை செல்சியஸ்ஸின் வெப்பம் தகித்துக் கொதிக்கிறது.

ஐம்பத்தெட்டு வயதான அந்தப் பாட்டி, போக்குவரத்துச் சாதனம் கிடைக்காத நிலையில், ஒரு செருப்புக் கூட வாங்க இயலாத வறுமை காரணமாக நெருப்பாக எரியும் வெயிலில், ஒற்றைக் காலில் தத்தித் தத்தி நடந்து கொண்டிருக்கிறார். அவர் சென்றடைய வேண்டிய இடத்துக்கு மேலும் இரண்டு கிலோ மீற்றர் பயணிக்க வேண்டியுள்ளது.

2001 ஆம் ஆண்டில் போர்க் குண்டுகளினால் அவர் தமது காலை இழந்து வலது குறைந்தவராகி விட்டார்..

போதாக்குறைக்கு, போர் நிலைமை மிக மோசமுற்று அவரது குடும்ப உறுப்பினர்கள் ஐவரும் -- கணவரும் நான்கு பிள்ளைகளும் -- பல தங்கும் இடங்களுக்கு மாறி ஒன்றரை வருடங்களுக்கு அதிகமான காலம் அகதி முகாம்களில் தங்கி, எழுத்தில் வடிக்க இயலாத கையறு நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர்.

நர்ன் சாகும்வரைக்கும் -- இறக்கும் நாள் வரை -- இந்தக் கதியே தொடரப்போகிறது என்று அழுதவாறு தொடர்ந்து தத்தித் தத்தி நடந்துகொண்டிருந்தார்!

கடந்த கால்நூற்றாண்டு காலமாக, தங்களது வாழ்க்கையில் இருள் சூழ்ந்திருப்பதை மெலிந்த குரலில் கூறிக்கொண்டே தனது மகளின் இல்லிடத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தார்.

அவர் போரின்போது குண்டு வீச்சினால் தலையில் காயமுற்றதோடு, வலதுகாலின் ஒரு பகுதியை இழந்தார் என்று கொன்னிய குரலில் தெரிவித்தார். இம்மாத மத்தியில் போர் நடைபெற்ற இடங்களுக்குச் சென்றிருந்து (வெளிநாட்டு) செய்தியாளரின் பதிவுகளில் ஒரு சிறு பகுதியே மேற்கண்டவை.

மாற்று வலுவுள்ளோருக்கான, இலங்கை புனர்நிர்மாண மன்றம், வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற போரின்போது சுமார் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் (110,000) பேர்கள் வரை மாற்றுவலு உள்ளவர்களாக மாற்றப்பட்டனர் என்ற புள்ளி விவரத்தை வெளியிட்டிருந்தது. அவர்களில் மிகப் பெரும்பான்மையினர் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்களே.

2009 ஆம் ஆண்டில், பெரும் போர்ப் பூமியாக இருந்த வன்னிப் பிரதேசத்தில், ஒரே வீட்டில், -- ஒன்றுக்கு மேற்பட்ட அங்கத்தினர்கள் சக்கர நாற்காலிகளைப் பயன்படுத்துவோராக இப்போது மாற்றப்பட்டுள்ளனர்.

அவ்வாறு பாதிப்புற்றோருக்கு - மாற்று வலுவுள்ளவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் உதவு தொகை மூவாயிரம் ரூபாவாகும். சுண்டங்காய் உதவி எனில் தப்பன்று.

போரினால் அங்கவீனமானோர் வீட்டில் இருந்தவாறே வருமானம் தேடிக்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அரசினதும், மாகாண அரசினதும் பொறுப்பும் கடமையும் ஆகும்.

மேலும், துப்பாக்கி ரவைகளையும் குண்டுச் சிதறல்களையும் தமது உடலில் சுமந்து வாழும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் வன்னிப் பிராந்தியத்தில் உள்ளனர்.

அவர்கள் எமது பிரதேசங்களின் வருங்காலச் சந்ததியினர். ஆகையால் அவர்களையும் விசேட தேவை உடையவர்களாகக் கருத்தில் கொண்டு மாகாண அரசு, கொழும்பு அரசு மற்றும் ஐ.நா.அமைப்புகள் உதவுவதற்கு முன் வர வேண்டும்.

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் உறவுகளின் கணிசமான உதவிகளும் பாதிப்புற்ற பலரின் - குறிப்பாக மாணவர்கள், இளைஞர்களின் - வாழ்வியல் முன்னேற்றத்துக்கு அவசியம். இப்போது வன்னிப் பிரதேசத்தில் ஆங்காங்கே இத்தகைய மனித நேய உதவிகள் வழங்கப்படுகின்றன. அதன் பருமன் பழுதிலாத் திறனுடன் பல்கிப் பெருக வேண்டும். எமது வருங்காலச் சந்ததியின் நலன்நாடிய தர்மம் - சேவை பல்கிப் பெருகட்டும்.

# தூர விலகி விலகிச் செல்லும் தமிழருக்கான விடிவு காலம்

■ கந்தவனம் கோணேஸ்வரன்

இந்த மாதம் ஐ.நா.மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்படவிருந்த இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணை அறிக்கை செப்டெம்பர் மாதம்வரை தள்ளிப்போடப்பட்டிருக்கிறது. இது இலங்கையின் புதிய ஆட்சியாளருக்குக் கிடைத்த தற்காலிக இராஜதந்திர வெற்றி! எனலாம்.

இவ்வாறான ஒத்திவைப்பை எதிர்பார்த்து இலங்கை அரசு பலத்த நகர்வுகளை மேற்கொண்டிருந்தது. இந்தப் பேச்சுகளின் பயனாக இலங்கைக்கு ஆறுமாத கால அவகாசம் வழங்கப்பட்டிருக்கிறது. பொறுப்புக்கூறும் தனது கடமையைச் சரிவர இலங்கை நிறைவேற்றவேண்டும் என்பதை உலக நாடுகள் வலியுறுத்தியுள்ளன. இலங்கையின் இராஜதந்திரம் உலகப் பொறிக்குள் மாட்டிக்கொண்டுவிட்டது என்றுதான் கருதவேண்டியிருக்கிறது. அளிக்கப்பட்ட வாக்குறுதிகளின் படி காரியங்கள் ஆற்றப்படாவிட்டால், கத்தி கழுத்துக்கு வந்துவிடும் என்ற நிலை இலங்கைக்கு.

இலங்கையின் இன்றைய நிலைமைக்கு, இப்போதிருக்கும் இலங்கை அரசு நேரடிக் காரணமாக இருக்கவில்லை. அனைத்து விடயங்களுக்கும் மஹிந்த தலைமையிலான முந்தைய அரசுதான் காரணமாக இருந்திருக்கிறது. போர் நிறைவடைந்ததன் பின் தமிழர்களின் போராட்ட நியாயங்களும், தேவைகளும் மீண்டும் தலைதூக்கா வண்ணம் வலுவிழக்கச்செய்யும் வகையிலான ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எதிலும் மஹிந்த அரசு ஈடுபடவில்லை. போர்வெற்றி மமதையில் தமிழ்ப் பகுதிகளை அடிமைப்படுத்தப்பட்ட ஒரு நாடு போலவும், தமிழர்களை ஒரு தோற்றுப்போன இனமாகவும் கருதியே ஆட்சி நடத்தியது.

இலங்கைக்கு எதிரான தீர்மானம், ஐக்கியநாடுகள் அவையில், மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டு, அதனடிப்படையில் இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

ஐ.நா. நிபுணர்குழு இலங்கை வர முயன்றபோது முன்னைய அரசு அதற்கு அனுமதி வழங்கவில்லை. ஐ.நா. விசாரணைக் குழுவை இலங்கைக்குள் அனுமதித்தால், அது தமிழர்களுக்கு உற்சாகம் தரும் செயலாக அமைந்துவிடும் என்பதிலும், விசாரணைகள் இலகுவாகவும், உண்மைத் தன்மையுடனும் முன்னெடுக்கப்படும் வாய்ப்பு ஏற்படலாம் என்பதிலும் இலங்கை அரசு தெளிவாக இருந்தது.

நிறைவு படுத்தப்பட்ட அறிக்கையை இந்த மார்ச் மாதத்தில் வெளியிடுவதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் ஏற்கனவே திட்டமிட்டிருந்தது. உலகெங்கும் வாழ்கின்ற தமிழ்மக்கள் அந்த அறிக்கையை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். அதனைத் தாமதப்படுத்தவேண்டும் என்ற முயற்சியில் இலங்கை அரசு தீவிரமாக ஈடுபட்டுவந்தது. இந்தியாவும் இலங்கை அரசுக்கு ஒத்துழைப்பை வழங்கியது.

இலங்கை அரசு உலகநாடுகள் ஏற்கத்தக்க நியாயங்களை முன்வைத்து அறிக்கையைக் காலந்தாழ்த்தி வெளியிடுமாறு கேட்டிருந்தது. இலங்கையால் முன்வைக்கப் பட்ட நியாயங்கள் அனைத்தும் பகிரங்கப்படுத்தப்பட்டிருக்கவில்லையாயினும், அந்த நியாயங்கள் எவ்வாறாக அமைந்திருக்கும் என்பதை ஊகித்துக்கொள்வது சிரமமான காரியமல்ல.

இன்றைய அரசு தமிழர்களின் பங்களிப்புடன் நிறுவப்பட்டிருக்கிறது. தேசிய ஆலோசனைச் சபையில் தமிழர் பிரதிநிதிகளான இரா.சம்பந்தனும், மனோகணேசனும் உறுப்பாண்மை வகிக்கின்றார்கள். இன்றைய அரசியல் செல்நெறியில் அந்தச் சபையானது அதியுயர் பங்களிப்பைக் கொண்டிருக்கிறது. தமிழர்கள் எவரும் அமைச்சரவையில் பங்கேற்காவிட்டாலும், அதியுயர் தேசிய ஆலோசனைச் சபையில் பங்கேற்பதன்மூலம் அது தங்களுடைய அரசு என்ற நியாயத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்த அரசுடன் பேச்சு நடத்தித் தமிழர் பிரச்சினைகளுக்கு உகந்த தீர்வைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் நம்புகிறார்கள்.

இன்றைய மைத்திரி அரசுக்கு விரோதமாக எந்தத் தமிழரும் பேசுவதில்லை. எந்தத் தமிழ் அரசியல்வாதியும் அரசுக்கெதிரான பாரதூரமான குற்றச்சாட்டு எதனையும் இதுவரை முன்வைத்ததுமில்லை.

இவற்றைஅடிப்படையாகக்கொண்ட நியாயங்களால் இலங்கை உலக நாடுகளுக்கு முன் தன்பக்கத்தை வலுபடுத்திக்கொண்டது. புதிய அரசின்மேல் அமெரிக்கா கொண்டிருக்கும் நம்பிக்கை, இந்தியா காட்டும் கரிசனை என்பவையும் இலங்கையின் கோரிக்கைக்கு வலுச் சேர்ப்பவையாக அமைந்திருந்தன.

உள்ளக விசாரணைகள் நேர்மையாகவும், சரியாகவும் இடம்பெறும் என்ற உத்தரவாதத்தை இலங்கை அரசு உலக நாடுகளுக்கு வழங்கியிருக்கிறது. குற்றவாளிகள் எவராக இருந்தாலும் தண்டனையிலிருந்து தப்புவதற்கு இடமளிக்கப்படமாட்டாது எனவும் தெரிவித்திருக்கிறது. இவற்றின் அடிப்படையில் தான் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் போர்க் குற்ற விசாரணை அறிக்கை இம்முறை சமர்ப்பிக்கப்படாமல் தாமதப் படுத்தப்பட்டிருக்கிறது.

விசாரணை அறிக்கை தாமதப் படுத்தப்படுவதையிட்டுத் தமிழர் தரப்பில் சிலர் சமாதானம் சொல்லிக்கொண்டாலும், தமிழ்மக்கள் அந்தச் சமாதானத்தால் திருப்தியடைவதாக இல்லை.

அறிக்கை தாமதமாவதையிட்டுத் தமிழர்கள் அஞ்சுவதில் நியாயமில்லாமலும் இல்லை. இந்த அரசு பலமான ஒரு நாடாளுமன்றத்தை எதிர்வரும் தேர்தலின் மூலம் உறுதிப்படுத்திக்கொள்வதற்கான வியூகங்கள் நிச்சயம் வெற்றி பெறும் என்பதிலும் நம்பிக்கை கொள்ளமுடியாது. அவர்கள் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கப் பெற்றாலும்கூட நாங்கள் இப்போதுதான் புதிய நாடாளுமன்றத்தை நிறுவியிருக்கிறோம். செயற்படுவதற்கு இன்னும் சிறிது கால அவகாசம் தாருங்கள் என்று புதிய அரசு இழுத்தடிக்காது என்பதற்கும் எந்த உத்தரவாதமுமில்லை.

தென்னிலங்கையில் இனவாதத்துக்கான விதைகள் மீண்டும் தூவப்பட்டு வருகின்றன. மஹிந்த, விமல் வீரவன்ச போன்றோர் மீளவும் வலுப்பெறும் ஆபத்து, தலையெடுக்க வாய்ப்பிருக்கிறது.

இந்நிலையில், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் பெறுபேறுகள் மைத்திரி அரசுக்கு மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மைப் பலத்தைத்தருமா என்பது ஐயத்துக்கிடமானது.

மைத்திரி அரசு இன்றுவரை தமிழர்களுக்கென்று எதையும் செய்ததாகத் தெரிய வில்லை. அது நடக் கும், இது நடக்கும் என்று கூறியதைத் தவிர எதையும் தமிழர் விடயத்தில் செயற்படுத்திக் காட்டவில்லை.

தமிழர்கள் இலங்கையின் உள்ளக விசாரணையில் நம்பிக்கை வைக்கப் போவதில்லை. அது ஒரு பக்கச்சார்பாகவே அமையும் என அவர்கள் நம்புகிறார்கள். இது அரசுக்குச் சங்கடத்தைக் கொடுக்கலாம். எதிர்காலத்தில் அரசு தமிழர்கள் மேல் வெறுப்பை வெளிப்படுத்தவும் தொடங்கலாம்.

மொத்தத்தில் விஷச்சூழல் ஒன்று மீண்டும் தமிழர்களைப் பற்றிக் கொள்வதற்கான வாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன. இதனை அனைத்துத் தமிழர்களும் புரிந்து கொள்ளவேண்டும்.

> “ எதிர்வரும் தேர்தலின் மூலம் உறுதிப்படுத்திக்கொள்வதற்கான வியூகங்கள் நிச்சயம் வெற்றி பெறும் என்பதிலும் நம்பிக்கை கொள்ளமுடியாது. அவர்கள் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கப் பெற்றாலும்கூட நாங்கள் இப்போதுதான் புதிய நாடாளுமன்றத்தை நிறுவியிருக்கிறோம். செயற்படுவதற்கு இன்னும் சிறிது கால அவகாசம் தாருங்கள் என்று புதிய அரசு இழுத்தடிக்காது என்பதற்கும் எந்த உத்தரவாதமுமில்லை.

# கச்சதீவுப் பெருவிழா இந்திய இலங்கை கத்தோலிக்க இறை உறவின் திருவிழா



■ அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

கச்சதீவு என்ற பெயர் இன்று இந்திய இலங்கை தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமல்ல அரசியல்வாதிகளிடமும் பரீச்சயமான பெயராகிவிட்டது.

இன்றும் நாளையும் கச்சதீவு புனித அந்தோனியாரின் திருவிழா இலங்கை நெடுந்தீவுப் பங்குத் தந்தையும், கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய பரிபாலகருமாகிய செபமாலை நேசநாயகம் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது. மேற்படி விழாவுக்கான இந்திய அமைப்பாளராக இராமேஸ்வரம் பங்குத் தந்தை சகாயராஜா அடிகளார் பணியாற்றுகின்றார்.

ஆரம்ப காலம் முதல் யாழ் மறை மாவட்ட ஆயரின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசமாக இருந்து வந்துள்ள கச்சதீவு புனித அந்தோனியாரின் யாத்திரைத் தலத்தை நெடுந்தீவுப் பங்குத் தந்தையே பராமரித்து வருகிறார். நெடுந்தீவுப் பங்கு தந்தை நெடுந்தீவு மேய்ப்புப் பணிச் சபையின் உதவியுடன் அனைத்து ஒழுங்குகளையும் மேற்கொண்டுள்ளார்.

இன்று 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் மேற்படி ஆலயப் பெருவிழா சிலுவைப் பாதை தியானம் – திருப்பலி – நற்கருணை வழிபாடு என்பவற்றோடு நிறைவுபெறும். இன்று நடைபெறும்வேஸ்பர்ஆராதனையைஇந்தியாவைச் சேர்ந்த குருக்கள்மாரே பொறுப்பேற்று நடத்துவர்.

நாளை காலை 7.00 மணிக்கு திருவிழாத் திருப்பலியை யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் அருள்கலாநிதி யஸ்ரின் ஞானப் பிரகாசம் அடிகளார் நிகழ்த்துவார்.

இன்றும் நாளையும் நடைபெறும் திருவிழாவுக்கு இந்தியாவில் இருந்து 4 ஆயிரத்து 320 யாத்திரிகர்கள் கலந்துகொள்வார்கள். இதில் 175 குருக்கள்மாரும் 100 கன்னியர்களும் அடங்குவர்.

இலங்கையில் இருந்து ஆயிரத்து 500 முதல் 2 ஆயிரம் வரையிலான யாத்திரிகர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப் படுகின்றது. இதில் ஏறக்குறைய 25 குருக்கள்மார் அடங்குவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**மனித சஞ்சாரம் அற்ற கச்சதீவு**

கச் என்பது கடற்கரையையும் தீவு என்பது நீர் சூழ்ந்த நிலத்தையும் குறித்து நிற்கின்றது.

நெடுந்தீவுக்கு மேற்கே 11 மைல்களுக்கு அப்பாலும் இந்தியாவிற்கு நெருக்கமாக பாம்பன் – இராமேஸ்வரத்தில் இருந்து வட கிழக்கே பத்து மைலுக்கு அப்பாலும் இலங்கையையும் இந்தியாவையும் ஊடறுத்துச் செல்லும் ஒடுங்கிய பாக்கு நீரிணையின் மையப் பகுதியில் இந்த அழகிய தீவு அமைந்துள்ளது. இந்தத் தீவின் நீளம் ஒரு மைல் ஆகவும் அகலம் சராசரியாக 300 யாராகவும் இருக்கின்றது.

வறண்ட வலயத்துக்குரிய முட்புதர்களும், சிறிய புற்தரைகளும் கடலோர தாவரங்களும் பரந்துள்ள மனித சஞ்சாரமே அற்ற கச்சதீவு என்கின்ற இந்தச்சிறிய அழகிய தீவில் அழகு பொங்க நிமிர்ந்து நின்று அருள்பாலிக்கும் புனித அந்தோனியார் ஆலயமே இங்கு அமைந்திருக்கின்ற ஒரே ஒரு கட்டடமாகும்.

திருவிழாக் காலங்களில் குறிப்பாக அந்த ஓரிரு தினங்களில் மட்டும் இந்தியர்களும் இலங்கையர்களும் வந்து தங்கி அந்தோனியாரின் அருள்பெற்றுச் செல்கின்ற ஒரு யாத்திரைத் தலமாக மட்டும் கச்சதீவு விளங்குகின்றது.

கட்டுப்பாடுகள் இருப்பினும், இந்திய யாத்திரிகர்களே இலங்கை யாத்திரிகர்களைக் காட்டிலும் இரண்டு மடங்காக இங்கு வருகை தருகின்றார்கள் என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

இலங்கையில்இருந்து ஏறக்குறைய 25 குருக்கள்மாரும் சில கன்னியர்களும் செல்கின்ற வேளையில் இந்தியாவில் இருந்து 175 குருக்கள்மாரும் 100 கன்னியர்களும் இங்கு வருகை தருகின்றனர்

**கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வரலாறு**

1913 ஆம் ஆண்டு இந்தச் சிறிய அந்தோனியார் ஆலயம் அமைக்கப்பட்டு யாத்திரைத் தலமாக ஆரம்பிக்கப்பட்டதாக சான்றுகள் தெரிவிக்கின்றன.

மீனவர்கள் ஆழ்கடலில் அடிக்கடி சந்திக்கும் ஆபத்துக்களில் இருந்து பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ளவும், தொழில் முயற்சிகள் சிறந்த முறையில் கைகூடவும் அந்தோனியார் துணை புரிய வேண்டும் என்றும் இந்த ஆலயம் கட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

நம்புதானை என்ற சிற்றுரைச் சேர்ந்த தமிழர்கள் தாம் சென்ற படகு புயலில் சிக்கியபோது புனித அந்தோனியாரை நம்பிக்கையோடு வேண்டிக்கொண்டு அந்த அபாயத்தில் இருந்து தப்பியதால் இந்த ஆலயத்தைக் கட்டியெழுப்பினார்கள் எனக் கூறப்படுகின்றது.

திருநாள் முடிந்து வரும்போது அங்கிருந்து ஒரு பொருளையும் கொண்டுவரக்கூடாது. அவ்வாறு கொண்டு வந்தால் பிரயாணம் தடைப்படும் என்ற ஓர் ஐதீகம் உண்டு. எனவே கச்சதீவில் இருந்து திரும்பி வரும்போது கச்சதீவுக்குச் சொந்தமான விறகுகளைக் கூட எடுத்துச் செல்ல மாட்டார்கள் என்று கூறப்படுகின்றது.

இருப்பினும் கச்சதீவில் மட்டும் இருக்கின்ற ஒருவகைப் புல்லை மட்டும் நெடுந்தீவு மக்கள் தம்முடன் எடுத்து வருகின்றனர்.

நெற்பயிர் செய்வோர் புதிய நெற்கதிர்களில் இருந்து புதிய அரிசியாக்கி உண்ணும் போது புதிய கதிர் ஒன்றைப் புதிர் என்ற பெயரில் வீடுகளில் கட்டித் தொங்கவிடுகின்றனா. அதேபோல் நெடுந்தீவு மக்களும் கச்சதீவில் மட்டுமே இருக்கின்ற இந்த வகைப் புல்லை திருநாள் முடிய தம்மோடு எடுத்து வந்து தமது வள்ளங்களிலும் வீடுகளிலும் கட்டித் தொங்கவிடுகின்றனர்.

இந்த வழக்கம் இன்றுமிருப்பதை நெடுந்தீவுப் பங்குத் தந்தையும் கச்சதீவு அந்தோனியார் ஆலய பரிபாலகருமாகிய எஸ். நேசநாயகம் அடிகளார் உறுதி செய்துள்ளார்.

இத்தீவின் கிழக்குக் கரைப்பகுதி முருகைக் கற்களால் ஆன பெரும் பாறைகளைக் கொண்ட இயற்கை வளம் வாய்ந்த ஒரு பகுதியாகும். இந்தத் தீவின் மேற்குப் பகுதியில் உள்ள கடற்கரை, மணல் இன்றி மணிமணியான கடற் கற்களால் நிறைந்து காணப்படுகின்றது. தெற்கு மற்றும் தென்கிழக்குப் பகுதி கடற்கரைகள் பார்க் கற்கள் நிறைந்த பிரதேசமாகும்.

ஆங்கிலேயரால் கட்டப்பட்ட கோபுரம் இன்றும் சிதைந்த நிலையில் இங்குள்ளது.

இது அமைந்திருக்கும் மணல் மேட்டில் நின்று பார்த்தால் கச்சதீவின் முழுத்தோற்றத்தையும் அழகாகக் காணலாம். சூரிய உதயத்தையும் அஸ்தமனத்தையும் இவ்விடத்தில் நின்று பார்ப்பவர்கள் சொக்கிப் போய் மெய்மறந்து விடுவார்கள்.

கச்சதீவு எனப்படும் இந்தச் சிறிய தீவைச் சுற்றி உயரமான அந்தோனியார் சொரூபங்கள் நிறுவப்பட்டிருப்பது இந்தத் தீவின் சிறப்பம்சமாகும்.

இலங்கை இந்திய மீனவர்கள் தமக்கு எந்தப் பாதுகாப்பும் அற்ற நிலையில் இரு நாட்டு கடற் படையினரின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் ஓயாது அடித்து ஆர்ப்பரித்துக்கொண்டிருக்கும் இந்த ஆழ்கடலில்மீன்பிடிப்பதற்குப்போய் அங்கு தங்கியிருக்கும் போது அந்தோனியாரின் பார்வையும் பாதுகாப்பும் தமக்குத் தேவை என்பதால் அந்தோர்னியார் சொரூபங்களை தீவைச் சுற்றி வைத்திருக்கலாம்.

இங்கு மீன்பிடிக்கச் செல்கின்ற ஒவ்வொரு குழுவும் தாம் மீன் பிடிக்கின்ற கரையோரங்களில் அந்தோனியார் சொரூபங்களை நிறுவி தமது இடங்களை அடையாளப்படுத்த குறியாக வைத்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

திங்கள், புதன், சனிக்கிழமைகளில் நூற்றுக்கணக்கான இந்தியாவின் இழுவைப் படகுகள் கிழக்குப் பக்கமாகவும், மேற்குப் பக்கமாகவும் நெடுந்தீவுக் கடற் பரப்பில் மீன் பிடிக்கச் செல்கின்றன.

இந்தக் காட்சி தூரத்தில் இருந்து பார்க்கும் போது போருக்குப் புறப்பட்டு விட்ட யுத்தக் கப்பல்கள் மெதுவாக நகர்ந்து செல்வது போல காட்சியளிக்கும் என இந்த அழகிய காட்சியைக் கண்ணுற்றவர்கள் தெரிவிக்கின்றனர்.

இரண்டு இடங்களில் புனித செபஸ்தியார் சொரூபங்களும், தீவின் மத்திய பகுதியில் புனித சூசையப்பரின் சொரூபமும் நிறுவப்பட்டிருப்பதை காணக்கூடியதாக உள்ளது. புனித சூசையப்பரின் சொரூபங்கள் அமைந்துள்ள பகுதியைச் சுற்றி 100வருங்கள்பழைமைவாய்ந்த புளிய மரங்கள் இருந்த தாக கூறப்படுகின்றது. ஆனால் இன்று அங்கு இரண்டு மூன்று புளிய மரங்களையே காணக் கூடியதாக உள்ளது. ஆலயத்துக்கு அருகிலும் ஒரு புளிய மரம் உள் ளது.

இங்கிருக்கும் புனித அந்தோனியார் சொரூபத்துக்கும் வழமையாக வைத்துக் கொண்டாடப்படும் சொரூபத்துக்கும் இடையில் சிறிய வேறுபாட்டைக் காணக்கூடியதாக உள்ளது. வழமையான புனித அந்தோனியார் குழந்தை இயேசுவை கையில் ஏந்தியிருப்பார்.

கச்சதீவில் உள்ள புனித அந்தோனியார் சொரூபமானது, குறிப்பாக நெடுந்தீவு மக்கள் சென்று இறங்கும் கடற்கரையில் உள்ள புனித அந் தோனியார் சொரூபமானது திருச் சிலுவையைக் கையில் ஏந்தி உயர்த்தி மக்களுக்கு காட்டியவாறு அமைந்துள்ளது.

ஆழ்கடலின்மத்தியில்பச்சைப்பசேல் என இயற்கை அழகு கொண்டு விளங்கும் இந்தத் தீவு, காண்போர் கண்களைக் கவர்ந்திழுக்கவும், வருவோர் மனதுகளைக்கொள்ளை கொள்ளவும் கூடிய ஓர் இன்பவனம் ஆகும்.

திணாக்கு, காட்டுப் பூவரசு, நாகதாளி போன்ற பல வகையான மரங்களும் செடிகொடிகளும் இத்தீவில் நிறைந்துள்ளன. மருத்துவ மூலிகைகள் கூட இங்கிருந்து பெறப்படுவதாகக் கூறப்படுகின்றது.

1972 ஆம் ஆண்டு ஒரு தொகைப் பனை விதைகள் இங்கு நடப்பட்டதாகக் கூறப்படுகின்றது. 100 க்கு மேற்பட்ட பனை மரங்கள் இங்கு காணப்படுகின்றன.

பச்சை ஓணான்களும் பச்சைப் பாம்புகளும் இங்கு அதிகமாகக் காணப்படுவதாக கூறப்படுகின்றது. இருப்பினும் திருவிழாக் காலங்களில் காடுகளை வெட்டி துப்பரவு செய்யும்போது எந்த விசப் பாம்புகளையும் காணவில்லை. அவை ஓடி மறைந்துவிடுகின்றன என்றே தெரிவிக்கப்படுகிறது.

இந்த பாம்புகள் திருவிழாக் காலங்களில் யாரையும் கடித்ததாகவும் இல்லை. பூனை, எலி, காகம், குயில் என்ற மிருகங்களும் பறவைகளும் வாழுகின்ற இந்தச் சிறு தீவிலே மீன்பிடிப்பதற்கு வந்து தங்கிச் செல்கின்ற இந்திய், இலங்கை மீனவர்களைத் தவிர மனிதர்கள் யாரும் எப்போதும் அங்கு வாழ்ந்ததாக அறிய வரவில்லை.

குடிப்பதற்கு ஒரு துளி நீர் கூடக் கிடைக்காத இந்தச் சிறு தீவிலே ஒரேயொரு உவர் நீர்க் கிணறு மட்டும் உள்ளது. பறவைகளும் மிருகங்களும் கடல் நீரையே பருகுவதாக கூறப்படுகின்றது.

இங்கு காணப்படும் மரங்கள் கூட அங்குசெல்லும்யாத்திரிகர்கள்தங்குவதற்கு வசதியாக நேரடி வெய்யிலைக் குறைப்பதற்கு ஏற்ற வாறு வளைந்து குகைகள் போன்று காட்சியளிக்கின்றன.

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

### TV கள் மலிவு விற்பனை
SONY Wega Flat 14"-5000/=, 21"-10000/=, 25" - 14000/=, SONY DVD-3000/=, ரேடியோ கசெற்- 3000/=, BOX, குளிர்சாதனப்பெட்டி- 20000/=
**சோனி ரேற்ட் சென்ரர்**
(கொமர்ஷல் வங்கி எதிரில்)
56, கே.கே.எஸ்.வீதி, கன்னாகம். T.P: 077 044 0570
(57098)(4.3.7)

### காணி விற்பனைக்கு
யாழ்.நல்லூர், வைமன் வீதியில் உள்ள 3½ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 715 5324
(57343)(4.3.7)

### கார் விற்பனைக்கு
WP Km - XXXX இலக்கமுடைய Suzuki Swift, Silver Car 2010 இல் பதிவுசெய்யப்பட்டது.
ஓடிய தூரம் 68000 Km
தொடர்பு : - 071 424 5474
(57312)(5.3)

### வீடு, காணி விற்பனைக்கு
கோப்பாய் வடக்கு, வராம்பற்றையில், பருத்தித்துறை வீதிக்கு அருகில் 3 பரப்புக் காணியுடன் கூடிய 3 அறை வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 952 7569
(C/19951)(4.3.7)

### காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் Close to Jaffna Town சகல வசதிகளுடன் 3 களஞ்சிய அறைகள் (Stores) கொண்ட 3 பரப்புக் காணி உடனடி விற்பனைக்குண்டு.
தொடர்பு :- 077 192 3430
(C/19520)(5.3.7)

### காணி விற்பனைக்கு
யாழ்ப்பாண நகரில் இருந்து 7 மைல் தூரத்தில் 20 நிமிட வேகத்தில் கைதடியில் கண்டி வீதி, சந்திக்கு அண்மையில் 3.0, 3.0, 3.0, 2.0 பரப்புள்ள நான்கு காணிகள் ஆயுர்வேத வைத்திய சாலை, சித்த வைத்தியக் கல்லூரி, முதியோர் இல்லம், அரசாங்க டிஸ்பென்சரி உள்ள சூழலில் A9 வீதிக்குப் பின்னால் 200 யார் தூரத்தில் கோப்பாய் வீதியில் விற்பனைக்கு உள்ளன.
தொடர்பு: (தொலைபேசி- கொழும்பு) 011 250 3127
(சி/19956)(4.3.7)

### ஊர்க் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு
தரமான கிறிறாஷ் ஒரு நாள், ஒரு மாத, விறாத்து ஊர்க்கோழிக்குஞ்சுகள் திருநெல்வேலியில் விற்பனைக்குண்டு.
(57360)(4.3.7) தொடர்பு : 077 755 6244

### கார் விற்பனைக்கு
15-XXXX தொடரிலக்கமுடைய அரச உத்தியோகத்தரின் பாவனையிலுள்ள நிசான்சனி நீல நிற கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 529 6698
(57361)(4.3.7)

### வீடு விற்பனைக்கு
281, கண்டி வீதியில், கச்சேரிக்கு அருகில் 2 ¾ பரப்பில் அமைந்துள்ள விசாலமான சகல வசதிகளுடன் நவீன மாடி வீடு விற்பனைக்கு.
அருமைத்துரை
(57316)(5.3) 077 913 6978

### காணி விற்பனைக்கு
சாவகச்சேரி, கைதடி, நுணாவில் A-9 வீதிக்கு அண்மையில் 20 பரப்பு நல்ல தண்ணீர் வற்றாத கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. வேறு காணிகளும் உள்ளன.
தொடர்பு - (51895)(3.7.5)
077 500 2162, 077 615 0651

### விற்பனைக்கு
யாழ்ப்பாணம், அரியாலை, ஆனந்தன் வடலி வீதியில் 392/15, 392/16 வரி மதிப்பு இலக்க குடியிருப்பு /வயல்/தென்னங் காணிகள் விற்பனைக்குள்ளன. தரகர் தேவையில்லை.
தொடர்பு: 077 085 8804
(சி/19923)(4.3.7)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

## தேவை

### தேவை
மானிப்பாயில் இயங்கும் வாகன சுத்திகரிப்பு நிலையத்துக்கு முகாமையாளர் தேவை.
(ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் மானிப்பாய்க்கு அருகில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)
**S.N.T சேவிஸ் ஸ்ரேசன்**
யாழ்.வீதி, மானிப்பாய்
(மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு அருகில்)
(57374)(4.3.7)

### ஊர்க் கோழி, சேவல் தேவை
சகல விதமான கோழி, சேவல்களும் கவர்ச்சிகரமான விலையில் வாங்கப்படும். இங்கு ஊர்க்கோழி, சேவல், கல்பேட், புறொயிலர் கோழிகள், உயிராகவும் இறைச்சியாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு: றோயல் இறைச்சிக் கடை
இராசபாதைச் சந்தி, கோப்பாய்.
077 922 9588 (57368)(4.3.7)

### வேலைக்கு ஆள் தேவை
யாழ்.நகரில் இயங்கும் மின்சாரப் பொருள்கள் விற்பனை நிலையத்துக்கு வேலை ஆள் தேவை.
(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)
தொடர்பு: 021 222 8345
(சி/16842)(4.3.7)

### தேவை
சந்தைப்படுத்தல் துறையில் ஆர்வமுள்ள இருபாலாரும் தேவை.
★ கல்வித்தகைமை: தரம் 10
★ வயதெல்லை: 20-35
தொடர்பு: 077 886 6832
(57339)(4.3.7)

### தேவை
பேக்கரி பாஸ் உடனடியாகத் தேவை. யாழ்ப்பாணத்தில் நீண்ட காலமாக இயங்கிவரும் முன்னணி பேக்கறிக்கு (வெதுப்பகம்) சகல விதமான உணவுகளும் (பாண், பனிஸ், கேக், பேஸ்ரி மற்றும் அனைத்தும்) தரமாகத் தயாரிக்கக்கூடியவர் உடன் தேவை. உணவு, தங்குமிட வசதி, மேலும் கவர்ச்சிகரமான சம்பளம், மேலதிக கொடுப்பனவுகள்.
தொடர்பு: 071 138 4774 (சி/19950)(4.3.7)

### சமையல் ஆள் தேவை
திருநெல்வேலியில் உள்ள ரெஸ்ரோரன்ட் ஒன்றுக்கு சமையல் ஆள் (Cook) தேவை.
தொடர்பு : 077 653 4411
(57367)(4.3.7)

### தேவை
உணவு பரிமாறுபவர் Stward
(தங்கி நிற்பவர் விரும்பத்தக்கது)
சிற்றுண்டி தயாரிப்பாளர்- பெண்கள்
(றோல், பற்றிஸ், வடை)
தொடர்பு: 077 735 2165
(57383)(4.3.7)

## வேலைவாய்ப்பு

### உடனடி வேலைவாய்ப்பு
பிரபல கம்பனி ஒன்றுக்கு வெளிக்கள உத்தியோகத்தர் (Field Staff) வெற்றிடம் உள்ளது.
நலன்களைகள்:
சம்பளம் வழங்கப்படும்.
போக்குவரத்து செலவு வழங்கப்படும்.
விற்பனை செய்யும் தொகைக்கு ஏற்ப கமிஷன் (Commision) வழங்கப்படும்.
3 மாத கால முடிவில் சம்பள உயர்வு உண்டு.
உங்கள் சுயவிவரக் கோவையை கீழ் உள்ள முகவரிக்கு 07.03.2015 ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பி வைக்கவும்.
விளம்பர இல.
3049, சே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(57377)(4.3.7)

### வேலையாள் தேவை
இயக்கச்சியிலுள்ள 15 ஏக்கர் தென்னந்தோட்டத்தில் தங்கி நின்று பராமரிப்பதற்கு வேலையாள் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு : 076 706 2877
(57355)(4.3.7)

### வேலைவாய்ப்பு
புதிதாக ஆரம்பிக்கப்பட்ட எமது பிரதான தொழிற்சாலைக்கு வேலையாள்கள் தேவை.
டொபி, சொக்லேட், கடதாசி, சோப், கையுறை, லஞ்சீட்.
★ வயது 18-40 வரை.
★ சம்பளம் 30,000
உணவு, தங்குமிடம் செய்து தரப்படும்.
உடனடித் தொடர்பு:
071 436 3279, 077 356 3927
No.26, Borella, Colombo-08
(சி/19954)(4.3.7)

### வேலையாள்கள் தேவை
யாழ்.நகரில் 35 வயதிற்குட்பட்ட பாரங்கள் தூக்கி வேலை செய்யக்கூடிய ஆண் வேலையாள்கள் தேவை.
தொடர்பு: 071 902 2222
(57372)(4.3.7)

### வேலையாள்கள் தேவை
கடை ஒன்றுக்கு காசாளர், சிட்டை எழுதுநர் தேவை. (20-40 வயதினர், யாழ்.நகரிலிருந்து 5KM வரை விரும்பத்தக்கது.)
ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு: 021 221 9222, 077 911 6108
(57373)(4.3.7)

### பணிப்பெண் தேவை
இருவரும் வேலைக்குச் செல்லும் இரு பிள்ளைகள் கொண்ட வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 077 327 6502
(57351)(4.3.7)

### வேலைவாய்ப்பு
முன்னணி நிறுவனமான சொக்லேட், கடதாசி, லஞ்சீட், ஜாம், உணவு உற்பத்தி, லேபல், பொதி செய்தல் பிரிவுகளுக்கு ஆண், பெண் தேவை.
★ வயது 18-40 வரை.
★ சம்பளம் 36, 000/=
தொடர்பு: 076 648 2487
160/1F/03 புதிய கண்டி வீதி, பண்டாரவத்த
(சி/19955)(4.3.7)

## வாடகைக்கு

### அறைகள் வாடகைக்கு
யாழ்.பல்கலைக்கழகத்துக்கு மிக அருகில் இரண்டு அறைகள். ஆண் பல்கலைக்கழக மாணவர்கள்/ உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.
(57380)(4.3.7) தொடர்பு: 071 856 5662

### அறை வாடகைக்கு
பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் படிக்கும் அல்லது வேலை பார்க்கும் பெண்கள் இருவருக்கு அறை வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 760 9922
(57369)(4.3.7)

### வாடகைக்குண்டு
இருபாலை ஆசிரியர் கலாசாலைக்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
(அரசாங்க உத்தியோகத்தர் விரும்பத்தக்கது.)
தொடர்பு : 077 790 6224 (57357)(4.3.7)

### வீடு வாடகைக்குண்டு
மாநகரசபை எல்லைக்குள்
3 அறை கொண்ட வீடு
வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: 071 638 3502
(57245)(4.3.7)

### அறை வாடகைக்குண்டு
பலாலி வீதியில் கோண்டாவில் சந்திக்கு அண்மையாக ஒரு அறை இரண்டு மருத்துவபீட மாணவிகளுக்கு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 982 9802
(57378)(4.3.7)

### வீடு வாடகைக்குண்டு
யாழ்.மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிக்குள் ஒரு படுக்கையறையுடன் கூடிய சிறிய வீடு வாடகைக்குண்டு.
மாத வாடகை ரூபா- 7000
தொடர்பு: 077 968 8145
(57366)(4.3.7)

### கட்டடம் வாடகைக்கு
பலாலி வீதி, திருநெல்வேலியில் புதிதாகக் கட்டப்பட்ட மூன்று மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு. 1500 சதுர அடி வாகன தரிப்பிட வசதி உண்டு.
தொடர்பு :-077 774 9174
(57320)(5.3)

### வீடு வாடகைக்குத் தேவை
யாழ்.மாநகரசபை எல்லை மற்றும் திருநெல்வேலிப் பகுதிக்குள் சிறிய குடும்பத்துக்கு வீடு வாடகைக்குத் தேவை.
(57354)(4.3.7) தொடர்பு : 077 642 5582

### அறைகள் நாள் வாடகைக்கு
ஒருவருக்கு 600/=, இருவருக்கு 1500/=, நால்வருக்கு 2500/=,
Hotel Villa City 422, Galle Road.
வெள்ளவத்தை. 072 255 2222

### வீடு வாடகைக்கு
யாழ்ப்பாணம், சுண்டுக்குளி அச்சக வீதியில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு விடப்படும். இவ் அமைவிடம் பெரிய கோயில், சென்ஜோன்ஸ் கல்லூரி கடைத் தொகுதிகளுக்கு அண்மையாக அமைந்துள்ளது. சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 774 1750, 077 949 8889 (57382)(4.3.7)

## மணமக்கள் தேவை

### மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்ப 1976 இல் பிறந்த விஞ்ஞான பட்டதாரி அரச உத்தியோக மணமகனுக்கு நற்குணமுள்ள தகுந்த மணமகள் தேவை.
தொடர்பு : 021 320 9458
(57337)(4.3.7)

### மணமகள் தேவை
யாழ் இந்து கௌரவகுடும்பம் 1986, ஆயிலியம் 07 செவ்வாய் கிரகபாவம் 46, M.Sc Engineer (Civil), ஆஸ்திரேலியாவில் Phd செய்யும் மணமகனுக்கு, தகுந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பாக்கின்றார்கள்.
(C16816)(5.3)
தொடர்பு : - 077 379 0471

## ஏனையவை

### பிரத்தியேக வகுப்புக்கள்
ஆண்டு 6 தொடக்கம் A/L வரையான ஆங்கில வகுப்புகள் பிரத்தியேகமாக கற்பிக்கப்படும். ஆங்கில மொழி மூலமான கணித வகுப்புக்களும் கற்பிக்கப்படும். ஆசிரியர் ஆங்கில ஆசான் தி.ஞானேஸ்வரன் தொடர்பு: 076 524 4793
பல்கலைக்கழக மாணவர்களுக்கான தரவு ஒப்படை.
ஆங்கிலம்-தமிழ், தமிழ்- ஆங்கிலம் குறிப்பிட்ட தினங்கள் தட்டச்சு செய்து மொழி பெயர்த்துத் தரப்படும். (57379)(4.3.7)
முகவரி: 193/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

### "சானியா கேபல் கெயர்"
262, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு
ஆயுள்வேத வைத்தியசாலை

ஒரே வாரத்தில்
சருமத்தில் ஏற்படக்கூடிய பலவித நிற மாற்றங்கள், கழுக்கட்டு, உதடு, கண்களைச் சுற்றி ஏற்படும் கருமைநிற அடையாளங்கள் முகப்பருக்கள், கரும்புள்ளிகள் உண்ணிகளுக்கான நிரந்தரத் தீர்வு.
★உடற்பருமன் கூட்டல், குறைத்தல்
★தலைமுடிசார்ந்த பிரச்சினைகள்
★பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டவை
★முற்பதிவு அவசியம்.
(57358)(4.3.7) தொடர்பு : 077 735 1954

### இந்திய சாஸ்திரியார் வருகை
யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்.
ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்
**S.N குமாரசாமி**
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா, வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.
காலை 9 மணி முதல்
மாலை 5.00 மணி வரை.
இல.97/8, கன்னாகி அம்மன் கோவில் ஒழுங்கை, கோப்பாய் வீதி, உரும்பிராய், யாழ்ப்பாணம்.
(உரும்பிராய் சந்திக்கு அருகில்)
T.P: 072 681 6681, 072 681 6691
(56945)(4.3.6)

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 207

# பாரிச வாதம்

## அவசர சிகிச்சை தேவைப்படும் நோயாக கருதப்படுவது ஏன்?

பாரிசவாதம் என்பது ஒரு அவசர சிகிச்சை தேவைப்படுகின்ற நோயாகும்.உங்களுக்கு அல்லது உங்களுக்குத் தெரிந்தவர்களுக்கு பாரிசவாதத்துக்கான குணங்குறிகள் ஏற்படின் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வரவும். மூளைக்கான குருதியை விநியோகிக்கின்ற இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படும். அதனால் பாரிசவாதத்துக்கு ஆளாகியிருந்தால் இரத்தக் கட்டியை உடனடியாகக் கரைப்பதற்கு விசேட மருந்து தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் கிடைக்கப் பெறுகின்றது. இந்த மருந்து, பாரிசவாதத்துக்கான குணங்குறிகள் ஏற்பட்டு நாலரை மணித்தியாலத்துக்குள் வழங்கப்படல் வேண்டும். இந்த மருந்தை வழங்குவதற்கு முன்னர் மூளையானது ஸ்கான் (CT scan) செய்யப்படல் வேண்டும்.எனவே இந்த மருந்து CT ஸ்கான் வசதியுள்ள யாழ். போதனா வைத்தியசாலையில் வழங்கப்படுகின்றது.

எனவே ஒருவருக்குப் பாரிசவாதத்துக்கான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாகத் தாமதமின்றி யாழ். போதனா வைத்தியசாலைக்குச் செல்லவும் அல்லது அருகிலுள்ள வைத்தியசாலைக்கு சென்று அங்கிருந்து அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்குச் செல்லவும்.

பாரிசவாத நோய்க்கான அறிகுறிகள் ஏற்பட்டு முதல் 3 மணித்தியாலங்களுக்குள் யாழ். போதனா வைத்தியசாலையை வந்தடைந்தால்மாத்திரமே இவ்விசேட மருந்தை ஏனைய தேவையான சோதனைகளை மேற்கொண்ட பின்னர் 4½ மணித்தியாலத்துக்குள் வழங்கக் கூடியதாக இருக்கும்.

**பாரிசவாதத்தின் அறிகுறிகள், உண்டாவதற்கான காரணிகள் மற்றும் சிகிச்சை முறைகள்:**

**பாரிசவாதம் என்பது என்ன?** (stroke)

மூளைக்கான இரத்தத்தையும், ஒட்சிசனையும் வழங்குகின்ற இரத்தக் குழாயில் அடைப்பு அல்லது வெடிப்பு ஏற்படுவதனால், பாரிசவாதம் ஏற்படுகின்றது. இரத்தக் குழாயில் அடைப்பு அல்லது வெடிப்பு ஏற்பட்டால் மூளைக்கலங்களுக்கான ஒட்சிசன் விநியோகமும் இரத்த ஓட்டமும் தடைப்படுகின்றன. இதனால் கலங்களுக்குத் தேவையான ஒட்சிசன் குறைவடைந்து மூளைக் கலங்கள் தொழிற்பாட்டை இழந்து சில நிமிடங்களில் மூளைக் கலன்கள் இறந்து விடுகின்றன. இதன் விளைவால் அந்தப் பகுதி, மூளைக் கலங்களின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற உடலில் பகுதிச் செயற்பாட்டை இழக்கின்றது.

**பாரிசவாதம் ஏற்பட்டால் என்ன செய்யலாம்?**

பாரிசவாதம் என்பது பெரிதும் தடுக்கப்படக்கூடிய நோயாகும். இது ஏற்படுவதைப் பின்வரும் முறைகளை வாழ்க்கையில் கடைப்பிடிப்பதன் மூலம் குறைக்கலாம்.

1. உயர்குருதி அமுக்கத்தைக் கட்டுப்படுத்தல்.
2. புகைபிடித்தலை நிறுத்தல்.
3. குறைந்த கொழுப்பு உணவை உண்ணுதல்.
4. சலரோகத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்.
5. மதுபானம் அருந்துவதைக் குறைத்தல் அல்லது நிறுத்தல்.

பாரிசவாதத்தினால் ஏற்படும் விளைவுகளைக் குறைப்பதற்கு, மருத்துவத்தில் பல்வேறு கண்டுபிடிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவற்றுள் மிகச் சிறந்த முறையாக இரத்தக் கட்டியைக் கரைக்கும் மருந்து (Clot dissolving tissue plasminogen activator) கருதப்படுகின்றது. இந்த மருந்து பாரிசவாதம் விரிவடைவதைத் தடுப்பதுடன், அதனால் ஏற்படும் உடல் செயலிழப்பையும் குறைக்கின்றது. இந்த மருந்து பாரிசவாதத்துக்கான அறிகுறிகள் ஏற்பட்டு 4½ மணித்தியாலத்துக்குள் கொடுக்கப்படுகின்றது. இது இரத்தக்குழாய் அடைப்பால் ஏற்படும் பாரிசவாதத்துக்கு பயன்படுத்தப்படுகின்றது.

**பாரிசவாதம் ஏற்படுவதற்கு முன்னர் தோன்றும் அறிகுறிகள்**

சில சமயங்களில் பாரிசவாதத்தின் குணங்குறிகள் ஏற்பட்ட உடன் மறையலாம் அல்லது குறையலாம். இவ்வாறு ஏற்படின் அதனை உதாசீனப்படுத்தாது உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டும்.

பாரிசவாதத்தின் அறிகுறிகள்

1. உடம்பின் ஒரு பகுதியில் திடீரென ஏற்படுகின்ற விறைப்பு அல்லது பலவீனம் –(குறிப்பாக உடலில் ஒரு பக்க முகம், கை, கால்)
2. திடீரெனக் கதைக்க இயலாது போதல் அல்லது பிறர் கதைப்பதை விளங்குவதில் சிரமம் அல்லது மாறாட்டம்.
3. திடீரென ஏற்படும் பார்வைக் குறைவு (ஒரு கண்ணில் அல்லது இரண்டு கண்களிலும்)
4. திடீரென உண்டாகுகின்ற தலைச் சுற்று, நடப்பதில் சிரமம், தடுமாற்றம்.
5. திடீரென ஏற்படுகின்ற தலைவலி.

மேற்குறிப்பிட்டவற்றுள் ஏதாவது அறிகுறிகள் தென்பட்டால் சம்பந்தப்பட்டவரை உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லவும் அல்லது அருகில் உள்ள வைத்தியசாலைக்கு சென்று வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதைத் தவிர்த்து நேரடியாக அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலையைச் சென்றடையவும்.

**இரத்தக் குழாய் வெடிப்பினால் ஏற்படுகின்ற பாரிசவாதம்**

15 வீதமான பாரிசவாதம், இரத்தக் குழாய் வெடிப்பால் ஏற்படுகின்றது. இரத்தக்குழாய் வெடிப்பால், இரத்தம் குருதிக் கலன்களில் இருந்து வெளியேறி மூளைக் கலங்களுக்கிடையில் சேர்கின்றது. இது மூளைக்கு நச்சுப் பொருளாக அமைவதால் அந்தப் பகுதியில் உள்ள மூளைக் கலங்கள் இறக்கின்றன.

**இரத்தப் பெருக்கினால் ஏற்படும் பாரிசவாதத்தை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்:**

1. மூளையினுள் ஏற்படும் இரத்தக் கசிவு
2. மூளையைச் சுற்றியுள்ள மென் சவ்வுகளுக்கு இடையில் ஏற்படும் இரத்தக் கசிவு.

**மூளையினுள் இரத்தக் கசிவு ஏற்படுவதால் ஏற்படுகின்ற பாரிச வாதம்**

இதுவே பொதுவாக உண்டாகுகின்ற இரத்தக் கசிவால் ஏற்படும் பாரிசவாதமாகும்.

இது மூளைக்கலங்களுக்கிடையில் குருதிக்கசிவு ஏற்படுவதாலும் இரத்தக் குழாய் வெடிப்பதாலும் ஏற்படுகின்றது. சில வேளைகளில் இவை இரத்தக் குழாய்களின் உருவமைப்பிலோ அல்லது ஆக்கத்திலோ ஏற்படுகின்ற மாற்றத்தினால் ஏற்படலாம்.

**மூளையைச் சுற்றியுள்ள மென் சவ்வுகளுக்கிடையில் ஏற்படும் இரத்தக் கசிவு**

இது மூளையின் மேற்பரப்பில் உள்ள இரத்தக் குழாயில் ஏற்படும் வீக்கம் உடைந்து ஏற்படும் இரத்தக் கசிவினால் ஏற்படுகின்றது. இது பெரும்பாலும் உயர்குருதி அமுக்கத்தினால் ஏற்படுகின்றது.

**ஏனைய காரணங்கள்**

1. புகை பிடித்தல்.
2. கருத்தடை மாத்திரைகளின் (ஈஸ்ரோஜன் ஓமோனைக் கூடுதலாக்கொண்டுள்ளவை) பாவனை.



3. அதிகமான மதுபாவனை.
4. சட்டவிரோதமான மருந்துகளின் பயன்பாடு.

**இரத்தக் கசிவினால் ஏற்படும் பாரிசவாதத்தைக் கண்டறிவது எப்படி?**

ஒருவருக்குப் பாரிசவாதத்தின் குணங்குறிகள் காணப்பட்டால் வைத்தியர் பின்வருவனவற்றைக் கவனமாக மேற்கொள்ளுவதன் மூலம் கண்டறியலாம்.

– நோய் பற்றிய சரியான விடயம்
– தேவையான உடல், நரம்பு சம்பந்தமான பரிசோதனைகள்
– இரத்தச் சோதனைகள்
– CT ஸ்கான்

**இரத்தக் கசிவினால் ஏற்படும் பாரிசவாதத்துக்கான சிகிச்சை முறைகள்:**

இதற்கான சிகிச்சை உடனடியாக வழங்கப்படல் வேண்டும். உயர் குருதி அமுக்கம் காணப்பட்டால் அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருதல் வேண்டும். இரத்தக் கசிவினால் மூளை வீக்கமடைந்திருந்தால், அதனைக் கட்டுப்படுத்துவதற்கான சிகிச்சை வழங்கப்படல் வேண்டும். சில சமயங்களில், மூளையில் சத்திரசிகிச்சையும் செய்ய வேண்டி ஏற்படலாம்.

**இரத்தக் குழாய்களில் ஏற்படும் அடைப்பினால் உண்டாகும் பாரிசவாதம்**

85 வீதமான பாரிசவாதம் இவ்வாறான முறையில் ஏற்படுகின்றது. மூளைக்கு இரத்தத்தை விநியோகிக்கின்ற இரத்தக்குழாய் சுருங்குவதால் மற்றும் இரத்தக்குழாய்களில் ஏற்படுகின்ற கொழுப்புப் படிவினால் மூளைக்கான இரத்த அமுக்கம் இதற்கு முக்கிய காரணியாக அமைகின்றது.

**இரத்தக் குழாய் அடைப்பினால் ஏற்படுகின்ற பாரிசவாதத்தின் வகை:**

1. மூளைக்குக் குருதியை விநியோகிக்கின்ற இரத்தக் குழாய்களில் ஏற்படுகின்ற குருதிக் கட்டிகளினால் ஏற்படுகின்ற பாரிசவாதம் (Thrombotic Stroke)
2. இரத்தக் கட்டிகள் உடலின் வெவ்வேறு பகுதிகளில் உருவாகி இரத்தோட்டத்துடன் மூளையை அடைத்து, மூளைக்கான குருதி விநியோகத்தைத் தடைசெய்வதனால் ஏற்படுகின்ற பாரிசவாதம். (Embolic Stroke)
3. இதயத்தின் குருதியை உடற்பகுதிகளுக்கு விநியோகிக்கின்ற தொழிற்பாடு குறைவதால், மூளைக்கான குருதி விநியோகம் குறைவடைந்து ஏற்படுகின்ற பாரிசவாதம். (Systemic hypoperfusion). இது பெரும்பாலும் மாரடைப்பின் (Heart attack) பின்னர் உண்டாகின்றது.

**இரத்தக் குழாய் அடைப்பினால் ஏற்படுகின்ற பாரிசவாதத்தைக் கண்டறிதல் எப்படி?**

பாரிசவாதத்துக்கான அறிகுறிகள் காணப்பட்டால், வைத்தியர் பின்வருவனவற்றைக் கவனமாக மேற்கொள்வதன் மூலம் கண்டறியலாம்.

1. நோய் பற்றிய சுய விவரம்.
2. தேவையான உடல், நரம்பு சம்பந்தமான பரிசோதனைகள்.
3. இரத்தச் சோதனை
4. CT ஸ்கான்.

**இரத்தக் குழாய் அடைப்பினால் ஏற்படுகின்ற பாரிசவாதத்துக்கான சிகிச்சை முறை:**

இவ்வகையான பாரிசவாதத்துக்கு உடனடியான சிகிச்சை வழங்கப்படல் வேண்டும். இதன் மூலம் மூளையில் பாதிக்கப்படுகின்ற பகுதியின் அளவைக் குறைக்கலாம். உலகளாவிய ரீதியில் பல்வேறு ஆய்வுகளின் அடிப்படையில் கண்டறியப்பட்ட மருந்து (TPA) இரத்தக் கட்டியைக் கரைப்பதற்கு உதவுகின்றது. இந்த மருந்து பாரிசவாதத்துக்கான குணங்குறிகள் ஏற்பட்டு 4½ மணித்தியாலங்களுக்குள் ஊசி மூலம் ஏற்றப்பட வேண்டும். மேலும் பாரிசவாதத்தினால் மூளையின் பகுதி வீக்கமடைந்திருப்பின் அதற்கான சிகிச்சையும் வழங்கப்படல் வேண்டும்.

**இரத்தக் குழாய் அடைப்பினால் ஏற்படும் பாரிசவாதத்தைத் தடுப்பதற்கான வழிமுறைகள்:**

ஒருவர் ஒருமுறை பாரிசவாதத்துக்கு உள்ளாகும் சந்தர்ப்பத்தில் மீண்டும் பாரிசவாதத்தினால் பாதிக்கப்படுவதற்குச் சந்தர்ப்பம் உண்டு. இதனால் பாரிசவாதத்துக்கான அபாயகாரணியைக் கண்டறிந்து அதற்கான சிகிச்சை முறைகள் வழங்கப்படல் வேண்டும்.

உதாரணமாக:

– குருதி கட்டிபடுவதைக் குறைத்தல். இதற்கு Asprin (அஸ்பிரின்) Clopidogrel போன்ற மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன.
– உயர் குருதி அழுத்தத்தைக் கட்டுப்படுத்துவதற்கான மருந்துகளைப் பயன்படுத்தல்.
– குருதியில் உள்ள கொலஸ்ரோலின் அளவைக் குறைப்பதற்கான மருந்துகளைப் பயன்படுத்தல். இவை குருதிக் குழாய்களில் ஏற் படுகின்ற பாதிப்பையும் குறைக்கின் றது.
– இதயத்துடிப்பு ஒழுங்கற்றதாகக் காணப்படின் அதனைச் சீர் செய்வதற்கான மருந்துகளைப் பயன்படுத்தல்.

**பாரிசவாதம் ஏற்படுவதற்கான அபாயகாரணிகள்:**

சில அபாயகாரணிகளுக்குச் சிகிச்சை அளிக்கலாம் அல்லது அவற்றை மாற்றி அமைக்கலாம்.

உதாரணமாக:

**1. உயர் குருதி அமுக்கம்** (High blood Pressure)

இது முக்கிய அபாய காரணியாகும். குருதி அமுக்கம் வருடத்தில் குறைந்தது இரண்டு தடவையாவது அளக்கப்படல் வேண்டும். குருதி அமுக்கமானது 140/90 mm Hg ற்கு மேலதிகமாகக் காணப்படின் அதனைக் குறைப்பதற்கான சிகிச்சை முறையைப் பயன்படுத்த வேண்டும்.

**2. புகைபிடித்தல்**

புகையிலையில் உள்ள பதார்த்தங்கள், குருதிக்குழாய்களை சேதமாக்குகின்றன. எனவே புகைப் பிடித்தலை நிறுத்துதல் வேண்டும்.

**3.நீரிழிவு:-**

நீரிழிவு மூளைக்கான குருதியை வழங்குகிற குருதிக் கலன்களில் பாதிப்பை ஏற்படுத்தி, பாரிசவாதத்துக்கான சந்தர்ப்பத்தை அதிகரிக்கின்றது. எனவே குருதிக்குளுக்கோஸின் அளவைக் குறைப்பதற்கான மருந்துகளை ஒழுங்காகப் பயன்படுத்தி, குளுக்கோஸின் அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் வேண்டும்.

**4.குருதி கொலஸ்ரோலின் அளவு**

இதன் அளவு அதிகமாக குருதியில் காணப்பட்டால், குருதிக்கலன்களில் அடைப்பு ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகரிக்கின்றது.

**5.** Caroti- (கழுத்தில் உள்ள குருதிக்குழாய்) மற்றும் ஏனைய குருதிக் குழாய்களில் ஏற்படும் பாதிப்பு.

**6. உடற்பயிற்சி இன்மையும், அதிக உடற்பருமனும்**

இது இருதய நோய்க்கான சந்தர்ப்பத்தை அதிகரிக்கிறது.

Transient ischemic attack (குறுகிய நேரத்துக்கு காணப்படும் பாரிசவாதத்துக்கான அறிகுறிகள்) இது பாரிசவாதம் ஏற்படுவதற்கான அபாய அறிகுறியாகும். இவ்வாறான அறிகுறி காணப்பட்டால் 24 – 48 மணித்தியாலத்துக்குள் பாரிசவாதம் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் உண்டு. எனவே உடனடியாக வைத்தியசாலையை நாடவும்.

ஒழுங்கற்ற இதயத்துடிப்பு வீதம் (Atrial Fibrillation) மற்றும் ஏனைய இருதய நோய்கள்.

மிதமிஞ்சிய மதுபானப் பாவனை

சட்டவிரோதமான மருந்துகளின் பாவனை

மாற்றி அமைக்கமுடியாத (Non modifiable factor) அபாய காரணிகள்

• அதிக வயதாதல்
• ஆண்களுக்குப் பாரிசவாதம் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் பெண்களை விட அதிகம்
• நெருங்கிய உறவினர்கள் ஏற்கனவே பாரிசவாதத்தால் பாதிக்கப் பட்டிருத்தல்

பாரிசவாதம் ஏற்படுவதைக் குறைப்பதற்கு வாழ்க்கை முறையில் கடைப்பிடிக்க வேண்டியவை

• புகைப்பிடித்தலை நிறுத்துதல்.
• உணவுப் பழக்கத்தை ஆரோக்கியமாக மாற்றுதல் கொழுப்பு, மற்றும் சீனியின் அளவைக் குறைத்தல்.
• கொழுப்பு நிறைந்த மாமிசம், பட்டர் போன்றவற்றை தவிர்த்தல்.
• உணவுப் பொருள்களைப் பொரிப்பதற்கு பதிலாக அவற்றை முடிந்தளவு அவித்து உட்கொள்ளல்.
• பழங்கள், மரக்கறிகள் என்பவற்றை உட்கொள்ளல்.
• உடற்பயிற்சியில் ஈடுபடல், குறைந்தது 30 நிமிடங்களுக்கு கிழமையில் 5 தடவைகள் ஈடுபடல்.
• வைத்தியரினால் வழங்கப்படுகின்ற மருந்துகளை ஒழுங்கான முறையில் பயன்படுத்தல்.
• குருதி அமுக்கத்தின் அளவை கிரமமாகப் பரிசோதித்தல்.
• உடல் நிறையைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்.
• கிரமமாக வைத்திய சோதனைகளை மேற்கொள்ளல்.

நரம்பியல் பிரிவு – B
யாழ். போதனா வைத்தியசாலை.

### கணித ஆசான்

# உயர்திரு தம்பிப்பிள்ளை வரதராஜா

### அவர்களின்

# மணிவிழா சிறப்பிதழ் - 01.03.2015



## அருளாசிச் செய்தி



கல்விச் செல்வத்தை அள்ளி வழங்கி மாணவர் சமுதாயத்தை மேலோங்கச் செய்யும் பணியில் சிறப்புற்றுத் திகழும் எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் நிறுவனத்தின் முதல்வரும் கணித ஆசானுமாகிய த.வரதராஜா அவர்களின் அறுபதாவது அகவையை முன்னிட்டு வெளியிடப்பெறும் மணிவிழா சிறப்பிதழுக்கு அருளாசிச் செய்தி வழங்குவதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

''மாணவ சக்தி மாபெரும் சக்தி'' என்றபடி எதிர்காலம் சிறப்புற கல்வி விருத்திசெய்து 'சேவையே தமது தேவை' என்று துலங்குகின்ற நல்ல நிறுவனமாகிய எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் முதல்வர் த. வரதராஜா அவர்கள் அகவை அறுபதில் அளப்பரிய சேவையாற்றும் தன்மையில் உயர்வுற்று சீரோடுஞ் சிறப்போடும் வாழவேண்டும் என்று எல்லாம் வல்ல நல்லைக் கந்தனைப் பிரார்த்தித்து அருளாசிகள் நல்கி வாழ்த்தி மகிழ்கின்றோம். மணிவிழா நாயகன் நல்லபடி வாழ்ந்து அனைவருக்கும் மகிழ்ச்சியை வழங்கி இனிதே வாழ வாழ்த்துகின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

நல்லை திருஞானசம்பந்த ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ
சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்.

## செஞ்சொற் செல்வரின் ஆசிச் செய்தி



கல்விப்பணி காலமெல்லாம் நன்றியோடு போற்றும் பணி, பல நூறு மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பங்குகொண்டு உழைத்த வரதன் அவர்களின் மணிவிழாக் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். பல வருட காலமாக கோப்பாய் பிரதேசத்தில் பிரத்தியேகக் கல்வி நிலையமான எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டை நடத்தி மாணவர்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற இவரை அறியாதவர்களில்லை. யாழ் மத்திய கல்லூரியில் நீண்ட காலம் ஆசிரியப் பணியாற்றியவர், மாணவர்களின் ஒழுக்காற்றல் பொறுப்பாசிரியராக விளங்கியவர். மாணவர்களை ஆற்றுப்படுத்துவதில் வல்லவர். இவரது மணிவிழாச் சிறக்க வாழ்த்துவதோடு அவர் சகல வளங்களுடனும் நிறைவாக வாழ இறையருளை வேண்டி வாழ்த்தி அமைகிறேன்.

கலாநிதி ஆறு.திருமுருகன்
தலைவர் - ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை,தலைவர்- சிவபூமி, அறக்கட்டளை.

## கோப்பாய் பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



எக்ஸ்பிறஸ் கல்வி நிறுவனத்தினுடைய முதல்வரும் பிரபல கணித ஆசானுமாகிய த.வரதராஜா அவர்களின் 60 ஆவது அகவையை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பிதழுக்கான வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். எமது வலிகாமம் கிழக்கு கோப்பாய் செயலகப் பிரிவில் சிறந்த நிர்வாகக் கட்டமைப்புடன் இயங்கிவருகின்ற தனியார் கல்வி நிறுவனங்களில் எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் தனக்கென தனியான இடத்தினைப் பெற்று மிளிர்வது யாவரும் அறிந்ததே.

42 வருடங்களாக எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டினுடைய புகழ்பூத்த கணித ஆசானாகத் தன்னுடைய பணியை மிகச் சிறப்பாக ஆற்றிவரும் த.வரதராஜா அவர்கள் பல நல்லமாணாக்கர்களை சமூகத்திற்கு உருவாக்கிய பெருமைக்குரியவர். இந்த நிறுவனத்தில் கல்வி கற்ற பல மாணவர்கள் நற்பிரஜைகளாகவும், சமூகத்தில் உயர் பதவிகளையும் வகித்துவருகின்றனர்.

எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டினை நின்று நிலைக்க கூடிய கல்வி நிலையமாகத் தொடர்வதற்கு பௌதீக ரீதியான வளங்களைப் பெருக்கி நிரந்தர கட்டடத்தொகுதியிலே கல்வி நிலையத்தினை நடத்திவருவது பாராட்டுக்குரியதாகும்.

சிறப்பான முறையில் வெள்ளிவிழா, மாணிக்கவிழா ஆகியவற்றினைக் கொண்டாடி பொன்விழா காணவிருக்கும் எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டினுடைய பணியினை வாழ்த்திப் பாராட்டுவதோடு, அந்நிறுவனத்தின் முதல்வர் த. வரதராஜா அவருடைய மணிவிழா நிகழ்வு சிறப்பாக அமையவும், அவர் தேகாரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழ்ந்து நல்மாணாக்கர்களைத் தொடர்ந்து உருவாக்கவும் எல்லாம் வல்ல இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

மருதலிங்கம் பிரதீபன், பிரதேச செயலர், வலிகாமம் கிழக்கு, கோப்பாய்.

## மணிவிழா வாழ்த்து



எனது அன்பிற்கும், அபிமானத்திற்குரியவரும், அயலவரும் சிறந்த ஆளுமைமிக்க கணித ஆசானுமாக விளங்குகின்ற த. வரதராஜா அவர்களின் அறுபது அகவை நிறைவு மணிவிழா சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

இவரது சேவையின் அர்ப்பணிப்பாக '' எக்ஸ்பிறஸ்'' கல்வி நிறுவனத்தை ஒரு ஓலைக் கொட்டிலில் ஆரம்பித்து தற்போது இந்த நிறுவனமானது பலமாடிக் கட்டடங்களும் வளங்களும் நிறைந்த ஒரு தனியார் கல்வி நிறுவனமாக யாழ்ப்பாணத்தில் திகழ்வதையிட்டுப் பெருமைப்படவேண்டியுள்ளது. கடந்த 2013 ஆம் ஆண்டு மாணிக்க விழாவைக் கண்ட இந்த நிறுவனத்தின் இயக்குநர் அவர்கள் கல்வி மேம்பாட்டில் மாணவர்களை முன்னிலைக்குக் கொண்டு வருவதுடன் மட்டுமன்றி, அவர்களை ஒழுக்கத்திலும், கட்டுப்பாட்டிலும் வழி நடத்தும் ஒரு ஆளுமைமிக்க முதல்வர். மாணவர்களை சமூகப் பணிகளிலும் ஈடுபடுத்திச் செயற்பட வைக்கும் ஒரு முற்போக்காளர். இவரிடம் கற்ற பல மாணவர்கள் பல உயர் பதவிகளில் இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் சேவையாற்றுகின்றனர்.

இவரது கல்வி நிறுவனத்தின் வளர்ச்சியை ஆரம்ப காலம் முதற்கொண்டு கண்டு கொண்டு வருவதால் இவரின் ஆளுமையின் திறமையைக் கண்கூடாகக் காணமுடிகிறது. மாணவர்களை ஒழுக்கக் கண்டிப்புடன் வழி நடத்தும் விதமே தனி. இவரது நிறுவனத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் தொகையைக் கொண்டு, இவரது செயற்பாட்டின் திறமையை மக்கள் அறிந்துள்ளார்கள் என்பதைக் கண்டுகொள்ளலாம்.

இவ்வாறு செயற்படும் ஒருவருக்கு மணிவிழா கொண்டாட ஏற்பாடு செய்த மணிவிழாக் குழுவினருக்கு முதற்கண் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிப்பதுடன், விழா நாயகன் எல்லா நலன்களும் பெற்று சகல சௌபாக்கியங்களுடன் நல்வாழ்வு வாழ இறையருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

வளர்கசேவை! வாழ்க பல்லாண்டு!

லயன் Dr. வை.தியாகராஜா MJF, J.P. உப ஆளுநர், லயன்ஸ் கழகம்

## வாழ்த்துச் செய்தி



ஒருவர் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார் என்பதை அல்லாது வாழ்ந்த ஆண்டுகளில் சமூகத்திற்கு எத்தகைய நற்செயல்களைச் செய்தார் என்பதையே வரலாறு பதிவு செய்கின்றது. அந்த வகையில், ஒரு நல்லாசானாக, நல்லாளுமை கொண்ட நிர்வாகியாகக் கல்விப் புலத்தில் ஆற்றிவரும் சேவைக்காக இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் அதிபர் உயர்திரு த.வரதராஜா அவர்கள் வரலாற்றில் அறியப்படுவார்.

நான் ஆசிரியப் பணியில் நுழைந்த 1977 காலப்பகுதியில் ஒரு கண்டிப்பான ஆசிரியராக எனக்கு அறிமுகமானவர் உயர்திரு த. வரதராஜா அவர்கள். தொடர்ந்தும் இடுக்கண்களையும் நட்பாளனாக என்னுடன் உறவு பூண்டிருக்கிறார்.

உயர்திரு த. வரதராஜா அவர்களின் 60 ஆவது அகவையையொட்டி நடைபெறும் மணிவிழா சிறக்கவும் அவர் தம் அகவை நூறாண்டுகளைக் கடந்து சதவிழாக்கொண்டாடவும் நான் வணங்கும் எல்லாம் வல்ல இயற்கை என்ற இறைவனை இறைஞ்சுகின்றேன்.

பொ.ஐங்கரநேசன் - விவசாய அமைச்சர், வடக்கு மாகாணம்.

## மணிவிழா சிறக்க மத்தியின் வாழ்த்துக்கள்



கால்கோள் விழாவிலிருந்து மிலேனியம் விழா வரை மனிதர் கொண்டாடும் விழாக்கள் பலவாகும். அவற்றுள் மணி விழா மகத்தானதாகும். அறுபது வயதைப் பூர்த்திசெய்யும் அனைவரும் கொண்டாடும் விழா அல்ல அது. தாமே தமக்குக் கொண்டாடும் விழாவும் அல்ல. கொண்டாடப்பட வேண்டிய வர்களென்று பொதுமக்கள் கருதுவோர்க்கு அம்மக்களாலே எடுக்கப்படும் விழாதான் அது. Express Institute அதிபரும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் முன்னை நாள் கணித ஆசானுமாகிய த.வரதராஜாவின் மணிவிழா சிறப்பிதழுக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

த.வரதராஜாவுக்கு மணிவிழா எடுப்பதனால் அவருக்குப் பெருமை ஏற்படவில்லை. அவ்விழாவே பெருமையடைகிறதெனக் கருதலாம். ஒரு காலத்தில் மிகவும் பின்தங்கிப் போயிருந்த யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கணிதத் துறை, ஒழுக்காற்றுத்துறையென்பன அமரர் இராஜதுரை, த.வரதராஜா அவர்கள் கூட்டினால் நிமிர்ந்தெழுந்தன. சீரியநோக்கு, சிறந்தசிந்தனை, தெரிந்து வினையாற்றும் பண்பு, சிறு பிழையையும் ஏற்க முடியாத கண்டிப்பு ஆகிய பல நிர்வாகத் திறமைகளின் கூட்டிணைந்த உருவமே த.வரதராஜா எனலாம். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவ முதல்வர் சபையும் அறிவிப்பாளர் கழகமும் இடைநிலைப் பிரிவின் கணித பாடத் தேர்ச்சியும் பீடும் பெருக்கும் பெற்று நீடுயர்ந்து வளரக் காரணமாக இருந்த இவ்வாசானின் வாசல் தலமும் தனியார் கல்வி நிலையமும் ஒன்றாகவே அமைந்ததால் பெற்றோரின் நம்பிக்கைக் குரிய நிறுவனமாக அவரது நிறுவனம் தனிமுத்திரை பதித்துள்ளது.

மாணவர்களுக்கு நல்வழிகாட்ட விரும்பும் பெற்றோர் அவர் வரவேண்டாம் என்று தடுத்தாலும் தமது பிள்ளைகளை அவரது நிறுவனத்திலேயே சேர்க்கிறார்கள் என்றால் கல்வி மட்டுமன்றி, நற்பழக்க வழக்கமும் மாணவர்களுக்கு அவசியமென்ற கருத்தியலின் தாக்கமேயாகும், மணிவிழா நாயகன் நூற்றாண்டு விழாக்காண வாழ்த்துகின்றேன்.

S.K.எழில்வேந்தன் - அதிபர், யாழ்.மத்திய கல்லூரி.

## ஆசிரியருக்கு இலக்கணமான பெருந்தகை



எனது நண்பரும் எக்ஸ்பிறஸ் நிறுவனத்தின் முதல்வருமான ஆசிரியர் த.வரதராஜா அவர்களின் மணிவிழா சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். கற்பித்தல் எவ்வாறு அமையவேண்டும் என்பதற்கு இலக்கணமாக விளங்கிய அவரது ஆசிரியப் பணி மாணவர்களது கட்டுப்பாடு எவ்வாறு அமைய வேண்டும் என்பதனை உள்ளடக்கியதாக அமைந்ததே அவரது பணிக்குக் கிடைத்த தனித்துவமாகும். யாழ். மத்திய கல்லூரியில் பிரபலமான கணித ஆசிரியராக விளங்கியது மட்டுமன்றி அக்கல்லூரியின் மாணவர் ஒழுக்கத்தை மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்பான ஆசிரியராகவும் நியமனம் பெறவைத்தது. அக்கல்லூரியில் முத்திரை பதித்துச் சென்ற ஆசிரியர்களுள் நண்பன் வரதராஜா அவர்களும் ஒருவர் எனக் கூறினால் அதில் மிகை ஒன்றும் இல்லை. அதிபராலும் ஆசிரியர்கள், மாணவர்களாலும் விரும்பப்பட்ட கணித ஆசிரியராக விளங்கிய வரதராஜா அவர்கள் கல்லூரியின் வளர்ச்சியில் முக்கிய பங்காளியாக விளங்கியதை நான் அறிவேன்.

கல்லூரியில் நடைபெறும் எந்த ஒரு விழாவிலும் காத்திரமான பங்கை வகித்து வந்த வரதன் அவர்கள் கற்பித்தலால் தனக்கொரு இடத்தை வகித்து வந்தமையினாலேயே கல்லூரியில் கணித பாடத்திலான பெறுபேறு என்றுமே உயர்வாகக் காணப்பட்டமையை நான் அறிவேன். அதுமட்டுமன்றி என்றுமே அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும் ஒத்துழைப்பு வழங்குவது வரதன் அவர்களின் இயல்பாகும்.

த.வரதராஜா கல்லூரியில் மட்டுமன்றி எக்ஸ்பிறஸ் நிறுவனத்தினூடாக ஆற்றிவரும் சேவைகளும் பாராட்டப்பட வேண்டியவையாகும். அவர் இக் கல்வி நிலையத்தின் முதல்வராக இருந்த காரணத்தால் தனது ஆளுமையின் மூலம் ஒரு தனியார் பாடசாலை போன்றே அதனது நிர்வாகத்தை மேற்கொண்டிருந்தார். நான் எண்பதுகளில் இக்கல்வி நிலையத்தில் கல்வி கற்பித்த காரணத்தால் நேரடியாகவே இவரது நிர்வாகத் திறமையைக் கண்டு வியந்திருக்கிறேன். நேர முகாமைத்துவத்தில் அவர் காட்டிவந்த அக்கறை மாணவர்களதும் ஆசிரியர்களதும் வரவில் மிகச்சிறப்பான ஒழுக்கத்தைப் பேண உதவியது. தமது பிள்ளைகளது கல்வியையும் ஒழுக்கத்தையும் மேம்படுத்த விரும்பிய பெற்றோர்கள் எக்ஸ்பிறஸ் நிறுவனத்தை நோக்கிப் படையெடுப்பதனை நான் நேரடியாகவே கண்டு மகிழ்ந்திருக்கிறேன்.

நண்பன் வரதன் அவர்கள் நட்புக்கு இலக்கணமாகத் திகழ்பவர் என்பதை மகிழ்ச்சியுடன் கூறுவதற்கு விரும்புகிறேன். அதன் காரணமாகவே ஒரு பெரிய நண்பர் கூட்டத்தை வைத்திருக்கின்ற ஆற்றல் அவருக்கு ஏற்பட்டது. அது மட்டுமன்றி என்றுமே உயர் சிந்தனை கொண்ட ஒருவராகவும் மனிதநேயம் கொண்ட ஆசிரியராகவும் இருந்தமையால் சமூகத்தில் மிகச் சிறந்த உறவைப் பேணக்கூடிய பெருந்தகையாக அவர் விளங்கியதுடன் சமூகத்தவரால் நன்கு மதிக்கப்படும் ஒருவராகவும் காணப்படுகிறார். ''செய்யும் தொழிலே தெய்வம்'' என்ற மனப்பாங்கு கொண்ட வரதன் மாணவர்களுக்கு நல்ல தரமான கல்வியை வழங்கவேண்டும் என்பதிலே அசையாத நம்பிக்கை கொண்டவர். இதன் காரணமாகவே பெருமளவு பணச்செலவில் தனது கல்வி நிலையத்துக்கென பௌதிக வளங்களை விருத்தி செய்துள்ளார்.

அதே போன்று நல்ல தரமான ஆசிரியர்களை இனங்கண்டு வேலைக்கு அமர்த்துவதன் மூலம் உயர்தரத்திலான கல்வி வழங்கப்படுவதனை உறுதி செய்திருப்பதனைக் காண முடிகின்றது. ஆண்டுதோறும் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் க.பொ.த. சாதாரண தரத்தில் சித்திபெற வைக்கும் பெருமையும் நண்பர் வரதராஜா அவர்களையே சாரும். மொத்தத்தில் நல்ல கல்வியாளராக, சிறந்த நிர்வாகியாக, உயர்ந்த சமூக சேவையாளராக விளங்கும் வரதராஜா அவர்களின் சேவை கல்வியுலகில் பாராட்டப்பட வேண்டியதென்பதை உறுதிப்படக் கூறுவதுடன் அவர் மேலும் பல்லாண்டு காலம் உடல், உள ஆரோக்கியத்துடன் வாழ்ந்து மாணவர் உலகின் விடிவெள்ளியாகத் திகழ எனது உளமார்ந்த வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க வளமுடன் என வாழ்த்தும் நண்பன்

பேராசிரியர் க. தேவராஜா
தலைவர், வணிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.


**மணிவிழாக்குழுவினர்**

**The Express Institute**
**Irupalai, Kopay.**

SINGER


Symphony AIR COOLERS

நாள் முழுதும் இயற்கையான குளிர்ச்சி




சிம்பனி எயார் கூலர்கள் இயற்கையான குளிர்ச்சியையும் வலிமையான காற்றை வீசக்கூடியதாகவும் இருக்கின்றது. அத்துடன் எயார் கூலர் மற்றும் மின் விசிறி போன்று தொழிற்படக்கூடியது. நாள் முழுவதும் இயற்கையான குளிர்ச்சியை குறைந்த செலவில் பெற்றுக்கொள்ளுங்கள்.

www.masters.lk



| SYM-DIET-8i | SYM-DIET-12i | SYM-DIET-22i | SYM-DIET-35i | SYM-HIC-26i | SYM-WIN-50i |
|---|---|---|---|---|---|
| ரூ. 12,999/- | ரூ. 15,999/- | ரூ. 19,999/- | ரூ. 22,999/- | ரூ. 21,399/- | ரூ. 38,799/- |
| மாதாந்தம் ரூ.1,005/- | மாதாந்தம் ரூ.1,237/- | மாதாந்தம் ரூ.1,579/- | மாதாந்தம் ரூ.1,778/- | மாதாந்தம் ரூ. 1,654/- | மாதாந்தம் ரூ. 3,007/- |

மிகக் குறைந்த அளவு சக்தி பயன்பாட்டை கொண்டது

வெளிப்புறம் உட்புறம் இரண்டிலும் பயன்படுத்தலாம்

இன்வர்டர் சக்தியிலும் வேலை செய்யக் கூடியது

புதிய தூய்மையான குளிர்ச்சியான காற்று

SINGER

நிபந்தனைகளுக்குட்பட்டது

வீட்டின் உட்புறத்தை வெளிப்புறத்தை போலவே குளிர்ச்சியாக்கும்

011 5 400 400 http:// www.singersl.com

கிடைக்குமிடங்கள் SINGER Plus SISIL WORLD SINGER Mega நாடு பூராக உள்ள முகவர்களிடம்

# Nucleus
நியுக்லியஸ் | நியுக்கிலியஸ்

## சேவை வழங்குநர்கள் / அறிவுரை வழங்குபவர்கள் பயிற்சி அளிப்பவர்களை பதிவு செய்தல்

வடக்கு மாகாணத்தில் நிகழ்ச்சிகளை செயற்படுத்துவதற்கு தமிழ் பேசக்கூடிய பயிற்சி அளிப்பவர்கள், அறிவுரையாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்களை இணைத்துக் கொள்ள நியுக்லியஸ் ஃபவுண்டேஷன் திட்டமிட்டுள்ளது.

## தகைமைகள்


1. குறிப்பிட்ட துறையில் அனுபவம்
2. மிகச் சிறிய நிறுவனங்களுக்கு பயிற்சி அளித்த அனுபவம்
3. வடக்கிற்கு சென்று நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான விருப்பம்
4. பங்கேற்பவர்களின் தேவைகளுக்கேற்ற விதத்தில் நிகழ்ச்சிகளை அமைத்துக்கொள்ளும் திறன்
5. சிறப்பான தொடர்பாடல் திறன்
6. குறைந்த பட்ச கண்காணிப்புடன் சுயாதீனமாக இயங்கும் ஆற்றல்
7. நீண்ட நேரங்கள் பணி புரிவதற்கான விருப்பம் மற்றும் குறுகிய நேர அவகாசத்தினுள் ஒப்படைகளை பூர்த்தி செய்யும் திறன்
8. தமிழ் மொழியில் நிகழ்ச்சிகளை நடாத்த கூடியதாக இருப்பது கட்டாயத் தகைமையாகும்.

## பிரிவுகள்

• மோட்டார் வாகனம் • வியாபாரம் • பாய் பின்னுதல் • பைகள் மற்றும் காலணிகள் • மீன் பதப்படுத்தல் (கருவாடு உட்பட) • பனை ஓலைப் பொருட்கள் • பற்றிக் • அழகுக்கலை • உணவு பொதி செய்தல் • காகித வேலைகள் • மண்பாண்டம் • மெழுகுவர்த்தி • உணவு பதனிடுதல் • அச்சு • உணவகம் • தும்புப் பொருட்கள் • சிகை அலங்காரம் • கைவினைப் பொருட்கள் • சிறு வியாபார அபிவிருத்தி • பாற் பண்ணை • கைத்தறி • ஆடைகள் தயாரித்தல் • விடுதி • சுற்றுலா மற்றும் வடக்கு மாகாணத்திற்கே உரித்தான ஏனைய துறைகள்

மேலே குறிப்பிட்ட தகைமைகள் உங்களுக்கு இருக்குமாயின் உங்கள் CV யை nucleus.foundation@gmail.com என்ற ஈமெயில் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அல்லது 011 720 4218 என்ற எண்ணுடன் தொடர்பு கொள்ளவும். குறிப்பிட்ட துறையுடன் தொடர்பான நிலைப்பாட்டை சிபாரிசுகளையும் உட்படுத்தவும்.


## மஸ்கன்ஸ் குழுமத்தின் உற்பத்திகள்




## மஸ்கன்ஸ் குழுமத்தால் விநியோகிக்கப்படுபவை




## மஸ்கன்ஸ் (பிறைவேட்) லிமிடெட்

த.பெ. இல. 175, சிறி சுமணதிஸ்ஸ மாவத்தை, கொழும்பு -12, இலங்கை

தொ.பே.: +94 11 2325561-3 ,+94 11 2344672, தொலைநகல்: +94 11 2449537

மின்னஞ்சல் : mascons@eureka.lk, இணையத்தளம் : www.mascons.com

MASCONS ESTD 1939

| மானிப்பாய் | யாழ்ப்பாணம் | வவுனியா |
|---|---|---|
| இல. 118, யாழ்ப்பாணம் வீதி, மானிப்பாய் | இல. 35, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் | இல. 376, யாழ்ப்பாணம் வீதி, தாண்டிக் குளம், வவுனியா |
| தொ.பே/தொலைநகல்: 021-2256474, 076-8400338 | தொ.பே/தொலைநகல்: 021-2222413 | தொ.பே/தொலைநகல்: 024 - 2050168, 076 - 6411944 |



சா/தரம் அல்லது உ/தரத்தின் பின்னர்

# உண்மையான ஆஸ்திரேலிய தகைமையினை பெற்றுக்கொள்ளுங்கள்

**புலமைப்பரிசில்கள் உள்ளன**


முதல் 20 மாணவர்களுக்குள் பதிவுகளை செய்து ஆஸ்திரேலியா செல்வதற்கான விமானப் பயணச்சீட்டினை வெற்றிபெறுவதற்கான வாய்ப்பினை பெற்றுக்கொள்ளவும்

## கல்வி நிறுவனத்தில் பதிவு செய்யும் முன் பரிசீலித்து பாருங்கள்

- குறித்த ஆஸ்திரேலிய தகைமை உண்மையாகவே ஆஸ்திரேலியாவிலிருந்தா?
- உங்கள் பட்டப்படிப்பின் முதலாம் ஆண்டினை நிச்சயமாக ஆஸ்திரேலியாவிலிருந்தா அல்லது வேறு தேசிய நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்டதா?
- க.பொ.த. சா/தரம் அல்லது உ/தரத்தின் பின்னர் உண்மையாகவே ஆஸ்திரேலிய தகைமையினை பெற்றுக்கொள்வது எவ்வாறு?

## பட்டத்தினை இலங்கையில் அல்லது அவுஸ்திரேலியாவில் பூரணப்படுத்தலாம்

- Bachelor in Technology (B-TECH)
- Bachelor in Commerce (Accountancy)
- Bachelor in Business



" உங்கள் வாழ்க்கையில் வெற்றிப் பாதையினை ATMC ஊடாக பெற்றுக்கொள்ளுங்கள் "

இலவச PEN DRIVE

பெற்றோருடன் வருகை தந்து இலவசமாக PEN DRIVEவினை பெற்றுக்கொள்ளவும்



## விசேட இலவச கருத்தரங்கு

"ஆஸ்திரேலியாவின் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பிற்கு ATMCஐ ஏன் தெரிவு செய்யவேண்டும்?"

**யாழ்ப்பாணம்**
**மார்ச் 06 திகதி மதியம் 3 மணிக்கு**
**நூலக அரங்கில்**

கருத்தரங்கிற்கு இன்றே பதிவு செய்யுங்கள்

துரித அழைப்பு : 0777122686 | 0718561536

www.skillsads.com

ATMC AUSTRALIAN TECHNICAL & MANAGEMENT COLLEGE

IN ASSOCIATION WITH Federation UNIVERSITY·AUSTRALIA

ATMC - ஸ்ரீலங்கா கெம்பஸ்

இல. 12D, ஹேக் வீதி, கொழும்பு 4. தொலைபேசி : 0112 506047, 0112 506048

மின்னஞ்சல் : infosl@atmc.vic.edu.au பேஸ்புக் : FeduniAustraliaLK

இணையம் : www.atmc.edu.au

# UNIVERSITY COLLEGES

## HURRY UP.....

## To Build Your Great Future.....

REGISTER TODAY ITSELF ...

## LIMITED OPPORTUNITIES AVAILABLE...

University Colleges established under University of Vocational Technology (UNIVOTEC) invite you to study for **NVQ Level 5 Diploma and Level 6 Higher Diploma in Technology.**
University of Vocational Technology (UNIVOTEC) has been established under the parliamentary Act No. 31 of 2008 and therefore it is a nationally recognized university. UNIVOTEC has international recognition as it is a member of the Association of Commonwealth Universities.

### NVQ Level 5 & 6 Diploma

- Industry Related Qualification for Employment at Supervisory and Management Levels
- Opportunities to follow a B.Tec Degree at UNIVOTEC

- Course Duration: **Three (3) Years, Full Time** (Including 6 months Foundation Course and 6 months On the Job Training)

### University Colleges – Entry Qualifications for Diploma Courses

GCE A/L 3 passes in relevant stream or NVQ Level 4 in relevant occupation as specified below

| | Course | Colleges | Entry Qualifications |
|---|---|---|---|
| 01 | **Post-Harvest Technology**<br>(This course includes the subjects of Preservation, conservation, quality control, processing, packaging, storage, distribution, marketing, and utilization of agricultural commodities) | Anuradhapura | • GCE (A/L) Science (Bio) or Bio Science Technology or Art with Credit Pass for Soft Technology (Agro Technology, Food Technology, Bio-Resource Technology)<br>OR<br>• NVQ Level 04 Certificate of Fruit and Vegetable Processor (D15S001), Field Assistant (Agriculture, A01S003) |
| 02 | **Aquaculture and Aquatic Resources Technology**<br>(This course includes techniques related to cultivation of aquatic animals and plants in natural or controlled marine or fresh water environments and technological innovations that occurred in the management and production of aquatic resources) | Anuradhapura | • GCE (A/L) Science (Bio) or Bio Science Technology or Art with Credit Pass for Soft Technology (Bio-Resource Technology)<br>OR<br>• NVQ Level 04 Certificate of Aquaculture Technician (B05S004) |
- கறுப்பு நீக்கும் வைத்திங் பேசியல் மினுமினுப்பை தரும் கோல்ட் பேசியல் செய்துகொள்ளலாம். ஐசிங் கேக், மேக்கப் றிச்கேக் ஓடருக்கு ஏற்றுக் கொள்ளப்படும். 1 றிச் கேக் - 45/=

அக்ஷயா
421, நாவலர் றோட் (பிறவுண் றோட் அதன் கொலினிகேஷன் அருகில்)
யாழ்ப்பாணம். (077 210 6155)
(67388)(45.7.3)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111

உங்கள் குழந்தையின் எதிர்காலத்திற்கு சிறந்த அடித்தளம் அமையுங்கள்

யாழ் குடாநாட்டில் கல்விச் செயற்பாடுகளுக்கு பிரசித்தி பெற்ற BBC ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலையில் உங்கள் குழந்தையை இணையுங்கள்

British BUSINESS COLLEGE — Where Students Come First

Accent On Skills Canada Award
International Recognition for BBC Early Learning Schools for Best Curriculum, Co-Curriculum, Child Development Activities & Child Management

**BBC ENGLISH MEDIUM EARLY LEARNING SCHOOLS**

2-3 YEARS - PLAYGROUP
3-4 YEARS - MONTESSORI
4-5 YEARS - PRE-SCHOOL

கற்பித்தல் மொழி: ஆங்கில மொழி மூலம், தமிழ் கட்டாய பாடம்

பாலர் பாடசாலையின் சாதனைகளும் மைல் கற்களும்
- கடந்த 11 ஆண்டுகளாக எமது 10 வளாகங்களில் 8000 மாணவர்களுக்கு மேல் பயனடைந்துள்ளார்கள்.
- யாழ் குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட 1வது ஆங்கில மொழிமூல பாலர் பாடசாலை
- யுத்த காலத்திலும் யாழ் சிறார்களுக்காக இயங்கிய ஒரேயொரு தனியார் பாடசாலை
- எமது பாடசாலைகளில் கல்வி பயின்ற 90% மாணவர்கள் Year 5 Scholarship பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

பாலர் கல்வியை மேலும் மேம்படுத்தும் எமது விசேட செயற்பாடுகள்
- Percussion Band, Meditation, Speech, Dance & Drama (in English & Tamil)
- குழந்தை- பெற்றோர்- ஆசிரியர் களிடையில் சிறந்த உறவையும் குழந்தையின் அறிவையும் வளர்ப்பதற்கு ஊக்குவிக்கும் மாதாந்தச் செயற்பாடுகள்.

சிறார்களின் அபிவிருத்திக்கான செயற்பாடுகள்
2+ முதல் 5+ குழந்தைகளின் அறிவுத்திறனை ஊக்குவிக்குமுகமாக எல்லாக் குழந்தைகளும் பின்வரும் கல்வி, விளையாட்டு சார் நிகழ்ச்சிகளில் பங்குபெறுவர்.
- Sports Meet
- English Day Concert
- முத்தமிழ் விழா
- Art & Craft Exhibition
- Carols
- Pre School Graduation

BBC யின் 11 பாலர் பாடசாலை வளாகங்கள்: யாழ்ப்பாணம் 1 (64, கோவில் வீதி, யாழ்ப்பாணம்), யாழ்ப்பாணம் 2 (625, K.K.S வீதி யாழ்ப்பாணம்), கோப்பாய், மானிப்பாய் 1, மானிப்பாய் 2, கன்னாகம், வடமராட்சி, நீர்வேலி, சாவகச்சேரி, சங்கானை, Puthur (Point Pedro Road Puthur East)

BRITISH BUSINESS COLLEGE
64, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 077 362 7055, 021 222 4060

**13 YEARS SERVICE - 11 SCHOOLS IN JAFFNA PENINSULA**


# சைக்கிள் திருடன் கைது



கரணவாய்,மார்ச் 01

பல்வேறு பகுதிகளில் களவாடப்பட்ட சைக்கிள்களை விற்பனைக்கு தயார் நிலையில் வைத்திருந்த நெல்லியடிப் பகுதி சைக்கிள் கடை உரிமையாளர் ஒருவரை சந்தேகத்தின் பேரில் கொடிகாமம் பொலிஸார் நேற்றுக் கைது செய்ததுடன் அவரிடமிருந்து 10க்கு மேற்பட்ட சைக்கிள்களையும் கைப்பற்றியுள்ளனர்.

தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்ற பல்வேறு சைக்கிள் திருட்டுக்களுடன் தொடர்புடைய சந்தேகநபரைக் கைது செய்த கொடிகாமம் பொலிஸாரினால் அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போது தன்னால் திருடப்பட்ட சைக்கிள்கள் நெல்லியடிப் பகுதியில் அமைந்துள்ள சைக்கிள் திருத்துபவரிடம் விற்பனை செய்த தாக தெரிவித்துள்ளார்.

இதனை அடுத்து அந்தப் பகுதிக்கு விரைந்த கொடிகாமம் பொலிஸார் நெல்லியடிப் பகுதியில் அமைந்துள்ள சைக்கிள் திருத்துமிடத்தை முற்றுகையிட்டு சோதனை இட்டபோது அங்கு விற்பனைக்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 10க்கு மேற்பட்ட சைக்கிள்களைக் கைப்பற்றியதுடன்,சந்தேகத்தின் பேரின் சைக்கிள்கடை உரிமையாளரையும் கைது செய்து கொண்டு சென்றுள்ளனர். (த-108)


Nothern central Hospital, 342, Palaly Road, Jaffna
021 221 9988, 021 221 9977, 021 222 2263
இன விருத்தி மற்றும் பெண்களின் ஆரோக்கியத்திற்கான மையம் இப்போழுது NCH இல்
Northern Central Hospitals

நொதேன் சென்றல் வைத்தியசாலை யாழ்ப்பாணத்தில் குழந்தை முதல் வயது முதிர்ந்த பெண்களுக்கு ஏற்படும் சகலவிதமான நோய்களுக்குமான வைத்திய நிலையம் ஒன்று ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சவூதி அரேபியா மற்றும் றோயல் வைத்தியசாலைகளில் 37 வருட அனுபவமுள்ள வைத்திய நிபுணர் சதானந்தன் FRCS, FRCOG, Mphil, FFFP, FLCOG வழிகாட்டலுக்கமைவாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.



- ஊசி மூலம் கர்ப்பம் தரித்தல்
- செயற்கைக் கருத்தரித்தல்
- விந்து ஊசி முறை
- முட்டை நன்கொடையாளர்
- உளவள ஆலோசனை
- விந்தணு மீட்பு முறை
- விந்தணு வங்கி
- விதை திசுக்கள் பரிசோதித்தல்
- இனப்பெருக்க அறுவைச்சிகிச்சை

இங்கு பின்வரும் நோய்களுக்கான சிகிச்சை மேற்கொள்ளப்படுகின்றது.

A) பிறப்பு தொடக்கம் பூப்பு வரையான நோய்கள்
  a) தெளிவற்ற பிறப்புறுப்பு
  b) Labial adhesious காரணமாக சிறுநீர் கழிக்க இயலாமை
  c) அதிக எடை ஏற்றம்

B) பூப்பிலிருந்து 40 வயதுவரை மாதவிடாய்ப் பிரச்சினைகள்
  1) அதிக மாதவிடாய்
  2) நீண்ட மாதவிடாய்
  3) சூலகநோய் காரணமாக வரும் ஒழுங்கற்ற மாதவிடாய் (eg: poly cystic Ovary syndrome)
  4) நோவுடன் மாதவிடாய்

C) கீழ் வயிற்று வலி
  1) மாதவிடாயின்போது வரும் கருப்பை நோய் (Endometiosis)
  2) சூலக நீர்க்கட்டி

D) மகப்பேறின்மை
  1) பிள்ளைப்பேறின்மைக்கான சிகிச்சைகள் சூல் விடுவிப்பதைத் தூண்டல் தொடக்கம் IUI, IVF, ICSI வரையான சிகிச்சையும் கரு முடக்கமும் (Embryo Freezing)
  2) தேவையற்ற கருத்தரிப்பை தடுத்தல்
  3) ஆரம்ப கருச்சிதைவைத் தடுத்தல்

40 வயது தொடக்கம் 60 வரை
  a) ஆரம்ப புற்றுநோய் அறிகுறியான அதிக வலியும் ஒழுங்கற்ற மாத விடாயும்
  b) மாதவிடாய் நிறுத்தத்தின்போது அறிகுறிகளான அதிக களைப்பு, மறதி, தோல் பிரச்சினைகள், வெப்ப அடைப்பு என்பனவற்றை சிகிச்சை மூலம் குணப்படுத்தலாம்
  c) எழும்பு மென்மையாதலால் ஏற்படும் எலும்பு முறிவு (ஆரம்பத்தில் தடுக்கமுடியும் . நோய் வந்தாலும் சிகிச்சையளிக்கலாம்
  d) முதிர்வின் முன்வரும் இருதய நோய் தடுத்தல்

60 வயதிலிருந்து முதுமை வரை
  1) கர்ப்பப்பை இறக்கம்
  2) கட்டுப்பாடற்ற சிறு நீர்
  3) கருவாய் யோனி கடி
  4) புற்றுநோய்க்கு அறிகுறியான இரத்தப்பெருக்கு



சிகிச்சைக்கான முன்பதிவுகளுக்கு
நிதர்சன் கெனடி
தொலைபேசி இல.077 343 9988
நொதேன் சென்றல்
021 2219988, 021 2219977,021 222 2263

## Wanted Teachers (English Medium)

We are seeking innovative qualified primary and montessori school teachers to join the English faculty at our teaching co - educational school. You should be a hardworking and enthusiastic teaching professional with excellent knowledge of English and a sound understanding of Edexcel syllabus.

The positions will involve teaching Montessori and primary and also assisting in the encouragement of extra-curricular activities the applicant should be a motivated individual with a keen interest in encouraging and inspiring students to love learning and excel in the English medium.

Vacants existing for jaffna / chavakachcheri
Please submit your resume and cover letter by e.mail : aerolankajaf@gmail.com
contact no . 021 222 6242

## வர்த்தகப் பெருமக்களே !!

வியாபாரத்தை பதிவுசெய்தல்
**BUSINESS REGISTRATION**
நிறுவனங்கள்,தொழிற்சாலைகள்,கம்பனிகள், அமைப்புக்கள்,கழகங்கள்,சமூகசேவை நிறுவனங்கள்,கல்வி நிலையங்கள் மற்றும் சகலவிதமான....:
பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாக பதிவு செய்து அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

**VISA சேவை**
VISIT VISA,STUDENT VISA, TOURIST VISA & SCHENGEN VISA
என்பன குறுகிய காலத்தில் பெற்றுத்தரப்படும்

**VTL CAMPUS**
No.380,Galle road.Colombo - 03
Tel : 0779600222,0115922126

max adz


## தொடர்ச்சிகள்

### புலமைப்

நடைபெறவுள்ளதாக பரீட் சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே.புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையின்போது மாணவர்களுக்கு ஒரு வினா பத்திரத்தை மாத்திரம் வழங்குவதற்கு தேசிய கல்வி ஆணைக்குழு யோசனை முன் வைத்திருந்தது. எனினும் பழைய முறைமைக்கு அமைய இந்த ஆண்டு பரீட்சையை நடத்துவதற்கு, பின்னர் பரிந்துரை செய்யப்பட்டதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (5)

### கியூ பொலிஸாரால்

கியூப் பிரிவு பொலிஸா ரால் கைது செய்யப்பட் டுள்ளார்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய உற்சவம் இன்று இடம்பெறவுள்ளது. இதற்காக இலங்கையில் இருந்து மட்டுமல்லாமல், தமிழகத்திலிருந்தும் பெருமளவானோர் பங்கு கொண்டுள்ளனர்.

திருச்சியில் உள்ள அகதி கள் முகாம் ஒன்றில் தங்கியிருந்த கிளிநொச்சியை சொந்த இடமாகக் கொண்ட 27 வயதான பிரசாந்த் என்ற இந்த இளைஞர், கச்சதீவு செல்லும் பயணிகளுடன் புறப்பட முயன்ற போது, முறையான ஆவணங்களின்றி பயணம் செய்ய முயன்ற தாக கூறி, கியூப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, கச்சதீவுக்கு செல்ல முயன்ற ஊடகவியலாளர் ஒருவர் உள்ளிட்ட 23 பேர் மீது குற்ற வழக்குகள் இருப்பதால் அவர்களும் பயணம் செய்ய தமிழ்நாடு பொலிஸார் அனுமதி மறுத்து விட்டனர். (த-5)

## தமிழருக்கு

கூட்டுறவுகள் எம்மால் திறமை யாக நடத்தப்பட்டு வந்தவை. அவை அரச உள்நுழைவின் காரணத்தால் திறமை இழந்தன. இதனால் எமது மக்களின் சுதந்திரம் பறிபோனது. எனவே சுதந்திரமாகக் கூட்டுறவுத்துறை வடமாகாணத்தில் நடத்தப்பட வேண்டும் என்றும் ஆவன செய்ய உதவுவோம் என்றும் கொழும்பு அரசுகூறும்போது எம்மிடம் இருந்து பறிபோனவையே எமக்குத் திரும் பக் கையளிக்கப் படுகின்றன.

எனினும் உங்கள் நல்லெண் ணத்தை வரவேற்கின்றோம். கடல் வளங்கள், நீர் வளங்கள் எம்மால் பாவிக்கப்பட்டு வந்தவையே. அதற் குக் கட்டுப்பாடுகள் போடப்பட்டன. இவற்றை நீக்க எடுக்கும் நடவடிக் கைகளை வர வேற்கின்றோம். எம் மிடம் இருந்து பறிபோனவைற் றையே நாம் திரும்பப் பெறும் காலம் கனிந்துள்ளது.

67 வருடமாகத் தீர்க்கப்படாத எமது பிரச்சினை பற்றி கூறிக்கொண்டு இருக்க வேண்டிய கடப்பாடு உடை யவர்கள். பொருளாதார விருத்தி யால் மட்டும் எமது மக்கள் குறை தீர்ந்துவிடாது. பலாத்காரமாகப் பறித்ததைத் திரும்பக் கையளித் தால் மட்டும் எமது பிரச்சனைகள் நீங்கி விடா. சட்டப்படி சேர வேண் டிய உரித் துக்கள் சேரவேண்டும்.

இன்றைய அரசு எம்மாலும் உரு வாக்கப்பட்டது. அதில் எமக்கு நம் பிக்கையுண்டு. ஆனால் இராணு வத்தினரிடம் போய் நாங்கள் எந்த ஒரு இராணுவ முகாமையும் அப்புறப்படுத்தமாட்டோம் என்றால் அது ஒரு ஏமாற்று வித்தையாகவே முடியும்.

அதன் அர்த்தமாக நாங்கள் புரிந்து கொள்வது, 'தேர்தல் வருகின்றது. நாங்கள் தமிழருக்கு எதுவும் கொடுக் கவில்லை, கொடுக்கமாட்டோம்' என்று சிங்களச் சகோதர மக்களுக் குக் கூறுவது போல் தெரிகிறது. இத னால் அவர்களின் வாக்குகளைப் பெறலாம் என்ற எண்ணம் இருக் கக் கூடும். சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்றுப் பதவிக்கு வந்த பின் தமிழர்களுக்கு நாம் உரியதைச் செய்வோம் என்று அரசு கூறக்கூடும். ஆனால் அவ்வாறு செய்வது சிங்கள மக்களை ஏமாற் றுவதாக முடியும். நீங்கள் எமக்கு நன்மை செய்யப் போய் சிங்கள மக்களை ஏமாற்றுவது முறை யல்ல.

அதற்குப் பதிலாக தமிழ் மக்கள் இது வரை காலமும் மிகவும் நொய்ந்து போயுள்ளார்கள். அவர்களுக்கு ஐக்கிய இலங்கையினுள் மிக உயர்ந்தளவு அதிகாரப் பகிர்வை புதிய அர சியலமைப்பின் ஊடாக வழங்கவுள்ளோம். நாம் யாவரும் ஒற்றுமையாக ஐக்கியத்துடன் வாழ வழி வகுக்க உள்ளோம் என்று கூறி எமக்கு வாக் களியுங்கள் என்று கோருவதே முறையென்று எனக் குப் படுகின்றது.

சிங்கள மக்களையும் தமிழ் பேசும் மக்களையும் உங்கள் நம்பிக் கைக்கு இலக்காக்குங்கள். யார் தேர்தலில் என்ன சொன்னாலும் நீங்கள் நீதியின் வழியில், நேர்மை யின் வழியில், ஒற்றுமையின் வழி யில், மனிதாபிமான முறை யில் நடந்து செல் லப் பாருங்கள் என்றே தாழ்மையுடன் வலியுறுத்துகின் றோம்.

எமது புதிய அரசு தென்னிலங்கை மக்களின் மனதைப் புரிந்து கொண்டு அதன் அடிப்படையில் ஒரு சுமுக மான தீர்வைக் கொண்டுவர முயற் சிக்க வேண்டும். அதே போல் எமது மனங்களையும் அலசி ஆராய ஆவன செய்ய வேண்டும். எமது மாகாண மக்களின் வேலை வாய்ப் புக்களை மேம்படுத்த பலவாறான திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். அதனை மத்திய அரசும் மாகாண அரசும் இணைந்தே செயலாற்ற வேண்டும். மேலும் பலவிதங்களில் எம் இருசாராரின் ஒத்துழைப்பு பாதிக்கப்பட்ட எம் மக்களுக்கு பல வித நன்மைகளைக் கொண்டு வர லாம் – என்றார். (த-5)

## சீன

துப் பேச்சு நடத்தியிருந் தார். இந்த நிலையில், பீஜிங்கில் செய்தியாளர் களை நேற்றுச் சந்தித்தார்.

இதன்போது, சீன நீர்மூழ்கிகள் இலங்கைத் துறைமுகத்தை அணுக புதிய அரசு அனுமதிக்குமா என்று கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதி லளித்த வெளிவிவகார அமைச்சர், ஜப்பானியப் பிரதமர் இலங்கைக் குப் பயணம் மேற்கொண்டிருந்த நாளில், சீன நீர்மூழ்கிகள் கொழும் புத் துறை முகத்துக்கு வருவதற்கு வழிவகுத்த சூழல் என்னவென்று எனக்கு உண்மையிலேயே தெரி யாது. ஆனால் நாம் அத்தகைய சம் பவங்கள், எமது பதவிக் காலத்தில் எந்தத் தரப் பில் இருந்தும் நிகழாது என்பதை உறு திப்படுத் துவோம்.

நாம் சகல நாடுகளுட னும் நடுநிலையுடன் செயற்பட விரும்புகின் றோம். இதற்கு அர்த் தம், ராஜபக் ஷவினால் சீனாவுடன்ஏற்படுத்தப்பட் நெருக்கமான உறவை நீர்த்துப் போகச் செய் வதல்ல. நடுநிலைக்குத் திரும்புவதால் சீனாவு டன் இலங்கை கொண் டுள்ள உறவுகளை எந்த வகையிலும் பாதிக்காது. அவர்கள் அந்த இடத்தி லேயே இருப்பார்கள். உலகின் மற்ற நாடுகளைப் போலவே, சீனாவுட னானஉறவுகளைப்பலப் படுத்த வும்நாம்முயற்சிப்போம்என்று குறிப் பிட்டார். (த-5)

## இலங்கைக்கு

விவகார அமைச்சுக்கு ஒதுக் கப்பட்டுள்ளது. இந்திய வெளி விவகார அமைச்சின் ஊடாக, வெளிநாடுகளில் பொருளா தார–தொழில்நுட்ப ஒத்துழைப் புத் திட்டங்களை மேற்கொள் வதற் காக 9 ஆயிரத்து 107 கோடி ரூபா ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளது.

கடந்த வரவு–செலவுத் திட்டத் தில், இதற்கென 7 ஆயிரத்து 234 கோடி ரூபாவே ஒதுக்கீடு செய்யப் பட்டிருந்தது.

தெற்காசிய நாடுகளில் பூட்டா னுக்கு, 6 ஆயிரத்து 160 கோடி ரூபாவும், ஆப்கானிஸ்தானுக்கு 676 கோடி ரூபாவும், இலங்கைக்கு 500 கோடி ரூபாவும், மாலை தீவுக்கு 183 கோடி ரூபாவும் ஒதுக்கப் பட்டுள்ளது. (த-5)


**சேவை**

திருமணத்திற்கு தேவையான அனைத்து விதமான தரமான சேவை களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள். கொழும்பு மற்றும் யாழிலும் மணவறை, வீடியோ, Makeup, அழைப்பிதழ் மற்றும் பல சேவைகளை தலைநகரின் தராதளத்தில் பெற்றுக் கொள்ளலாம் தொடர்பு :-021 221 7990
Facebook.co/theworldnavigstors 077 021 3712

**இடமாற்றம்**

**நாகபூஷணி திருமண சேவை**

15/11, சங்கிலியன் வீதி, நல்லூரில் இயங்கி வந்த நாகபூஷணி திருமணசேவை தற்போது 383/14B, கோயில் வீதி, நல்லூருக்கு (கோயில் வடக்குப் பக்கம்) இடமாற்றப்பட் டுள்ளது. டாக்டர், எஞ்சினியர், அரச உத்தி யோகத்தர், தனியார் துறை மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் எம்மிடம் நிறைய உள்ளன. நீங்கள் விரும்பிய மணமக்களை மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்து தரப்படும்.

383/14B, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P:- 077 138 7596, 075 554 6000,
071 894 5692, 021 222 9306
e mail:- nakapoosanywedding@gmail.com
(57042)(4.3.7)

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

மிகவும் நல்ல நிலையில் உள்ள Bajaj Discover 135 உடனடி விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு:
077 982 7995, 0766838717

**மணமகள் தேவை**

யாழ் இந்து கௌரவகுடும்பத்தைச் சேர்ந்த B.Sc பட்டதாரி வயது 30, பூரம், 7செவ்வாய், கிரகபாவம் 48, வெளிநாட்டில் பணிபுரியும் மணமகனுக்கு பொருத்தமான மணப்பெண் தேவை.
தொடர்பு : - 077 69 45059

**விசேட பல் வைத்திய நிபுணர்கள் வருகை**



★ பல் முக சீராக்கல் (Consultant orthodontist)
★ முக சத்திர சிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

★ மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
★ ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
★ நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges,Implants)
★ வேர்முறை சிகிச்சை(Root canal Filling)
★ நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
★ பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்ஷினி)

New Lovers Corner இன் நான்காவது காட்சியறை
**கிளிநொச்சி நகரில் கோலாகல ஆரம்பம்**



Our Latest Kilinochchi Branch
New Lovers Corner & Beauty Parlour
Date: 5th March 2015
Time: 08.33 A.M.

எமது நிறுவனத்தின் நான்காவது காட்சியறை 05.03.2015 வியாழக்கிழமை காலை 08.33 மணிக்கு கிளிநொச்சி, உதயநகரில் பிரமாண்டமாக ஆரம்பிக்கப்படுகின்றது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்றையதினம் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களில் ஒருவருக்கு குலுக்கல்மூலம் தெரிவுசெய்யப்பட்டு துவிச்சக்கரவண்டி வழங்கப்படும்.

No.9, Uthayanagar, Kanagapuram Road, Kilinochchi. 021 228 5111

No.164, Ramanathan Road, Jaffna. T.P: 021 221 9499
No. 04, Alady Junction, Manipay. T.P: 021 225 6444
No. 13, 1st Floor, Cargills Square. T.P: 021 222 7070
Sports Club, 1st Floor, Cargills Square. T.P: 021 222 3020
No420, Hospital Road, Jaffna.

## கனதி கொண்ட

கும், உண்மையைக் கண்டறிதல்– பொறுப்புக் கூறுதல்– நீதியை நிலைநாட்டுதல் போன்ற விடயங்களில் செயன்முறை எவ்வாறு உள்ளது என்பதை அறிவதற்கும், தனது இலங்கைப் பயணத்தைப் பயன்படுத்திக் கொள்வார் என்று, ஜெப்ரி பெல்ட்மன் கூட்டமைப்பினரிடம் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அறிக்கை ஒத்தி வைக்கப்பட்டது தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் மிகப் பெரிய ஏமாற்றம். இந்த அறிக்கை உரிய காலத்தில் வெளியிடப்பட்டிருக்கவேண்டும். இந்த அறிக்கையினூடாக, தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் மாத்திரமல்லாமல், இனப் பிரச்சினைக்கான தீர்வுக்கான வழியும் திறந்திருக்கும். ஆட்சி மாற்றத்தை தமிழ் மக்கள் விரும்பினார்கள். ஆனால் இவ்வாறான மாற்றங்களை அவர்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளவில்லை என்று, ஜெப்ரியிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சுட்டிக்காட்டினர்.

இதன்போது பதிலளித்த அவர், இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வதற்கு முன்னதாக, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஹுஸைனைச் சந்தித்து விட்டே வருகின்றேன். அறிக்கை ஒத்தி வைக்கப்பட்டது தமிழ் மக்களுக்கு ஏமாற்றமாக இருக்கும் என்பதை அவரும் புரிந்து கொண்டுள்ளார். அதை நாங்களும் உணர் கின்றோம். இந்த அறிக்கை இப்போது ஒத்தி வைக்கப் பட்டிருக்கின்றது. எதிர்வரும் செப்ரெம்பர் மாத அமர்வில் வெளியிடப்படும். அதில் எந்த மாற்றமும் கிடையாது. செப்ரெம்பர் மாதம் வெளியிடப்படும் போது, இன்னமும் கனதியானதாக அறிக்கை இருக்கும். இதனால் தமிழ் மக்கள் ஏமாற்றமடையத் தேவையில்லை.

இலங்கையின் புதிய அரசிடமிருந்து சில உறுதிப்பாடுகள் – உத்தரவாதங்களை ஐ.நா. பெற்றுக் கொண்டுள்ளது. இலங்கையின் புதிய அரசும் வழங்கியுள்ளது. அதனடிப்படையிலேயே, அறிக்கையை ஒத்தி வைப்ப தற்கான முடிவு எட்டப்பட்டது.

மேலும், ஐ.நா. அறிக்கை செப்ரெம்பர் மாதம் வெளியிடப்பட்ட பின்னர், உள்ளக விசாரணைப் பொறிமுறையினூடாக, ஐ.நா பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவோம் எனவும், சர்வதேச தரத்துடன் விசாரணையை முன்னெடுப்போம் என்றும் இலங்கை அரசு உறுதிமொழி வழங்கியுள்ளது. புதிய அரசுக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்காகவே, இது ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்று, ஜெப்ரி குறிப்பிட்டார்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள போதிலும், தமிழ் மக்கள் எதிர்பார்த்த விடயங்களில் எந்த மாற்றங்களும் ஏற்படவில்லை என்று கூட்டமைப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர். குறிப்பாக மீள்குடியமர்வு, தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, காணாமற் போனோர் விவகாரம் என்பவற்றில் இன்னமும் உறுதியான முடிவும் கிடைக்கவில்லை, இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி வாயே திறக்காத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இந்த விடயங்களில் ஐ.நா. கவனம் செலுத்த வேண்டும் என்று கூட்டமைப்பு கோரிக்கை விடுத்தது.

இதற்குப் பதிலளித்த ஜெப்ரி பெல்ட்மன், இலங்கைக்கு ஐ.நா. தொடர்ந்தும் அழுத்தம் பிரயோகிக்கும் எனக் குறிப்பிட்டார்.(த–5)

## ஆணைக்குழுவின்

குமாறு தமிழ் சிவில் சமூகம் அழைப்பு விடுத்திருந்த நிலையிலேயே, இந்த அமர்வு இடம் பெற்றது. அமர்வு ஆரம்பமாவதற்கு முன்னர், குச்சவெளி பிரதேச செயலகம் முன்பாக, காணாமற்போனோரின் உறவுகள் வாயில் கறுப்புத் துணி கட்டிப் போராட்டம் நடத்தினர்.

உள்ளக விசாரணையில் நம்பிக்கையில்லை. சர்வதேச விசாரணையே எமக்குத் தேவை என்று அவர்கள் கோஷம் எழுப்பினர். அத்துடன், தமிழ் சிவில் சமூக அமையத்தின் திருகோணமலை இணைப்பாளரான வணபிதா. வி.யோகேஸ்வரன் அமர்வு ஆரம்பமாகிய சிறிது நேரத்தில் உள்ளே சென்று அமர்வை புறக்கணிப்பது தொடர்பா[illegible] தமது முடிவைதெரிவித்திருந்தார். சிறிது நேரத்தில் போராட்டக் காரர்கள் வெளியேறினர். அதன் பின்னர் ஆணைக்குழுவின் அமர்வு இடம்பெற்றது. இதில் 60 பேர் வரையில் சாட்சியமளித்துள்ளனர்.

இன்று முதல், ஆணைக்குழுவின் மூன்று ஆணையாளர்களும் தனித் தனியே விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளனர். இதன் மூலம் அதிகளவிலானோரது சாட்சியத்தைப் பதிவு செய்ய முடியும் என்று அவர்கள் தெரிவித்தனர். (த–5)

## கச்சதீவில்

படகு வசதிகள் இரு நாடுகளிலும் இந்த வருடம் சிறப்[illegible] மேற்கொள்ளப்பட்டன. இன்று காலை 7.30 மணியளவில் யாழ். மறைமாவட்டக் குரு முதல்வர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையில் திரு விழாத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.(த–14)

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தங்கரட்ணம் சற்குணராஜா



சந்தையடி வீதி, மானிப்பாயைச் சேர்ந்த திருமதி தங்கரட்ணம் சற்குணராஜா நேற்று (28.02.2015) சனிக்கிழமை அதிகாலை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியை கள் பற்றிய விவரம் பின்னர் அறி விக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

076 6029156

தகவல் : குடும்பத்தினர்.

---

### தேவராஜா றேகன்



ஈச்சமோட்டை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தேவராஜா றேகன் 27.02.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தேவராஜா மணிமேகலை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் நிரஞ்சினி, நெதன், நெரஷான், நிகன் ஆகியோரின் சகோதரனும் அருள்தாசனின் மைத்துனரும் கனுஷா, யுவிகரன் ஆகியோரின் ஆசைமாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

26, கிருஷ்ணபிள்ளை வீதி,
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். (57363)(5.3.7)

தகவல்:
தேவராஜா
அன்ரன் பேக்கரி உரிமையாளர்,
கடற்கரை வீதி, குருநகர்.

---

### திருமதி இரத்தினம் பஞ்சாட்சரம்



சோமரான் தோட்டம், உடுவில் கிழக்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் பஞ்சாட்சரம் கடந்த (26.02.2015) வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் - பஞ்சாட்சரத்தின் அன்பு மனைவியும், பஞ்சரத்தினம் (மின் பிறப்பாக்கி இயக்குநர் - கொழும்பு), ஜெயகுமார் (ஆசிரியர், புனித கென்றியரசர் கல்லூரி - இளவாலை), சிவகுமார் (வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரியின் முன்னாள் பௌதிகவியல் ஆசிரியர் - கனடா), திருமதி சுமதி (பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், உடுவில்) ஆகியோரின் பாசமிகு தாயும், தங்கலோஜினி, சத்தியப் பிரபா (கனடா), அருட்செல்வம் (பிரதம முகாமைத்துவ உதவியாளர், கணக்குக்கிளை கச்சேரி, முல்லைத்தீவு), டயானா (புனித கென்றியரசர் கல்லூரி, இளவாலை) ஆகியோரின் அருமை மாமியும், சாம்பவி, நந்தகோபி, தர்மேந்திரா, நிவேதினி, அருணி, அஜீஷன் ஆகியோரின் அன்பு நிறை பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான புவனசிங்கி, மகாதேவன், தங்கராசா மற்றும் பவளம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2015) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சோமரான் தோட்டம்,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (57381) (45.3.7)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

---

### சிவஸ்ரீ பரமகுரு ஆறுமுகக் குருக்கள்

(காரைநகர், புதுறோட், கிழவன்காடு ஸ்ரீ கந்தசுவாமி கோயில் பரம்பரை ஆதீனம்–காரைநகர்)



காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், தற்போது யாழ்ப்பாணம் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ பரமகுரு ஆறுமுகக் குருக்கள் பரம்பரை ஆதீனம் (27.02.2015) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமகுரு சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் நாகம்மாள் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை–சின்னாச்சிப் பிள்ளை தம்பதியரின் அன்பு பெறாமகனும், காலஞ்சென்ற சிவகாமசுந்தராம்பாளின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான பூரணம், இராசம்மா, அன்னலட்சுமி, அன்னமுத்து ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை, செல்லத்துரை, பரமு நாகலிங்கம், செல்லத்துரை ஆகியோரின் அன்பு மைத்தனரும், சங்கரநாராயணக்குருக்கள் (செந்தூர் ஐயா), அனுசயாதேவி, சத்தியபாமா ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருஞானசம்பந்த மூர்த்தி, வல்லவாம்பாள்தேவி ஆகியோரின் அன்பு மாமனும், முகுந்தன் ஐயா, தர்சிகா, சாருசா, தாரணி, ஸ்ரீமுருகன், கௌரி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2015) ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


புலவனார் வீதி, கல்வியங்காடு,
T.P: 077 8575075 (67391)(10)

தகவல்:
குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்

### கந்தையா நதீசன்



கொக்குவில் பொற்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நதீசன் கடந்த 24.02.2015 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், சுதாமதியின் அன்புக் கணவரும், டியோனியஸ், டிசாரவின் ஆகியோரின் அன்புத் தந்தையும், றதிலோ (அபிவிருத்தி உத்தியோகத் தர்), றோகினி (ஆசிரியை, கிளி/ புனிததிரேசா பெண்கள் கல்லூரி), டயானா (ஆசிரியர் கலாசாலை கோப்பாய்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலகுமார், மோகனதாஸ், நேசநாயகம் (ஆசிரியர், கிளி/ கண்ணாவில் அ.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.03.2015) திங்கள் மாலை 4.00மணிக்கு ஜேர்மனியில் நடைபெறும். பொற்பதியில் உள்ள அவரது இல்லத்திலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : அம்மா, சகோதரிகள், மைத்துனர்மார், மருமக்கள்

---

## கண்ணீர் அஞ்சலி

காரைநகர் - புதுறோட்டு (சிவன்கோயில் வீதி)
கிழவன் காடு

### ஸ்ரீ கந்தசாமி கோயில்
### பரம்பரை ஆதீனகர்த்தா
### சிவஸ்ரீ ச.ப. ஆறுமுகக்குருக்கள்



அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பரத்து சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானையும் கிழவன் காட்டு முருகனையும் இறைஞ்சுவோமாக.

அடியார்களும் அயலவர்களும்
காரைநகர் புதுறோட்டு, கிழவன்காடு
ஸ்ரீ கந்தசாமி கோயில்
(57392)(5.3.7)

---

## மரண அறிவித்தல்

### இளையவன் கந்தப்பு



கரவெட்டி கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையவன் கந்தப்பு 27.02.2015 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம்சென்ற இளையவன்– தெய்வி தம்பதிகளின் அன்பு மகனும், முருகர்– ஆழ்வி தம்பதியினரின் பாசமிகு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் சந்திரகாந்தா(உதயா) மோகனதாசன்(ஜேர்மனி) சாந்தினி (ஜேர்மனி) இந்திராணி, உஷாநந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் அன்பழகன் (பாதுகாப்பு உத்தியோகத்தர்) தயாழினி (ஜேர்மனி) ஜெயநாதன் (ஜேர்மனி) சிவரூபன்(அலுவலகர் தபாலகம் தாழையடி) ஆகியோரின் மாமனாரும், பிருந்துஜன் (சம்பத்வங்கி, கொழும்பு) ஜதுஷன், பானுஷன், செந்தூரி, பிரணவி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.03.2015 ) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.30 மணியளவில் சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வளர்மதி,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

தகவல் :
குடும்பத்தினர்
T.P : 0774358182







# வேகங்களின் மோதல்

# மயிரிழையில் நியூஸி வெற்றி



ஆஸி. – நியூஸி. உலகக்கிண்ணத் தொடரை நடத்தும் நாடுகள். இரு நாடுகளும் மோதிய ஆட்டம், இறுதிக் கணம் வரையில் விறு விறுப்பாக அமைந்தது. இரு அணிகளிலும் வேகங்களில் திடீரென எழுச்சி கொண்டன. போல்ட் வேகத்தில் வித்தை காட்டி ஆஸ்திரேலியாவை 151 ஓட்டங்களில் சுருட்டினார். போல்ட்டின் பரபரப்பு அடங்கும் முன்னரே ஸ்ரார்க் நியூஸியை கதிகலங்கவைத்தார் பல்வேறு போராட்டங்களின் மத்தியில் 9 இலக்குகளை இழந்தே நியூஸி. வெற்றியைத் தக்க வைத்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்றது ஆஸி. முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானம். முதல் பந்துப் பரிமாற்றத்தில் 15 ஓட்டங்கள். வேகமாக ஏறியது ஓட்டம். ஒரு கட்டத்தில் 80 ஓட்டங்களுக்கு 1 இலக்கை இழந்து வலுவான நிலையில் இருந்தது ஆஸி. 300 ஓட்டங்களை இலகுவாக எட்டக்கூடிய ஓட்ட விகிதம்.

வெட்டோரி, வொட்ஸனைப் பிரித்து வைக்க, வோணரை சவுத்தீ அனுப்பி வைக்க, தொடங்கியது ஆஸி.யின் சரிவு. வந்தார் போல்ட். அடுத்தடுத்து ஆஸியர்களை அமரச்செய்தார் பவிலியனில். மக்ஸ்வெல்லின் இலக்கு சற்று தூரம் எகிறிப் பாய்ந்தது. ஆஸியின் ஐந்தாவது இலக்கும் பறிபோனது. பின் வரிசை வீரர்கள் அனைவரும் ஒற்றையிலக்கத்திலேயே விடை பெற்றனர். ஆஸி ரசிகர்களுக்கு தலையில் கைவைப்பதைவிட வேறொன்றும் செய்ய முடியவில்லை.

பாவம் ஹடின். தனித்து நின்று போராட்டம். கைகொடுக்க நிற்கவில்லை. குமின்ஸ், இறுதி இலக்குக்காக கொஞ்சம் இணைந்து கொடுக்க ஒருவாறாக, ஆஸ்திரேலியா 150 ஓட்டங்களைத் தாண்டியது. இறுதியில் 151 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது.

152 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி. நியூஸிலாந்து ஊதித்தள்ளி விடும் என்ற எதிர்பார்ப்பில்ரசிகர்கள்எல்லை கடந்த உற்சாகம். நியூஸிலாந்து ரசிகர்களின் உற்சாகத்துக்கேற்ப ஆரம்பம் அமர்க்களமாகத்தான் இருந்தது. மக்கலம் நாலா பக்கமும் மங்களம் பாடினார். பந்துகள் பந்துப் பரிமாற்றத்துக்கு இரு தடைவைகள் எல்லையை தொட்டு வந்தன. ஒரு கட்டத்தில் ஜோன்சனின் வேகம், மக்கலம் கையைப் பதம் பார்த்தது. வீக்கம் – வலியுடன் ஆடிய அவர் 23 பந்துகளில் அரைச்சதம் கண்டு விடைபெற்றார்.

78 ஓட்டங்களுக்கு 2 இலக்குகள். கிட்டத்தட்ட ஆஸியின் ஆரம்பம்தான். ஆட்டத்தை உணவுக்காக இடைநிறுத்தினர். பந்து வீச்சை மாற்றியது ஆஸி. ஸ்ராக் – குமின்ஸ் இணை போடத் தொடங்கியது. ஈடுகட்ட முடியாத வேகம். ஆஸி.யின் சரிவு போல, நியூஸியும் சரியத் தொடங்கியது. தாக்குப் பிடித்து நிற்பதற்கு எத்தனப்பட வேண்டியிருந்தது. வில்லியம்ஸன் மாத்திரம் நிலையெடுத்துக் கொண்டார். ஒரு கட்டத்தில் அண்டர்ஸன் இணைந்து கொடுத்தார். வெற்றியை நெருங்குவது போன்று சென்ற, நியூஸி. மீண்டும் சரியத் தொடங்கியது.

ஸ்ராக்கின் இலக்கு வேட்டை நின்றபாடில்லை. நியூஸி. வெற்றி கேள்விக் குறியானது. 145 ஓட்டங்களுக்கு 6 இலக்குகள். 7 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி. அடுத்த ஒரு ஓட்டத்துக்குள் மூன்று இலக்குகள் மடிந்தது. வில்லியம்ஸனால், இறுதியில் தப்பித்தது நியூஸி. ஓர் இலக்கினால் கௌரவ வெற்றியைப் பெற்றுக் கொண்டது. (5–ரி)

## 2015 உலகக் கிண்ணம்

நியூஸிலாந்து எதிர் ஆஸ்திரேலியா — 01 இலக்கால் நியூஸிலாந்து வெற்றி
நாணயச் சுழற்சி ஆஸ்திரேலியா

ஆஸ்திரேலியா

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| பிஞ்ச் | B சவுத்தி | 14 | 07 | 01 | 01 |
| வோர்னர் | LBW B சவுத்தி | 34 | 42 | 02 | 01 |
| வட்சன் | C சவுத்தி B விக்டோரி | 27 | 30 | 02 | 0 |
| கிளார்க் | C வில்லியம்சன் B போல்ட் | 12 | 18 | 01 | 0 |
| சிமித் | C ரோஞ்சி B விக்டோரி | 04 | 11 | 0 | 0 |
| மக்ஷ்வெல் | B போல்ட் | 01 | 03 | 0 | 0 |
| மார்ஸ் | B போல்ட் | 0 | 02 | 0 | 0 |
| ஹடின் | C லாதம் B அண்டர்சன் | 43 | 41 | 04 | 02 |
| ஜோன்சன் | C வில்லியம்சன் B போல்ட் | 01 | 07 | 0 | 0 |
| ஸ்ராக் | B போல்ட் | 0 | 03 | 0 | 0 |
| கும்மின்ஸ் | ஆட்டமிழப்பில்லை | 07 | 30 | 01 | 0 |
| உதிரிகள் | | 12 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| சவுத்தி | 09 | 65 | 02 | 0 |
| போல்ட் | 10 | 27 | 05 | 03 |
| விக்டோரி | 10 | 41 | 02 | 0 |
| மைல்ன் | 03 | 06 | 0 | 0 |
| அண்டர்சன் | 0.2 | 6 | 01 | 0 |

TOTAL 151 (32.2)

1-30 (பிஞ்ச்), 2-80 (வட்சன்) 3-80 (வோர்னர்), 4 -95 (சிமித்) 5 - 96 (மக்ஸ்வெல்) 6 -97 (மார்ஷ்), 7 -104 (கிளாக்) 8 -106 (ஜோன்சன்) 9 -106 (ஸ்ராக்) 10 -151 (ஹெடின்)

நியூஸிலாந்து

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| குப்தில் | C கும்மின்ஸ் B ஸ்ராக் | 11 | 14 | 01 | 01 |
| மக்கலம் | C ஸ்ராக் B கும்மின்ஸ் | 50 | 24 | 07 | 03 |
| வில்லியம்சன் | ஆட்டமிழப்பில்லை | 45 | 42 | 05 | 01 |
| ரெயிலர் | B ஸ்ராக் | 01 | 02 | 0 | 0 |
| எலியாட் | B ஸ்ராக் | 0 | 01 | 0 | 0 |
| அண்டர்சன் | C கும்மின்ஸ் B மக்ஸ்வெல் | 26 | 42 | 02 | 01 |
| ரோஞ்சி | C ஹடின் B ஸ்ராக் | 06 | 07 | 0 | 01 |
| விக்டோரி | C வோர்னர் B கும்மின்ஸ் | 02 | 03 | 0 | 0 |
| மைல்ன் | B ஸ்ராக் | 0 | 02 | 0 | 0 |
| [illegible] | B ஸ்ராக் | 0 | 01 | 0 | 0 |
| போல்ட் | ஆட்டமிழப்பில்லை | 0 | 02 | 0 | 0 |
| உதிரிகள் | | 11 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஜோன்சன் | 06 | 68 | 0 | 01 |
| ஸ்ராக் | 09 | 28 | 06 | 0 |
| கும்மின்ஸ் | 6.1 | 38 | 02 | 0 |
| மார்ஸ் | 01 | 11 | 0 | 0 |
| மக்ஸ்வெல் | 01 | 07 | 01 | 0 |

TOTAL 152/9 (23.1)

1-40 (குப்தில்), 2-78 (மக்கலம்) 3-79 (ரெயிலர்) 4-79 (எலியாட்) 5-131 (அண்டர்சன்) 6-139 (ரோஞ்சி), 7-145 (விக்டோரி) 8-146 (மைல்ன்), 9-146 (சவுத்தி)

ஆட்ட நாயகன் — போல்ட்

# இந்தியா தாண்டவம்

# ஐ.அரபுக்கு மரண அடி

பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, ஐ.அ.இராச்சியம் இந்த வரிசையில் கத்துக்குட்டியான ஐ.அ.இராச்சியத் தையும் துவைத்து காயவைத்து 9 இலக்குகளால் வெற்றிவாகை சூடியது இந்தியா.

இந்தியா எதிர் ஐ.அ.இராச்சியம் நடப்புச் செம்பியன் எதிர் கத்துக்குட்டி. ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்னரே முடிவு தெரிந்து விட்டாலும் இரு எதிர் முனை அணிகள் ஆடினால் ஆட்டம் எப்படிப்பட்டதாக இருக்கும் என்ற ஆவலோடு இந்திய அணியின் ரசிகர்கள் குவிந்திருந்தார்கள். காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு என்பதைப்போல ஐ.அ.இராச்சியத்துக்கும் சற்று ரசிகர்கள் இருக்கத்தான் செய்தார்கள்.



நல்லவேளையாக நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற அரபு முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. முதல் மூன்று வீரர்களும் 4 ஓட்டங்களிலேயே விடைபெற்றனர். அரபு 28 ஓட்டங்களுக்கு தனது முன்னணி வீரர்கள் மூவரையும் இழந்து தத்தளித்தது. தொடர்ந்து பதின்ம ஓட்டங்களில் வீரர்கள் பவிலியனுக்குச் சென்று கொண்டிருக்க 44 ஓட்டங்களுக்குஐ.அ.இராச்சியத்தின் ஐந்தாவது இலக்கும் சரிக்கப்பட்டது. களம்புகுந்தார் அரபு இராச்சியத்தின் நம்பிக்கை நட்சத்திரம் அன்வர். அதிரடியென்று கூறுவதற்கு ஒன்றும் இல்லை. ஆனால் ஒரு முனையில் இலக்குகள் சரிவதை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார். அன்வர் ஒரு முனையில் நங்கூரம் இட்டிருந்தாலும் மறுமுனையில் இலக்குகள் பறிபோகவே செய்தது இதனால் ஐ.அ.இராச்சியம் சகல இலக்குகளையும் இழந்து 102 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இந்திய அணிக்கு வெற்றியிலக்காக 103 ஓட்டங்கள் வெற்றிதான் என்றாலும் ஓட்ட விகிதத்தை அதிகப்படுத்த விரைவாக குறைந்த பந்துப்பரிமாற்றத்தில் ஓட்டங்களைப் பெற வேண்டும் என்ற வியூகத்தில் களமிறங்கியது நடப்புச் சம்பியன். தவான் 14 ஓட்டங்களுடன் ஏமாற்றினார். ரோஹித்துடன் இணைந்து நங்கூரம் இட்டார் ஹேரக்லி. பதறாத காரியம் சிதறாது என்பதற்கேற்ப நிதான ஆட்டம். ஒரேயொரு இலக்கு இழப்பில் வெற்றியிலக்கை அடைந்து 9 இலக்குகளால் வெற்றி பெற்றது இந்திய அணி. இறுதிவரை ஆட்டமிழக்காது களத்தில் நின்ற ரோகித் 57 ஓட்டங்களையும் ஹோக்லி 33 ஓட்டங்களையும் பெற்றனர். (ரி–5)



நேற்றைய ஆட்டத்தில் இந்திய ரசிகர்களின் உற்சாகம்

## 2015 உலகக் கிண்ணம்

இந்தியா எதிர் ஐ.அ.இராச்சியம் — 09 இலக்குகளால் இந்தியா வெற்றி
நாணயச் சுழற்சி ஐ.அ.இராச்சியம்

ஐ.அ.இராச்சியம்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| அலி | C டோனி B குமார் | 04 | 12 | 0 | 0 |
| பெர்ரிஞ்சர் | C டோனி B யாதேவ் | 04 | 09 | 01 | 0 |
| சந்திரன் | C ரெய்னா B அஸ்வின் | 04 | 27 | 0 | 0 |
| கான் | C ரெய்னா B அஸ்வின் | 14 | 28 | 01 | 0 |
| பரில் | C தவான் B அஸ்வின் | 07 | 19 | 01 | 0 |
| அன்வர் | B யாதேவ் | 35 | 49 | 06 | 0 |
| முஸ்தபா | LBW B சர்மா | 02 | 12 | 0 | 0 |
| ஜவீட் | C ரெய்னா B ஜடேயா | 02 | 05 | 0 | 0 |
| நவீட் | B அஸ்வின் | 06 | 07 | 0 | 01 |
| ரகீர் | B ஜடேஜா | 01 | 05 | 0 | 0 |
| குறாக் | ஆட்டமிழப்பில்லை | 10 | 16 | 01 | 0 |
| உதிரிகள் | | 13 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| குமார் | 05 | 19 | 01 | 0 |
| யாதேவ் | 6.3 | 15 | 02 | 02 |
| அஸ்வின் | 10 | 25 | 04 | 01 |
| சர்மா | 05 | 16 | 01 | 01 |
| ஜடேஜா | 05 | 23 | 02 | 0 |

TOTAL 102 (31.3)

1-7 (பெரிஞ்சர்), 2-13 (அலி) 3-28 (சந்திரன்), 4 -41 (பரில் 5 - 44 (கான்) 6 – 52 (முஸ்தபா), 7 -61 (யவீ 8 -68 (நவீட்) 9 -71 (ரகீர்) 10 -102 (அன்வர்)

இந்தியா

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| சர்மா | ஆட்டமிழப்பில்லை | 57 | 55 | 10 | 01 |
| தவான் | C முஸ்தபா B நவீட் | 14 | 17 | 03 | 0 |
| ஹோக்லி | ஆட்டமிழப்பில்லை | 33 | 41 | 05 | 0 |
| உதிரிகள் | | 0 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| நவீட் | 05 | 35 | 01 | 0 |
| குறாச் | 06 | 19 | 0 | 01 |
| யவீட் | 02 | 12 | 0 | 0 |
| சந்திரன் | 03 | 17 | 0 | 0 |
| ரகீர் | 2.5 | 21 | 0 | 0 |

TOTAL 104 (18.5)

1-29 (தவான்)

ஆட்ட நாயகன் — அஸ்வின்

# உடுப்பிட்டியை வீழ்த்தியது ஹாட்லி

கரணவாய்,மார்ச்.1

பலத்த போராட்டங்களின் பின் உடுப்பிட்டி அ.மி. கல்லூரியை சமநிலை தவிர்ப்பு உதைமூலம் தோற்கடித்து இந்த வருடத்துக்கான வலயச் சம்பியன் ஆனது பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 19 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டம் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்த இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அ.மி. கல்லூரியும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் பலப் பரீட்சை நடத்தின.

இவ்விரு அணியினரும் பலம் வாய்ந்த அணிகளான நெல்லியடி மத்திய கல்லூரியையும், தேவரையாளி இந்துக் கல்லூரியையும் அரையிறுதியில் தோற்கடித்து இறுதியாட்டத்துக்கு முன்னேறி இருந்ததால் ஆட்டத்தில் விறுவிறுப்புக்கு குறைவே இருக்கவில்லை.

முதற்பாதி ஆட்டம் ஆரம்பமானதும் இரு அணியினரும் கோல் போடுவதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்தனர். இதனால் இரு அணியினருக்கும் கோல் போடுவதற்கு பல சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும் அவர்களால் இலகுவில் அவற்றை கோலாக்க முடியவில்லை. இருந்த போதும் ஆட்டத்தின் 15 ஆவது நிமிடத்தில் ஹாட்லிக் கல்லூரியின் முன்கள வீரர் அஜித் அருமையான கோல் ஒன்றைப் போட்டார் தொடர்ந்து மேலதிக கோல்கள் போடப்படாத நிலையில் ஆட்டம் 1–0 என்ற நிலையில் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகியதும் இரு பகுதி ஆட்டத்திலும் அனல் பறந்தது. ஹாட்லிக் கல்லூரியினர் தடுப்பாட்டத்தில் ஈடுபட உடுப்பிட்டி அ.மி. கல்லூரியினர் முன்னேறித் தாக்குவதில் ஈடுபட்டனர் . இறுதிக் கட்டத்தில் எவ்வாறு எனினும் கோல் போட்டு ஆட்டத்தை சமநிலையில் முடிக்கவேண்டும் என்பதில் உடுப்பிட்டி அணியினர் குறியாக இருந்தனர். ஆனால் ஹாட்லிக் கல்லூரியினர் அதனைத் தடுப்பதில் முனைப்புக் காட்டினர்.

இந்தச் சூழ்நிலையில் ஆட்டம் நிறைவடைவதற்கு நான்கு நிமிடங்கள் இருக்கும் போது ஹாட்லிக் கல்லூரி அணி வீரர் ஒருவர் தமது கோல் பரப்புக்குள் கிடைத்த பந்தை தமது வழமான கால்களுக்குள் உள்வாங்க முயற்சித்த போது மின்னல் வேகத்தில் செயற்பட்ட உடுப்பிட்டிக் கல்லூரி வீரர் ஹரிகரன் அவரிடமிருந்து பந்தை தட்டிப்பறித்து கோல் கம்பங்களுக்குள் புகுத்த நிலைமை மாற்றமடைந்தது. இதனால் ஆட்டம் 1–1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் நிறைவடைந்தது. தொடர்ந்து வெற்றியாளரை தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்டட சமநிலை தவிர்ப்பு உதையில் 5–4 என்ற கோல் கணக்கில் வென்று இவ்வருட சம்பியனாகியது பருத்தித் துறை ஹாட்லிக் கல்லூரி.

அதற்கு முன்பதாக இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி, தேவரையாளி இந்துக் கல்லூரியை 1–0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது. (த–108)


## சுப்பர் மார்க்கட் / பாமசி வேலை

1. பாமஸிஸ்ட் (வயது 50 இற்குக் கீழ், ஒருவருட அனுபவம்)
2. பாமஸி விற்பனை உதவியாளர்
3. சுப்பர் மார்க்கட் விற்பனையாளர்கள்
4. காசாளர்
5. Data Entry Operator

(2,3,4,5)பதவிகளுக்கு வயது 25 இற்குக் கீழ். ஆகக்குறைந்தது ஒரு வருட அனுபவம், கவர்ச்சியான சம்பளம், OT,EPF

தொடர்பு : Harcourts Pharmacy,
41 புங்கங்குளம்,
கொழும்புத்துறை

(57221)(5.3.7)

மேலதிக விபரங்களுக்கு
077 787 2771, 076 531 3152

## ரயர் விற்பனைக்கு



இலங்கையின் NO –01 ரயர்களான MRF, MICHELIN, KUMHO மற்றும் HAIDY வகை ரயர்களை எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

பிரகாஸ் ரான்ஸ்போட் & ஏஜென்சி
இல.457,கே.கே.எஸ் வீதி.
யாழ்ப்பாணம்.
தொ.பே - 021 2222 145

(56667)(3.7.8)

## LONDON METROPOLITAN COLLEGE

LONDON METROPOLITAN COLLEGE

CALL FOR REGISTRATION 021 753 8395

சர்வதேச தரத்திலான ஆங்கில கற்கை நெறிகளை நடாத்தும் யாழ்ப்பாணத்தின் முன்னிலை ஆங்கில கல்வி நிறுவனம்.

**IELTS** ACADEMIC & GENERAL
DURATION: 48 HRS
WEEK/ WEEK ENDS
- ஒவ்வொரு மாணவர் மீதும் தனிப்பட்ட கவனம்
- முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட கற்பித்தல் வசதி
- IELTS5.5-6.5Band பெறுவதற்கான உத்தரவாதம்

**City& Guilds A1 B1**
DURATION: 48 HRS
WEEK/ WEEK ENDS
- UK அரசாங்கத்தினால் சிபாரிசு செய்யப்பட்டது.
- இதுவரை நடந்த பரீட்சையில் 100% சித்தி.
- காலவரையறையற்ற சான்றிதழ் பெறமுடியும்.
- ESOL,SESOL பரீட்சைகளை தனித்தனியாக தோற்றமுடியும்.

Certificate in **SPOKEN ENGLISH WITH GRAMMAR**
(Quick learning programme)
Duration: 60 hrs Week/ Week ends
- ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்துக்கொள்ள விரும்புவோர்க்கான கற்கைநெறி.
- ஆங்கில உரையாடல்புலமையை வளர்ப்பது தொடர்பானபூரண விளக்கங்களுடன் கூடிய கற்கைநெறி.

**DIPLOMA IN ENGLISH**
Duration: 3 Months Week/ Week ends
Writing - 60Hrs Reading - 48Hrs
Listening - 48Hrs Speaking - 48Hrs
- தொழில்தேடுவோர், தொழிலுரிமோர், A/L பரீட்சைக்கு தோற்றியோர் ஆங்கில புலமையை வளர்த்து கொள்வதற்கான கற்கைநெறி.
- Speaking, Reading, Listening, Writing ஆகியனவிசேட செயன்முறை முறை விரிவாககற்பிக்கப்படும்.
- A/L எழுதிய மாணவர்களிற்கு தனிப்பட்டரீதியில கற்கைநெறி ஒழுங்கு செய்யப்படும்.

அனைத்து கற்கைநெறிகளிலும் புதிய பிரிவுகள் ஆரம்பம். தவணை அடிப்படையிலான மிகக்குறைந்த கட்டணம்

Weekdays: 02.03.2015|09.03.2015 || Weekends: 01.03.2015|08.03.2015

Jaffna : #197, Arasady Road, Jaffna, Sri Lanka | Tel: 021 222 7230 | 021 753 8395
E mail: info@lmcjaffna.edu.lk | Web: www.lmcjaffna.edu.lk

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1978 ஆம் ஆண்டு பிறந்த அனுசம் நட்சத்திரம் 30 பாவம் லக்கினத்தில் செவ்வாய், சொந்த வியாபாரம் செய்யும் மணமகனுக்கு படித்த மணமகளை காரைநகரில் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு இல: 077 6763030

## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள போன் சொப் ஒன்றுக்கு விற்பனையாளர் திருத்துநர் தேவை. தொடர்பு - (57364)
077 917 8051, 077 283 5280

## வவுனியாவில் வீடு வளவு விற்பனைக்குண்டு

வவுனியா, மன்னார் வீதி, வேப்பங்குளம் 8ஆம் ஒழுங்கை இல-15 இல் அமைந்துள்ள 02 பரப்பு விஸ்தீரணமான வீடுவளவும் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.

(57296)(5.3.7)
TP :- 077 723 8615

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின் கீழ் இயங்கும் நம்பகரமான ஒரேயொரு சர்வதேச நிறுவனம். உலகம் முழுவதும் 1040 கிளைகள். CERTIFICATES, INTERNATIONAL DIPLOMAS. யாழ். பல்கலைக்கழக பிரெஞ் ஆசிரியர்கள்(பிரான்ஸ் நாட்டவரும்). யாழ், வன்னி, மன்னாரைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு போகிறார்கள். O/L, A/L மாணவர்களுக்கு கட்டண குறைப்பு

வகுப்புகள் ஆரம்பம் 08.03.20105 உடன் அழையுங்கள்..
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்


## மரண அறிவித்தல்



**முத்துக்குமாரு குணரத்தினம்**
(காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை முன்னாள் பொறுப்பூழியர்)

வழக்கம்பரை, தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு குணரத்தினம் 27.02.2015 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் எய்திவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை (02.03.2015) முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வழக்கம்பரை, தொல்புரம்.
T.P : 021 225 0048 (57385)

தகவல் : குடும்பத்தினர்


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## வெளிநாட்டு நாணயமாற்று சேவை



பொதிகள் சேவையில் புரட்சிகரமாற்றத்தை ஏற்படுத்திய GTV ENTERPRISES PVT LTD இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு நாணயமாற்று சேவையினை தற்போது வாடிக்கையாளர்களுக்கு கூடிய விலையில் வழங்குகின்றது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

《《《《《 Tel : 021 221 7224 》》》》》

சேவை நேரம் திங்கள் முதல் வெளளி வரை 8.30 a.m. - 06.00 p.m.
சனி கிழமைகளில் 9.00 a.m. – 4.30 p.m.

No. 225 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

MAHARAJA FOOD PRODUCTS GTV Express

Rabeshan's studiochhaya.com Photo & Video
+(94) 11 2594492 +(94) 777 323174
நிஜத்தை நிலைநிறுத்தும் நெஞ்சத்தை நெகிழவைக்கும்
rabeshen@gmail.com


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பிதழ்

01.03.2015



பொது நூலகம்




# தமிழனே அடுத்த குறி

# தமிழனே அடுத்த குறி!



■ அன்ரன்

தமிழர்கள் மீண்டும் மிகப் பெரும் சவாலுக்குள் தள்ளப் பட்டுள்ளார்கள்.

வன்னியில் உலக நாடுகள் பல சேர்ந்து ஓரணியில் நிற்க தமிழர் சேனை மறு அணியில் நின்றதற்குச் சற்றும் குறைவில்லாத இராஜதந்திரக் களத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்தக் களத்திலும் தமிழர்கள் ஓரணியிலும் உலக நாடுகள் இணைந்து மற்றோர் அணியிலுமாக நிற்கின்றன.

## நிலைத்த ஆட்சி மாற்றம்

சர்வதேசம் என்று இதுநாள் வரையில் தமிழர்கள் சொல்லிவந்த அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகளும் இந்தியாவும் தமக்கு வேண்டிய ஆட்சி மாற்றத்தை கொழும்பில் நிகழ்த்திவிட்டன. மஹிந்த ராஜபக்ஷ அரபு வசந்தம் போன்ற தாக்குதல் ஒன்றுக்கான தடுப்பு நடவடிக்கைகளில் தீவிரமாக இருக்க, அது போன்று அல்லாமல் ஜனநாயகத்தின் மீட்சிக்கான புதிய உதாரண மாக அதிகாரம் மாற்றப்பட்டு விட்டது.

ஒரு கோட்டுக்கு அருகே மற்றொரு சிறிய கோட்டைப் போடுவதன் மூலம் முதல் கோட்டைச் சிறியதாக்கும் உத்தியின் அடிப்படையில் மஹிந்த தோற்கடிக்கப்பட்டார். மஹிந்தவின் ஆதரவு குறையாமல், குலையாமல் இருந்த போதும் மஹிந்தவுக்கு எதிரான மக்கள் சீற்றத்தை மூலதனமாக்கிக் கொண்ட மைத்திரி – ரணில் கூட்டணி பக்கத்திலேயே பெரிய கோடு ஒன்றைப் போட்டு வெற்றி பெற்றுக் கொண்டது.

இப்போது அழியாமல், குலையாமல், அளவு குறையாமல் இருக்கும் மஹிந்த வின் கோடு குறித்த அச்சம் எல்லோரையும் வாட்டி வதைக்கிறது. பொதுத் தேர்தல் ஒன்றுக்குச் சென்றால் மைத்திரி – ரணில் – சந்திரிகா கூட்டணியால் மஹிந்தவைத் தோற்கடிக்க முடியுமா? "ஆம்" என்று திடமாகச் சொல்லத் திராணி இல்லை எவருக்கும்.

இதனால், தற்போதைய அரசைப் பல வீனப்படுத்தக்கூடிய எதையும் உலக நாடுகள் விரும்பவில்லை. அண்மை நாள்களாகத் தமிழர்கள் எடுத்துவரும் நிலைப்பாடுகள், ரணில் அரசைப் பல வீனப்படுத்தும் என்றே அமெரிக்கா, இந்தியா மற்றும் சில மேற்கு நாடுகள் சேர்ந்த 'உலகம்' கருதுகின்றது. அப்படிப்பட்ட நடவடிக்கைகளை அது விரும்பவில்லை. கொழும்பை ஆளும் அரசைப் பொத்திப் பாதுகாத்து குறைந்தபட்சம் இன்னும் 6 வருடங்களுக்கு நிரந்தரமாக்குவதில் அவை ஆசையாகவும் அவாவுடனும் உள்ளன. தமிழர்கள் எடுக்கும் கடும்போக்கு இந்த ஆசையுடனும் அவாவுடனும் ஒத்துப்போகவில்லை.

## திமிறும் தமிழர்கள்

உலகம் எனக்கூறப்படும் இந்த நாடுகளின் விருப்பத்துக்குரிய ரணில் அரசை – மேற்குலக மற்றும் இந்தியா சார்பு அரசைப் பாதுகாப்பதுதான் இப்போதைய தேவை. அதனால்தான் அவை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான விசாரணை அறிக்கையை ஒத்தி வைத்தன.

அந்த அறிக்கை வெளிவந்தால், ஏப்ரலில் அறிவிக்கப்பட்டு ஜூனில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த பொதுத் தேர்தலில் மஹிந்தவின் வெற்றி வாய்ப்பு அதிகரித்துவிடும் என்ற அச்சம் அதற்கான முக்கிய காரணம். ஐ.நாவுடன் ஒத்துழைப்பதற்கான ஒரு வாய்ப்பை இலங்கை அரசுக்கும் வழங்குவது இந்த ஒத்திவைப்பின் நோக்கம் என்று கூறப்பட்டாலும் அதன் பின்னணியில் வேறு பல விடயங்களும் உள்ளன என்பது துலாம்பரம்.

> ரணிலின் அரசுக்குப் பாதகமில்லாத வகை யில் நடந்துகொள்ள வேண்டும். தமிழர் களின் நகர்வுகள் மஹிந்தவைப் பலப்படுத்தும் விதத்தில் அமைந்துவிடக்கூடாது. உலகோடு தமிழர்கள் ஒத்தோட வேண்டும். இவற்றை ஏற்க மறுத்தால்...? அதற்கும் 'உலகம்' திட்டம் வைத்திருக்கிறது. ஜனநாயகத்தின் பெயரால், நல்லிணக்கத்தின் பெயரால், பன்மைத்துவ வாதத்தின் பெயரால் தமிழர்கள் சிதைக்கப்படுவார்கள். தமிழர்கள் ஓரணியில் இருப்பதே அவர்க ளின் பலம் என்பதை 'உலகம்' நன்கு அறிந்து வைத்துள்ளது.

ஆனால், ஐ.நாவின் இந்த முடிவை ஏற்பதற்குத் தமிழர்கள் மறுக்கிறார்கள். விசாரணை அறிக்கை வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள். சர்வதேச விசாரணை ஒன்றை மட்டுமே நம்புவோம் என்கிறார்கள். ரணில் அரசின் மீதும் நம்பிக்கை இல்லை என்கிறார்கள். இந்த அரசும் புதிய மொந்தையில் ஊற்றிய பழைய கள்ளுத்தான் என்று வர்ணிக்கிறார்கள். எனவே தீர்வுகாண சர்வதேச நடுவர் ஒருவர் தேவை என வலியுறுத்துகிறார்கள். ஆண்டாண்டு காலமாக இந்தத் தீவில் நடைபெற்றது இனப்படுகொலைதான் என்பதை இந்த அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார்கள்.

இவை எல்லாமே தமிழ்பேசும் நல்லுலகு கூறும் உலகத்திற்கு ஏற்புடையதாக இல்லை. தமிழர்களின் இந்தக் கடும்போக்கு நிலை தெற்கில் மஹிந்தவின் கைகளைப் பலப்படுத்திவிடும் என்று இந்த 'உலகம்' அஞ்சுகிறது. கடும் பிரயத்தனத்தின் மத்தியில், சுமார் 10 வருடங்கள் காத்திருந்து, மிக மிக இரகசியமாகக் காய்களை நகர்த்தி இந்த 'உலகம்' பெற்ற ரணிலின் வெற்றியை தமிழர்களின் கடும்போக்கு நிலைக்காகப் பலியிட இந்த 'உலகம்' தயாராயில்லை. மீண்டும் ராஜபக்ஷ அதிகாரத்துக்கு வந்தால் அது இந்த 'உலகம்' தோல்வி கண்டதற்கு ஒப்பாகிவிடும். எந்த விலை கொடுத்தும் அதைத் தடுத்து நிறுத்த இந்த உலகம் பாடுபடும். அதற்காகத் தயாராகியும் விட்டது.

## அடுத்தது என்ன?

தமிழர்கள் இறங்கி வரவேண்டும். இதுதான் 'உலகம்' இப்போது அவர்களிடம் எதிர்பார்ப்பது.

ரணிலின் அரசுக்குப் பாதகமில்லாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். தமிழர்களின் நகர்வுகள் மஹிந்தவைப் பலப்படுத்தும் விதத்தில் அமைந்து விடக்கூடாது. உலகோடு தமிழர்கள் ஒத்தோட வேண்டும்.

இவற்றை ஏற்க மறுத்தால்...? அதற்கும் 'உலகம்' திட்டம் வைத்திருக்கிறது. ஜனநாயகத்தின் பெயரால், நல்லிணக்கத்தின் பெயரால், பன்மைத்துவ வாதத்தின் பெயரால் தமிழர்கள் சிதைக்கப்படுவார்கள்.

தமிழர்கள் ஓரணியில் இருப்பதே அவர்க ளின் பலம் என்பதை 'உலகம்' நன்கு அறிந்து வைத்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே அல்லது பெரும் பான்மையாக கூட்டமைப்பு மட்டுமே தமிழர்களின் தெரிவாக இருக்கும்போது அவர்களை தங்கள் நலன்களுக்குள் சிக்க வைக்க முடியாது என்பதை 'உலகம்' நன்கு தெரிந்தே உள்ளது. இந்தப் பலத்தைச் சிதறடிப்பது, ரணில் அரசின் பாதுகாப்புக்கும் நிலைப்புக்கும் அவசியம். மஹிந்தவின் தோல்வியை நிரந்தரமாக்குவதற்கும் அதுவே கருவி. 'உலகம்' அதற்கான ராஜதந்திரப் போரை ஆரம்பித்துவிட்டது.

தமிழர்களில் எத்தனை பேர் அதனைப் புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. புலிகளைப் போரில் நசுக்க, தோல்வியடைய வைக்க 'உலகம்' எப்படி ஓரணியில் திரண்டு நின்றதோ அதே போன்றே இந்த இராஜதந்திர உலகிலும் 'உலகம்' ஓரணியில் திரண்டு நிற்கிறது. ஆயுதப் போரில் இருந்தளவுக்குக்கூட தமிழர்களிடம் இராஜதந்திரப் பலம் இல்லை என்பது தான் கவலை தரும் உண்மை.



# பாடு சுமக்கிறார்கள்

கு.நிறோஜன்

சில வருடங்களாக வடக்கிலுள்ள முதன்மை வீதிகளும் காப்பெற் மயமாகிக் கொண்டிருக்கின்றன. இதுவரை காலமும் திரும்பத் திரும்ப சுண்ணக்கற்கள் பதித்து தார் ஊற்றி செப்பனிடப்பட்டு கிடங்குகள் இல்லாமல் செய்யப்பட்ட வீதிகள் பளிச்சென்றாகிவிட்டன.

காப்பெற் வீதிகள் பயண நேரத்தைக் குறைத்துவிட்டன, வேகத்தை அதிகப்படுத்திவிட்டன. அதில்வழுக்கிக்கொண்டே ஆர்முடுக்கியை மிதிக்கும் போது இருக்கும் சுகத்தில், அந்த வீதியைப் போட உழைத்தவர்கள் பற்றி ஒருபோதும் நம் மூளைக்கு உறைத்ததில்லை.

வேகாத வெய்யிலில் நின்று கூலியாள்கள் செய்த வேலையை எண்ணிப் பார்க்க நேரமில்லாத அவசர உலகில் தான் எல்லோரும் ஓடிக்கொண்டிருக்கிறோம். இந்த வாழ்க்கைக்கு இடையே அந்தத் தொழிலாளர்களின் வாழ்க்கைக்காகவும் ஒரு சில நிமிடங்களை ஒதுக்கிப்பார்த்தால், அந்தப் பக்கம் முழுவதுமே பெரும் சோகம் ஏ–9 வீதியாக நீண்டு செல்கிறது.

யாழ். பண்ணைப் பாலத்திலிருந்து ஊர்காவற்றுறைச் சந்தி வரையான 18.2 கிலோ மீற்றர் வீதியின் புனரமைப்பு தற்போது நடைபெற்று வருகிறது. ஒரு தடமாக இருந்த இந்த வீதியை இப்போது அகலித்து இரு தடப் பாதையாக்கி வருகிறார்கள். பண்ணைப் பாலத்திலி ருந்து மண்கும்பான் பிள்ளையார் கோயில் வரையான பகுதியை ஒரு நிறுவனமும், மண்கும்பான் பிள்ளையார் கோயிலிலிருந்து ஊர்காவற்றுறைச் சந்தி வரையான வீதியை மற்றொரு நிறுவனமும் பொறுப்பெடுத்து அகலித்து வருகின்றன.

மொத்த வேலைகளையும் வேகாத வெயிலில் நின்று செய்பவர்கள் இப்படிச் சொல்கிறார்கள்....

காலை 6 மணிக்கு ஒப்பீசிலநிக்கவேணும். அதற்காக 5 மணிக்கோ நாலரைக்கோ வீட்டிலிருந்து வெளிக்கிட்டு வரவேணும். அப்படி வந்தாலும் 7 மணியளவில்தான் துண்டு தருவார்கள். வேலைக்கு உரிய நேரத்துக்கு வந்துவிட்டனர் என்பதற்கான ஆதாரம் அந்தத் துண்டு. 7.30 அளவில்தான் வரவுப் புத்தகத்தில் கையெழுத்து வாங்குவார்கள். அதிகாலையிலேயே அரக்கப்பரக்க வந்தாலும் அவர்கள் சொல்லும்வரை காத்துக் கிடக்க வேண்டும். சற்றுப் பிந்தி வந்தாலும் மேற்பார்வையாளர், சைற் மனேஜர் என்று எல்லோரிடமும் ஏச்சுவாங்கவேண்டியிருக்கும். ஆனால் அப்போதும் வேலையைத் தொடங்கியிருக்கமாட்டார்கள். தீவகப் பகுதியைச் சேர்ந்த ஒருவரின் வாக்குமூலம் இது.

நிறுவனங்கள் தம்மைத் தொழிலாளர்களாக நடத்துவதில்லை; அடிமைகளாகவே நடத்துகின்றன என்பது பொதுவாக எல்லாத் தொழிலாளர்களாலும் சொல்லப்படும் குற்றச்சாட்டு.

8 மணித்தியாலங்கள் வேலைநேரம். ஒருநாளைக்கு 495 ரூபா தருவார்கள். மேலதிக ஒவ்வொரு மணித்தியாலத்துக்கும் 92 ரூபா 50 சதம் தருவார்கள். 4 மணியிலிருந்து 6 அல்லது 8 மணி வரை மேலதிக நேரம். வேலைக்கு செல்லும் போது தமது வாகனத்தில் அழைத்துச் சென்று அந்தந்த இடங்களில் இறக்கி விடுவார்கள். வேலை முடிந்த பின்னர் ஏற்றி இறக்க மாட்டார்கள். அந்தரித்தபடியே வீட்டுக்கு நடையைக் கட்ட வேண்டும். நகரத்துக்குப் போய்ச் சேரும்போது 8 மணி பஸ்ஸும் போய் விடும். அதை விட்டால் கடைசி பஸ் தான். இரவு 10 மணிவரை வேலை செய்பவர்களின் நிலைமை இன்னும் மோசம். நடந்தேதான் வீடுபோய்ச் சேரவேண்டும். சாமமாகிவிடும். மறுநாள் அதிகாலையில் மீண்டும் பழைய பல்லவி... குடும்ப வறுமை. வேறு என்ன செய்வது? யார் சோறு போடுவது? அதனால் தான் போக வேண்டியிருக்கிறது. பச்சாதாபத்தோடு பேசுகிறார் இளம் தொழிலாளி.

பக்கச் சார்பு தாராளம். நிறுவனத்தினர் தாம் நினைத்தபடி தாம் விரும்பியவர்களுக்கு ஏற்ப மேலதிக கொடுப்பனவு மணித் தியாலத்தை மாற்றுவர். நாள் முழுதும் வேலை செய்தாலும் அதற்கேற்ப ஊதியம் வழங்கப்படுவதில்லை. 240 மணித்தியாலம் மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படும் என்று கூறுவார்கள். ஆனால் அதற்கான முழுக் கொடுப்பனவும் எந்த வொரு மாதத்திலேனும் வழங்கவில்லை. ஆனால் குறைய நாள்கள் வேலை செய்த வர்களுக்கு அதிக கொடுப்பனவு வழங்கியி ருக்கிறார்கள்.

## உணவு

காலையும் மதியமும் அவர்களே உணவு தருவார்கள். சில நேரங்களில் வாயில் வைக்க முடியாதபடி இருக்கும். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அந்த வழியே செல்லும் மீன்வியாபாரிகளிடம் மீன் வாங்கி ஏதோ அவசரத்துக்குச் செய்து அதனுடன் சாப்பிடுவோம். ஆனால் தரும் உணவுக்கு எமது சம்பளத்திலிருந்து தவறாது கழித்து விடுவார்கள்.

வடமாகாண முதலமைச்சர் கூறியிருந்தார். வடக்கில் முன்னெடுக்கப்படும் தொழில் நடவடிக்கைகளுக்கு வடக்கிலிருந்தே ஆள்களை நியமித்துச் செய்ய வேண்டும் என்று. ஆனால் அரைவாசிக்கும் மேற்பட்டோர் வடக்கைச் சேர்ந்தவர்கள் அல்லர். என்ன கொடுமை என்றால் அவர்களுக்கும் இதே நிலமைதான். கொத்தடிமைகளாத்தான் அவர்களையும் நடத்துகிறார்கள். ஆனால் நிறுவனத்தின் பெரியாக்கள் இரவில் பார்ட்டிகள் வைப்பார்கள். அங்கே காசு தண்ணீராய் ஓடும். உழைப்பது நாங்கள். அனுபவிப்பது அவர்கள்.

வேறிடங்களில் இருந்து வருபவர்களால் வேறு விதமான பிரச்சினைகள் வரும். தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் சில நாள் கள் தங்கியிருந்து சாதாரண வேலைகளைச் செய்வார்கள். மாதம் முடிவதற்கு முன்னரே தென்பகுதிக்குத் திரும்பி விடுவார்கள். 2 கிழமைகளாவது தென்பகுதியில் நின்றுவிட்டே வேலைக்குத் திரும்புவர். அவர்களுக்கு கொடுப்பனவு முழுமையாக வழங்கப்படும். இதனால் அவர்களது வேலைகளையும் தாங்களேதான் செய்யவேண்டியிருக்கும்.

குடிதண்ணீர் நிறைவடைந்தால் மீண்டும் எடுத்துவரப் போவது குறைவு. தண்ணீர் எடுக்கப்போகும் நேரம் பார்த்து மேற்பார்வையாளர் வந்துவிட்டால் வேலையில் நாம் இல்லை என்றுகூறி சம்பளத்தை வெட்டி விடுவார்கள். மறுபேச்சுக்கு அங்கு இடமிருக்காது. ஞாயிறு, விடுமுறை நாள்களிலும் வேலை செய்ய வேண்டும். அதற்கு மேலதிகக் கொடுப்பனவு வழங்க வேண்டும் என்றிருக்கிறது. ஆனால் அந்த நாள்களெல்லாம் கணக்கில் எடுக்கப்படுவதில்லை. அந்த நாள்களுக்கான சம்பளமும் கிடையாது என்கிறார்கள் தொழிலாளர்கள்.

## நோய்த்தொற்று

பண்ணையில் கடல்பகுதியில் அகலிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. யாழ். போதனா வைத்தியசாலைக் கழிவுகள் அனைத்தும் பண்ணைக் கடலில்தான் சேர்கிறது. கெமிக்கல் போட்டு கிருமி நீக்கிய பின்னர் கடலுடன் சேர விடப்படுவதாகக் கூறப்படுகிறது. உண்மையில் செய்கிறார்களோ தெரியாது. அந்தக் கடல் நீருக்குள் இறங்கி நின்று வேலை செய்ய வேண்டும். பாலங்களில் வேலை செய்யும்போது எட்டாத் தண்ணீருக்குள் ஆளத்துக்குப் போய்த்தான் வேலை செய்யவேண்டும்.

சொறி, கடி தாராளமாகிவிடும். நாள்முழுவதும் தண்ணீருக்குள் மூழ்கி மூழ்கி வேலை செய்தாலும் உடுப்பு மாற்றகூட முடியாது. சொறி வேதனையாக உள்ளது என்றால் ஸ்ரோரில் கிறீம் இருக்கு எடுத்துப் பூசிக் கொண்டு வேலையைச் செய் என்று கூறு வார்கள். கிறீமுக்கும் சொறி கட்டுப்படாத போது உடனடியாக போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு ஓடுவம் என்று கூறுகிறார்கள்.

## பாதுகாப்பு உபகரணம்

வேலைக்குச் சேர்ந்த சில வாரங்கள் மாத்திரம் பாதுகாப்பு உபகரணங்கள் தந்தார்கள். அதன் பின்னர் எதுவுமில்லை. மேலதிகாரிகள் சம்பவ இடத்துக்குப் பார்க்க வருகிறார் கள் என்றால் சாதாரண பாதுகாப்பு அங்கிகளைத் தருவார்கள். அவ்வாறு வரும் மேலதிகாரிகளும் ஒழுங்காகப் பார்ப்பதில்லை. தொழிலாளர் நல விசாரிப்புக்களும் இல்லை. ஒரு சுற்றுப் போய் விட்டுத் திரும்பி விடுவார்கள்.

கடலுக்குள் இறங்கி வேலை செய்வதே திண்டாட்டமான வேலை. அதனை எல்லோராலும் செய்ய முடியாது. தென் பகுதியிலிருந்து வருபவர்களும் கடலுக்குள் இறங்க மாட்டார்கள். இங்குள்ளவர்களைத்தான் இறக்குவார்கள். உடல் வருத்தியே நாம் வேலை செய்யவேண் டும். ஆனால் உரிய ஊதியம் கிடைப்பதில்லை.

எங்கள் நிலையை நினைத்து கூடியி ருந்து குமுறுவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும் எங்களால்? கேட்கிறார் கள் தொழிலாளர்கள்.

அத்தனை கஷ்டங்களையும் தாங்கி வேலை செய்யும்போதுதான் தனது கால் பறிபோனதாக விசுவமடுவைச் சேர்ந்த முத்தையா சத்தியமூர்த்தி கூறுகிறார். தீபாவளியன்றும் வேலைதான். மண்டைதீவுச் சந்தியில் வேலை செய்து கொண்டிருந்தபோது இயந்திரத்தின் செயின் அவரது காலைப் பதம் பார்த்து விட்டது. சக தொழிலாளர்கள் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். 2 மாதங்களாகச் சிகிச்சை அளிக்கப்பட்டபோதும் வலது காலை முழங்காலுடன் நீக்குவதனைத் தவிர வேறு வழியில்லை என்று கூறிவிட்டார்கள். அவரது இடது காலிலும் 3 விரல்களில் இன்றுவரை உணர்வில்லை. விசுவமடு தேராவிலில் வசிக்கும் அவர் இப்போது தனது அடிப்படைத் தேவைகளுக்கே மகளைத்தான் நம்பி இருக்க வேண்டியிருக்கிறது. 45 வயதான அவருக்கு 4 பிள்ளைகள். போரால் துன்பப்பட்டு துயரப்பட்டு தப்பி வந்த போதும் வேலையில்லாப் பிரச்சினை இன்றும் அவரது குடும்பத்தை வாட்டுகிறது. "முன்னர் ஏ–32 வீதி அமைப்பிலும் எனக்குப் பங்கு இருந்தது" என்கிறார். ஆனால் அதை நினைத்துப் பார்க்க அவ ரைத் தவிர இந்த உலகில் வேறு எவரும் இல்லை.

"தள்ளுவண்டில் வாங்குவதற்குக்கூட வழியில்லை. நிறுவனத்தினரும் வாங்கித் தரவில்லை. போதனா வைத்தியசாலையில் என் நிலைமையைப் பார்த்த ஒரு நல்ல உள்ளம்தான் தள்ளுவண்டி வாங்கித் தந்தது. இனிமேல் வாழ்நாளை தள்ளு வண்டியில்தான் கடக்க வேண்டும் என்று நினைக்கவே வெறுக்கிறது." அவரால் பெருகி வரும் கண்ணீரை அடக்க முடியவில்லை.

இழப்பீடாக 3 லட்சத்து 33 ஆயிரம் ரூபா மாத்திரம் தருவதாக நிறுவனம் கூறியுள்ளதாம். அதை வைத்து என் குடும்பத்தையும் என்னையும் வாழ் நாள் முழுவதும் காப்பாற்றவா முடியும்? "காப்புறுதி அவ்வளவுதானாம். என்னுடைய காலுக்கு பெறுமதி அவ்வளவுதானா?" என்று கேட்கிறார். அந்த இழப்பீடுகூட இன்னும் வழங்கப் படவில்லை.

இத்தனைக்குப் பிறகும் பாடுகளைச் சுமப்பவர்கள் அங்கே தொடர்ந்தும் வேலை செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். வறுமை அவர்களை அந்த இடம் நோக்கி விரட்டிக் கொண்டே இருக்கிறது.

உசிலமணி

# இதுக்கே இவ்வளவு இழுபறியானால்...!

வலி. வடக்கு, வாழ்விடத்துக்கான போராட்டம் கடந்து வந்த பாதை நெடுந்தூரம். பல தளங்கள் – களங்களிலான போராட்டத்திற்கு இப்போது தான் சிறு வெற்றி. கால் நூற்றாண்டுகள் படைத்தரப் பின் பதுக்கலிருந்த, மண் விடுவிக்கப்படப் போகிறது. ஆனால் கொடுப்பதை அள்ளிக் கொடுக்காமல், கிள்ளித் தெளிக்கின்றார்கள். கிடைத்தவரை இலா பம் என்பதைத் தவிர வேறு என்ன செய்வது! ஆயிரம் ஏக்கர் நில விடு விப்புக்கே, இத்துணை கஞ்சத்த னம் என்றால், எஞ்சிய நில விடுவிப்பு எப்போது என்பதே கேள்வி.

2013ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி, தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்து முன்றலில் உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத் தப்பட்டது. வலி. வடக்கு மக்கள் தங்கள் வாழிடங்களை மீட்பதற்காக நடத்திய கவன வீர்ப்பு அது. அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துகொண் டார்.

சிறிது நேரம் போராட்டத்தில் இருந்தார். அரை மணி நேரத்தில் அடுத்த நிகழ்வுக்குச் செல்வதற்கிடையில் மக்கள் முன்பாக உரையாற்றினார். தான் ஆட்சிக்கு வந்தால் வலி. வடக்கில் பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் தவிர்ந்த ஏனைய பகுதிகளை விடுவிப்பேன் என்று சொல்லி விட்டுக் கிளம்பி விட்டார்.

அன்றைய சூழ்நிலையில், ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வருவது என்பது குதிரைக் கொம்பாகவே இருந்தது. மஹிந்தவின் ஆட்சி அந்தளவுக்கு கோலோச்சியிருந்தது. வாழ்க்கை ஒரு வட்டம்டா என்ற இளையதளபதியின் பஞ்சுக்கு ஏற்ப, மேலேயிருந்த மஹிந்த கீழேயும், கீழேயிருந்த ரணில் மேலேயும் வந்திருக்கின்றனர். கொழும்பில் ஆட்சி மாறி விட்டது. ஆனால் வலி. வடக்கில் காட்சிதான் மாறவில்லை.

ஆட்சிக்கு வந்தால், உயர் பாதுகாப்பு வலயம் பட்டெனச் சுருங்கும் என்றவர் ரணில். பதவியில் அமர்ந்த பின்னும் அதைச் செய்யவில்லை. அரைச்சத நாள்கள் கடந்தும், காணி விடுவிப்பில் கஞ்சத்தனம் காட்டிக் கொண்டிருக்கின்றார். ஆயிரம் ஏக்கர் விடுவிப்பு என்ற அமைச்சரவைத் தீர்மானம் ஆமைவேகத்தில் நகர்கிறது.

வலி.வடக்கில் மீள்குடியமர்வு தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராலும், யாழ். மாவட்ட சிவில் அரச அதிகாரிகளினாலும், புள்ளிவிவரங்கள் – திட்டங்கள் – வரைபடங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. கடந்த 2012ஆம் ஆண்டு – மஹிந்த அரசின் காலத்தில் – எட்டப்பட்ட இணக்கங்கள் முன்வைக்கப்பட்டன.

> **பாதுகாப்புத் தேவைக்காக, பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன் துறைமுகப் பகுதிகளை அண்டிய பிரதேசங்களை மாத்திரம் வைத்துக் கொண்டு ஏனைய பிரதேசங்களை விடுவிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதற்கு இராணு வத்தினரும் இணங்கியிருந்தனர்.**

வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயத் தில் தற்போது பிடித்து வைக்கப்பட்டுள்ள 24 கிராம சேவையாளர் பிரிவுகளில் 5 கிராம சேவையாளர் பிரிவுகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளை முழுமையாக விடுவிப்பதற்கு இராணுவமும் இணக்கம் கண்டிருந்தது. விடுவிக்கப்படும் 19 கிராம சேவையாளர் பிரிவுகளில், மீள்குடியமர்வை இரண்டு கட்டங்களாக மேற்கொள்ள முடியும் என்பதே அந்த இணக்கம்.

பாதுகாப்புத் தேவைக்காக, பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன் துறைமுகப் பகுதிகளை அண்டிய பிரதேசங்களை மாத்திரம் வைத்துக் கொண்டு ஏனைய பிரதேசங்களை விடுவிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதற்கு இராணுவத்தினரும் இணங்கியிருந்தனர். ஆனாலும், அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவினால் இந்தத் திட்டம் குழப்பியடிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர், நலன்புரி நிலையங்களில் தங்கி யுள்ள மக்களுக்கு குடியேற்றத் திட்டத்தை அமைத்து மீள்குடியமர்வு பிரச்சினைகளுக்கு முழுக்கு போட முற்பட்டனர். இதற்காக வளலாயில் இன்னொரு பகுதி மக்களின் காணிகளை எடுத்து திட்டத்தை நடைமுறைப்படுத்த முயன்றனர். இதற்கும் மக்கள் ஆதரவு கிடைக்கவில்லை. திட்டமும் கிடப்பில் போடப்பட்டது.

புதிய அரசு பதவியேற்றதும் கிடப்பில் போடப்பட்ட திட்டத்தை தூசு தட்டி எடுத்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் யாழ்ப்பாண அரச அதிகாரிகள் கொடுத்த முன்மொழிவுகளை புறமொதுக்கி, இராணுவத்தினரால் முன்வைக்கப்பட்ட திட்டத்தை நடைமுறைப்படுத்தவே அரசு விரும்பியது.

உயர்பாதுகாப்பு வலயத்தினுள் விடுவிக் கப்படக் கூடிய பிரதேசங்களை தருமாறு முப்படையினரிடமிருந்தும் விவரங்களை அரசு கோரியிருந்தது. அவர்களால் முன்மொழியப்பட்ட ஆயிரம் ஏக்கரையே விடுவிப்பதற்கு தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் மூலம் சிங்கள மக்கள் மத்தியிலிருந்து எதிர்ப்பு வராமல் தப்பித்துக் கொள்ள முடியும் என்று எண்ணியது.

இதற்கமையவே அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. மக்கள் நிராகரித்த – இராணுவம் முன்வைத்த திட்டத்தை புதிய அரசு அறிவித்ததும் உடனடியாகவே தமிழ் மக்களிடத்திலிருந்தும், மக்கள் பிரதிநிதிகளிடமிருந்தும் எதிர்ப்புக் கிளம்பியது. இதனால் வேறு வழியின்றி திட்டத்தை மாற்ற புதிய அரசு இணங் கியது. ஆனா லும் இராணுவத்தினருக்கு இதில் உடன் பாடில்லை.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆளுநர் அலுவலகத்தில் நடந்த கலந்துரையாடலில் புதிய மீள்குடியமர்வுத் திட்டத்திற்கு இராணுவத்தினர் பல்வேறு முட்டுக்கட்டைகளைப் போட முயன்றனர் என்று தெரிகிறது. மீள்குடி யேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தலைமையில் குறித்த கூட்டம் நடந்தது. இதில், இராணுவத்தினருக்கு குறித்த காணிகள் விடுவிக்கப்படுவதில் உடன்பாடில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. ஒவ்வொரு நடவடிக்கை யையும் தாமதிக்கும் வகையில் அவர்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

ஒரு கட்டத்தில், அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், இது அதி உத்தம ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் என்று காட்டமாக இராணுவத்தினரிடம் தெரிவித்திருக்கின்றார். ஆனாலும் இராணுவத்தினர் மிரண்டதாகத் தெரியவில்லை.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வருகைக்கு முன்னதாக, மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும் அல்லது மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டதான தோற்றப்பாட்டையாவது ஏற்படுத்த வேண்டும் என்று அவசரப்படுகிறது அரசு. அதற்காகவே ஆயிரம் ஏக்கர் விடுவிக்கப்படுகின்றது. ஜனாதிபதி மைத்திரியும் நாளைமறுதினம் செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகின்றார்.

இந்திய அழுத்தத்திலிருந்து தப்புவதற்காக, ஆயிரம் ஏக்கரை விடுவிக்கும் அரசு எஞ்சிய காணிகளை எப்போது விடுவிக்கப் போகின்றது? வலி. வடக்கில் மட்டும் விடுவிப்பதற்கு இன்னும் 5,384 ஏக்கர் இருக்கிறது. வடக்குமுழுவதிலும் 85 ஆயிரம் ஏக்கர் விடுவிக்கப்படவேண் டும்.


தான் ஆட்சிக்கு வந்தால் பலாலி விமான நிலையத்தையும் காங்கேசன் துறைமுகத்தையும் தவிர அனைத்துப் பகுதிகளையும் விடுவிப்பேன் என்று துர்க்கை அம்மனின் வாசலில் கூறிப் போனதை ரணில் விக்கிரமசிங்கவுக்கு யார் நினைவுபடுத்துவார்கள்?





# வீடும் நாடும் சுடு மயானமும்...?

■ தையிட்டி –
அ.இராசதுரை



மகாமாட்சிமை தங்கிய, ஒரு மகாராணி போன்ற வலி. வடக்கில்... பிறவியெடுத்து விட்ட, அந்த மூத்த எழுத்தாளருக்கு... நடந்து முடிந்துபோன அந்த, யதார்த்தமான 'ஸ்ரோறியில்..." ஒரு பிடிப்பேற்பட்டுக் கொண்டதும்.. அதனையே...பதிவு செய்துவிடும், எழுச்சியோடு தமது எழுதுகோலை முடுக்கி விடுகின்றார்....

....என்னத்தைச் சொல்ல.... எதைச் சொல்ல... எரிமலை வெடித்து, ஆழிக்குள் பூகம்பம் வந்து.. சுனாமியலைகள் உயர உயரவாயெழும்பி... கொடும்புயலும் வீசி... எல்லாமே... ஒரு, கண்மூடி முழிக்குமொரு... நொடிப்பொழுது, நேரத்துக்குள்ளாய்.... மின்னலாய்.. நடந்தே முடிந்து விட்டாற்போல்...எனியில்லையென்ற, தாங்க முடியாத, மனவறுமத்தோடு, எ... இதுவே...ஈறாந்தமான, தஞ்சமென்ற ஐடியாவோடு.... அந்தப் பயங்கரமான.... எந்தக் குடிமனைகளும், கிட்டக் கிட்டவில்லாத, அந்தச் சுடுகாட்டு மடத்தில் போய், கட்டிய, மனையாளோடும்.... பெற்ற பாசப் பருவமகளோடும்.... குடியேறிவிட்ட, திருநீலகண்டன் மாஸ்ரர் செத்தேன் சிவனே... என்னும்....எல்லாமே வெறுத்துப் போய்விட்ட கடைசி நிலையைத் தொட்டும் விட்ட்வராய்... நராங்கிப் போய், நின்று கொண்டிருந்தார்....! வீசித்தள்ளும்... காற்று சுடலை மணத்தையும்.... மிக மிகத் தாராளமாய்...அள்ளிக்கொண்டு வந்து வீசித்தள்ளி... சுடலை வாசனை பரப்பிக் கூத்துப் பார்க்க.... அவர் மனைவியும்... மகளும் கலங்கிய உள்ளத்தோடும்....கலங்கி வழியும் கண்களோடும் மூக்கைச் செப்பமாய்ப் பொத்திப் பிடிக்க... இந்தத் திருநீலகண்டன் மட்டுமென்ன அந்தப் பரம்பொருள்... திருநீலகண்டனாகவேதான்....மாறிவிட்டாரா....? அப்படியே.... எல்லா நிலைகளையும்... தாண்டிப்போய்விட்ட, ஒரு ஞானி போல்....வெறும், விறைத்த கட்டையாகிப் போய்... நின்று கொண்டிருந்தார்...?! இந்த மானிடத்தின்... கடைசி எல்லையான இந்தப் பொல்லாத சுடுமயானத்தில்.. உயிரோடிருக்கும்.... எந்த மனிதவர்க்கமும்தான்.. கனவிலை வாக்கிலை கூட..... தங்கத்தரிக்க... நினைத்துப் பார்க்க முடியாத... இந்த மகா சூனியப் பிரதேசத்தில்....இன்றைக்குத் தாமும்... தமது......குடும்பமும், வந்து ஏதோவொரு எழுதா எழுத்தின் பிரகாரமாய்... குடியேறிவிட்ட, விசித்திரக் கதையை தமக்குள் அலசி அலசி... "இந்தச் சுடுகாட்டு மடத் திலிருந்து ... சாப் பாட்டை எப்படி... ஆக்க முடியும்...? ஆக்கிய சாப்பாட்டை.... என்னெண்டு... வாய்க்குள்ளை வைக்க முடியும்...? இந்தச் சுடுகாட்டு வாசனையோடு சேர்த்து...! எப்பிடிப் படுத்துறங்க முடியும்...? படுத்தாலும்தான் .... நித்திரைதான்.. கிட்டக்கிடலைக்கும்தான் வருமா.... சுடலைப் பேய் பிசாசுகளின் பயக்கெடுதியில்....?"

சுடலையில் வந்து கவலை கொண்டாடிவிட்டுப் போன... அந்த நபர் தானிந்த ஹப்பி நியூசை... மாஸ்ரர் இன்னும் நல்லாய்ச் சந்தோ ஷப்பட்டுத் தொலை யட்டுக்கு மென்ற ஐடியா வோடு... நல்லாய்ச் சிரித்துச் சிரித்துச் சொன்னார்...! மாஸ்ரரோ இதனைக் கேட்டுச் சிரிக்க வுமில்லை...? அழவுமில்லை? கொஞ்சம்.. குளுக்கோஸ்.. போட்டு மஸ்த்தேத்தித் தென்பாகி விட்டவராய்.. நிமிர்ந்து நின்றும் கொண்டார்...!!

இப்படியெல்லாம், சுடுகாட்டுக்குள் ஒரு திடீர் விபத்து ஐயிற்றம், மாதிரியாய்.. வந்து சம்பவித்து விட்ட மாஸ்ற்றர்... சுடலை அலட்டல்களை... அலட்டத் தொடங்கினார்...? ரோட்டால்... போகிறவர்கள்... வருகின்றவர்களும்.... தரித்துத் தாமதித்து நின்று.. இந்த விசித்திர.... வினோதத்தை விடுப்புகள்... பார்த்து... இரசித்துச் சிரித்து விழுந்துகொண்டும்..... போறமட்டோடும்... நில்லாது... "லூஸ்.. லூஸ்... நட்,கழண்டு போச்சு தடா...?" என்றும் கத்திக் குளறிச்... சத்த வெடிகள்...வைத்துக் கொண்டும்... போனார்களே...!? கூவா குளங்கரை, போட்டுக் கொண்டும்.. நட்கழண்டு... கழராதவர்கள் மாதிரியாய்ப்...போய்க் கொண்டுமிருந்தார்களே...!

....யாரோ.... ஒருவர்... மாஸ்ரருக்கு நன்கு அறிமுகமானவர்.. மாஸ்ரடிக்கு... வருகின்றார்...!? இந்த மாஸ்ரரின் ஒரு முக்கிய மாணவனாயிருந்த... வெளிநாட்டில்.... பமிலியோடிருக்கும்... திருவாதவூரனின்... வீட்டிலிருந்துதான்... மாஸ்ரர் கலைபட்டுச்.... சுடலைக்கு வந்துவிட்ட ஐயிட்டத்தையும்.... மாஸ்ரரை.... இந்தளவு பெரிய... சிக்கலுக்குள்...மாட்டிவிட்டுக்.. கடைசியில்... நரித்தனமாய்த் தப்பிக் கொண்ட.. ஓட்டோ ஆறுமுகத்தைப் பற்றி யும்.... நன்கு, கேள்விப்பட்டுக்... கவலை கொண்டாடிவிட்டுப் போனவர்.. போய் விட்டதும்... மாஸ்ரரின் சிந்தனை.... மறுபடி யும்... வேலை செய்யத் தொடங்கி விடுகின்றது...!

...தமிழனென்றொரு இனமுண்டு... தனியே அவர்க்கொரு குணமுண்டு... என்று நாமக்கல் கவிஞர். அந்த நேரத்தில் பாடினாலும், பாடி வைத்தாலும்.... இன்றைக்கு... இந்த ஓட்டோ ஆறுமுகங்களிடமும்... இந்தத்.. திருவாதவூரங்களிடமும்..... இந்தத்... தமிழன் தனிக் கலாசாரம்... முறையாக... வேலை செய்திருந்தால்... தமக்கிந்த.... யதார்த்தமில்லாத...அதோ கதி.. வந்திருக்குமா....? என்று...நினைத்து விட்டபோது... மாஸ்ரர் .... விம்மி வெடித்து விட... இதனைக், கண்கொண்டு பார்த்துவிட்ட மனைவியும் மகளும்.... கதறியழுதே விடுகின்றார்கள்....?

இப்படியே... லாண்ட் மாஸ்ரரில்... அள்ளி வந்து.... கொட்டி விட்ட.... சாமான் சக்கட்டோடும்.. அரைகுறை அருவருப்பான... ஓங் காளிப்பான.... மனமும் மனயீன மூமான... சாப்பாட்டு.... நெருடல் களோடும்.... 2 அகோரப்பொழுதுகள்... பேய் பிசாசுக் கும்மியடிப்பாய்... ஓட முடியாமல்... அரக்கி.... அரக்கி... ஆமைவேகத்தில்.. நடந்து பறிய...

திடீரென்று வந்துவிட்ட பிரதேச சபையினர்.... பிரேதமொன்று.. சுடலைக்கு வரப் போகுதென்றும்... உடனடியாக.. சுடலையை விட்டு வெளியேறும் படியும்... எங்காவது.. பஸ் ஸ்ற்றான்றிலோ... சந்தையிலோ... என்றபடியாய்த், தங்கள், டியூட்டியைக்... காட்டிக் கொண்டவர்களாய்.... ஓடித் தப்பியும் விடுகின்றார்கள்...?

மாஸ்ரரோ... எங்கையுமே... ஓடித்தப்பி விடமுடியாதவராய்.. அவதிப்பட்டுத் தொலைத்து, முழிசித்தழிசிக்கொண்டு... செய்வதறியாது.. திணறிக்கொண்டிருந்தார்...!

"சேர்... அவங்க சொன்னது சரி.....சவமெரியத்தொடங்கினா... அந்தப் புகையும்...எரியிற வெடில் நாத்தமும்... நீங்க... சகிக்கவே மாட்டீங்க சேர்..? சுகாதாரத்துக்கே .... வெரி வெரி. BAD...??" இப்படி.... இன்னொரு, பிரதேச சபையின், ஊழியரொருவர்... சொன்னதும்... மாஸ்ரர்... அந்த யதார்த்தத் தைச் செப்பமாய்.. அன்டஸ்ற்றான்ற், பண்ணிக்கொண்டவராய்த் தலையாட்டுகிறார்...!

அப்படியான..... ஒரு, கட்டாய... அவசர... அவசியமென்றாலும் தான்.. "எங்கை.. போறது..? கடவுளே...? ங்கையெண்டு....போறது....? " என்றெல்லாம்..பேந்தும் தான்.. மாஸ்ரரின் மனமானது.. ஒருக்காலும் தான்... எழும்பேலா தென்ற... நேச்சராய்...விழுந்து படுத்தும் கொண்டது. திடீரென்று...மாஸ்ர ருக்கு.... ஒரு.. கோலொன்று... ஹைஜம் மில்... வந்தும் விடுகின்றது...!?!

"ஹலோ... ஹலோ..." என்று.. .. மாஸ்ரர் அவதிப்பட்டதும்... "சேர்..பிரேதமொண்டு..போஸ்மோட்டமெல்லாம் முடிஞ்சு.. சரியா... ஈவினிங் 5 தேட்டி.. பாசாகிறதுக்கிடேலை... சுடலைக்கு வருகுது....! ஓட்டோ– ஆறுமுகத்தார் தான்... ஓட்டோ.. டிப்பர் நேரடி மோதலிலை...கொளுத்தாராப் போயிட்டார்...!" சுடலையில் வந்து கவலை கொண்டாடிவிட்டுப் போன... அந்த நபர் தானிந்த ஹப்பி நியூசை... மாஸ்ரர் இன்னும் நல்லாய்ச் சந்தோஷப்பட்டுத் தொலையட்டுக்கு மென்ற ஐடியாவோடு... நல்லாய்ச் சிரித்துச் சிரித்து போனிலை சொன்னார்...! மாஸ்ரரோ இதனைக் கேட்டு சிரிக்கவுமில்லை...?அழவுமில்லை?

(06 ஆம் பக்கம் பார்க்க)

# வீடும் நாடும்...

## தொடர்ச்சி

கொஞ்சம்.. குளுக்கோஸ்.. போட்டு மஸ்த்தேத்தித் தென்பாகி விட்டவராய்.. நிமிர்ந்து நின்றும் கொண்டார்...!! அரசனன்றறுப்பான்...தெய்வம் நின்ற றுக்குமென்றெல்லாமந்தக்காலத்தில்...?? இந்தக் காலத்திலை தெய்வம்.. அண்டே அறுத்துக் கொட்டும்....! அரசன்தான் அண்டு மறுக்கமாட்டான் இண்டுமறுக்க மாட்டான். எண்டுமே தானறுக்கவும் மாட்டான்... மாட்டான்...?? இப்படியெல்லாம்... ஓட்டோ ஆறுமுகம் இந்த திருவாதவூரரின் வீட்டு விடையத்தில், இவரை இன்னாற்ரை வீட்டிலை போயிரெண்டு நானென்ரை ஓட்டோ வறியச் சொல்லே லையெண்டு 'போயிரெண்டு'பச்சப்படிய சொல்லிவிட்டு படுசத்தியம் பண்ணி கண்டதார் கேட்டதாரென்று கணக்காய் அமத்திக்குத் தினதுக்கான கடவுளின் பணிஷ்மென்ற் என்ற அச்சறசுத்தியாய் மாஸ்ரரின் இதயமே முழுக்கியெறிந்தது...!

தன்னிடமே கூசாமல் பெரும் தொகை மாறி ஓட்டோவெடுத்து அந்தக் கைராசியினாலும் கொடி கட்டிப் பறந்த ஓட்டோ ஆறுமுகத்தின் பிரேதவாசனையையும் வயிறு முட்டக் குடிக்கப் போகின்றோமேயென்ற தியக்கடியில் நீலகண்டன் மறுபடியும் சுருண்டுபோய் விடுகின்றார்??? "வாதவூரன்ரை வீடு பெரிய வசந்தமாளிகைதானே வாத்தியார். கதவுகளையெல்லாம், இந்த ஆமிக்காறங்கள் பிரிச்சுக் கொத்திக் கழட்டிக் கொண்டு போட்டாங்கள் அடுப்பெரிக்கிறதுக்கெண்டு. வாதன் என்னோடை நல்ல பொக்கற். நீங்கள் எனி அந்த வீட்டிலை போயிருங்கோ... அங்கையிங்கையலைய வேண்டாம். நான் மலேஷியாவுக்கொரு கோலெடுத்து ஆளோடை கதைக்கிறன். என்றெல்லாம் மடியில் பிள்ளை வழுகிவிழக் கூடிய விதமாய்... ஒரு நித்திய தண்ணிச்சாமியான ஆட்டோ ஆறுமுகம் தமக்கு ஆற்ரையோ... வீட்டின் பொறுப்பைத் தாம் கடைசியாக இருந்த வீட்டுக்காரனின் கலைப்போடு அந்தரப்பட்டு ஆத்தலைந்து களைத்த நேரம் பார்த்து குடிகாரன் பேச்சு விடிஞ்சால் போச்செண்ட கதையாய்... தன்னுடைய தலையிலேற்றி வெறும்புலுமாஸ் பண்ணி, கடைசியிலிந்த வாதவூரனைக் கொண்டு பித்தும் பெரும் பரிசுகேடாய் கலைப்பித்தும் தம்மையும் தமதினிய குடும்பத்தினையும் சுடலையாண்டிகளாக்கி....

மாஸ்டர் ஓவர் ஓவராய்ப் போயும் விட்ட போது ரைமும் ரூதேட்டி பாஸ் பண்ணவுமாயித்தம்...? கோலொன்று திடீரட்டியணவாய் அந்த ரென்சனில்.... மாஸ்டர் பிரதேச சபையி னரோ என்ற கெடிக்கலக்கத்தோடு.... திருவாதவூரன்தான் பொறிபறக்க..."இந்தக் கெட்ட குடிகார வடுவா செய்த வேலை அவனுக்குமெனக்கும் எந்தக் கொனெக்ஷனுமில்லையே... நான் என்ரை எல்டர் கசினிட்டைத்தான் வேளைக்கே... சொல்லி வைச்சிருந்தனான்... ஆரும் வந்து வீடு விசாரிச்சா பொறுப்பு நிண்டு, குடுக்கச் சொல்லி அவருக்கும் சேறைச் சரியாத் தெரியாது? ஆரோ வீட்டிலை எண்டவர் கோல்போட அந்த வேகரத்தோடை ஊருக்கு சடினா வந்தனான். அந்த நேரமிருந்த மூட்டிலை என்னையாளாக்கி வைச்ச உங்களையும் அவமதிச்சிட்டன். சேர்! சேர்! பிளீஸ் பிளீஸ் டோன்வொறி சேர் உங்கடை கால்லை விழுந்து நூறுமுறையும் மன்னிப்புக் கேக்கிறன் சேர்... நீங்க ஒரு குமர்பிள்ளையையும் வைச்சிருக்கிறீங்க... "சேர்! எல்லாக் கதவுகளும் போட்டுத்தாறன் சேர்! இப்பவே வாகனமனுப்பிறன். சேர் வெளிக்கிடுங்கோ சேர்! ரெடியா நில்லுங்கோ சேர்! அந்தக் குடிகாரன்ரை சவம் திருவாதவூரனே அழுதழுது கதைத்தும் திருநீலகண்டப்பெருமான் திருவாதவூரடிகள் காலத்துக் காட்சியுமாகியும் கொண்டார்.

நம்மெல்லோர்க்கும் வீடும் நாடும் சுடுமயானமும் யதார்த்தமேதானென்று அந்த வலி. வடக்கு வாசியான அந்த மூத்த எழுத்தாளர் தமது ஸ்றோறியையும் பினிஷ் பண்ணி வைக்கின்றார்.



## பூமியின் புலம்பல்

பிறந்து தவழ்ந்து வளர்ந்து வாழ்ந்திடவே
பெருமையுடன் என் மடி தந்தேன்
பறந்து பறந்தே பணத்தையும்
தேடுகின்றாய் பாவம் நீயோ மானிடனே
குடிசைச் சுவர்கள் என்னுடல் சூற்றே
கூரைகள் கூட என்படைப்பே
மடியினிற் சுமந்து நிற்கின்றேனே
மாடிமதிலைக் கூட கோபுலங்களை
தாகம் தீர்த்திடத் தோண்டுகின்றாய்
பாவம் என்று நான் பார்த்திருந்தேன்
மேலும் மேலும் நீ மிஞ்சுகின்றாய்
எண்ணைக்காகவும் எனைத்
தோண்டுகின்றாய்
என்மேல் இயந்திரம் ஓட்டுகின்றாய்
எண்ணிலடங்கா ஆசை கொண்டாய்
தங்கம் தேடியும் தோண்டுகின்றாய்
புண்ணாகுதே என் பூவுடல் எனக்கு
நீ தருவது உந்தன் பூதவுடல்

பொன்ஞானசிவா, வவுனியா.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 358

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ✿ | 4 | 5 | 6 |
| 7 | | | ✿ | 8 | | | |
| ✿ | 9 | | | | | | ✿ |
| 10 | | | ✿ | 11 | | ✿ | 12 |
| 13 | | ✿ | 14 | | ✿ | 15 | |
| | ✿ | 16 | | ✿ | 17 | | |
| 18 | | | ✿ | 19 | | | |
| | ✿ | 20 | | | | ✿ | |

அனுப்புபவர் பெயர்:..........................................

பூரணமாக தபால் விலாசம்: ..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1.பத்துப் பாடல் கொண்ட திரட்டு
4. ஒரு பயன்தரு மரம்
7. களவு செய்யும் மங்கை
8. மணம்
9. நாவலர் காலத்தில் தீவிரம் அடைந்திருந்தது.
10. ஒவ்வொருவருக்கும் உள்ளது
11. அரைக்கும் பணி செய்வது
13. இது போதை தரும்
14. விவாதம்
15. சிஷ்யனுக்கு வழிகாட்டி
16. ஆணுமல்ல பெண்ணுமல்ல
17. உண்ட உணவின் கழிவு
18. தெருக்கள் சேரும் இடம்
19. உணர்வுகளைக் கடத்துவது
20. சடப்பொருளின் வடிவங்களுள் ஒன்று.

### மேலிருந்து கீழ்

1. இடம்
2. இலக்குமி
3. மடல்
4. மாணவர் கடமை
5. இது கொண்டு புலி விரட்டினாளாமே புறநானூற்றுப் பெண்
6. சத்தவடிவம்
8. ஓர் இலக்கம்
10. உள்ளூராட்சி அமைப்பு ஒன்று.
12. கன்னங்கரேல் என இருக்கும்
14. இராமனால் கொல்லப்பட்டவன்
15. பிறந்த சந்ததி
16. (பிரதம) விருந்தினன்
17. தரு
19. புதிய

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 356 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) வளையாபதி (5) சதா (7) கடைக்குட்டி (9)வாதம் (11) குட்டை (12) சரை (13) உதடு (15) குடல் (16) மாரி (17) கடல் (19) மடம் (20) நண்பன் (22) தும்பிக்கை (23) தினை

**மேலிருந்து கீழ்**

(1) வனவாசம் (2) யாகம் (3) படை (4) திக்குதல் (5) சட்டை (6) தாடி (8) குட்டு (10) தரை (13) உடல் (14) பெரியன்னை (15) குடம்பி (16) மா (17) கடம் (18) ஆண் (19) மது (20) நகை (21)பதி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி
இல.358
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (11.03.2015 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.358 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 15.03.2015 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 356 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
கு.குலநாயகி,
இல.69, ஆனந்தநகர்,
கிளிநொச்சி.

**2 ஆம் பரிசு**
க.சாந்தசோதி,
சோதி வீதி, தையிட்டி,
காங்கேசன்துறை.

**3 ஆம் பரிசு**
அ.ராதை,
செம்பாடு,கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

**4 ஆம் பரிசு**
ஜனகன் குவிதினி,
இல.238/1, முதலாம் குறுக்குத்தெரு,
உக்கிளாங்குளம்,வவுனியா.

**5 ஆம் பரிசு**
சிறிகந்தராசா ரேணுகா,
கல்வளை,
சண்டிலிப்பாய்.

**பாராட்டுப் பெறுவோர்**

பா.பிரசானந்தி,
இல.01, புகையிரத கடவை,
வவுனியா.

ர.சாரங்கன்,
இல.55, கோகுல வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.

அ.கனகரத்தினம்,
இல.232/3, செபத்தியார் வீதி,
ஓட்டுமடம்,யாழ்ப்பாணம்.

சொற்சிலம்பம் போட்டி 356 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.



“ மஹிந்த ராஜபக்ஷவை அடி அறுபடாத ஆலமரமென நம்பிக்கொண்டிருந்த சிலர் - அவருடைய மாட்சிமை வீழ்ச்சியின் பின் ஏற்பட்ட சூழல் மாற்றத்தினால் தமது அரசியல் இருப்பு கேள்விக்குறியாவது பற்றி பயங்கொள்ள ஆரம்பித்துள்ளனர். தமது இருப்பை வலுப்படுத்துவதற்குத் தேவையான உபாயங்களையும் தேடத் தொடங்கியுள்ளனர்.

# ‘இவர்’ வருவாரா மாட்டாரா?

■ ஸுடோ.ஸ்வாமி

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், அரசியலுக்கு வருவாரா?

இளைய தளபதி விஜய், அரசியலுக்கு வருவாரா?

இந்தியாவின் தமிழ்நாட்டில் ஆண்டாண்டு காலமாகத் தொடரும் கேள்விகள் இவை. இந்த வரிசையில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பெயரும் தற்போது இணைந்து கொண்டுள்ளது. ஆனால் எதிர்பார்க்கப்படும் – அவருடைய அரசியல் பிரவேசம், கன்னிப் பிரவேசம் அன்று; மீள் பிரவேசமே!

முன்னாள் இலங்கைக் குடியரசின் ஜனாதிபதி, புலிகளைப் போரில் வெற்றி கொண்டவர்; சீனாவையும் அதே நேரம் இந்தியாவையும் மறுபக்கத்தில் பாகிஸ்தானையும் சம நேரத்தில் கையாளும் வல்லமை படைத்தவர், என்றெல்லாம் மகுடம் சூட்டப்பட்டவர். இவர் மூன்றாம் பதவிக் காலத்துக்கு ஆசைப்பட்டபோது மக்கள் அவருக்கு ஆணை வழங்க முன்வரவில்லை, வழங்கிய ஆணையும் ஆட்சியை தக்கவைப்பதற்குப் போதுமானதாக இருக்கவில்லை.

கடந்த தை 9ஆம் திகதிக்குப் பின்னான புறச்சூழல், மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஒவ்வாததாக மாறிவிட, அவர் அரசியல் அரங்கிலிருந்து புறமொதுக்கப்பட்டுப் போயிருக்கிறார். சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைமைப் பதவியும் அவரிடமிருந்து அகற்றப்பட்டாயிற்று.

மஹிந்த ராஜபக்ஷவை அடி அறுபடாத ஆலமரமென நம்பிக்கொண்டிருந்த சிலர் – அவருடைய மாட்சிமை வீழ்ச்சியின் பின் ஏற்பட்ட சூழல் மாற்றத்தினால் தமது அரசியல் இருப்பு கேள்விக்குறியாவது பற்றி பயங்கொள்ள ஆரம்பித்துள்ளனர். தமது இருப்பை வலுப்படுத்துவதற்குத் தேவையான உபாயங்களையும் தேடத் தொடங்கியுள்ளனர். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு என்னும் கூட்டுக்குள் சங்கமமாகி, தமது சொந்தக் கட்சிச் சின்னங்களைத் தொலைத்துவிட்ட இவர்கள் தமது கட்சிப் பதிவு சார்ந்த கோவைகளைத் தூசு தட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். விமல் வீரவன்ஸவின் என்.எவ்.எவ். எனப்படும் தேசிய சுதந்திர முன்னணி, வாசுதேவ நாணயக்காரவின் புதிய இடதுசாரி முன்னணி, தினேஷ் குணவர்த்தனவின் எம்.ஈ.பி. எனப்படும் மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் அண்மையில் உதயமான உதய கம்மன்பிலவின் பிவிதுரு ஹெல உறுமய என்பனவே அத்தகைய வகைக்குள் அடங்குகின்றன.

இலங்கையின் ஏழாவது நாடாளுமன்றம் எதிர்வரும் சித்திரை 22ஆம் திகதியுடன் பதவிக்கால நிறைவை எய்தும் வேளையில் பொது தேர்தல் ஒன்றை முகம்கொள்வதற்கான முன்னறிவிப்பு, மேற்படி நபர்கள் உள்ளிட்டபலருக்குவயிற்றில்புளியைகரைத்திருக்கிறது. *(ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் திட்டமிட்டபடி எல்லாம் நடந்தால் தேர்தலும் நடக்கும். என்றாலும் இப்போது தேர்தலைத் தள்ளிப்போடுவது குறித்துத்தான் பேச்சு அதிகம் அடிபடுகிறது)* ஏற்கெனவே மைத்திரிபாலசிறிலங்காசுதந்திரகட்சியின்தலைவராகப் பொறுப்பு எடுத்துக்கொண்டதன் பின், சந்திரிகா அல்லது மைத்திரி அணி மற்றும் மஹிந்த அணி என்கிற வகைப்படுத்தல்கள் சுதந்திர கட்சிக்குள் நிலவுவதாகத் தெரிகிறது.

மஹிந்த ஐ.ம.சு.மு.வின் பிரதமர் வேட்பாளராக முன்மொழியப்படவேண்டும் என்னும் தீர்மானம் களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்ட ஐ.ம.சு.முவின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களால் எடுக்கப்பட்டும் உள்ளது. இந்த பின்னணியில் மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராகக் களமிறக்குவதன் மூலம் அல்லது மஹிந்த பிரதமர் வேட்பாளர் என்கிற மாயையைக் களமிறக்குவதன் மூலம் தமக்கான வாக்குகளை பத்திரப்படுத்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி திட்டமிடுகிறது. இதற்கான நடவடிக்கையாகவே மஹிந்தவை மீள அரசியலுக்கு இழுக்கும் சுதந்திர முன்னணியின் தந்திரோபாயத்தை நோக்க வேண்டியிருக்கிறது.

தமிழ் சினிமாவில் அவ்வப்போது கதாநாயகியின் சதையை நம்பியும் படங்கள் வெளிவருவதுண்டு. அதேபோன்று போர் வெற்றி, புலிகளுக்குபுத்துயிர், மேற்குலகசதி, நாடுதுண்டாடப்படப் போகிறது, தாய்நாடு அபாயத்தில் உள்ளது போன்ற கோஷங்களுக்கு எடுபடக்கூடியவர்களை – அத்தகைய தூண்டல்களுக்குத் துலங்கல்களை வெளிப்படுத்துவோரைக் கூட்டிணைப்பதன் மூலம் தத்தமது வாக்குத் தளங்களை வரட்சியிலிருந்து காக்கும் ஓர் உத்தியாகக்கூட இது அமையலாம். இதற்கான ஒத்திகை கடந்த 18ஆம் திகதி நுகேகொடயில் இடம்பெற்றிருக்கிறது.

இத்தகைய சிந்தனையோட்டம் உடையோரை குஷிப்படுத்தும் வகையில் வடமாகாண சபை இனப்படுகொலைத் தீர்மானமும் அமைந்துள்ளது. மற்றும் கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் காங்கிரஸுடனான தமிழ்க் கூட்டமைப்பின் கூட்டும் அவர்களுக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்த கதையாகியிருக்கிறது. மஹிந்தவை அரசியலுக்கு அழைக்கும் ஒரு மில்லியன் கையெழுத்துக்களைச் சேகரிக்கும் பணியும் முடுக்கி விடப்பட்டிருக்கிறது.

கிட்டத்தட்ட ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் நிலவிய நிலவரத்தை ஒத்த ஒரு நிலையை நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னான தற்போதைய காலத்திலும் அவதானிக்க முடிகிறது. ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் மஹிந்த எவ்வாறு நன்கு தெரிந்த வேட்பாளராகவும் அவருக்கு நிகராக யார் களமிறங்கப் போகின்றார் என்பது தெரியாததாகவும் இருந்ததோ, அவ்வாறே தற்போது ரணில் நன்கு தெரிந்த பிரதமர் வேட்பாளராகவும் அவருக்குப் போட்டியாக இறங்குபவரின் இடம் வெற்றிடமாக உள்ளதுமான சூழற் சமநிலை நிலவுகின்றது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிலைச் சின்னம், பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் கதிரைச் சின்னம் மற்றும் சிறிலங்கா சுதந்திர கட்சியின் கைச் சின்னம் எல்லாம் மைத்திரி வசமிருக்கும்போது மஹிந்த எந்தச் சின்னத்தில் எந்த கட்சியில் களமிறங்கப் போகின்றார் என்று ரணில் கேள்வி எழுப்பியுள்ளார். மஹிந்த – ஐ.ம.சு.முவின் பிரதமர் வேட்பாளராக – தனது அரசியல் மறு வருகை தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்பு எதனையும் இதுவரை வெளியிடவில்லை. ஆனால் மஹிந்த களமிறங்குவார் என்கிற மனநிலையை மக்களிடையே ஏற்படுத்துவதில், அந்த எண்ணத்தைப் பாதுகாப்பதில் தீவிர கவனம் செலுத்தப்படுகிறது.

பிரதமருக்கு – நாடாளுமன்றத்துக்கு – கூடுதல் அதிகாரம் வழங்கும் அரசமைப்புத் திருத்தங்களுக்கான முன்மொழிவுகள் முன்னெடுக்கப்படும் நிலையில், மஹிந்த–பிரதமர் வேட்பாளர் என்கிற எண்ணக் கரு அதிக முக்கியமுடையதாக விளங்குகின்றது.

தேசிய அரசைத் தொடர்வதற்கு ஆதரவு வழங்க சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளதனால் பொதுத்தேர்தல் பிற்போடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் தேசிய அரசை உருவாக்கும் தீர்மானத்திற்கு ஜே.வி.பியிடமிருந்து எதிர்ப்பும் கிளம்பியிருக்கிறது. நடைமுறை அரசியலுக்குள் மஹிந்த நுழைவாரா இல்லையா என்பதனை அறிய இன்னும் சிறிது காலம் காத்திருக்க வேண்டியிருக்கிறது. ■



## அன்பு

அன்பு கொண்டேன்
காதல் கொண்டேன்
என்று ஆசை வார்த்தை
பேசி இன்று
என் வாழ்வை
விசித்திரமாக்கிவிட்டாய்
பிறருடைய இதயத்தை
திறக்கும் ஒரு
அளவு கோல்தான்
அன்பு எனும்
உயர் பண்பு
பிறருடைய இதயத்தை
புரிந்துகொள்ளத் தெரியாத
உனக்கு எப்படி
புரியும் உயரிய
என் அன்பு

- சுடர்நிலா

சிறந்த வெளிநாட்டு மொழிப் படம் என்ற பிரிவுக்கு அனுப்பப்படும் படங்களைத் தவிர, மற்ற பிரிவுகளுக்கான போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் படங்கள் ஆங்கிலத்தைப் பேச்சு மொழியாகக் கொண்டு நேரடியாக ஆங்கிலத்தில் உரு வாக்கப்பட்டிருக்கவேண்டும். 40 நிமிடங்களுக்குக் குறைவாக இருக்கக் கூடாது. அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் மாநிலத்தில் ஒரு சில திரையரங்குகளிலாவது வெளியாகி ஏழு நாள்கள் ஓடியிருக்க வேண்டும். இந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால் போதும் ஒஸ்கார் தெரிவுக்குள் சென்று விடலாம்.

■ ஆஷா

# ஒஸ்கார்: உலகின் ஈர்ப்பு



ஒஸ்கர் என்பது அமெரிக்கப் படங்களுக்கான விருதுகள் மட்டுமே என்று என்னதான் தூக்கி எறிந்தாலும் ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி மாதம் ஒஸ்கார் வென்ற படங்களை நோக்கி மனசு ஓடிப் போய்விடுகிறது. ஒவ்வோர் ஆண்டும் 'அக்கடமி ஒஃப் மோஷன் பிக்ஸர்ஸ் ஆர்ட் அன்ட் சயின்ஸ்' அறக்கட்டளை (AMPAS) வழங்கும் ஒஸ்கர் விருது விழா உலகை ஈர்த்துவிடுகிறது. இந்த விழாவின் நேரலை நிகழ்ச்சியைத் தொலைக்காட்சி வழியே கடந்த ஆண்டு உலகம் முழுவதும் கண்டு களித்த பார்வையாளர்களின் எண்ணிக்கை 43 மில்லியன். இந்த ஆண்டு இது 53 மில்லியனாக இருக்கும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஒஸ்கர் இத்தனை வரவேற்பைப் பெறக் காரணம் என்ன? ஆஸ்கர் விருதுகள் வழங்கக் கடைபிடிக்கப்படும்விதிகளும் தர ஒழுங்குகளுமே காரணம் என்று மதிப்பிடுகிறார்கள் அமெரிக்காவுக்கு வெளியே இருந்து ஒஸ்கர் விருதுகளைவிமர்சிக்கும்பலர்.

**எவரும் ஒஸ்கரை நெருங்கலாம்**

இது அமெரிக்கத் தயாரிப்பு, இங்கிலாந்து தயாரிப்பு, மூன்றாம் உலக நாடுகளின் தயாரிப்பு என்றெல்லாம் ஒஸ்கர் பேதம் பார்ப்பதில்லை. சிறந்த வெளிநாட்டு மொழிப்படம் என்ற பிரிவுக்கு அனுப்பப்படும் படங்களைத் தவிர, மற்றப்பிரிவுகளுக்கானபோட்டியில்கலந்துகொள்ள விரும்பும் படங்கள் ஆங்கிலத்தைப் பேச்சு மொழியாகக் கொண்டு நேரடியாக ஆங்கிலத்தில் உருவாக்கப்பட்டிருக்கவேண்டும். 40 நிமிடத்துக்குக் குறைவாக இருக்கக் கூடாது. அமெரிக்காவின்லொஸ்ஏஞ்சல்ஸ் மாநிலத்தில் ஒரு சில திரையரங்குகளிலாவது வெளியாகி ஏழு நாள்கள் ஓடியிருக்கவேண்டும். இந்தநிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால் போதும் ஒஸ்கர் தெரிவுக்குள் சென்று விடலாம்.



இந்த அடிப்படைத் தகுதிகளுக்கு அப்பால்போட்டியில்கலந்து கொள்ள விரும்பும் படங்கள் எந்த வகைமை யில் அடங்கினாலும் அவற்றின் ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு ஆகியவற்றுக்கு அடிப்படை அளவுகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக விருதுக்குப் பரிந்துரைக்கப்படும் படங்களையும் கலைஞர்களையும் சுமார் 4,700 அக்கடமி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். இவர்கள் அனைவருமே திரைப்படத்துறையின் பல்வேறு பிரிவுகளில் மிகச் சிறந்த பங்களிப்பைச் செய்தவர்கள். செய்துகொண்டும் இருப்பவர்கள். இவர்கள் யார் என்பதை அக்கடமி இரகசியமாகவே வைத்திருக்கிறது.

ஒரு படத்தை அல்லது கலைஞரை இந்த உறுப்பினர்கள் பரிந்துரை செய்யவும், விருதுக்காகத் தேர்ந்தெடுக்கவும் இரகசிய வாக்களிப்பை நிறைவேற்றுகிறார் கள். இந்த வாக்களிப்பு, படங்களின் உள்ளடக்கம், உருவாக்கத்தில் உள்ள நேர்த்தி, நடிப்பில் பங்குகொண்ட கலைஞர்களின் நடிப்புத்திறன் பங்க ளிப்பு, இயக்குநரின் பார்வை ஆகியவற்றின் அடிப்படையில் அமைகிறது.

**87ஆவது போட்டி**

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒஸ்கர் விருது வழங்கும் விழா பெரும் கோலாகலமாக நடந்து முடிந்திருக்கிறது. பல்வேறு உலகநாடுகளிலிருந்து அழைக்கப்பட்ட கலையுலகச் சிறப்பு விருந்தினர்கள் நிகழ்வைக்களை கட்ட வைத்தார்கள்.

இம்முறை பரிந்துரைகளில் மற்றொரு ஆச்சரியம் நடிகை மெரில் ஸ்ட்ரீப். இவர் 19ஆவது முறையாக ஒஸ்கர் விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்டிருந்தார். ஆனால் கிடைக்கவில்லை. அதிக முறை ஒஸ்கர் விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்டவர் என்ற தகுதியுடன் மனம் தளரா்மல் இம்முறை 'இன் டு தி உட்ஸ்' படத்திற்காகச் சிறந்த துணை நடிகை விருது வரை நெருங்கி வந்திருக்கிறார். உழைப்பைக் கைவிடவில்லை அவர்.

மிகச் சிறந்த படமாக 'பேர்ட் மன்' தெரிவு செய்யப்பட்டுள்ளது. படத்தின் கதை இதுதான்...

நீங்கள் சினிமாவில் புகழ்பெற்ற ஒரு கதாநாயகன் என வைத்துக்கொள்வோம். 15 வருடங்கள் கழித்து தற்போது வாய்ப்புகள் இல்லாமல் வீட்டில் இருக்கிறீர்கள். முன்னர் உங்களுக்குக் கிடைத்த புகழ் போதையை, இப்போது வேறொரு நடிகர் அனுபவித்துக் கொண்டிருக்கிறார். என்ன செய்வீர்கள்? இதுதான் 'பேர்ட் மன்' படத்தின் கதை!

அலிஜண்ட்ரோ இயக்கத்தில் மைக்கேல் கீட்டன் நடிப்பில் 'பிளக் கொமெடி' (மென் நகைச்சுவை) வகையில் மிரட்டுகிறது படம்.

ஊரே கொண்டாடிய 'பாட் மன்' எனும் சூப்பர் ஹீரோ படத்தில் நடித்துப் பிரபலமானவர் நடிகர், ரிக்கன் தோமஸ். நடித்து நடித்தே இளைமையைப் போக்கியவர். முதுமையில் சும்மா இருக்கப் பிடிக்கவில்லை. ஒரு சிறுகதையை நாடகமாக எழுதி, இயக்கி ஒரு சிறு வேடத்தில் நடித்து வருகிறார். கதையின் முக்கியக் கதாபாத்திரங்கள் இரண்டு. ஒன்று... ரிக்கன்; இன்னொன்று ரிக்கனின் மனசாட்சி.

ரிக்கன் நடித்த 'பேர்ட் மன்' பட கதாபாத்திரம்தான் அவருடைய மனசாட்சி. நிஜத்தில் ரிக்கன் உளவியல் ரீதியான பிரச்சினையில் சிக்கித் தவிக்கிறார். அதாவது தன்னால் அந்தரத்தில் மிதக்க முடியும், விரலை அசைத்து பொருள்களைநகர்த்த முடியும் என நம்புகிறார். இதில் அவரின் மனசாட்சியான 'பேர்ட் மன்', "ஹேய் உன்னை மக்கள் இன்னும் மறக்கல. நீ மறுபடி 'பேர்ட் மன்' ஆக நடி என நச்சரிக்கிறது. இதோடுஇன்னொருபிரச்னையும் சேர்ந்துகொள்கிறது.

ரிக்கன் நடத்தும் நாடகத்தில் நடிக்க வருகிறார் மைக் என்கிற புகழ் பெற்ற நாடக நடிகர். ரிக்கனுக்குக் கிடைத்து வந்த கொஞ்ச நஞ்ச பாராட்டுக்களையும் தன் பக்கம் திருப்பிக்[illegible]கிறார்மைக். ஒருசினிமா நடிகராகத் தோற்று, இப்போது நாடக நடிகராகவும்தோற்றுப்போன ரிக்கன் என்ன செய்கிறார் என்பதை நெஞ்சை உருக்கும் விதத்தில் சொல்லியிருக்கிறார்கள்.

ரிக்கனாக நடித்திருக்கும் மைக்கேல் கீட்டன் யார் தெரியுமா? 'சூப்பர் ஹீரே'ப்டமான'பாட்மன்' படத்தின் கதாநாயகன். நிஜமும் நிழலும் பின்னிப் பிணைந்த கதையான 'பேர்ட் மன்' படத்தில் கீட்டனின் நடிப்பு... அசத்தல்; அட்டகாசம்.

படத்தில் ஒரு காட்சி. ரிக்கன் சில நிமிடங்களில் மேடையில் இருக்க வேண்டும். நாடக அரங்கத்தின் பின்பக்க வாயிலில் இருந்து கீட்டன் பதற்றமாக வெளியே வரும் போது எதிர்பாராதவிதமாக கதவு சாத்திக் கொள்கிறது. அதில் அவரது கோட் மாட்டிக் கொள்கிறது. எவ்வளவு முயன்றும் அதை எடுக்க முடியவில்லை. நாடகம் தொடங்க இன்னும் சில நிமிடங்களே உள்ளன. எனவே, கோட்டைக் கழட்டிப் போட்டு விட்டு உள்ளாடையுடன் ஓடுகிறார். அந்தப் பரபரப்பிலும் அவரிடம் ஒருவன் ஆட்டோகிராப் கேட்க, அவர் ஓடிக் கொண்டே ஆட்டோகிராப் போடுவது... கண்கலங்க வைக்கும் நகைச்சுவை. இந்த ஆண்டுக்கான சிறந்த படம் இதுதான்.



இது அமெரிக்கத் தயாரிப்பு, இங்கிலாந்து தயாரிப்பு, மூன்றாம் உலக நாடுகளின் தயாரிப்பு என்றெல்லாம் ஒஸ்கர் பேதம் பார்ப்பதில்லை.

uthayan 002.pdf 1 2/28/2015 12:28:42 PM

# இந்தியப் பேரொளி மறைந்த போது...!



■ ரம்யன்

இந்திய விடுதலை இயக்கத்தை சரியான பாதையில் மட்டுமன்றி அந்த மாபெரும் நாட்டின் பல்வேறு இனங்களையும் மொழி, கலாசாரங்களையும் ஒன்றுதிரட்டிக் கொண்டு செல்ல முடியாமல் ஆளுமையுள்ள பல தலைவர்களும் திண்டாடிக் கொண்டிருந்த போதுதான் மகாத்மாகாந்தி விடுதலை இயக்கத்தின் தலைமகனாய் வந்து சேர்ந்தார். அவர் வருகையையும் அரசியல் அரங்கில் அவர் பிரவேசித்ததன் விளைவாக ஏற்பட்ட தாக்கத்தையும் மகாத்மா காந்தியின் சீடர்களில் ஒருவராகக் கருதப்பட்டவரும், இந்தியாவின் முதல் பிரதமருமான பண்டிட் ஜவஹர்லால் நேரு பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

அதன்பிறகு காந்திவந்து சேர்ந்தார். அது ஒரு பலமிக்க புதிய காற்றின் சுழற்சிபோல் வந்து எங்களையெல்லாம் உடல்களை நிமிர்த்தி ஆழமாக சுவாசித்துக்கொள்ளும்படி செய்தது. இருளைக்கிழித்துக்கொண்டு வெளிப்படும் ஒரு ஒளிக்கீற்றுபோல் அது இருந்தது. எங்கள் கண்களை மறைத்துக் கொண்டிருந்த திரைகளை அது அகற்றிவிட்டது. சூறாவளியொன்று பல்வேறு பொருள்களை தலைகீழாக மாற்றிவிடுவதுபோன்று பெரும்பாலும் உழைக்கும் மக்கள் மனங்களை அது உலுப்பிவிட்டது.

அவர் எங்கோ மேலே இருந்து குதித்துவிடவில்லை. லட்சக்கணக்கான இந்தியர்களின் மத்தியிலிருந்து அவர்களின் மொழியைப் பேசிக்கொண்டு இடைவிடாது அவர்களின் வாழ்க்கை நிலைகளின்பால் கவனத்தை செலுத்திக்கொண்டும் வருகை தந்திருந்தார். கிராமவாசிகளதும் தொழிலாளர்களதும் முதுகில் இருந்து கீழே இறங்குங்கள் என்று அவர் எங்களிடம் கூறினார். இவ்வளவு காலமாக அவர்களை சுரண்டிக்கொண்டே வாழ்ந்திருக்கிறீர்கள். இந்த ஏழ்மையையும் துன்பத்தையும் உருவாக்குகின்ற நடைமுறையை ஒழித்துக்கட்டுங்கள் என்று கூறினார். அவர் எமக்கு கற்பித்ததின் மற்றும் இவைகளுடன் இணைந்து போகும் செயல்களுடன் மக்களின் நலன்களையே எப்பொழுதும் கவனத்தில் வைத்துக் கொள்வது என்பவையாம். ஒரு தனிமனிதனுக்கோ தேசத்துக்கோ எமது புராதன நூல்கள்வழங்கியுள்ளமாபெரும் நன்கொடையாவது பயமின்மைதான். இது உடல் அளவிலான துணிச்சலை மட்டும் குறிக்கவில்லை. மனதிலிருந்தும் பயம் ஒழிக்கப்பட வேண்டும். இவ்வாறு எல்லாவிதத்திலும் பரவிக்கிடக்கின்ற பயத்துக்கு எதிராகத் தான் காந்தியின் அமைதியும்தீர்க்கமானதுமானகுரல் உயர்த்தி ஒலிக்கப்பட்டது.

இவ்வாறுதான் மக்கள் மனங்களை மூடிக் கிடந்த பயம் என்ற மேல் ஆடை அவர்களின் தோள்களில் இருந்து அகற்றப்பட்டது. முழுமையாகவன்று ஆச்சரியத்துக்குரிய ஒரு குறிப்பிட்டளவு என்று கூறலாம்.

பொய்மையின் நெருங்கிய சகபாடிதான் பயப்பிராந்தி. ஆகவே பயம் அகன்று போகும்போது உண்மை வெளிப்படுகின்றது.

மகாத்மா காந்தி இறந்தபோது பண்டிட் ஜவஹர்லால் நேரு மனமுருகிய நிலையில் இந்திய வானொலியில் நிகழ்த்திய உரையின் ஒருபகுதி வருமாறு:–

**பேரொளி மறைந்தது**

எமது எல்லோரது வாழ்விலிருந்தும் அந்த பேரொளி மறைந்து விட்டது. எங்குமே இருள்சூழ்ந்து கிடக்கிறது. உங்களுக்கு என்னத்தைச் சொல்வது எப்படிச் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை.

எமது அன்புக்குரிய தலைவர் நாங்கள் பாபு என்று அழைத்தவர் தேசத்தின் தந்தை உயிருடன் இல்லை. நான் இப்படிக் கூறுவது சிலவேளை தவறாக இருக்கலாம். இருந்தாலும் இதுவரைகாலமும் நாம் அவரைக் கண்டு பழகியதுபோல் இனி காணக் கிடைக்காது. நாம் இனி அவரிடம் ஓடி ஆலோசனை கேட்க முடியாது. ஆறுதல் பெறமுடியாது. இது எனக்கு மட்டும் ஏற்பட்ட மாபெரும் தாக்குதல் அல்ல. இந்த நாட்டின் லட்சோப லட்சம் மக்களையும் தாக்கியுள்ள விடயம்.

ஒளியானது எம்மை விட்டுப் போய் விட்டது என்று கூறினேன். ஒருவேளை அது தவறாய் இருக்கலாம்.

ஏனென்றால் இந்த நாட்டில் ஒளிர்ந்து கொண்டிருந்த அந்த ஒளியானது சாதாரண ஒளியன்று. இந்த நாட்டை பிரகாசிக்க செய்துகொண்டிருந்த ஒளி யானது இன்னும் பல ஆண்டு காலத்துக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு ஒளிர்ந்து கொண்டே இருக்கும். அதன் பிறகும் அதனைக் காணக்கூடியதாய் இருக்கும். உலகம் அதைக்காணும் எண் ணிறைந்த இதயங்களுக்கு அது ஆறுதல் அளிக்கும். ஏனென்றால் அந்த ஒளி யானது உடனடியாக தெரிகின்ற ஒளியை விட அது ஏதோ மேன்மையானதாகக் காணப்பட்டது. வாழ்வின் உண்மையை அது பிரதிபலித்தது. ஆதியந்தமில்லாத மனிதர் நம்முடன் இருந்தார். ஆதியந்த மில்லாத உண்மையை எமக்கு அறி வுறுத்திக் கொண்டு இருந்தார். சரியான பாதையைக் காட்டிக் கொண்டும் தவறு செய்யலாம் தடுத்துக் கொண்டும் இந்த பழம் பெரும் நாட்டை விடுதலையை நோக்கி அழைத்துச் சென்றார்.

இப்பொழுது நாம் செய்யவேண்டியது என்னவென்றால் பலமுள்ள உறுதி கொண்ட மக்களாக செயற்படுவதுதான் எம்மை சூழ்ந்திருக்கும் ஆபத்துக்களை உறுதியுடன் எதிர்கொள்வது எமது தலைவர் எமக்கு அளித்துவிட்டுச் சென்றுள்ள கட்டளையை செயற்படுத்துவதில் உறுதிகொள்வது. அவருடைய ஆன்மா நம்மை பார்த்துக்கொண்டிருப்பதாக நான் நம்புகிறேன். அவரை அதிருப்திகொள்ள செய்யக்கூடிய எதையும் செய்யாமலிருப்போமாக. நாம் அவருக்காகச் செய்யக் கூடிய மிகப்பெரிய பிரார்த்தனை உண்மைக்கு எம்மை அர்ப் பணித்துக்கொள்ள உறுதிகொள்வது.

எமது மிகப்பெரிய தலைவர் எமக்காக வாழ்ந்து காட்டியதை அவர் தம் உயிரை தியாகம் செய்ததை நினைவில் வைத்து அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதுதான் அதுவே அவரை நினைவு கூருவதற்கு நாம் செய்யக்கூடிய பெரிய பிரார்த்தனையாக இருக்கும்.

> நாம் செய்யவேண்டியது என்னவென்றால் பலமுள்ள உறுதி கொண்ட மக்களாக செயற்படுவதுதான் எம்மை சூழ்ந்திருக்கும் ஆபத்துக்களை உறுதியுடன் எதிர்கொள்வது எமது தலைவர் எமக்கு அளித்துவிட்டுச் சென்றுள்ள கட்டளையை செயற்படுத்துவதில் உறுதிகொள்வது.

## ஆசைபோட ஒருவிடயம்



## பிரிக்கப்பட்டனர் ஒட்டிப்பிறந்த இரட்டை குழந்தைகள்

**ஒட்டிப்பிறந்த இரட்டைப் பெண் குழந்தைகள் அறுவைச் சிகிச்சை மூலம் வெற்றிகரமாக பிரிக்கப் பட்டுள்ளன.**

அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாணத்தில் கடந்த ஏப்ரல் மாதம் இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தனர். அறுவை சிகிச்சை மூலம் பிறந்த இந்த குழந்தைகளின் வயிறு, மார்பு, நுரையீரல்கள், கல்லீரல், குடல்கள்,. பெருங்குடல், அடிவயிற்று எழும்பு என ஆகிய உறுப்புகள் ஒன்றோடு ஒன்று ஒட்டியவாறு இருந்தன.

இதனைத் தொடர்ந்து அறுவை சிகிச்சை மூலம் குழந்தைகளின் உடல் உறுப்புகளைப் பிரிக்க மருத்துவர்கள் முடிவு செய்தனர். பத்து மாதங்கள் கடந்த நிலையில் அந்த குழந்தைகளுக்கு சமீபத்தில் டெக்சாஸ் குழந்தைகள் மருத்துவமனையில் 12 அறுவை சிகிச்சை மருத்துவர்கள், 6 அனிஸ்த்தீஸ்யா மருத்துவர்கள் மற்றும் 8 அறுவை சிகிச்சைக்குரிய செவிலியர்கள் உள்ளிட்ட மருத்துவ குழு சிகிச்சையில் ஈடுபட்டது. சுமார் 26 மணி நேரங்களாக நடைபெற்ற இந்த சிகிச்சையில் இரண்டு குழந்தைகளின் மார்பு மற்றும் வயிற்றை பிரித்து உள்ளுறுப்புகளுக்கு எந்தவித பாதிப்பும் இன்றி வெற்றிகரமாக நடந்து முடிந்தது.

இந்த அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக நடத்திய மருத்துவர் டாரில் கேஸ் இதுபோன்ற சிக்கலான உள்ளுறுப்புகளுடன் கூடிய அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக நடத்தியது மருத்துவ வரலாற்றில் இதுவே முதல் முறை. தற்போது குழந்தைகள் இருவரும் நலமாக இருக்கின்றனர். இன்னும் இரண்டு மாதங்கள் அவர்கள் மருத்துவமனையின் பாதுகாப்பில் இருக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.



ஒவ்வொரு வருடமும் இந்தப் பாடல், 'விஜய்' தொலைக் காட்சியின் 'சுப்பர் சிங்கர்' நிகழ்ச்சியில், ஏதோ ஒரு போட்டியாளரால் இறுதிப் போட்டியில் பாடப்படும் பாடலாகவும் மாறிக் கொண்டிருக்கின்றது. அவர்கள் என்ன நோக்கத்துக்காக இந்தப் பாடலைப் பாடுகின்றனர்? சர்ச்சை அங்கேதான் ஆரம்பிக்கிறது. தாம் வெற்றி பெற்று பரிசுகளை அள்ளிக் கொள்வதற்கும் – மகுடம் சூடிக் கொள்வதற்காகவும், இந்த ஈழத்து உணர்வை வெளிப்படுத்துகின்றனரா? அல்லது உண்மையிலேயே ஈழத்து உணர்வுடனா பாடுகின்றனர்?



# ஈழ உணர்வு வியாபாரம்

திராஜ்

விடைகொடு எங்கள் நாடே..., கடல் வாசல் தெளிக்கும் வீடே..., பனை மர காடே பறவைகள் கூடே..., மறுமுறை ஒரு முறை பார்ப்போமா.... உதட்டில் புன்னகை புதைத்தோம்..., உயிரை உடம்புக்குள் புதைத்தோம்..., வெறும் கூடுகள் மட்டும் ஊர்வலம் போகின்றோம்..."

வைரமுத்துவின் வைர வரிகள். ஈழத் தமிழர்களின் இடப்பெயர்வை உணர்வு பூர்வமாகச் சித்தரித்த பாடல்.

ஒவ்வொரு வருடமும் இந்தப் பாடல், 'விஜய்' தொலைக்காட்சியின் 'சுப்பர் சிங்கர்' நிகழ்ச்சியில், ஏதோ ஒரு போட்டியாளரால் இறுதிப் போட்டியில் பாடப்படும் பாடலாகவும் மாறிக் கொண்டிருக்கின்றது.

அவர்கள் என்ன நோக்கத்துக்காக இந்தப் பாடலைப் பாடுகின்றனர்? சர்ச்சை அங்கேதான் ஆரம்பிக்கிறது. தாம் வெற்றி பெற்று பரிசுகளை அள்ளிக் கொள்வதற்கும் – ம்குடம் சூடிக்கொள்வதற்காகவும், இந்த ஈழத்து உணர்வை வெளிப்படுத்துகின்றனரா? அல்லது உண்மையிலேயே ஈழத்து உணர்வுடனா பாடுகின்றனர்?

தமிழகம், ஈழத் தமிழர்களின் தொப்புள் கொடி உறவு, தாய் வழிச் சொந்தம், தந்தை வழி ஆள்கள் என்று பல வியாக்கியானங்கள் கொடுக்கப்பட்டாயிற்று. ஆண்டுகள் கடந்தாலும் இந்த வார்த்தைகள் இன்னமும் மாறாமல் சொல்லப்படுகின்றன. இது தமிழகத்தில் ஒரு வியாபாரப் பொருளா என்பதுதான் சர்ச்சை. ஈழ உணர்வு தமிழகத்தில் விற்கப்படுகிறதா?

மிகப் பெரும் லாபம் தரக்கூடிய வியாபாரம் நடக்கிறது அங்கே என்ற விமர்சனம் பலமாகவே எழுகிறது. தமிழகத் தமிழர்களிடத்தில், ஈழத் தமிழர்கள் பால் இருக்கும் பரிவு, கழிவிரக்கம், இன உணர்வு என்பவற்றை மூலதனமாக்கி அவற்றை தமிழகத்திலும் புலம்பெயர் தமிழர்களிடத்திலும் வியாபாரமாக்கி விடுகிறார்கள் பெரும் முதலாளிகள். ஒட்டுமொத்த தமிழர்களிடமும் அந்த வியாபாரம் சூடு பிடிக்கும் என்பது பெரும் பணமுதலைகளுக்குத் தெரியும். 'விஜய்' தொலைக்காட்சியின் 'சுப்பர் சிங்கர்' நிகழ்ச்சி, தமிழகத்தில் மாத்திரமல்ல இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் தமிழர்களும் விரும்பிப் பார்க்கின்ற ஒரு நிகழ்ச்சி. எங்கள் வீட்டுப் பிள்ளைகள் பாடும் உள்ளூர் தொலைக்காட்சி அலைவரிசைகளின் 'சுப்பர் சிங்கர்' நிகழ்வுகளை எட்டியும் பார்க்காதவர்கள்கூட, 'விஜய்' தொலைக் காட்சி நிகழ்ச்சியை ரசிப்பார்கள்.

விஜய் தொலைக்காட்சி நடத்திய சுப்பர் சிங்கர், பருவம் – 4 இன் இறுதிப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை நடந்து முடிந்தது. இந்த இறுதிப் போட்டிக்கு, யாழ்ப்பாணத்தை பூர் வீகமாகக் கொண்ட கனடா குடியுரிமை பெற்ற ஜெசிக்கா என்ற பெண்ணும் தகுதி பெற்றார். முதன்முறையாக இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்ற வெளிநாட்டவர் ஜெசிக்காவே. நமக்கேன் வீண் வம்பு என்று அரசியல் பேசாது ஒதுங்கியிருந்த, ஒரு சமூகத்திற்குள் கடந்த ஒரு வார காலமாகவே இதுதான் பேசு பொருள். வீட்டில் அரட்டையடிப்பவர்கள் தொடக்கம் அலுவலகத்தில் அரட்டையடிப்பவர்கள் வரையில் ஜெசிக்கா மந்திரமாகவே இருந்தது. சமூக வலைத்தளங்கள் சும்மா இருக்குமா? அங்கும் இதுதான் பரபரப்பு பேசுபொருள்.

"ஜெசிக்காவைத் தெரிந்த எத்தனை பேருக்கு இன்னமும் விபூசிகாவை ஞாபகம் இருக்கின்றது?'' என்ற கோஷமும் சமூக வலைத்தளத்தில் அடிபட்டுக் கொண்டிருக்கின்றது. நியாயமான கேள்விதான். இதே சமூக வலைத்தளம்தான் ஜெசிக்கா தமிழிச்சி என்பதால் புறக்கணிக்கப்பட்டார் என்றும் போர்க்கொடி தூக்கியது, அது முன்னர்.

சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியில், இறுதிச் சுற்றுக்கு ஜெசிக்கா முதலில் தெரிவாகவில்லை. 'வைல்காட்' எனப்படும் தகுதிகாண் சுற்றின் மூலமாகத்தான் இறுதிக்குவந்தார். அவரைத் தவிர இறுதிக்குத் தேர்வாகிய ஏனைய 5 பேரும் இந்தியர்கள். ஆனால் தமிழர்கள் இல்லை. ஒரேயொரு தமிழரான ஜெசிக்காவை திட்டமிட்டு புறக்ணித்து விட்டதாக முதலில் சமூக வலைத்தளங்களில் போராட்டம் தொடங்கியது.

இப்போது ஜெசிக்காவைத் தெரிந்த எத்தனை பேருக்கு விபூசிகாவை ஞாபகம் இருக்கிறது என்று ஒரு தரப்பு சமூக வலையாளிகள் போர்க்கொடி தூக்கியிருக்கிறார்கள்.

இறுதிப் போட்டியில் ஜெசிக்காவுடன் பாடிய ஏனைய 5 போட்டியாளர்களும், தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராதவர்கள். இதனால் தமிழராகிய ஜெசிக்காவை இறுதிப் போட்டியில் வெல்ல வைக்க வேண்டும், அதற்காக அவருக்கு வாக்களியுங்கள் என்று ஒரு தரப்பினர் கோரிக்கை முன்வைத்தனர். அதே சமயத்தில் இப்படி சில்லறைத்தனமான விடயங்களில் சக்தியை வீணடிக்காமல் வீபூசிகா விடுவிக்க அதனைப் பயன்படுத்துங்கள் என்கின்றனர் ஒரு தரப்பினர்.

விபூசிகா தற்போது சிறுவர் இல்லம் ஒன்றில் இருக்கிறார். அவரது தாயார் கைது செய்யப்பட்டு பூசா தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருப்பதால் விபூசிகாவைப் பராமரிப்பதற்கு யாரும் இல்லை. காணாமற்போன தனது பிள்ளைக்காகப் போராட்டம் நடத்தி வந்தவர் விபூசிகாவின் தாயார். கோபி என்கிற விடுதலைப் புலிப் போராளிக்கு புகலிடம் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறையில் தள்ளப்பட்டார். அதனால் விபூசிகா நிராதரவானார். இந்த விபூசிகாவைத்தான் எத்தனை பேருக்குத் தெரியும் என்று கேள்வி எழுப்புகிறார்கள். தனது தயாருடன் காணாமற் போனோர் போராட்டங்களில் கலந்து கொண்ட ஒளிப்படங்களும், விபூசிகா அழுது கொண்டிருக்கின்ற ஒளிப்படங்களுடன் கூடவே வெளியிடப்படுகின்றன. ஜெசிக்கா – விபூசிகா என்பதாக இந்தக் கருத்து மோதல் வலுத்து வருகிறது.

இந்த நிலையில் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு நடந்த இறுதிப் போட்டியில், ஜெசிக்கா ஈழத்து உணர்வுகளுடன் தொடர்புடைய இரண்டு பாடல்களை இணைத்துப் பாடினார். அந்தப் பாடல்களை ஈழத்துக்காக அர்ப்பணிப்பதாகவும் குறிப்பிட்டார். "தோல்வி நிலையென நினைத்தால.....", "பனை மரக் காடே..." இரண்டு பாடல்களையுமே இணைத்துப் பாடியிருந்தார். ஆனால் இதெல்லாம் ஜெசிக்காவுக்கு ஆதரவளிப்போரை விமர்சிப்பவர் களுக்குப் போதுமானதாக இல்லை.

பின்னரும் வெவ்வேறு விமர்சனங்கள் வரத்தான் செய்தன. கிடைத்த சந்தர்ப்பத்தை – களத்தைப் பயன்படுத்தி ஈழத் தமிழர்களின் உணர்வை ஜெசிக்கா வெளிப்படுத்தி விட்டார் என்கின்றது ஒரு தரப்பு. ஈழத்தை மீண்டும் வியாபாரமாக்கி – வாக்காக்கி விட்டார் என்றது மற்றொரு தரப்பு.

இறுதியில் ஜெசிக்கா போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றார். இரண்டாம் இடம் பெற்றுக் கொண்ட ஜெசிக்காவுக்கு பணமும், ஒரு கிலோ தங்கமும் பரிசாக வழங்கப்பட்டன. அவை அனைத்தையும் அவர் ஈழத்திலும் தமிழகத்திலும் உள்ள பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கு அர்ப்பணித்தார். இதன் பிறகாவது ஜெசிக்கா விடயம் அடங்கிப் போகுமா தெரியவில்லை. ஆனால் விபூசிகாவுக்காக எந்தக் குரலும் இதுவரையில் போராட்டமாக வெளிக்கிளம்பவில்லை.



# காதல்




தி.ஞானேஸ்வரன்

# பெண்ணியம் பேசலாம் வாங்க...




பெண்ணியப் பார்வை எப்படி விளங்குகிறது? பெண்ணியத்தின் வரையறை பல்வேறு விதமாக முன்னிறுத்தப்படுகிறது. தவிரவும், இது பெரும்பாலும் ஆண்- பெண் உறவு முறைக்குள்ளே எழும் சிக்கல்கள், தனி மனித உரிமை போன்றவற்றையே பெரிதும் குறிக்கின்றது என்பதால் பெண்ணியம் என்பதை மாதர் சங்கங்கள் அப்படியே அதிகம் கையாளுவதில்லை.

■ உ.வாசுகி.

குடும்பம் மட்டுமே பெண்ணின் முன்னுரிமைப் பணியாக இருக்க வெண்டும் என்றும், திடகாத்திரமான இந்து ஆண் வாரிசுகளை உருவாக்கித் தருவது பெண்ணின் தலையாய பணி என்றும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அரண்மனைக்கிளி என்ற படத்தில்'ஆண்டவன்ஆணைப் படைச்சான், அவனைப் பார்த்துக் கொள்வதற்குத் தாயைப் படைத்தான், தாய்க்குப் பிறகு அவனைப் பாதுகாக்க தாரத்தைப் படைத்தான், அதனால் தாயும், 'தாரமும் சமம் தான்' என்ற வசனம் விளம்பரங்களில் திரும்பத் திரும்பப் போடப் பட்டது.

மொத்தத்தில் பெண்ணாகப் பிறப்பதே கணவனையோ, பிள்ளைகளையோ பார்த்துக்கொள்ளத்தான் எனவும் அவளுக்கு வேறு வேலை வெட்டி எதுவும் இருக்கக்கூடாது. சமூகம் சார்ந்த பார்வை, பொது வாழ்வில் பங்கேற்பு இப்படி எதுவும் தேவையில்லை என்பதுதான் இதில் உள்ளார்ந்து கிடக்கும் கருத்தாகும். அதாவது அவள் ஒரு தனிப் பிறவி, அவளுக்கு விருப்பு, வெறுப்பு உண்டு, சுய அடையாளம் உண்டு என்பது அங்கீகரிக்கப்படவில்லை.

பெண்ணியப் பார்வை எப்படி விளங்குகிறது? பெண்ணியத்தின் வரையறை பல்வேறு விதமாக முன்நிறுத்தப்படுகிறது. தவிரவும், இது பெரும்பாலும் ஆண்– பெண் உறவு முறைக்குள்ளே எழும் சிக்கல்கள், தனி மனித உரிமை போன்றவற்றையே பெரிதும் குறிக்கின்றது. என்பதால் பெண்ணியம் என்பதை மாதர் சங்கங்கள் அப்படியே அதிகம் கையாளுவதில்லை.

பெண்ணியத்தின் கூறுகளாக ஜனநாயகம், சமத்துவம், பெண் விடுதலை என்ற மூன்று அடிப்படை அம்சங்களையே, முன்னிலைப் படுத்துகின்றனர். தவிர, பாலின ரீதியில் மட்டுமல்லாமல், வர்க்க ரீதியாகவும், இனரீதியாகவும் பெண் சுரண்டப்படுகிறாள். இதற்குப் பின்னே, முதலாளித்துவ, நிலப் பிரபுத்துவ சுரண்டல் அமைப்பு, உள்ளது. எனவே சுரண்டல்களிலிருந்து பெண் விடுதலை பெற, இந்த அமைப்புக்களையே முற்றிலும் மாற்ற வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். சமூக மாற்றம் வேண்டும் என்கின்ற மற்ற பல அமைப்புக்களோடு இணைந்து போராட வியூகம்வகுக்கப்படுகின்றது.எனவே,ஆண் எதிர்ப்பு இதன் கொள்கையாக இல்லை. ஆணாதிக்கக் கருத்தினையே எதிர்க்கிறது. பாலின, வர்க்க, மத, மேலாதிக்கங்களைத் தகர்க்க முன்வரும் அவை எவருடனும்ஒத்துழைக்கத்தயாராகஉள்ளன.

## பெண்களின் பிரச்சினைகள் எவை?

பெண்ணுக்கு வர்க்க ரீதியான பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்றால் என்ன? விவசாயத்தில், கைத்தறியில், கட்டுமானத்தில், அலுவலகங்களில் என்று பல்வேறு துறைகளில் பெண்கள் தொழிலாளிகளாகப் பணிபுரியும் போது அந்தத் துறையில் ஏற்படும் நெருக்கடி, மோசமான வேலை நிலைமை , சம்பளம் போன்ற பிரச்சினைகளை சந்திக்க நேரிடுகிறது. எனவே இதுவும் பெண்களின் பிரச்சினை தான். குடும்பத்தில் நடக்கும் பிரச்சினையும், வீதியில் ஏற்படும் பாலியல் தொந்தரவுகளும் மட்டுமே பெண்ணின் பிரச்சினையாகப் பார்க்க முடியாது. பெண் எங்கிருந்தாலும் அவளுக்கு ஏற்படும் பிரச்சினை; பெண்களின் பிரச்சினைதான். பெண்ணியப் பார்வை இந்த அம்சத்தையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

அதைப் போலவே சாதி ரீதியான பிரச்சினையும், பெண்களுக்கு உரித்தானதுதான். ஒவ்வொரு சாதியினர் மீதும் கடைப் பிடிக்கப்படும் வேற்றுமைகள், அவர்கள் நான்காம் தரமாக நடத்தப்படுவதும் அந்தச் சமூகத்திலுள்ள பெண்களையும் தாக்குகிறது. எனவே ஜாதி ஒடுக்கு முறை பெண்களின் பிரச்சினை தான்.

இன்னும் சொல்லப் போனால் ஜனநாயக உரிமை பறிக்கப்படுவது, அமெரிக்காவின் மேலாதிக்கம், இந்தியா– பாகிஸ்தான் உறவு போன்றவை கூட பெண்கள் கவலைப்பட வேண்டிய அம்சங்கள் தான். ஏனெனில் பெண், பெண்ணாக மட்டுமல்ல, குடிமகளாகவும், இருக்கிறாள். தேசம் குறித்த அத்தனை பிரச்சினைகள் மீதும் அவளுடைய அக்கறை தேவைப் படுகிறது. ஆண்கள் மட்டும் கவலைப்பட்டால் போதும் என்றிருக்க முடியாது.

மக்கள் தொகைகளில் சரி பாதி பேர், அரசி யல் – சமூகம் பற்றி அக்கறை இல்லாமல் இருந்தால், அல்லது அக்கறைபட அனுமதியில்லா மல் இருந்தால் கண்டிப்பாக நாடு உருப்படாது.

(தொடரும்...)

# பெண் என்பவள் யார்?

பெண் என்பவள் தாய்மை என்ற படைப்பில் இருந்து உருவாக்கப்பட்ட பின் தனக்கு ஏற்ற நிலைகள் வரும் போது, அம்மா, அக்கா, தங்கை, மனைவி, மகள் என குடும்பத்தில் ஒவ்வொரு கோணங்களில் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்கிறாள்.

அவளுக்கு வழங்கப்படும் பொறுப்புக்கள் அனைத்தும் 'குடும்பம்' என்ற அத்திபாரத்தைப் பலமாக்கவும், கொடுக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டியவளாகவும் இருப்பாள். அவள் செய்கின்ற காரியங்களை கண்காணிப்பதற்கு ஆண் துணை ஒன்று எப்போதும் கூடவே இருக்கும். அது அவளை தட்டிக் கேட்பதாகவும், தட்டிக் கொடுப்பதாகவும் இருக்கலாம்.

இங்கு குடும்பம் என்ற நிலைக்கு வரும்போது தாய்மை இல்லையேல் பெண் அழகற்றவளாகக் கருதப்படுகிறாள். காரணம் அவளுக்குக் கிடைக்கும் அந்த தாய்மை என்ற அந்தஸ்தினால் மட்டுமே பெண்ணானவள் மதிக்கப்படுகிறாள் என்பதை வாய் வழியாக நாம் கேட்டிருக்கலாம். அப்போ தாய்மை இல்லாவிட்டால் பெண்ணிடம் வேறு எதுவும் இல்லையா? . அவள் யார்? சராசரியாக ஒரு மனிசியாகப் படைக்கப்பட்ட அவளுக்கு வேறு மதிப்புக்கள் கிடையாதா? வீட்டுப் பொறுப்புக்களுக்கும், பராமரிப்புக்கும், பிள்ளைகளைப் பெற்றெடுப்பதற்கும் தான் பெண் படைக்கப்பட்டாளா, அவளுக்கு என்று வேறு உரிமைகள் கிடையாதா? மனிதனாகப் படைக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் இருக்கும் உரிமைகள் பெண்ணுக்கும் உள்ளது என்பதை நாம் அறிவோம். ஆண்கள் வேறு பெண்கள் வேறென்பது அது கடவுளால் படைக்கப்பட்ட பாலின வேறுபாடு. தாய்மை என்பது பெண்ணுக்கு கடவுள் கொடுத்த வரப்பிரசாதம். அதற்காக அந்தத் தாய்மை இல்லாவிட்டால் பெண் அழ்கில்லை என்பது ஏற்கத்தக்கதல்ல.



பெண் என்பவள் யார்? என்பதை நாம் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். அவளுக்குள் இருக்கும் உணர்வுகள், உரிமைகள் இவற்றையும் விளங்கிக் கொள்ள வேண்டும். காலம் காலமாக பெண் அடக்கப்பட்டவள், ஒடுக்கப்பட்டவள் என்று உரிமைகளைப் பற்றி பேசிக் கொண்டிருப்பதால் எதுவும் ஆகப் போவதில்லை.

ஆண்களைப் போல பெண்களுக்கும் சகல உரிமைகளும் இருக்கின்றன. உரிமைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதை விட அவற்றை நிறைவேற்றிக் கொடுத்தல், அல்லது வழிவிடுதல் எனும் மனப்பக்குவத்தை எம்மில் ஏற்படுத்த வேண்டும். பெண்ணுரிமைகள் மறுக்கப்படுகின்ற போது, பெண் என்பவள் யார் என்று உணராமலேயே அவர்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுகின்றோம். இந்தப் போக்கில் மாற்றம் தேவை என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பு.



தொடர்கதை

# மேட்டு நிலத்து உளற்று

தேவி பரமலிங்கம்

பெற்றவர்களுக்குப் பிள்ளைகள் சம்பாதித்து அனுப்புவதுதான் மனநிறைவைக் கொடுத்து விடுமென்பதில்லை. பிள்ளைகள் சம்பாதிக்கும் பாதைகளைக் காட்டி உழைத்து வருவதால் சிலரின் இதயங்கள் தவறான வழிகளைக் கைக்கொள்ளவும் முற்பட்டுவிடுகின்றன. மாறாக வேறு ஒரு சில பெற்றோர்கள் பிள்ளைகளின் உழைப்பை மட்டும் நேசித்து சுரண்டுவதும் அல்லாமல் சம்பாதிக்க முடியாத சமயங்களில் நாடிவரும் போது எட்ட நிறுத்தி பாசத்தையும் உறவையும் விலை பேசவும் செய்கின்றனர். அவருட்டு உணர்வுடன் நோக்குபவர்களுக்கு பிள்ளைகளை நல்வழிப்படுத்தும் பெற்றோர்களிலும் சந்தேகப் பார்வை விழுவது இயல்பானதுதான்.

சின்னத் தங்கம் பெற்ற அனுபவம் முற்றிலும் மாறுபட்டது. கணேசன் முதல் மாதச் சம்பளத்தில் தன்னுடைய செலவுகள் போக மீதியைத் தாய்க்கு அனுப்பி இருந்தான்.

“சின்னத்தங்கம்... இந்தா உனக்கொரு தபால் வந்திருக்கு... இதிலை கையெழுத்தைப் போடு...” சந்தையால் வீடு திரும்பிக் கொண்டிருக்கையில், பதிவுத் தபால்காரர் சின்னத் தங்கத்தைக் கண்டு கையெழுத்தை வாங்கிக் கொண்டு தபாலுறையைக் கொடுத்து விட்டுப் போனார்.

வீடு வந்து உறையைக் கிழித்துப் பார்த்ததும்தான், மகன் பணம் அனுப்பி இருந்தது தெரிந்தது. கணேசன் மணியோடராகவோ, போஸ்டரோடராகவோ

> “முதல் முதலாக மகன் சம்பாதித்து அனுப்பி வைத்த பணத்தைக் காண அவளுக்குப் பெருமையாக இருந்தது. அவளது தாய்மை உள்ளத்தில் தோன்றிய பூரிப்பு இதயத்தை நிறைத்து விட்டிருந்தது.”



அனுப்பி வைத்தால் தாய்க்கு பணமாக மாற்றிக் கொள்வதில் இருக்கும் சிரமத்தை உணர்ந்து, பணமாக பெற்றுக் கொள்ள இன்சூரன்ஸ் என் பலப்பில் பணத்தை வைத்து அனுப்பி இருந்தான்.

“சூ... சூ....சூ.... என்ன வெயில் ஒரேயடியாய்ப் புழுங்கிக் கொட்டுது...” அலுத்துக் கொண்டவள் முந்தானையைக் கழட்டி அங்குமிங்குமாக ஆட்டி விழும் காற்றில் புழுகத்தைப் போக்க முயன்றவளின் நினைவில் மகனின் நிழலாடியது. ஐயாயிரம் ரூபாவை அனுப்பி வைத்திருந்தான் கணேசன். முதல் முதலாக மகன் சம்பாதித்து அனுப்பி வைத்த பணத்தைக் காண அவளுக்குப் பெருமையாக இருந்தது. அவளது தாய்மை உள்ளத்தில் தோன்றிய பூரிப்பு இதயத்தை நிறைத்துவிட்டிருந்தது.

“இந்தக் காசிலை ரெண்டாயிரம் ரூபாவை சட்டம்பியாரிட்டை வாங்கின கடனுக்குக் குடுக்கவேணும்... வாற மாசமும் வாற காசில மிச்சத்தைக் குடுத்திட்டால் பிறகு மிச்சம் பிடிச்சு அவனுக்குக் கலியாணம் காட்சியெண்டு செலவுகளும் இருக்கு....” சின்னத் தங்கத்தின் மனம் திட்டம் போட்டது. பிள்ளைகளைச் சீரும் சிறப்புமான வாழ விட்டு பார்த்துப் பூரிப்பது தானே பெற்றவர்களின் கனவாக இருக்கும்.

உழைத்து அனுப்பி இருக்கும் மகனின் முதல் சம்பளத்தைக் கண்ட தாயினுள்ளம் மகனது எதிர்கால வாழ்வை எண்ணிக் கனவு காண்பதில் வியப்பொன்றும் இல்லையல்லவா?

“இது ஒண்டேயும் இருந்து பாக்காமல் போயிட்டுது அந்தச் சிவன்...” கணவனின் ஞாபகம் அவளது உணர்வுகளை ஊடறத்தும் விட்டது. முந்தானையைக் கழற்றி கண்களில் அரும்பிய நீரைத் துடைத்துவிட்டாள். “ஒருக்கா இதுகளை எடுத்து வைச்சிட்டு...சட்டம்பியார் வீட்டை போட்டுவருவம்...” கையில் வைத்திருந்த தபாலுறையை மடியில் கட்டிக் கொண்டு, சந்தையில் வாங்கி வந்த பொருள்களைக் குசினியுள் வைத்து கதவைச் சாத்தியவள் வெளிக்கிட்டாள்.

“எப்புடிச் சின்னத்தங்கம் மகன் கடிதம் கிடிதம் போடுறவனோ...” வீதியால் சந்தையில் இருந்து வந்த நல்லம்மா கேட்டு இவளை நெருங்கி வந்ததும் நின்றாள்.

“ஓமக்கா... அவன் நெடுகக் கடிதம் போடுறவன் தானை... இண்டைக்குக் காசனுப்பி இருக்கிறான்...” சின்னத்தங்கமும் நின்று கதைத்தாள்.

“அப்ப பேந்தென்ன நீயினி ராசாத்தியடி...” நல்லம்மா நடப்பதற்கு ஆயத்தமானாள் இவளும் சொல்லியவாறே நடந்தாள். “வெய்யில் வெக்கை நிக்கேலாது பிறகு கதைப்பமக்கா...” வேலுப்பிள்ளை மாஸ்டர் வீட்டைப் போய்ச் சேர்ந்தவள், ஆள் அரவம் இல்லாததால் நின்றாள். அவளது சிந்தனையில் இப்பொழுதுதான் பொறி தட்டியது. “பின்னேரமா வந்திருக்கலாம். நான்தான் பிழை விட்டிட்டன்... இந்தநேரத்தில எங்கையும் அலுவலாப் போயிருக்கும் மனிசரைச்சந்திக்கேலுமே...பிறகுபின்னேரமாவருவம்...” வீடு திரும்பியவள் தனக்கான சாப்பாட்டைச் சமைக்கத் தொடங்கினாள்.

“புள்ளே... சின்னவள் இருக்கிறியே..”

உரப்பிக் கொண்டே வந்தது பக்கத்து வீட்டு மகேசுப்பிள்ளை மனிசிதான். வேலையில் இருந்த சின்னத்தங்கம் விட்டுவிட்டு வெளியில் எட்டிப் பார்த்த பொழுது, படலையைத் தாண்டி முற்றத்தில் வந்து கொண்டிருந்தாள் கிழவி.

“ஆர் மகேசக்காவோ... வாணை வா...”

அழைத்து விட்டு குசினியுள் நுழைந்துவிட்டாள். மகேசுப்பிள்ளை வந்து, திண்ணையில் ஏறிக் குந்திக் கொண்டாள். “இந்தாணை வெத்திலேல போடு”

நாளாந்தம் அதுக்காகவே மகேசுப்பிள்ளை தேடிவரும் ரகசியத்தை அறிந்த சின்னத் தங்கம் வெற்றிலைச் சரையை நீட்டினாள்.

“மகனும் இண்டைக்குக் கடிதமும் எழுதிக் காசுமனுப்பியிருக்கிறார்...” சின்னத்தங்கம் இதனையும் சொல்லி நிறுத்தினாள்.

“அதுவும் அப்புடியே பெட்டை... ஏதோ... அவன் நல்லா இருக்க வேணுமடி...”

வெற்றிலையை வாங்கி வாயில் போட்டுக் கொண்ட மகேசுப்பிள்ளை, சின்னத்தங்கம் சமையல் செய்ய கூடப் பிராக்கா இருந்துவிட்டு எழுந்து நடந்தாள். மதிய சாப்பாடு முடிய ஓய்வெடுத்துக் கொண்டு சின்னத்தங்கம் வேலுப்பிள்ளை மாஸ்டர் வீட்டுக்கு நடைபோட்டாள்.

“என்ன... சின்னத்தங்கம் வாவா... இங்காலவா”

ஈசிசேரில் சாய்ந்திருந்த மாஸ்டர் கண்டதும் வரவேற்றார். விறாந்தையில் ஏறி எட்டத்திலோ நின்றாள் சின்னத்தங்கம்.

“எப்புடிப் பிறகு மகன் கடிதம் போட்டவனோ...”

“ஓஞ்சட்டம்பியார். இண்டைக்குக் காசும் அனுப்பி இருக்கிறான். அதில ரெண்டாயிரத் தைத்தந்திட்டுப்போவமெண்டுதான் வந்தனான்...”

“ஆ...ஹா... அப்புடியா... மெத்த நல்லது... என்ர காசைத்தான்... ஆறுதலாவுந் தரலாம். ஏன் அவசரப்படுறியள் ஆ....”

வேலுப்பிள்ளை மாஸ்டர் சொல்லியவாறே சின்னத்தங்கம் இரு கைகளாலும் நீட்டிக் கொடுத்தகாசை வாங்கினார். “சரிதான் சட்டம்பியார்... நானும் காசை வைச்சிருந்துதான் என்ன செய்யப் போறன்...” “கணேசன் எனக்கும் போய்க் கடிதம் போட்டவன்... நானுமவனுக்குப் பதில் போட்டனான். பிறகு ஒண்டேம் காணேல்ல... அதுதான் உன்னட்டைக் கேட்டன்...” சின்னத்தங்கம் மேலும் சிறுவேளை நின்று கதைத்த பின்னால் வெளிக்கிட்டாள்.

(தொடரும்)

## திருப்பு முனை




அறியாமல்
கால் பதித்த
முட்கம்பி வேலி
அவசியமற்ற
பொழுதுகள் இவை
எல்லாம் எனக்கு
கற்றுத்தந்த வாழ்வின்
திருப்புமுனை


இலட்சியமற்ற என்
வாழ்வு இடம்மாறிப்
போகும் முன் இறைவா
என் இதயத் துடிப்பு
நின்று விடாதா?

எழ நினைக்கும் என்
வாழ்வில் முடிவடைந்த
உன் நினைவுகள் ஏன்
முற்றுப்புள்ளி
வைக்கின்றன

நிறுத்திவிட நினைக்கும்
கவிதைகூட் இன்னும்
நீண்டு செல்லவே
விரும்புகின்றது
கற்பனைகள்
காரணமா? அல்லது
என் மனதில்
கவலைகள்
விதைக்கப்பட்டதால்
ஏற்பட்ட கண்ணீர் தான்
காரணமா??

சுபா, நல்லூர்.




சைக்கிள் கப்ல உலகம் என்றது இதுதான்....!!



# வலைப்பக்கம்

* சில பேர் கல்யாணத்துக்கு பண்ற செலவிலை பாதியைக் கூட பல பேரு ஜென்மம் முழுக்க சம்பாதிக்கிறது இல்லை.
* பணக்கார மாடிகளின் பாத்ரூம் பரப்பளவை விட பல கோடி குடிசைகளின் பரப்பளவு சின்னது........
* சில பெண்களின் செருப்பு எண்ணிக்கையளவு கூட பல பெண்களிடம் சேலைகள் இல்லை.....
* இராணுவ பட்ஜெட்டின் அளவை விட இங்கு நடக்கும் ஊழல்களின் மதிப்பு அதிகம்.....
* சிலர் பயன்படுத்தும் ஸ்மார்ட் போன்களின் விலையை விட குறைவு பல கோடி மக்களின் ஒரு வருட சம்பளம்
* ஒரு ஸ்கூட்டரில் நாலு பேரு நெருக்கியடிச்சுபோக ஒரு காரில் ஒரே ஒருத்தர் ஹாயா போவார்....
* சிலர் வயிறு குறைய வேண்டுமென கஷ்டப்படுகிறார்கள் பலர் வயிறு நிறைய வேண்டுமென கஷ்டப்படுகிறார்கள்.....
* சட்ட புத்தகத்தில் இருக்கும் நீதிப் பிரிவுகளை விட இங்கு இருக்கும் சாதிப் பிரிவுகள் அதிகம்.....
* சிலர் கிரெடிட் கார்டுகளை நம்பியும்,பலர் ரேஷன் கார்டுகளை நம்பியும் இருக்கிறார்கள்.....
* நட்சத்திர உணவு விடுதியின் சிக்கன் விலையில் ஒரு குடும்பம் ஒரு மாதம் சாப்பிடலாம்......
* பகலில் கூட ஏசி ஓடும் வீடுகளும் இரவில் கூட விளக்கு எரியா வீடுகளும் இங்குள்ளன.....
* கனவு போன்ற வாழ்க்கை வாழ்பவர்களும் கனவில் மட்டுமே வாழ்பவர்களும் வாழும் தேசம்.



தமிழ் நிலா

ஒரு ஆள், கடவுளை நோக்கி கடுமையாக தவம் இருந்தான்.
கடவுள் அவன் தவத்தை மெச்சி , என்ன வரம் வேண்டும், பக்தா ? என்றார்.
மற்றவர்களின் மனதை படிக்கிற திறன் அருள வேண்டும் சுவாமிஎன்றான்.
கடவுளும், தந்தேன் என்றார்.
சில நாள்களிலேயே அவன் அழுது புலம்பி கடவுளை அழைத்து, தயவு செய்து இந்த வரத்தை வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள் என்றான்.
ஏன் ? என்றார் கடவுள். அவனவன் என்னை பொய் சொல்கிறவன் என்றும் பொறாமை பிடித்தவன் என்றும் அடுத்த வன் குடி கெடுப்பவன் என்றும் நினைக் கிறார்கள். என்னால் தாங்க முடிய வில்லை என்றான்.
அப்படியா, இந்த ஆலமரத்தின் அடியில் கண்களை மூடிப் படுத்துக்கொள். என்ன நடக்கிறது என்று கவனி என்றார் கடவுள்.
ஒரு குடிகாரன் வந்தான் , யாரடா இவன் நினைவே இல்லாமல் படுத்திருக்கான். குடிகாரப் பயல் என்று சொல்லி விட்டு போனான். ஒரு திருடன் வந்தான். ராத் திரி முழுவதும் கொள்ளையடிச்சுட்டு வந்து எவனோ இங்க படுத்து கிடக்கான் என்று சொல்லிவிட்டு போனான்.
ஒரு நோயாளி வந்தான் .பாவம் வயித்துவலி போல. சுருண்டு கிடக்கான் என்று சொல்லிவிட்டு போனான்.
பக்தனிடம் கடவுள் வந்து சொன்னார்: பார்த்தாயா உன்னைப் பற்றி அவர வர் அவரவர் கோணங்களில் புரிந்து கொள்கிறார்கள். உன் னைப் பற்றிய மற்றவர் விமர்சனத்தை பொருட் படுத்தாதே என்றார். பக் தன் தெளிவடைந்தான்.



(தேர்வு அறையில்)
**ஆசிரியர்:** டேய் என்னடா... கை விரல்ல ஃபார்முலா எழுதியிருக்கே?
**மாணவன்:** எங்க கணக்கு வாத்தியார்தான் ஃபார்முலா எல்லாம் விரல் நுனியில்இருக்கணும்னு சொன்னார்.



## எனது அம்மா



நான்காரணத்துடன்
அழுதுகொண்டு இருந்தேன்
காரணமே தெரியாமல்
எனது கண்ணீரை நிறுத்த
எனது தாயும் அழுதாள்
அப்போதுதான் தெரிந்து
கொண்டேன் கண்ணீரின்
வலி என்னவென்று...



கருவறை காதலன்



காட்டுப்பயல்
டைனோசர் காலத்தில் மனிதன் இருந்திருக்க மாட்டான் இருந்திருந்தால் ஏதேனும் சாமிக்கு வாகனமாக்கியிருப்பான்.

Sushima Shekar
சாலை ஓரத்தில் கடை விரித்து மீன் விற்பவள் விற்று முடிப்பதற்குள் வெயிலில் காய்ந்து கருவாடாகிறாள்.

Kanmani
உரிய நேரத்தில் கேட்கப்படாத ம[illegible]ப்பு உனக்கு பெரிதாய் ஒன்றையும் கொண்டு[illegible]போவதில்லை. ஒரு இடைவெளியையும் சிறு பி[illegible]வையும் தவிர...!

Dr.எட்டு
வெட்கம் என்பது ஆண்களுக்கு உரியது என்று பெண்ணியவாதிகள் சொல்லும் நாள் தொலைவில் இல்லை...!!

நையாண்டி
எந்த எதிர்பார்ப்பும் இன்றி உதவி செய்பவர்களை நாமும் கண்டுகொள்வதே இல்லை...!!

சௌம்யா
சட்டென விலகல் உயிருக்கு மட்டுமே எளிதாயிருக்கிறது.



# உழைப்பே உயர்வை தரும்



ஓர் ஊரில் மிகப் பெரிய பணக்காரார் ஒருவர் வசித்து வந்தார். அந்த நாட்டிலேயே, தான் ஒருவர் மட்டுமே சுகபோகத்தை ஏராளமாக அனுபவிப்பதாக அந்தப் பணக்காரருக்கு நினைப்பு. ஒரு நாள் அந்தப் பணக்காரரைத் தேடி ஒரு துறவி வந்தார்.

அந்தத் துறவியை அந்தப் பணக்காரர் வணங்கி உபசரித்தார். பின்னர் அந்தத் துறவியைப் பார்த்து, 'உலகம் முழுவதும் சுற்றிய அனுபவம் உங்களுக்கு இருக்கிறது. என்னைவிட சுகத்தை அனுபவிக்கிறவர்களை தாங்கள் பார்த்து இருக்கிறீர்களா?' என்று கேட்டார் அந்தப் பணக்காரர்.

இலேசாகப் புன்னகைத்த துறவி, 'உன்னைவிட சுகமாக வாழ்கிறவரை வேறு எங்கும் தேட வேண்டாம். அவர் உங்கள் நாட்டிலேயே இருக்கிறார்' என்று அந்தப் பணக்காரரைப் பார்த்துக் கூறினார்.

'எனது நாட்டிலா? எங்கே?' என்று கேட்டார் அந்தப் பணக்காரர்.

'வாருங்கள் நேரிலேயே அவரை நான் காட்டுகிறேன்', என்றார் துறவி. பின்னர் அந்தப் பணக்காரரை வயல்வெளிக்கு அழைத்துச் சென்றார்.

அப்போது கடுமையான கோடை வெயில் சுட்டெரித்துக் கொண்டிருந்தது. அப்போது, அந்த வெய்யில் பற்றிய கவலையே இல்லாமல், வியர்வைக்கு அஞ்சாது, அறுபது வயது மதிக்கத்தக்க பெரியவர் ஓர் இளைஞனைப் போல் உழவுப் பணியை மேற்கொண்டு இருந்தார்.

அந்தப் பெரியவரைச் சுட்டிக்காட்டி, 'உன்னை விட சுகம் அனுபவிக்கும் சுகபோகி', இவர்தான் என்று பணக்காரரிடத்தில் கூறினார் அந்தத் துறவி.

'இந்தக் கிழவன் என்னைவிட சுகபோகியா? கேலி வேண்டாம்' என்றார், அந்தப் பணக்காரர் துறவியைப் பார்த்து. துறவி அந்தப் பணக்காரரைப் பார்த்து, மீண்டும் புன்னகைத்தார்.

'செல்வந்தரே, இந்தத் தள்ளாத வயதிலும் அவர் உழைப்பைப் பாருங்கள். கடுமையான உழைப்பு. வெயிலுக்கு அஞ்சாமல் உழைத்துக் கொண்டு இருக்கிறார். இந்த உழைப்பிற்கு பின்னே அவருக்கு நன்றாக பசி எடுக்கும். கூழோ, கஞ்சியோ, எதுவானாலும், அவருக்கு அமிர்தம் தான். மீண்டும் பகல் முழுவதும் உழைப்பார். அந்த உழைப்பின் களைப்பில் இரவில் நிம்மதியாக உறங்குவார்.

சுகபோகம் என்பது, வெயிலையும், பனியையும், புயலையும், மழையையும் ஆனந்தமாய் எதிர்கொள்ளக் கூடியது. அதை எதிர்கொள்ள, அவர் எப்போதும் தயார். உழைப்புக்கு பின் வரும் உறக்கம் தான் சொர்க்கம். உழைக்காமல் வரும் எதுவும் சுகபோகமாகாது.

இப்போது கூறுங்கள் நீங்கள் சுகபோகியா? அல்லது அந்த உழைப்பாளி சுகபோகியா?' என்று பணக்காரரைப் பார்த்து கேட்டார் அந்தப் பெரியவர். உடனே அந்தப் பணக்காரர், அந்தத் துறவியைப் பார்த்து வணங்கினார். 'என்னை மன்னித்து விடுங்கள், நான் உழைக்கத் தயாராகிவிட்டேன்' என்று கூறினார்.

**கே.சதுர்சன், மானிப்பாய்.**

# தெரிந்து கொள்வோம்

- மனிதனின் சிறு குடலின் அளவு யாது?
  ஏறத்தாள 4.5m
- விண்வெளி வீரர் ஒருவர் எத்தனை மணிநே[illegible] விமானம் ஓட்டிப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும்?
  குறைந்த பட்சம் ஆயிரத்து ஐநூறு மணித்தியாலம்
- முதல் முதலில் நாற்பத்தெட்டு தடவை புவியை சுற்றி வந்த பெண் வீராங்கனை யார்?
  வாலண்டினா தெரஷ்கோவா
- முதலாவது செல்லிடத் தொலைபேசியின் பெயர் யாது?
  டைனா – டாக்
- புளுட்டோ கிரகம் சூரியனை ஒரு முறை சுற்றிவர எத்தனை ஆண்டுகள் செல்கிறது?
  248 ஆண்டுகள்
- உலகுக்கு நாடாளுமன்ற ஜனநாயகத்தை அறிமுகப்படுத்திய நாடு எது?
  பிரித்தானியா
- பிரித்தானியாவுக்கும் இலங்கைக்கும் வரலாற்று ரீதியாக உள்ள தொடர்பு?
  பிரித்தானியர்கள் இலங்கையை ஆண்டமை
- உலகப் பிரசித்தி பெற்ற பிக்பேன் மணிக்கூடு எந்த நாட்டுக் குரியது?
  பிரித்தானியா

**சி.சுவேத்தா,**
**வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

# அம்மா

அம்மா என்ற
வார்த்தைக்கு
அர்த்தம் தேடி
அகராதி
புரட்டினேன்
அகப்படவில்லை
தாயின் மடி தானது
சொர்க்கம்
தலைசாய்த்து
உறங்கும்
உண்மைதனை
உணர்த்திடும்
உனதுள்ளம்
ஆயிரம்
சொந்தங்கள்
அவனியில்
இருப்பினும்
உன் அன்புக்கு
ஈடேதுமுண்டோ!!!
அம்மா



**செ.லசிந்தா, அம்பன்**
**குடத்தனை**

# விடுகதைகள்

- அக்காள் விதைத்த முத்து அள்ள முடியாத முத்து அது என்ன?
  கோலம்
- அட்டைக்கரிப் பெண்ணுக்கு உச்சந்தலை மஞ்சள் அது என்ன?
  பனங்காய்
- ஆகாயத்தில் பூக்கும் ஒரே சங்கிலி அது என்ன?
  மழை
- ஆனை விரும்பும் சேனை விரும்பும் அடித்தால் வலிக்கும் கடித்தால் இனிக்கும் அது என்ன?
  கரும்பு
- இந்த ஊரில் அடிபட்டவன் அடுத்த ஊரில் போய்ச் சேர்கிறான் அது என்ன?
  தந்தி
- இரவல்லாம் பூக்காடு; பகலெல்லாம் வெறுங்காடு அது என்ன?
  மூட்டைப்பூச்சி
- ஒற்றைக்கால் மனிதனுக்கு ஒன்பது கை அது என்ன?
  மரம்
- சின்னக் கிணற்றில் கிண்ணத் தண்ணீர் அது என்ன?
  தேங்காய்

**சி.பிரியங்கா,**
**புனித ஜோண் பொஸ்கோ வித்தி.**



**ம.மரியறெஜினா,**
**சுண்டுக்குளி மகளிர் வித்தி.**



**நா.மதுஜெனன்,**
**யா/ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி**



**சி.பிருத்வி,**
**வளர்மதி முன்பள்ளி, கொக்குவில்**

# பொறுமையின் எல்லைகள்...

வ.துவாரகா

மனிதர்கள் பொறுமையுடையவர்களாக இருக்க வேண்டும் என்று நம் சமூகம் வலியுறுத்தி வருகிறது. பொறுமையென்றால் அமைதியாக இருப்பது மற்றவர்களை எதிர்த்துக் கதைக்காமலிருப்பது என்பதே எமது மேலோட்டமான பார்வை. ஆனால் அமைதியாக வார்த்தைகளில்லரமல் நம்முடைய ஆழ்மனதின் உணர்வுகளை வெளிப்படுத்தமுடியுமா? முடியாது. மனிதர்கள் எந்த உணர்வுகளையும் வெளிப்படுத்தாமல் எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது. எந்த உணர்வுகளும் அற்ற நிலையில் இருத்தல் மனிதப் பண்பு அல்ல. அமைதியான பொறுமையான மனிதர்கள் என்று நாம் ஒருவரை எவ்வாறு கணிப்பிடுகிறோம். சிலர் வெளிப்புறப் பார்வைக்கு அமைதியரனவர்களாக தோற்றமளிப்பார்கள். ஆனால் அவர்களது உள்மனம் தவறுகள் நிறைந்ததாகவும் காணப்படும்.

சிலர் வெளிப்புறப்பார்வைக்கு கலகலப்பானவர்களாக தோற்றமளித்துக் கொண்டு தமது உள் மனத்தில் அமைதியை பேணுகிறார்கள். சிலர் தேவையான போது உட்புறமும் வெளிப்புறமும் அமைதியை பேணக்கூடியவர்கள். வெளிப்புறஅமைதியென்பது யாருடனும் பேசாமல் நமக்குள்ளே ஒரு வட்டத்தைப் போட்டுக் கொண்டு வாழ்வது ஆகும். அந்த சின்ன வட்டத்துக்குள் நம்மை நாமே அடக்கிக் கொண்டு வாழ்தலைக் குறிக்கிறது. இதனையே வெளித் தோற்றத்தில் பார்த்து விட்டு பொறுமையானவர்கள் என்று நாம் மதிப்பிடுகிறோம். ஆனால் உட்புற அமைதி யில் மனமும், மூளையும் ஆழ்ந்த நித்திரையில் உள்ள நிலையில் நமக்கு எந்த உணர்வுகளும் ஏற்படாமலிருக்க முடிகிறது. உட்புற அமைதி என்பது நல்ல உணர்வைக் கொடுப்பதால் நமக்குள்ளே தெம்பு, அன்பு, மகிழ்ச்சி, அமைதி, ஒற்றுமை, பிறருக்கு உதவுதல் போன்ற உணர்வுகளைக் கொடுக்கிறது. ஒரு நாள் நாம் மௌனத்தைக் கடைப்பிடித்தால் நமக்குள்ளே பல மாற்றங்கள் ஏற்படுவதை உணரலாம். இந்த மாற்றம் நம்மை வெளிப்புற உலகிலிருந்து விலக்கி உள் மனதை அறிய வைக்கிறது. எப்போது நாம் உள்மனதை அறிந்து கொள்கிறோமோ அப் போதே நாம் வெளியுலகின் மாயையிலிருந்து விடுபடுகிறோம். அவ்வாறான அமைதியிலிருந்து தோன்றும் பொறுமை சிறந்ததாகும். எமது உள்மனம் அமைதியாக இருக்கும் போது நமக்குள்ளே நல்ல எண்ணங்கள் உதிக்கின்றன. நமக்கென்று எதையும் யோசிக்காமல் பிறருடைய தேவைகள் மீது கவனம் செலுத்துகிறோம்.

மற்றவர்களை நேசிக்க ஆரம்பிக்கிறோம். பிறருடைய துன்பங்களை நீக்குவதற்கு இறைவனை பக்தியோடு பிரார்த்தனை செய்கிறோம். இந்த உள்மன அமைதியால் ஏற்படும் பொறுமை மனிதனுக்கு பரந்த மனப்பான்மையை கொடுக்கிறது, விரிந்து கிடக்கும் உலகைப் பற்றி அறிய வைக்கிறது. எது நல்லது, எது கெட்டது என்று பாகுபடுத்தி மனிதனுக்கு தெரிய வைக்கிறது.

மனிதனுடைய ஆழ்மனம் அவனை மாற்றுகிறது. மனிதன் மாறும் போது அவனைச் சுற்றி இருக்கும் அனைத்தையும் மாற்றத் துடிக்கிறான். இந்த அமைதி என்பது புதியவைகளை கொண்டு வருவதற்கு அவனுக்கு புதிய உணர்வைக் கொடுக்கிறது. அவனுக்குள்ளே ஆன்மிகம் வளர்கிறது, அமைதி பிறக்கிறது. எந்தவித சஞ்சலமுமில்லாமல் மாற்றங்களைக் கொண்டு வந்து அதிலிருந்து உருவாகும் புதிய அனுபவங்களை மனிதன் உணர்கிறான். எமது சமூகத்தில் நல்லவர்களாகவும் பெருந்தன்மைப் பண்பாளர்களாகவும் இருப்பவர்கள், பலமுனைகளிலிருந்து வருகின்ற பலவகையான இடர்களைத் தாங்க வேண்டியிருக்கும். அவ்வாறான பலமுனைத் தாக்குதல்கள் நிகழும் போது அவர்கள் தங்கள் பொறுமையால் அமைதியாக செயற்படுவார்கள். அவர்களை பக்குவமடைந்தோர் என்றும் பிறருடன் பிணக்குகள் கொள்வதில்லை என்றும் நாம் கணிப்பிடுகிறோம். அவர்கள் பிறரின் கடுஞ்சொற்களைக் கூட இன்முகத்துடன் பெருந்தன்மையுடன் ஏற்றுக் கொள்கிறார்கள் . ஆனால் அவ்வாறான பொறுமையைக் கடைப்பிடிப்பவர்கள் கோபம் கொள்பவர்களைவிட மற்றவர்களைப் பற்றிய அவதானிப்பில் சிறந்தவர்களாகவே காணப்படுவார்கள். அவர்கள் பொறுமையாக செயற்படும் வேளையில் மற்றவர்களைப் பற்றி நிறையவே அறிந்து கொள்வதுடன் தன்னை சுற்றியுள்ள சூழலைப் பற்றியும் புரிந்து கொள்கிறார்கள் என்பதை மற்றவர்கள் புரிந்து கொள்வதில்லை.

பொறுமைக்கும் பல வடிவங்கள் உண்டு. ஆகவே பொறுமையின் எல்லைகளை புரிந்து கொண்டு அதற்கேற்றவாறு வாழப்பழகிக் கொள்ள வேண்டும்.

> சிலர் வெளிப்புறப்பார்வைக்கு கலகலப்பானவர்களாக தோற்றமளித்துக் கொண்டு தமது உள் மனத்தில் அமைதியை பேணு கிறார்கள். சிலர் தேவையான போது உட்புறமும் வெளிப்புறமும் அமைதியைப் பேணக் கூடியவர்கள். வெளிப்புற அமைதி யென்பது யாருடனும் பேசாமல் நமக்குள்ளே ஒரு வட்டத்தைப் போட்டுக் கொண்டு வாழ்வது ஆகும்.








## பனிப்பாறை ஆகும் நயகரா..!

குளிர்காலத்தில் நயாகரா நீர்வீழ்ச்சி பனிப்பாறைகளாக மாறுவது வழமை. இந்தக் காட்சிகள் உல்லாசப் பயணிகளைக் கவர்கின்றன.

நயாகரா ஆறு உறைபனியினால் மூடப்பட்டும் நீர் வீழ்ச்சி முற்றாக உறைந்து விடவில்லை. ஆனால் நீர் வீழ்ச்சியின் விளிம்பு அருகில் உள்ள பிரமாண்டமான பனிக்கட்டமைப்பு சுற்றுலா பயணிகளை வெகுவாகக் கவருகின்றது. நயாகரா பகுதி வெப்பநிலைதான் இதற்கு காரணம் எனக் கூறப்படுகின்றது.

## பொறாமைப்பட வைக்கும் பேஸ்புக்...!



முகம் தெரியாதவர்களையும் நண்பர்களாக்கும் சமூகவலைத்தளமான முகப் புத்தகம் (பேஸ் புக்) ஒருவர் மீது மற்றொருவர் பொறாமைப்படுவதற்கு காரணமாக அமைகின்றதாகக் கூறப்படுகின்றது.

முன்னர் ஒவ்வொரு பயனரும் ஏதாவது ஒரு தகவலை போஸ்ட் செய்வதில் ஆர்வம் காட்டிய போதிலும் தற்போது அது குறைவடைந்து தாம் போஸ்ட் போடுவதை நிறுத்தி மற்றவர்களுடைய பேஸ்புக் புரொபைலை பார்வையிடுவதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இப்போது மற்றவர்களுடைய போஸ்ட்கள், அவற்றுக்கான அதிகரித்த லைக் என்பவற்றினை பார்த்து ஒருவர் மீது ஒருவர் பொறாமை கொள்கின்றனர் என ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்விற்காக தாமாக முன்வந்த 80 பேர் பயன்படுத்தப்பட்டுள்ளனர்.



# உதட்டைச் சுற்றி இருக்கும் கருமையைப் போக்க....

பெண்களின் அழகை அதிகரித்துக் காட்டுவதில் உதடும் முக்கிய பங்கை வகிக்கிறது. ஆனால் அத்தகைய உதட்டின் அழகைக் கெடுக்கும் வண்ணம் அதனைச் சுற்றியுள்ள பகுதி கருமையாக இருக்கும். இந்தப் பிரச்சினையால் பல பெண்கள் பெரிதும் அவஸ்தைப்படுகின்றனர்.

இதற்கு அவ்விடத்தைச் சுற்றி மெலனின் என்னும் நிறமி அதிகம் இருப்பது தான் காரணம். ஆனால் இதற்கு போதிய பராமரிப்புக்களை கொடுத்தால், உ்தட்டைச் சுற்றியுள்ள கருமையை எளிதில் போக்கலாம்.

இங்கு உதட்டைச் சுற்றியுள்ள கருமையைப் போக்க சில வழிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

எலுமிச்சை சாறு மற்றும் தேனை ஒன்றாகக் கலந்து, உதட்டைச் சுற்றி 10–15 நிமிடம் ஊற வைத்து, வெதுவெதுப்பான நீரில் கழுவி, நன்கு உலர வைத்து, மாய்ஸ் சுரைசர் தடவ வேண்டும்.

இந்தமுறையை ஒரு வாரம் தொடர்ந்து செய்து வந்தால், விரைவில் மாற்றத்தைக் காணலாம்



### உருளைக்கிழங்கு

தினமும் உருளைக்கிழங்கை சாறு எடுத்தோ அல்லது அதன் துண்டுகளைக் கொண்டோ, உதட்டைச் சுற்றி மசாஜ் செய்ய வேண்டும். இப்படி செய்து வந்தால், மெலனின் அளவு குறைந்து கருமை நீங்கும்.



### தக்காளி ஜூஸ்

தக்காளி மிகவும் சிறப்பான ப்ளீச்சிங் பொருள். எனவே அந்தத் தக்காளியை வெட்டி, அதனைக் கொண்டு உதட்டைச் சுற்றி சிறிது நேரம் மசாஜ் செய்து, உலர வைத்து, பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும்.




### மஞ்சள்

சருமத்தில் உள்ள கருமையைப் போக்கும் சக்தி கொண்டது. ஆகவே தினமும் முகத்துக்கு மஞ்சள் தேய்த்துக் குளித்தால், கருமை நீங்குவதோடு, முகச்சருமமும் மென்மையாக இருக்கும்.



### முட்டை

உதட்டைச் சுற்றியுள்ள கருமையைப் போக்க முட்டையின் வெள்ளைக் கருவைத் தடவி உலர வைத்துக் கழுவி வந்தாலும் பலன் கிடைக்கும்.



### பால்

பாலும் கருமையைப் போக்குவதில் சிறந்தது. அதற்கு அன்றாடம் 2-3 முறை பாலைக் கொண்டு முகத்தை மசாஜ் செய்து, கழுவ வேண்டும். இப்படி ஒரு வாரம் தொடர்ந்து செய்து வந்தால், நல்ல மாற்றத்தைக் காணலாம்.



# பால் பணியாரம்

பால் பணியாரம் குழந்தைகள் விரும்பி சாப்பிடும் ஒரு அருமையான சிற்றுண்டி. உங்களுக்குப் பால் பணியாரம் செய்யத் தெரியாதா? அப்படியெனில் அதன் இலகுவான செய்முறை கொடுக்கப்பட்டுள்ளது.

### தேவையான பொருள்கள்

பச்சரிசி - 1/2 குவளை
உளுத்தம் பருப்பு - 1/2 குவளை
தேங்காய் பால் - ஒரு குவளை
காய்ச்சிய பால் - 1/4 குவளை
ஏலக்காய் பொடி - 1/4 தேக்கரண்டி
உப்பு - ஒரு சிட்டிகை
சர்க்கரை - 3 மேசைக் கரண்டி
எண்ணெய் - தேவையான அளவு

### செய்முறை

முதலில் அரிசி மற்றும் உழுத்தம் பருப்பை நீரில் போட்டு 2-3 மணிநேரம் ஊற வைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் அதனை நன்கு கழுவி, மிக்ஸியில் போட்டு, நன்கு அரைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் அதில் உப்பு சேர்த்து கலந்து தனியாக வைத்துக் கொள்ளவும். மாவானது கெட்டியாகவும், மென்மையாகவும் இருக்க வேண்டும்.

அடுத்து ஒரு சட்டியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், மாவை சிறிது சிறிதாக கையில் எடுத்து, எண்ணெயில் போட்டு பொன்னிறமாக பொரித்து எடுத்து, ரிசு பேப்பரில் வைத்துக் கொள்ள வேண்டும்.

பின் ஒரு கோப்பையில் தேங்காய் பால், காய்ச்சிய பால், ஏலக்காய் பொடி மற்றும் சர்க்கரை சேர்த்து நன்கு கலந்து, அதில் பொரித்து வைத்துள்ளதை சேர்த்து 5-10 நிமிடம் ஊற வைத்து பின் பரிமாறினால், சுவையான பணியாரம் தயார்.



# நெற்றியில் சொற சொறப்பை போக்கும் எளிய சிகிச்சை

சிலருக்கு நெற்றியில் பொரிப்பொரியாக வரும். அதற்குக் காரணம் தலை வாரும் போது நெற்றியில் சீப்பு படுதல், தலையைத் துவட்டும் போது ஏற்படும் அழுத்தம், பொடுகு, முகத்தில் அதிக முடி இருப்பது... இந்தக் காரணங்களால் நெற்றியில் முள் போன்று பொரிப் பொரியாகத் தோன்றும்.

இதற்கு நிரந்தரமான தீர்வு உண்டு. ரோஜா இதழ்களை சந்தன கட்டையில் வைத்து உரசி, அதே அளவு சந்தனம் சேர்த்து இரண்டையும் கலந்து பொரி இருக்கும் இடங்களில் இதைப் போட்டு, பத்து நிமிடம் கழித்துக் கழுவுங்கள். ஒரு நாள் விட்டு ஒரு நாள் இதைச் செய்துவந்தால், பொரிகள் மறையத் தொடங்கும். அத்துடன் பின்வரும் சிகிச்சையையும் தொடர்ந்து செய்யுங்கள்.

கசகசா – 2 தேக்கரண்டியுடன், 10 கருந்துளசி இலைகளைச் சேர்த்து மையாக அரைத்துக் கொள்ளுங்கள். கொதிநீரில் வெட்டிவேரைப் போட்டு வையுங்கள். மெல்லிய ஆர்கண்டி துணியை ஜில் தண்ணீரில் நனைத்து, பிழிந்து, நெற்றியில் வைத்து, அதன்மேல் இந்த விழுதை பத்து போல் போடுங்கள். 15 நிமிடம் கழித்து வெட்டிவேர் தண்ணீரால் கழுவுங்கள்.

இப்படி, வாரம் ஒரு முறை செய்யுங்கள். இதில் சேர்க்கப்பட்டுள்ள கசகசா, பொரிகளை அடியோடு போக்குவதுடன், முகத்தையும் வழுவழுப்பாக்கும்



# ரோஜாவின் 5 மருத்துவ குணங்கள்

அனைவரும் விரும்பும் அழகான ரோஜாவில் ஏராளமான மருத்துவ குணங்கள் உள்ளன. ரோஜா பூ லேசான துவர்ப்புச் சுவையுள்ளது. வயிற்றிலுள்ள வாயுக்களை அகற்றி குளிர்ச்சியைத் தரக்கூடியது. இதயத்துக்கு வலுவூட்டும். இதன் இதழ்கள் குளிர்ச்சியை உண்டாக்கும். பெண்களுக்கு கர்பப்பையினுள் ஏற்படும் பிரச்சினைகளை நிறுத்தும். மலமிளக்கியாகச் செயற்படும்.

ரோஜா இதழ்களை ஆய்ந்து எடுத்து ஒருகையளவு இதழை ஒரு பாத்திரத்தில் போட்டு ஒரு குவளை தண்ணீர் விட்டுக் கொதிக்க வைத்து இறக்கி வடிகட்டி, அதில் பாதி கசாயத்தை எடுத்துச் சர்க்கரை சேர்த்துக் காலையிலும், மறுபாதியை மாலையிலும் குடித்து வந்தால் மலச்சிக்கல் விலகும்.

ரோஜா மொட்டுகளில் ஒரு கைப்பிடியளவு ஆய்ந்து வந்து, அம்மியில் வைத்தோ அல்லது மிக்ஸியில் போட்டோ மை போல அரைத்து, ஒரு டம்ளர் அளவு கெட்டியான தயிரில் போட்டுக் கலக்கிக் காலை வேளையில் மட்டும் குடித்து வர வேண்டும்.

பித்தம் காரணமாகக் கிறுகிறுப்பு, குமட்டல், வாந்தி நெஞ்செரிவு மற்றும் பித்தக் கோளாறால் பாதிக்கப்பட்டவர்கள் இரண்டு கைப்பிடியளவு ரோஜா இதழ்களை ஒரு பாத்திரத்தில் போட்டு, இரண்டு குவளை தண்ணீர் விட்டு நன்றாகக் கொதிக்க வைத்து தண்ணீரை வடிகட்டி, காலையில் ஒரு டம்ளரும், மாலையில் ஒரு டம்ளரும், குடிக்கவேண்டும் ருசிக்காக தேவையான அளவு சர்க்கரை சேர்த்துக் கொள்ளலாம்.





# சண்டமாருதம்

## ஆறின பழங்கஞ்சி

குற்றப் பின்னணி கொண்ட கொடூர வில்லன், குடும்பப் பின்னணி கொண்ட சாகச நாயகன். இவர்கள் இருவருக்கும் இடையே போராட்டம். இ[illegible]யிடையே வில்லன் கை ஓங்கினாலும் இறுதியில் வெல்வது நாயகனே! சரத்குமார் கதை எழுதி, 'க்ரைம்' கதை எழுத்தாளர் ராஜேஷ் குமார் திரைக்கதை எழுதி, ஏ.வெங்கடேஷ் இயக்கியிருக்கும் இந்தப் படம் பழங்கஞ்சிதான்.

கல்வித் தந்தை என்ற போர்வையில் நிழல் உலகில் சர்வ வல்லமை படைத்தவராக கும்பகோணத்தில் சாம்ராஜ்ஜியம் நடத்திக்கொண்டிருக்கிறார் வில்லன் சர்வேஸ்வரன் (சரத் குமார்). தன்னை எதிர்ப்பவர்களை அதிநவீன திரவ வெடி பொருள் மூலம் உருத் தெரியாமல் எரித்துச் சாம்பலாக்குகிறார் (க்ரைம் கதை மன்னனின் ஐடியா?). அந்தத் தி[illegible] வெடிபொருளைக் கொண்டு நாடு முழுக்க 101 இடங்களில் குண்டு வெடிப்புகளை நடத்தத் திட்டமிடுகிறார். சர்வேஸ்வரனின் இந்தத் திட்டத்தை முறியடிக்கக் கிளம்புகிறார் இரகசிய பொலீஸாக இருக்கும் நாயகன் சூர்யா (சரத்குமார்).

வில்லன், நாயகன் ஆகிய இரு தரப்புக்கும் இடையில் ஏகப்பட்ட உயிரிழப்புகளைக் கடந்து இறுதியில் வில்லன் எப்படி வீழ்த்தப்பட்டார் என்பதுதான் சண்டமாருதம்.

ஹரி பாணியில் படத்தைக் கொடுக்க வேண்டும் என்று நினைத்திருக்கிறார்கள். இதற்காக ஐந்து நிமிடத்துக்கு ஒரு திருப்பத்தை உருவாக்கியிருக்கிறார்கள். படமும் வேகமாகத்தான் நகருகிறது. ஆனால் எந்த திருப்பத்திலும் புதுமையும் இல்லை, சுவாரஸ்யமும் இல்லை.

காட்சிகள், திருப்பங்கள் எல் லாமே ஏற்கனவே பலப்பல படங்களில் கையாளப்பட்ட சரக்குகள். குறிப்பாக, திரவ வெடிகுண்டால் மனிதர்கள் கொல்லப்படும் காட்சிகள் தமிழில் மொழியாக்கம் செய் யப்பட்ட பல ஹொலிவுட் படங்கள் மூலம் தமிழ் ரசிகர்களுக்குப் பழக்கப்பட்டவை.

வில்லன் சர்வேஸ்வரன் வீட்டுக்குத் தண்ணீர் போத்தல் போடுபவராகச் செல்கிறார் இரகசிய பொலீஸ் சரத்குமார். தண்ணீர் விநியோகிக்கும் சூர்யாவும் சகாக்களும் முறுக்கேறிய உடலுடன் வாட்டசாட்டமாக இருப்பது வில்லனுக்கு துளிகூடச் சந்தேகத்தை எழுப்பவில்லை. எதிராளி பதுங்கியிருக்கும் இடத்தை ஜி.பி.ஆர்.எஸ். உதவியுடன் வில்லனும் நாயகனும் அறிந்துகொள்கிறார்களாம். பல சினிமாக்களில் பார்த்துப் பார்த்து போரடித்துவிட்டது. நாயகனின் குடும்பத்தைப் பிடித்துவைத்துக்கொண்டு மிரட்டும் கிளை மாக்ஸ் அரை நூற்றாண்டுக் காலப் பழசு.

'க்ரைம்' கதை மன்னன் ராஜேஷ் குமார் புண்ணியத்தில் அறிவியல் பூர்வமான கொலை உத்தி திரைக் கதையில் பயன்படுத்தப்படுகிறது. அதைத் தவிர வேறு எதிலும் எழுத்தாளரின் கைவண்ணம் தெரியவில்லை.

நாயகன் - வில்லன் ஆகிய இரண்டு கதாபாத்திரங்களையும் சரத்குமார் ஏற்று நடித்திருக்கிறார். நாயகனைக் காட்டிலும் வில்லன் வேடத்தில் வித்தியாசம் காட்ட வேண்டும் என்பதற்காக, கத்தியைத் தூக்குவதைக் குறைத்துக் கொண்டு குரலால் கத்திக் கத்தி ரசிகர்களை பயமுறுத்துகிறார். என்றாலும் வில்லன் சரத் குமாரை ஓரளவு ரசிக்க முடிகிறது.

மீரா நந்தன், ஓவியா என இரண்டு கதாநாயகிகள். மீரா நந்தன் வெறும் கறிவேப்பிலை. இளம் சரத்தின் ஜோடியாக வரும் ஓவியா, கரம் மசாலா சேர்த்த கறிவேப்பிலை. வெங்கடேஷ் படங்களில் நாயகிக்கு என்ன வேலை உண்டோ, அதைச் செவ்வனே செய்திருக்கிறார்.

கதாநாயகியின் தந்தை தம்பி ராமய்யாவை நகைச்சுவை என்ற பெயரில் நாயகன் துன்புறுத்தும் விதம் ரசிக்கத்தக்கதாக இல்லை.

செய்தியே சொல்லாமல் முழுக்க முழுக்க பொழுது போக்குப் படம் தரவேண்டும் என்று முயற்சிப்பது தவறல்ல. நல்ல சக்தி தீய சக்தி போராட்டம் என்னும் ஆதி காலத்துக் கதையை எடுப்பதிலும் பிரச்சினை இல்லை. ஆனால் காட்சிகள் சற்றேனும் புதுமையாகவோ, புதிதாகவோ இருக்கவேண்டும். அந்த எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வதில் சண்டமாருதம் வேகம் இல்லை.



> “நாயகன் - வில்லன் ஆகிய இரண்டு கதாபாத்திரங்களையும் சரத்குமார் ஏற்று நடித்திருக்கிறார். நாயகனைக் காட்டிலும் வில்லன் வேடத்தில் வித்தியாசம் காட்ட வேண்டும் என்பதற்காக, கத்தியைத் தூக்குவதைக் குறைத்துக் கொண்டு குரலால் கத்திக் கத்தி ரசிகர்களை பயமுறுத்துகிறார். என்றாலும் வில்லன் சரத்குமாரை ஓரளவு ரசிக்க முடிகிறது.

## கருவறைக் கோயில்கள் தோறும்...

சாலையில் நடக்கின்றேன்
கண்ணெதிரே சுவரொட்டி!
கொட்டை எழுத்துக்களில் ?
“பெண்ணியம் பேணுவோம்”!

பரந்து விரிகிறது துயரம்
மனத்திரையில்?
பெண்ணியம் இன்று
கண்ணியமற்றோரால்
அந்நியமாவதை எண்ணி

புதினப் பெண்களின்
உணர்வுகளின் ஜனனம் இன்று
மலிந்துபோன
மருந்து மாத்திரைகளால்
கருவறைக் கோயில்கள் தோறும்
கல்லறைகள்!

தாயாய் தாரமாய்
நண்பியாய் காதலியாய் அணங்காய்
தாராள மனம் படைத்த
பெண்மையின் தா(தூ)ய்மையை
களங்கப்படுத்தாதீர்
புதினப் பெண்களே
மகிமைப்படுத்துங்கள் மகிமைப்படுத்துங்கள்!!



தி. மோகன்ராஜ்.

# மைத்திரியை ஆள வைத்து ஐ.நாவை இழந்தோம்



■ நப்பின்னை

போர்க்குற்றங்கள்தொடர்பான ஐ.நாவின் விசாரணை அறிக்கையை வெளியிடுவதில் ஆறுமாத கால தாமதம் ஏற்பட்டுள்ளது. மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி நீடித்திருந்தால் அந்த அறிக்கை மார்ச் மாதம் வெளியிடப்படுவதில் மாற்றம் ஏற்பட்டிருக்காது. ஆட்சியில் இருப்பவர்களை வைத்தே இலங்கைத் தீவில் போர்க் குற்றம் நடைபெற்றதா? இல்லையா? என்ற அளவுகோல் பயன்படுத்தப்படுகின்றது போன்ற நிலை தெரிகின்றது. புதிய அரசு தனது முதல் வேலைத் திட்டமாக இந்த அறிக்கையை தடுப்பதையே கொண்டிருந்தது.

தற்பொழுது அதில் பாதி வெற் றியை அது அடைந்துவிட்டது என்றே தெரிகின்றது. காலதாமதம் குற்றம் புரிந்தவர்கள் தப்பித்துக்கொள்ள அனு மதிப்பதாக அமையக் கூடாது என்று சர்வதேச மனித உரிமைகள் நிறுவனம் ஐயம் தெரிவித்துள்ளது.

இந்தச் செய்தி வருவதற்குச் சில நாள்களுக்கு முன்னர்தான் வட மாகாண சபையில் இனப்படுகொலை பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சிவாஜிலிங்கத்தால் கொண்டு வரப்பட்டுக் காலதாமதப்படுத்தப்பட்ட இந்தத் தீர்மானத்தை வடமாகாண முதல்வரே முன்மொழிந்து வலுவான சான்றுகளை முன்வைத்தமை சிறப்புக்குரியதே. மாகாண சபையில் இனப்படுகொலைத் தீர்மானத்தை நிறைவேற்றியதுடன்கடமைமுடிந்து விட்டது என்று இருந்துவிட முடியாது. இதனைத்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை சர்வதேசத்துக்கு எடுத்துச் செல்லவேண்டும். அப்படிச் செய்யுமா த.தே.கூட்டமைப்பு என்ற வினா எழுகின்றது.

முதலமைச்சர், 1956 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டுவரை தமிழ் மக்கள் மேல் திட்டமிட்டு ஏவப் பட்ட அத்தனை தாக்குதல்களையும், அட்டூழியங்களையும் இனப்படு கொலைகளே என்று ஆணித்தரமாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் மனித உரிமைகள் ஆணையம் 2009 இல் நடந்த போரின் இறுதிக் கட்டத்தில் போர்க்குற்றம் இடம்பெற்றதா என்றே விசாரணை நடத்தியது. இனப்படுகொலை நடந்ததை அது ஏற்றுக் கொள்ளவில்லை. அதுபோக தற்பொழுது விசாரணை அறிக்கையை தாமதப்படுத்திவிட்டமையும் ஐ.நாவின் மேல் தமிழர்களை அவநம்பிக்கை கொள்ள வைத்து விட்டது.

ஐக்கிய நாடுகள் சபையை அமெரிக்க ஐக்கிய நாடுகள் சபை என்று கேலி பேசுவதும் உண்டு. சோவியத் ஒன்றியம் வல்லரசாக இருந்த பொழுது அமெரிக்காவால் செய்ய முடியாத பல தீர்மானங்களை அமெரிக்கா தற்பொழுது உலகப் பொலிஸ்காரன்தானே என்ற நினைப்பில் ஐ.நாவில் நிறைவேற்றி வருகின்றது. இலங்கையில் தனக்குச் சார்பான ஆட்சி ஏற்பட்ட காரணத்தினாலும் அந்த ஆட்சியை மேலும் தனக்குச் சார்பான இறுக்கமான ஆட்சியாக நிலைப்படுத்தவும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினரிடம் ஐ.நா. அறிக்கையைத் தாமதப்படுத்துவதற்கான சம்மதத்தை நேரடியாகவே கேட்டுள்ளது. அமெரிக்க இராஜாங்க உதவிச் செயலாளர் நிசா பிஸ்வால் இவ்வாறு நேரடியாகக் கேட்டதை உறுதிப்படுத்திய முதலமைச்சர் தாங்கள் அதனை மறுத்துவிட்டதாகவும் தனது இனப் படுகொலை பற்றிய உரையில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான சிந்தனையுள்ள அமெரிக்காவும் இதே கொள்கையுடைய இந்தியாவும் இனப்படுகொலை பற்றி மேலதிகமாக எடுத்துச் செல்வதற்கு இடம்தரா என்பதே யதார்த்தமாகும். அப்படியெனில் இந்தத் தீர்மானம் தமிழ் மக்களின் மனங் களைக் குளிர்விக்கத் தமிழ் தேசியக் கூட்ட மைப்புக் கையாண்ட தந்திரமா?

முதலமைச்சர் தனது உரையில் மாமன், மருமகன் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். இராணுவ அதிகாரியான ருவான் விஜேவர்த்தனா ரணிலின் மருமகன் என்றும், ரணில் ஜே.ஆரின் மருமகன் என்றும் கூறி இரா ணுவ முகாம்கள் அகற்றப்படமாட்டாது என்பதைப் புரிந்து கொண்டதையும் குறிப்பிட்டுள்ளார். அது மட்டுமல்லாது தற்பொழுதுதான் விழித்துக்கொண்டதாகவும் கூறியுள்ளார். ரணில் விடுதலைப் புலிகளுடன் ஒப்பந்தம் செய்த பின்னர், இந்தியாவின் இராணுவ அதிகாரியான சதீஸ் நம்பியாரை அழைத்து வந்து ஒப்பந்தத்துக்கு முரணாகப் பாதுகாப்பு வலயங்களை ஏற்படுத்தியமையையும், ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்குஇடைஞ்சலாக மேலதிகமாகப் புலனைச் செலவிட்டதையும் மறந்து விடமுடியாத நிலையில் இப்பொழுதுதான், தான் விழிப் படைந்திருப்பதாகவும் கூறுகின்றார் முதலமைச்சர்.

அந்த நேரத்தில் ரணிலைப்பற்றித் தலைவர் பிரபாகரனிடம் கேட்டபொழுது ரணில் கொடாக்கண்டன் விடாக்கண்டன் என்று அவர் கூறியதாக நண்பர் ஒருவர் கூறியிருந்ததையும் இங்கு நினைவு கொள்ளத்தான் வேண்டும். போரின் முடிவுடன் அதுவும் முடிந்துவிட்டது.

இத்தகைய சிந்தனையுடைய, ம்கா சங்கத்தினரின் எண்ணங்களுக்கு மாறாக நடக்காத, ரணிலுடைய அரசுடன் இணக்க அரசியல் நடத்த முடியுமா? இதற்கு முன்னர் நடத்தியது போன்று இல்லாமல், சரி சம உரிமையுடைய இரு மக்கள் கூட்டங்கள் என்ற அடிப்படையில் எமக்கிருக்கும் உரிமைகளை உளமார எடுத்துரைத்து மனிதாபிமான அடிப்படையில் பேசி அவற்றைப் பெற்றுக் கொள்வதையே இணக்க அரசியல் என்று முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இவர் ஏன் இரு மக்கள் கூட்டம் என்று குறிப்பிட்டார்? இரு தேசிய இனங்கள் என்று குறிப்பிட்டுத் தேசிய உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் இணக்க அரசியல் என்று குறிப்பிடாமல் விட்டது ஐயத்தை ஏற்படுத்தவே செய்கின்றது. தமிழ் தேசியம் என்றால், தேசியம், சுயநிர்ணயம் என்பன அதற்குள் அடங்கும். எனவேதான் தேசியத்தைத் தவிர்த்து மக்கள் கூட்டங்கள் என்று பயன்படுத்தினாரா? எண்ணத்தோன்றுகின்றது.

இதற்கு வேறொரு காரணமும் உண்டு. சம்பந்தன் பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக செயற்படுத்த ஜனாதிபதி மைத்திரி பாலவுக்கு அழுத்தம் கொடுக்குமாறு இந்தியாவைக் கேட்டதும் தேசியத்தை மறைப்பதற்கான செயலாகவே கருதப்படுகின்றது.

இனப்படுகொலை நடந்து முடிந்த சில மாதங்களில், முள்ளிவாய்க்காலில் சிந்திய குருதி காயமுன்னர் ஜனாதிபதித் தேர்தலை 2010ஆம் ஆண்டு நடத்தினார் மஹிந்த. போரை நடத்திய ஜனாதிபதியும், போரை வழிப்படுத்திய இராணுவத் தளபதியும் போரின் வெற்றிக்குத் தாமே உரிமையாளர்கள் எனப் போட்டிபோட்டுத் தேர்தலில் இறங்கினர். பேரவலங்களைச் சந்தித்த தமிழ் மக்கள் ராஜபக்ஷவைத் தோற்கடிக்க விரும்பினர். த.தே.கூட்டமைப்பும் சரத் பொன்சேகாவை ஆதரிக்கும்படி கோரியது. ஆனால் சிங்கள மக்கள் ராஜபக்ஷவை பெரும் வெற்றியடையச் செய்தனர்.

சரத்பொன்சேகா வெற்றி பெற்றிருந்தால் அவரது அரசு அமெரிக்க சார்பு அரசாகவே இருந்திருக்கும். அந்த நிலையில் அமெரிக்கா ஜெனிவாவில் இலங்கை பற்றியோ, போர்க் குற்ற விசாரணை பற்றியோ தீர்மானம் கொண்டு வந்திருக்காது. போரின் பொழுது நடந்த அவலங்களைக் கண்டு கொள்ளாமலே ஐ.நா. சபை அன்றிருந்தது. மனித உரிமை அமைப்புக்கள் எவ்வளவோ எடுத்துக்கூறியும் ஐ.நாவின் செயலாளர் பான் கீ – மூன் கண்ணை மூடிக்கொண்டுதான் இருந்தார். இவ்வாறான நிலையில் சரத் பொன்சேகாவின் ஆட்சி அமைந்திருந்தால் வேறு யார் தான் தீர்மானங்களைக் கொண்டுவந்திருப்பர்? தனக்குச் சார்பான ஆட்சியைக் கொண்டு வர விரும்பிய அமெரிக்கா, தற் பொழுது அது பலனளித்ததும் உடனடியாகப் போர்க்குற்ற விசாரணை அறிக்கையைத் தாமதப்படுத்தியுள்ளது. ஆட்சி மாற்றம் 2010இல் ஏற்பட்டிருந்தால் நிச்சயமாக போர்க்குற்றம், மனித உரிமை மீறல் பற்றி ஜெனிவாவில் அமெரிக்கா வாயே திறந்திருக்காது. ஏதோ நல்ல காலம் 2010 இல் சரத் பொன்சேகா தோற்கடிக்கப்பட்டார். தமிழ் மக்களை ஓர் இனமாகக் கருதாத, கொடி கள் மரத்தைப் பற்றிப் படர்வதைப்போல் சிறுபான்மையினர் சிங்கள இனத்தின் தயவில்தான் வாழ வேண்டும் என்று கூறிய சரத் பொன்சேகா, மக்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லாமல் தனது படை நடந்து கொண்டதாக இன்று வரை கூறிவரும் பொன்சேகா, எவ்வாறு ஆட்சி நடத்தியிருப்பார் என்று எண்ணிப் பார்க் கவே முடியாது.

சாதாரண அரசியல்வாதியாகிய மஹிந்தவே ஜனாதிபதியாகியதும் அதிகாரங்களைக் கையிலெடுத்திருந்தார் என்றால் இராணுவத் தளபதி எவ்வாறு நடந்திருப்பார் என்று சொல்லவே தேவை யில்லை. இவர் தோற்றதால்தான் அன்று இலங்கை முழுமையான சர்வாதிகார ஆட்சியிலிருந்து தப்பியது எனலாம்.

2015இல் மஹிந்தர் வெற்றி பெற்றிருப்பாராகியிருந்தால் போர்க்குற்ற விசாரணை அறிக்கை வெளிவந்திருக்கும். தமிழ் மக்களுக்கு நிறைவைத் தருகின்றதோ இல்லையோ ஓர் ஆறுதலைக் கொடுத்திருக்கும். மைத்திரி பாலவை ஆட்சியேற வைத்ததன் மூலம் எல்லாவற்றையும் தடுத்துவிட் டது என்றுதான் கருத வேண்டியுள்ளது.

ராஜபக்ஷ தோற்றதன் மூலம் நாடு காப்பாற்றப்பட்டு விட்டதாக சம்பந்தன் கூறியுள்ளார். நாட்டின் ஜனநாயகம் காப்பாற்றப்பட்டுள்ளதாம். தமிழ் மக்கள் 1972 இலிருந்து ஜனநாயகம் இல்லாமல்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். சிங்கள மக்களைச் சர்வாதிகார ஆட்சியிலிருந்து மீட்டதாகக்கூறுகின்றனர். தமிழ் மக்களின் எதிர்காலம் என்ன?

போரை நடத்திய சரத் பொன்சேகா போரின்போது பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த மைத்திரிபால சிறிசேன ஆகியோர் ஆட்சியில் இருந்து கொண்டு தங்களுக்கு எதிராக ஒரு சர்வதேச விசாரணையை வரவேற்பார்களா? அது மட்டுமல்ல மஹிந்த ராஜபக்ஷ அரசியல் எதிரியாக இருந்தாலும், போரை நடத்திய சிங்கள ஜனாதிபதியை எக்காரணம் கொண்டும் போர்க்குற்ற விசாரணைக்கு உட்படுத்த அனுமதிக்க மாட்டார்கள்.

சர்வதேசத்தில் திரண்டு வந்த சிறு ஆதரவைக்கூட ஆட்சி மாற்றம் தடுத்து விட்டது என்பதே உண்மை. அப்படியெனில் இந்தப் பின்னடைவுக்கு தமிழ் மக்களே பெரும் பொறுப்பு. மக்கள் [illegible]லை நோக்குச் சிந்தனையுடன் செயல்பட மாட்டார்கள். மஹிந்தவின் மீதான கோபமே அவருக்கெதிராக வாக்களிக்க வைத்தது. ஆனால் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புச் சரியாக மக்களை வழி நடத்தியிருந்தால் சர்வதேசத்தில் எமக்குச் சாதகமாக ஏற்பட்டுள்ள நிலைமையைச் சரியான தடத்தில் மேலும் எடுத்துச் சென்று தமிழ் மக்களின் உரிமைகளை நிலைநாட்ட முற்பட்டிருக்கலாம். நாம் பேருந்தைத் தவறவிட்டு விட்டோமா?

அமெரிக்காவினதும், இந்தியாவினதும் சொற்கேட்டு மைத்திரியை ஆட்சியில் ஏற்றியதன் மூலம் உலகின் முன்தோன்றிய் சிறு ஒளிக் கீற்றான போர்க்குற்ற விசாரணை அறிக் கையை இழந்து நிற்கின்றது ஈழத் தமிழினம். நந்தவனத்தில் ஓர் ஆண்டி.... கூத்தாடிக் [illegible]தாடிப் போட்டுடைத்தாண்டி என்ற வரிகள்தான் நினைவுக்கு வருகின்றன.





# ஊழல் ஒழிப்பில் மோடியும் மும்முரம்

## பெரும் லட்சாதிபதிகளுக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்

ரெங்கன்

ஆஸிய வட்டகையில் உள்ள நாடுகள் பலவற்றிலும் அதிகாரத்தில் இருப்பவர்கள் பெரும்பாலும் அதிகார துஷ்பிரயோகத்தில் இறங்குவது மட்டுமல்ல ஊழல் மோசடிகளில் ஈடுபடுவதும்கூடச் சர்வசர்தாரணமாகியுள்ளது. இதனால் இந்த நாடுகளின் ஆட்சியிலிருப்பவர்கள் மக்களின் பெரும்ஆத்திரத்துக்குள்ளாகிறார்கள். எனவே ஊழல்களில் ஈடுபடுபவர்கள் எந்த அளவுக்கு உயர்ந்தவர்களாகவும் அந்தஸ்து பெற்றவர்களானாலும் அவர்களை மக்கள் தூக்கி எறிந்து விடுகிறார்கள்.

அந்த மாதிரி ஒரு நிலைமையை நாம் அண்மையில் இலங்கை நாட்டில் பார்த்தோம். அண்டை நாடுகளான பாகிஸ்தான் பங்களாதேஷ் மற்றும் இந்தியாவிலும் இந்த நிலைமை இல்லாமற்போய்விடவில்லை.

இந்தியாவில் விடுதலைக்கு வித்திட்டு வளர்த்தது மட்டுமல்ல மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, இந்திராகாந்தி, ராஜகோபால் ஆச்சாரியார், காமராஜர் போன்ற உத்தமத் தலைவர்களை உருவாக்கித் தந்த காங்கிரஸ் கட்சியையே அண்மைக் காலத்தில் இந்திய மக்கள் தூக்கிஎறிந்துவிட்டு பாரதீய ஜனதாக் கட்சியை பதவியில் அமர்த்தினார்கள் என்றால் அதற்கு இந்த ஊழல் மோசடியே முக்கிய காரணம் ஆகும். அவ்வளவு ஏன் பா.ஜ.கட்சியும்கூட தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் பின்னடைந்திருப்பதை அவதானித்த புதுடில்லி மக்கள் அண்மைக் காலத்தில் காங்கிரஸ் கட்சியை மட்டுமன்றி பாரதீய ஜனதாவையும் மண்கவ்வச்செய்துவிட்டுஅனுபவமில்லாதஆனால் ஊழல் மோசடிகளை அடியோடு ஒழிப்பதாக வாக்களித்துள்ள ஆம் ஆத்மி (பொது மக்கள்) கட்சிக்கு புதுடில்லி மாநிலத்தின் ஆட்சிப்பொறுப்பை அளித்துள்ளாகள்.

இவ்வாறு மக்கள் மனங்கள் மாறிவருவதை உத்தேசித்து இந்திய பிரதமர் நரேந்திரமோடியும் இப்போது விழித்துக் கொண்டுள்ளார்.

கடந்த வருடம் மேமாதம் தேர்தலின் போது ஊழல்களைக் கண்டுபிடித்து அவைகளுக்கு காரணமாக இருந்துள்ளவர்களை தண்டிப்பார் என்று அளித்திருந்த வாக்குறுதியை இப்போது நிறைவேற்ற முனைந்திருக்கிறார்.

அந்த வகையில் கடந்த வாரம் நிலக்கரி, மின்சக்தி மற்றும் எண்ணெய் உற்பத்தி அமைச்சிலிருந்து ஆவணங்களைக்கடத்தியவர்கள் என்று கருதப்படும் ஐந்து பேரை பொலிஸார் கைது செய்ததுடன் அவர்களிடமிருந்து அந்த முக்கிய ஆவணங்களையும் கைப்பற்றியிருக்கிறார்கள். பெப்ரவரி 21ஆம் திகதி இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை வெளியிட்ட தகவலில் ஆய்வுக்குரிய இடங்கள் இயற்கை வாயு விலைமதிப்பீடுகள், றிலையன்ஸ் நிறுவனத்துடன் எண்ணெய் அமைச்சுக்குள்ள விவகாரங்கள் தொடர்பான முக்கிய ஆவணங்கள் இதில் அடங்கியிருப்பதாக பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள்காட்டித் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த விசாரணைகள் விரிவடைந்ததையடுத்து றிலையன்ஸ் நிறுவனம், எஸார் எண்ணெய் கெயோர்ன் இந்தியா, ஜுபிலண்ட் எரிசக்தி போன்ற நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகள் 7 பேர் காவலில் வைக்கப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் ராஜன் பகத் என்பவர் தெரிவித்திருந்ததாக அந்தச் செய்தி கூறியது.

சீனாவிலும் இவ்வாறே அதிகாரமிக்க மற்றும் செல்வந்தர்களை சீன அதிபர் ஸி ஜின்பிங் குறிவைத்து ஊழல் ஒழிப்பில் இறங்கியிருக்கிறார். இந்தியாவில் நரேந்திரமோடிபணக்காரர்கள்மற்றும்செல்வாக்கு மிக்க குடும்பங்களைக் குறி வைத்திருப்பதாகத் தெரிகின்றது. அரசின் அதிமுக்கிய இரகசிய ஆவணங்கள் தனியார் நிறுவனங்களுக்கும் ஊடகங்களின் கைகளுக்கும் போய்ச்சேருவதை மோடி அரசு தடுக்க விரும்புகிறது.

'டைம்ஸ் ஒப் இந்தியா' பத்திரிகை பெயர் குறிப்பிடப்படாத வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெளியிட்டிருந்த செய்தியில் பின்வரும் தகவல்கள் அடங்கியிருந்தன. றிலையன்ஸ் தொழில் நிறுவனங்களின் தலைவரும் இந்தியாவின் பெரிய செல்வந்தருமான முகேஷ் அம்பானி, அவரது சகோதரர் அனில் அம்பானி ஆகிய லட்சாதிபதிகளும் சஷிகாந் மற்றும் ரவிகாந்தருய்யா ஆகிய லட்சாதிபதிகளான எயார் நிறுவனத்தின் உரிமையாளர்கள் விசாரணை வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளனர். அனில் அகர்வாலின் வேதாந்த மூலவள நிறுவனம் போன்றவையும் ஆய்வுகளுக்குள்ளாகியிருக்கின்றன. தேசியப் பாதுகாப்புத் துறை ஆலோசகர் அஜித் டோவலின் அறிவுறுத்தலின் பேரில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களைப் பொலிஸார் கைது செய்த விதம் பின்வருமாறு;

பெப்ரவரி 17 ஆம் திகதி பொலிஸார் அவர்களுக்கான வலையை விரித்திருந்தார்கள். இந்திய எண்ணெய்வள அமைச்சு அமைந்துள்ள சாஸ்திரிபவனுக்கு மூன்று ஆள்கள் வந்துசேர்ந்தார்கள். இருவர் உள்ளே செல்ல ஒருவர் வாகனத்திலேயே அமர்ந்திருந்தார். அவர்கள் இரண்டு மணி நேரத்தில் அதிகாரபூர்வ ஆவணங்களுடன்திரும்பிவந்தபோது பொலிஸார் அங்கே நகர்ந்து மூவரையும் கைது செய்தார்கள். அவர்களின் காரிலும் இந்திய அரச வாகனம் என அதிகாரம் பெறாத நிலையில் அடையாளம் இடப்பட்டிருந்தது. வாகனமும் கைப்பற்றப்பட்டதுடன் வேறுபல அமைச்சுளின் சில அதிகாரிகளும் கைது செய்யப்பட்டார்கள். இணையத்தளம் ஒன்றை நடத்தி வரும் பத்திரிகையாளர் ஒருவரும் மற்றும் ஓர் ஆலோசகரும் கைதானார்கள். அதிகாரபூர்வ இரகசியங்கள் சட்டத்தின்கீழ் இவர்கள் மீது வழக்குத் தொடரப்படவிருக்கின்றது. குற்றம் காணப்படின் 14 வருடம் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம். கடந்த வெள்ளிக்கிழமை ஏற்கனவே கைதாகியிருந்த 5 பேரையும் கொண்டுவந்து பத்துக்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் படப்பிடிப்பாளர்களின் முன்னால்நடந்திருக்கக்கூடியதிருட்டைமீளச் செய்து காட்டினார்கள். பொலிஸாரின் கூற்றின்படி திருட்டுநடைபெற்றவிதமாவது; அதிகாரிகளின் காரியாலங்களை டூப்ளிகேட் திறப்புகளைக் கொண்டு திறப்பார்கள். அங்கிருக்கக்கூடிய குறுகிய தூர படப்பிடிப்புக் கமெராக்களை செயல் இழக்கச் செய்வார்கள் மேசைகளில் காணப்படும் சகல ஆவணங்களையும் புகைப்படப்பிரதிசெய்து கொள்வார்கள். பின்னர் அவைகளை தனியார் பெட்ரோலிய நிறுவனங்களுக்கும் ஆலோசகர்களுக்கும் விற்று விடுவார்கள்.

## ஆயுதம் தரிக்காத பொலிஸ் நிர்வாகம்

வளர்ந்துவரும் நாடுகளிலும் சரி மிக வளர்ந்த ஜனநாயக நாடுகளிலும் சரி காவல் துறையினர் ஆயுதங்கள் இல்லாமல் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறைவு. அதுமட்டுமல்ல எந்த ஒரு சிறு சம்பவமானாலும் உடனடியாக ஆயுதத்தைப் பாவிப்பது பழக்கமாகிவிட்டது.

மிக வளர்ந்த நாடான அமெரிக்காவில்கூட காவல் துறையினர் அவசியமில்லாமல் பொதுமக்கள் மீது ஆயுதங்களை பாவித்து விடும் சம்பவங்கள் இடம் பெற்று விடுகின்றன. அதனால் காவல்துறையினரும் ஏனைய பொதுமக்களும் ஆயுதங்களை மனம் போனபோக்கில் பாவிக்கக் கூடிய நிலைமையை இல்லாமல் செய்வதுபற்றி யோசிக்கிறார்கள்.

ஆச்சரியகரமாக நாகரிகம் வளர்ந்த நாடுகளான பிரிட்டன், அயர்லாந்து, நோர்வே, ஐஸ்லாந்து மற்றும் நியூஸிலாந்து ஆகியவற்றில் காவல்துறையினர் ரோந்து நடவடிக்கையில் செல்லும்போது ஆயுதம் கொண்டுசெல்வதில்லை. மிக முக்கிய சந்தர்ப்பங்களில் மாத்திரமே இந்த நாடுகளில் காவல்துறையினர் ஆயுதம் தரித்திருப்பார்கள்.

வடக்கு மிர்சிகன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த உதவிப்பேராசிரியர் கவு மண்டூர் ஒட்சன் இதுபற்றிக் கூறுகையில் இந்த நடைமுறையானது பழக்கதோஷத்தைப் பொறுத்தது. பொலிஸாருக்கு ஆயுதம் கொடுப்பதானது ஆயுத வன்முறையைக் குறைப்பதைவிட அதிகரிப்பதாய் இருக்கிறது என்றார்.



# இனிய தமிழ்மொழி

கனி மொழியாம் தாய்மொழியை வாழ்த்தி வணங்க
தனித் தமிழில் பேச எழுதக் கற்றுக் கொண்டு
பிற மொழிகள் பல கலந்து பேசிடாமல்
பிறர் போற்ற இவ்வுலகில் வாழ்வீர் இனிது.

செம்மொழியாம் தமிழ்மொழியை மறந்துவிட்டு
எம்மொழியும் பேசலாமென நினைத்துக்கொண்டு
தம்மொழியாம் தாய்மொழியை மறப்போர் உலகில்
எம்மொழியும் திடமாகப் பேச வல்லாரல்லர்

பெரும் ஆசையால் உள்ப்பொருளை மாசுபடுத்தி
உருத்தெரியாமல் கலப்படம் செய்வது போல்
பொங்கு தமிழுக்குக் கலப்படம் செய்ய நினைப்பீராகில்
இங்கு இழுக்காகும் தமிழனுக்கே அறிவீர் நீவிர்

தொன்று தொட்டுப் பேசப்படும் தமிழ்மொழியை
இன்று முழுப் பிறமொழியில் புகுத்திக் கலந்து
பெருமையோடு மார்புதட்டிப் பேசுவோர்கள்
சிறியோரே யன்றிப் பெரியோரல்லர்

ஈன்றெடுத்த தாய்க்கு நிகரான தொன்றில்லை– இவ்வுலகில்
சான்றோர்கள் சொன்னமொழி இதுவேயாகும்
கற்ற தமிழ் மொழியை மறப்பது இப்பாரில்
பெற்றவளை மறப்பதற்கு ஒப்பாகும் காணீர்

பெருங்கடலில் கப்பலுக்குப் பேராபத்தானால்
அருளாளர் ஓடிச் சென்று அதைக் காப்பதுபோல்
பொங்கு தமிழுக்குப் பேராபத்து வருமேயானால்
ஆங்கு முன்னின்று காக்கவேணும் தமிழா நீயும்

மோகத்தினால் தாய்மொழியை முன் மறந்தவர்களெல்லாம்
மோகினிப்பேயின் பின்னே சென்றவன் கதியை எண்ணி
மறவோர் இனித் தாய்மொழியை ஒருபோதும் என்று
உறுதியுடன் கூறுகின்றார் உய்ந்தார் இன்று

பிறர் மொழியைக் கற்பது தவறில்லைத் தமிழா
மறவாமல் தாய்மொழிக்கு முதலிடம் கொடு மகனே
பிறக்கையிலே 'அம்மா' என்ற மூன்றெழுத்தைக் கூறினாய்
இறக்க முன்னே 'தமிழ்' என்ற மூவெழுத்தை வளர்ப்பாய் நீயும்

தேனினும் இனிய தமிழ்மொழியைக் கற்று
பாரினில் பட்டங்கள் பல பல பெற்று
ஊரினில் தமிழுக்குத் தொண்டுகள் செய்து
வானினில் கொடிகட்டிப் பறப்பாய் தமிழா இனிது

பாரெல்லாம் பரந்து பேசும் தமிழ்மொழிக்கு
ஊரெல்லாம் ஒன்று கூட்டி விழாவெடுத்து
சீரெல்லாம் இனிது கொடுத்து அணிகள் பூட்டி
தேரேற்றி சிறப்புச் செய்து வணங்குவோமே...!

***அம்பலவாணர் இராஜரட்னம்,***
***சைவப்புலவர்.***

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?



01.03.2015 முதல்
07.03.2015 வரை

## மேடம்



அரசு காரியங்கள் விரைந்து முடியும். பூர்வீக சொத்துப் பிரச்சினை தீரும். சொந்த–பந் தங்கள் மத்தியில் செல்வாக்குக் கூடும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு ஏற்படும். பால்ய நண்பர்கள் வலிய வந்து பேசுவார்கள். முக்கிய கோப்புகளில் கையெழுத்திடுவதற்கு முன்பாக சட்ட நிபுணரை கலந்தாலோசிப்பது நல்லது. உத்தியோகத்தில் கடினமான வேலைகளையும் எளிதாக முடிப்பீர்கள்.

## இடபம்



புதிய முயற்சிகள் வெற்றியடையும். தைரியமாகச் சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். வேலைச்சுமை, சோர்வு, சலிப்பு, சளித் தொந்தரவு, தொண்டைப் புகைச்சல், தோலில் நமைச்சல் வந்துப் போகும். பதவிகள் தேடி வரும். புதிய வேலை கிடைக்கும். பழைய கசப்பான அனுபவங்கள் நினைவுக்கு வரும்.

## மிதுனம்



சிலர் வீடு மாற வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகும். அரசு காரியங்கள் இழுபறியாகும். வழக்கால் இருந்த நெருக்கடி நீங்கும். புதிய பொறுப்புகள், பதவிகளுக்கு தெரிவுசெய்யப் படுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள். தைரியம் கூடும். புது நட்பு மலரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும்.

## கடகம்



மனைவிவழி உறவினர்கள் மதிப்பார்கள். நீண்ட நாள்களாகப் போக நினைத்த புண்ணிய தலங்களுக்குச் சென்று வருவீர்கள். வெளியூரிலிருந்து சிறுசிறு விபத்துகள் ஏற்படக்கூடும். தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் கௌரவிக்கப்படுவீர்கள். வேற்றுமதத்தினர், மொழியினரின் ஆதரவு அதிகரிக்கும். அவ்வப்போது பலவீனமாக உணருவீர்கள்.

## சிங்கம்



போராட்டங்களை சமாளிக்கும் பக்குவம்உண்டாகும்.தொண்டை வலி, சளித் தொந்தரவு, காய்ச்சல் வந்து செல்லும். உறவினர், நண்பர்களுடன் உரசல் போக்கு வந்து நீங்கும். பேச்சில் நிதானம் தேவை. சொத்துப் பிரச்னை விஸ்வரூபமெடுக்கும். வேலையாள்களிடம் தொழில் இரகசியங்களை சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். உத்தியோகத்தில் வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள்.

## கன்னி



மாறுபட்ட அணுகு முறையால் பழைய சிக்கல்களுக்கு தீர்வு காண்பீர்கள். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். பூர்வீக சொத்து கைக்கு வரும். தூரத்து சொந்தங்களால் ஆதாயமுண்டு. வெளிநாடு செல்ல விசா கிடைக்கும். வீட்டில் தள்ளிப் போன சுப காரியங்கள் ஏற்பாடாகும். யாருக்காகவும் சாட்சிக் கையெழுத்திடாதீர்கள். வியாபாரத்தில் புதிய திட்டங்கள் வகுத்து லாபத்தைப் பெருக்குவீர்கள்.

## துலாம்



மாறுபட்ட யோசனைகள் மனதிலே உதிக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். உறவினர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். சளித் தொந்தரவு, தொண்டை வலி, காய்ச்சல், வேலைச்சுமை, வீண் செலவுகள் வந்து போகும். வெளிநாட்டு நிறுவனத்தில் சிலருக்கு வேலைகிடைக்கும்.

## விருச்சிகம்



நினைத்த காரியங்கள் நிறைவேறும். சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களின் நட்பு கிட்டும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். நீண்ட நாள்களாக சந்திக்க வேண்டுமென்று நினைத்த உறவினர், நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் தொடர்ந்து உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

## தனுசு



பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள். தடைப்பட்ட வேலைகள் முழுமையடையும். நம்பிக்கைக்குரியவர்களை ஆலோசித்துச் சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உறவினர்கள் சிலர் உங்களின் அதிரடியான வளர்ச்சியைக் கண்டு பொறாமைப்படுவார்கள்.

## மகரம்



குழம்பியிருந்த உங்கள் மனதில் தெளிவு பிறக்கும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். உங்களை ஏமாற்றிக் கொண்டிருந்தவர்களை இனங்கண்டறிந்து ஒதுக்குவீர்கள். வெளிநாட்டில் இருப்பவர்கள் உதவுவார்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்திகள் வரும்.

## கும்பம்



இனி எதையும் [illegible]ட்டமிட்டுச் செய்வீ[illegible]ள். நீண்ட நாளாகத் தள்ளிப்போன சவாலான விடயங்களை சாமர்த்தியமாகப் பேசி முடிப்பீர்கள். வெளிநாட்டிலிருந்து நல்ல செய்திகள் வரும். நட்பு வட்டம் விரியும். அவ்வப்போது உணர்ச்சிவசப்படுவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

## மீனம்



உறவினர்கள், நண்பர்கள் வகையில் ஆதாயம் உண்டு. பூர்வீக சொத்துப்பிரச்சி னைக்கு சுமுக தீர்வு காண்பீர்கள். வழக்கில் நிதானம் அவசியம். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். வீண் சந்தேகம், மனைவிக்கு அறுவைச் சிகிச்சை, எதிர்மறை எண்ணம், காய்ச்சல், அசதி வந்து நீங்கும்.

# மூன்று மாதங்களுக்கு ஒருமுறை என்னைச் சந்தித்து குறைகளைத் தீர்க்கலாம்



## வடமாகாணக் கல்வி அமைச்சருக்கு கொழும்பு அமைச்சர் இராதாகிருஷ்ணன் அழைப்பு



நேர்காணல்-
இரா.புத்திரசிகாமணி

**கல்வி அபிவிருத்தியில் வடக்கு, தெற்கு என்று பேதமின்றி வளங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். கல்வி அனைவருக்கும் பொதுவானது. கடந்த காலங்களில் நிலவிய கசப்பான அனுபவங்களையும், முட்டுக் கட்டைகளையும் நீக்கி மாகாணக் கல்வி அமைச்சு சுயமாக இயங்க வைக்கப்படவேண்டும். இதனைச் செயல்படுத்துவதன் ஆரம்ப நடவடிக்கையே எனது யாழ். பயணம் என்கிறார் கல்வி இராஜாங்க அமைச்சர் வி.இராதாகிருஷ்ணன்.**

அதேவேளை மத்திய அமைச்சும், மாகாண அமைச்சும் இரட்டை மாட்டு வண்டியில் கட்டப்பட்ட இரு எருதுகள் போன்று ஒரே நோக்கில் செயற்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் மலையகத்தைப் பிறப்பிடமாகக்கொண்டவர். இவர் நுவரெலியா பிரதேசசபைத் தலைவராகவும் பின்னர் மத்திய மாகாண சபையில்மூன்றுமுறைதமிழ்க் கல்வி அமைச்சராகவும் பணியாற்றியவர். மஹிந்த ராஜபக்ஷ அரசின் கடைசிக்காலத்தில் சில மாதங்கள் மட்டுமே பூங்காக்கள் பொழுது போக்கு பிரதி அமைச்சராகக் கடமையாற்றினார். பின்னர் அதனைத் தூக்கி எறிந்து விட்டு மைத்திரி அரசில் கல்வி இராஜாங்க அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.

கல்வி இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் யாழ்ப்பாணத்துக்கு வந்த இராதாகிருஷ்ணன் மாகாணகல்வி அமைச்சர் முதலமைச்சர் மற்றும் மாகாண கல்வித் திணைக்கள உயரதிகாரிகளுடன் சந்திப்புக்களையும் உரையாடல்களையும் நடத்தினார். உதயன் பத்திரிகையுடன் தனிப்பட உரையாடினார்.

**கேள்வி:** 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் மலையகத்தி[illegible] 20 பாடசாலைகளில் ஜீ.[illegible] உயர்தர விஞ்ஞான பிரி[illegible] களை ஆரம்பிக்கவுள்ளீர்[illegible]. அதேபோன்று வடக்கிலும் [illegible]ய் வீர்களா?

**பதில்:** மலையகத்தைப்போன்று வடக்கிலும் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படும். இந்த விடயம் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடி வருகின்றேன்.

**கேள்வி:** வன்னி மாவட்டங்களில் ஆசிரியர் நியமனங்கள்வழங்கப்பட்டுள்ளபோதும் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடநெறிகளுக்கான நியமனங்கள் வழங்கப்படவில்லை. அங்கு மேற்குறிப்பிட்ட மூன்று துறைகளிலும் தேர்ச்சி பெற்ற பட்டதாரிகள் இருக்கின்றனர். அவர்களைக் கொண்டு வெற்றிடங்கள் நிரப்பப்படுமா?

**பதில்:** இவ்விடயம் சம்பந்தமாகவும் 1,000 பாடசாலை அபிவிருத்தித்திட்டம் தொடர்பாகவும் வடமாகாண முதலமைச்சர், கல்வி அமைச்சர் மற்றும் அரசியல் பிரமுகர்களுடன் கலந்துரையாடியுள்ளேன். நேரடியாகவும் கண்டறிய முடிந்தது. இது தொடர்பாகப் பிரதமர் மற்றும் கல்வியமைச்சருடன் கலந்துரையாடி ஆவன செய்யப்படும்.

**கேள்வி:** மூன்று தசாப்தங்களுக்குமேல் இடம்பெற்ற போர் மற்றும் இடப்பெயர்வு காரணமாகவும் இராணுவ ஆக்கிரமிப்புகள் காரணமாகவும் பெரும் அளவிலான பாடசாலைகள் இன்றும் இயக்கப்படாத நிலையில் இருக்கின்றன. இவ்வாறு பாதிக்கப்பட்ட பாடசாலைகள் மீண்டும் திறக்க நடவடிக்கை எடுப்பீர்களா?

**பதில்:** விசேட வேலைத்திட்டத்தின் கீழ் இந்த விடயம் பரிசீலனைசெய்யப்பட்டுமூடப்பட்டுள்ள பாடசாலைகளை மீண்டும் இயங்கச் செய்ய நடவடிக்கைமேற்கொள்ளப்படும்.

**கேள்வி:** யாழ். மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களாகவும், முன்பள்ளி ஆசிரியர்களாகவும் கடமையாற்றியவர்களும் ஆசிரிய சேவைக்குள் உள்வாங்கப்பட்டு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவேண்டும் என ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்றனர். இவர்களுக்கு எந்த வகையில் நிவாரணம்அளிக்கப்போகின்றீர்கள்.

**பதில்:** ஆசிரியர் நியமனம், உதவி ஆசிரியர் நியமனம் தொண்டர் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களின் நியமனம் என்பன தொடர்பாக தேசிய கொள்கை ஒன்று உண்டு. அதற்கமைய மாகாணக் கல்வி அமைச்சர் மற்றும் முதலமைச்சர் ஆகியோரின் கருத்துக்களையும் உண்மைத் தன்மையையும் அறிந்து இந்த விடயம் பரிசீலனை செய்யப்படும்.

**கேள்வி:** வடமாகாணத்தில் கஷ்டப்பிரதேசங்களில் ஐந்து வருடங்களுக்கு மேல் தொடர்ந்து பணியாற்றிய ஆசிரியர்களுக்கு இடமாற்றம் பெறுவதில் பெரும் சிக்கல்நிலை காணப்படுகின்றது. ஆர்ப்பாட்டங்களும் இடம்பெறுகின்றன. இடமாற்றம்பெறதகுதிகள் இருந்தும்மறுக்கப்பட்டுள்ளன. இப்பிரச்சினைக்குத் என்னதான் தீர்வு?

**பதில்:** வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் மலையகத்திலும் இந்தப்பிரச்சினைஉண்டு. உதவி ஆசிரியர்களாக நியமனம் பெறுபவர்கள் யார் யாரையோ பிடித்து நகர்ப்புறங்களிலும் அண்மித்தஇடங்களிலும்உள்ள பாடசாலைகளுக்கு சென்று விடுகின்றனர். கஷ்டப் பிரதேசங்களுக்குச் செல்ல விரும்புவதில்லை. மாகாண கல்வி அமைச்சும், கல்வித் திணைக்களமும் இந்த விடயத்தில் கூடிய கவனம்செலுத்தவேண்டும். கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றும்ஆசிரியர்கள் போன்று வசதியான பாடசாலைகளில் நீண்ட காலமாகப் பணிபுரியும் ஆசிரியர்களும் கஷ்டப்பிரதேசங்களுக்குச் சென்று கல்விச் சேவை செய்ய வேண்டும் என்பதே எனது கருத்து. இதனை மாகாண அமைச்சுக்களும் கடைப்பிடித்தால் பிரச்சினைகளுக்கு இலகுவாகத் தீர்வு காண முடியும்.



**கேள்வி:** தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்படும் 1,000 பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தில் வடமாகாணத்திற்கு உரிய வாய்ப்புக் கிடைக்கவில்லை. எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாத தென்பகுதியில் வசதியான பாடசாலைகளில் பத்து பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டால் வடக்கில் ஒரு பாடசாலைதான் இந்த வசதியைப் பெறுகின்றது. பாதிக்கப்பட்ட பிரதேசம் என்ற வகையில் இப்பிரதேச பாடசாலைகளையும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

**பதில்:** கல்வி அபிவிருத்தியில் வடக்கு, கிழக்கு, தெற்கு, மலையகம் எனப் பேதம் பாராது சகல வளங்களும் சகல மாவட்டங்களுக்கும் சம அளவாகப் பகிரப்படவேண்டும் என்பதே எனது நோக்கம். 1,000 பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வடக்கில் உள்ள பாடசாலைகளும் அபிவிருத்தி செய்யப்படும். இதுவரை 94 பாடசாலைகள் இத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

> “கல்வி அபிவிருத்தியில் வடக்கு, கிழக்கு, தெற்கு, மலையகம் எனப் பேதம் பாராது சகல வளங்களும் சகல மாவட்டங்களுக்கும் சம அளவாகப் பகிரப்பட வேண்டும் என்பதே எனது நோக்கம். 1,000 பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வடக்கிலுள்ள பாடசாலைகளும் அபிவிருத்தி செய்யப்படும். இதுவரை 94 பாடசாலைகள் இத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.”

**கேள்வி:** மலையகத்தில் உள்ள 80 வீதமான பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களைப் படிப்பிப்பதற்கான ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. இதனால் கல்வித் தரம் பெரிதும் வீழ்ச்சியடைந்துள்ளது. இந்தப் பாடசாலைகளுக்குத் தேவையான ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்களா?

**பதில்:** கணித, விஞ்ஞான, ஆங்கில பாடங்களில் பயிற்றப்பட்டவர்களுக்குத் தேர்வுகளை நடத்தி கூடிய விரைவில் நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவற்றுக்கு மேலாக, இன்று அரசியல் சூழ்நிலை முற்று முழுதாக மாற்றம் அடைந்துள்ளது. மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்கும் இடையிலான முறுகல் நிலையும் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளும் முட்டுக்கட்டைகளும் இப்பொழுது இல்லை. எனவே மாகாண அமைச்சு சுயமாக செயற்படவாய்ப்பளிக்கவேண்டும். இந்தப் பரஸ்பர நல்லுறவை ஏற்படுத்த மாகாண முதல்வர், கல்வி அமைச்சர் மற்றும் திணைக்களத் தலைவர்கள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவதுகல்விஅமைச்சரைச் சந்தித்துத் தமது மாகாணக் குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்ள முடியும். நேரடித் தொடர்புகள் பிரச்சினைகளைத் தீர்க்க வழி வகுக்கும் என நம்பிக்கை தெரிவித்தார்.

ஒரு புறத்தில் இந்திய மீனவர்கள், மறு புறத்தில் தென்னிலங்கை மீனவர்கள் அத்து மீறல் காரணமாக மோசமாகப் பாதிக்கப்படுபவர்கள் வடக்கு மீனவர்கள். அதனால் தானோ என்னவோ அரசும் இந்த விடயத்தில் பாரா முகமாக இருக்கிறது.

# வடக்குக் கடலில் வெடித்த மோதல்

அதிரன்

நீண்ட நாள்களாக இருந்து வந்த முறுகல் நிலை கடந்த வியாழக்கிழமை பெரும் மோதலாக வெடித்தது. இரு தரப்பினரும் கடும் மூர்க்கமடைந்து கடுமையான தாக்குதல்களில் ஈடுபட்டனர். கையில் கிடைத்தவற்றைக் கொண்டு மோதிக் கொண்டனர். சுமார் 3 மணி நேரமாக இந்த தாக்குதல் நடந்தது. பெற்றோல் குண்டுகளும் வீசப்பட்டன.

நாம் மேலே குறிப்பிட்ட விடயம் போர் முனையொன்றில் நடந்த சம்பவம் அல்ல. வடக்குக் கடலில் கடந்த வியாழக்கிழமை திடீரென இலங்கை – இந்திய மீனவர்களிடையே ஏற்பட்ட கைகலப்புத்தான். இந்தக் கைகலப்பில் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு மீனவர்கள் மூவர் .காயமடைந்தனர். இரு நாட்டு மீனவர்களுக்கிடையேயும் நீண்டகாலமாக இருக்கும் பிணக்கு இப்போது முற்றி மோதல் நிலையை அடைந்திருக்கிறது.

கட்டைக்காடு மீனவர்களின் படகுகளும் சேதமாக்கப்பட் டுள்ளன. கடந்த சில தினங்களாகவே வடக்குக் கடலில் இந்திய இழுவைப் படகுகளின் அத்து மீறல் தொடர்வதாக குற்றாச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இலங்கை ஜனாதிபதியின் இந்தியப் பயணத்தை யொட்டி ஏற்கனவே கைதாகி சிறையில் இருந்த, இருநாட்டு மீனவர்களும் பரஸ்பரம் நல்லெண்ண அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். அதன்பின்னர், இலங்கைக் கடற்பரப்பில் கைப்பற்றப்பட்ட இந்திய மீனவர்களின் படகுகளும் விடுவிக்கப்பட்டிருந்தன. இதன் பின்னர், இந்திய மீனவர் கள் ஊடுருவல் விடயத்தில் இலங்கை நெகிழ்வுப் போக் கையே கடைப்பிடித்தது. இலங்கை கடற்படையினரும் இந்திய மீனவர்களின் ஊடுருவலைத் தடுக்காமல் தம்பாட்டில் இருந்துவிட்டனர். இது இந்திய மீனவர்களுக்குச் சாதகமாகப் போக அவர்களின் ஊடுருவல் எல்லை மீறிப் போனது.

இதனையடுத்தே நேற்றுமுன்தினம் இரு நாட்டு மீன வர்களுக்கு இடையேயும் கடலில் வெடித்தது மோதல். இந்த மோதல் நேற்றுமுன்தினத்துடன் முடிந்து விடவில்லை. கட்டைக்காடு மீனவர்கள் மீதான தாக்குதலின் எதிரொலியாக எல்லை தாண்டி, மீன் பிடித்த குற்றச் சாட்டில் இந்திய மீனவர்கள் 83 பேர் இலங்கை கடற் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இருநாட்டுஅரசுகளும்அசமந்தப்போக்குடன் செயற் பட்டதன் பலாபலனே இரு நாட்டு மீனவர்களிடையேயும் இந்த மோதல் வெடிக்கக் காரணமாக இருந்தது. தொடர்ந்தும் இரு பகுதி மீனவர்களும்கடலில்மோதல்போக்குடனேயே இனிமேல்நடந்துகொள்ளப்போகிறார்கள். கடந்த பல ஆண்டுகளாக தொடரும் மீனவர் பிரச்சினைக்கு இரு நாடுகளிடமும் உறுதியான–பயனுள்ள தீர்வுத் திட்டம் எதுவும் இல்லை. இரு நாட்டு மீனவர்களும் அடிக்கடி எல்லை தாண்டுவதாகக் குற்றம்சாட்டப்பட்டு கைது செய்யப்படுகின் றனர். அவர்களது படகுகளும் பறிக்கப்படுகின்றன. பின்னர், இரு நாடுகளும் பேசி கைதான மீனவர்கள் விடுவிக்கப்படு கிறார்கள். கைதாவதும் பின்னர் விடுவிக்கப்படுவதும் அண்மைக் காலமாக தொடர்கதையாகியுள்ளது. அண்மையில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்ட இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால, இந்தியப் பிரதமர் மோடி யுடன் பேசி, மீனவர் பிரச்சினைக்கு ஓர் உறுதியான தீர்வைக் காண்பார் என்று எதிர் பார்க்கப்பட்டது. ஆயினும், அப்படி எதுவும் இடம்பெறவில்லை. மீனவர் விடயம் பேச்சில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதும், அது குறித்து தீர்மானம் எதுவும் எட்டப்படவில்லை.

இலங்கைக் கடற்பரப்புக்குள் அடிக்கடி நுழையும் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் இங்குள்ள கடல் வளத்தை அள்ளிச் செல்வதுடன், உள்ளூர் மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களையும் சேதப்படுத்துவதாக குற்றம்சாட்டப் பட்டு வருகின்றது. இந்திய மீனவர்களின் இந்த ஊடுருவல் காரணமாக அதிகம் பாதிக்கப்படுபவர்கள் வடபகுதி மீனவர் களே.

இந்தியாவின் இராமேஸ்வரம், நாகபட்டினம் ஆகிய கரை யோர மாவட்டங்களில் இருந்து , பெரும் தொகையில் புறப் படும் இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகள் நேரடியாக வடக்குக் கடல் பகுதிக்குள் பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபடுகின்றன. இவ்வாறு வடக்குக் கடல் வளத்தை அள்ளிச் செல்வதால், போதிய மீன்பாடு இன்றி, பாதிக்கப்படுகிறார்கள் உள்ளூர் மீனவர்கள். இதனால், இந்தப் பிரச்சினைக்கு விரைவில் உறுதியான முடிவை எட்டுமாறும் உள்ளூர் மீனவர்கள் கோரிவருகின்றபோதும் அது குறித்துஅரசுஅக்கறையற்றதாகவேஉள்ளது. மீனவர் பிரச்சினைக்கு தீர்வுகாண இரு நாட்டு மீனவர் களுக்குமிடையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேச்சு மீண்டும் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய அரசின் 100 நாள் வேலைத்திட்டத்தை வேகமாக முன்னெ டுக்க வேண்டியுள்ளதால், மீனவர் பேச்சை பிற்போட்டுள்ளதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது. மீனவர் பிரச்சினையை விட தனது 100நாள் திட்டமே அரசுக்கு முக்கி யமாகத் தெரிவதால், மீனவர் பேச்சை அது புறந்தள்ளி யுள்ளது. ஏற்கனவே திட்டமிட்டவாறு எதிர்வரும் மார்ச் மாதம் 6ஆம் திகதி இரு நாட்டு மீனவர்களும் சென்னையில் அல்லது கொழும்பில் பேச்சு நடத்துவதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்படுவதாக இலங்கை கடற்றொழில் அமைச்சு தெரிவித்திருந்தது. ஆயினும் அது இப்போது ஏப்ரலுக்கு பின்தள்ளிப் போயுள்ளது.

புதிய அரசு பதவியேற்ற பின்னர், இந்திய மீனவர்களின் அத்துமீறல் அதிகரித்துள்ளதாக வட இலங்கை மீனவர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது. இலங்கைக் கடற்படையினரும் இது தொடர்பில் அக்கறையற்று உள்ளதாக அது கூறியுள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக இருந்துவந்த மீன்பிடிக் கட்டுப்பாடு களால் வடக்கின் மீன்பிடி மோசமாக பாதிக்கப்பட்டிருந்தது. கடற்படையினர் வசமிருந்த கரையோரங்களில் படை முகாம்கள் அமைக்கப்பட்டு கெடுபிடிகள் மேற்கொள்ளப்பட் டன. மீனவர்களுக்கு பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த தால் அவர்கள் சுதந்திரமாக தொழில் செய்ய முடியாதநிலை இருந்தது. ஆயினும் 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் படிப்படியாக மீன்பிடிக் கட்டுப் பாடுகளும் நீக்கப்பட்டன. பொருளாதார ரீதியில் பின்தங்கியிருந்த மீனவர்கள் இதன் பின்னர் தமது பொருளாதா ரத்தை உயர்த்திக் கொள்வதற்காக மீன்பிடித் தொழிலை விருத்தி செய்வதில் ஈடுபட்டிருந்தனர். ஒரு பக்கம் இந்திய இழுவைப் படகு அத்துமீறல் தொடர்ந்து கொண்டிருந்த வேளை மறுபக்கத்தில் தமது தொழிலையும் கவனித்து வாழ்வா தாரத்தை விருத்தி செய்ய வேண்டிய தேவை அவர்களுக்கு இருந்தது. இப்போது எரிபொருள்களின் விலைகளும் குறைக்கப்பட்டதையடுத்து வடக்கில் மீன்பிடி ஓரளவு உறுதியானநிலையை அடைய முயன்று வருகின்றது.

இந்த வேளையில் வடக்கு மீன்பிடிக்கு தொடர்ந்தும் முட்டுக் கட்டை – இடைஞ்சல் ஏற்படுத்தும் நடவடிக்கைகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றமை கவலைக்குரிய தொன்று. ஆட்சியிலுள்ள அரசின் ஆசீர்வாதத்துடன் கடந்த மூன்று நான்கு வருடங்களாக வடக்குக் கடலில் தென்னி லங்கை மீனவர்கள் அத்துமீறித் தொழில் செய்யும் நடவ டிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துமீறுவது மட்டுமல்லாமல் சட்டவிரோத மீன்பிடி முறைகளானடைனமற்பாவித்தல்,சிலிண்டர் பாவித்தல், வெளிச்சம் போட்டு மீன் பிடித்தல், இழுவைப் படகுகளில் மீன் பிடித்தல் போன்ற தொழில்களை யும் வடக்குக்கடலில் தெற்கு மீனவர்கள் அச்சமின்றிச்சுதந்திரமாகமேற்கொள்கின்றனர். வடமராட்சி கிழக்குக் கடலில் கடலட்டை பிடித்தல் பிரபலம் பெற்று விளங்குகின்றது. இப்போதுதான் அந்தச் சீசன் அங்கு ஆரம்பித்திருக்கிறது. இந்தக் கடலட்டை பிடிப்பதன் மூலம் பெருமளவு வருமானத்தை ஈட்டிக் கொள்ள முடியும். வடக்கில் பிடிக்கப்படும் கடலட்டைகளுக்கு தெற்கில் பெரும் சந்தை வாய்ப்பு உள்ளதால் இந்தக் கடலட்டை பிடித்தலில் கண்வைத்துள்ளனர் தெற்கு மீனவர்கள். தெற்கு மீனவர்களின் இந்த அத்துமீறல்களுக்கு அப்பகுதியிலுள்ள படையினரும்துணைபுரிவதாகஉள்ளூர் மீனவர்கள் குற்றம்சாட்டியிருக்கிறார்கள். ஏற்கனவே இந்திய மீனவர்களின் ஊடுருவலால் வடக்கின் கடல்வளம் படிப்படியாக அள்ளிச் செல்லப்பட்டு அழிக்கப்படுகிறது. இதனால் வடக்குக் கடலில் கடலுணவுகளின் உற்பத்தி வெகுவாகக் குறைந்து வருவதாகச்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த வேளையில் தெற்கு மீனவர்களும் அத்துமீறி இவ்வாறான நடவடிக்கைகளில்ஈடுபடுவதுஎதிர்காலத்தில் வடக்கு மீனவர்களின் வாழ் வாதாரத்தை கேள்விக்குறியாக் கும்.

ஒரு புறத்தில் இந்திய மீனவர்கள், மறு புறத்தில் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல் காரணமாக மோசமாகப் பாதிக்கப்படுபவர்கள் வடக்கு மீனவர்கள். அதனால்தானோ என்னவோ அரசும் இந்த விடயத்தில் பாராமுகமாக இருக்கிறது.



# சாதனைக்கு பொருளாதாரம் தடையல்ல....!

■ நேர்காணல்- தமிழினியன்



மிகவும் சாதாரண குடும்பம் ஒன்றில் பிறந்து பல கஷ்டங்கள் மத்தியில் தனது விடா முயற்சியால் பாடசாலை மட்ட குறுந்தூர, நெடுந்தூர ஓட்டப்போட்டிகளில் தனது பயணத்தை ஆரம்பித்து மாவட்டம், மாகாணம் என பல தங்கப்பதக்கங்களை பெற்று பத்துக்கும் மேற்பட்ட சாதனைகளை சொந்தமாக்கி தேசிய ரீதியில் தங்கம் வெல்ல காத்திருக்கும் சாளினி பற்றியதே இந்த நேர்காணல்.

***உங்களைப்பற்றி கூறுங்கள்?***
எனது பெயர் இராஜசுவேந்திரன் சாளினி. நான் வவுனியா சுந்தரபுரத்தில் வசித்து வருகின்றேன். எனது குடும்பத்தில் 3 சகோதாரர்கள் உள்ளனர். நான் ஆரம்பக் கல்வியை வவுனியா சுந்தரபுரம் அ.த.க பாடசாலையிலும். உயர் கல்வியை வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயத்திலும் பயின்று வருகின்றேன்.

***உங்களின் குடும்பத்தவரின் ஒத்துழைப்புபற்றி?***
எனது குடும்பத்தில் மொத்தமாக ஆறு பேர் உள்ளனர். எனது அப்பாவின் கூலித் தொழில் மூலமே எனது குடும்பத்தை யும் கவனித்து எனது விளையாட்டுக்குமாக அவரால் முடிந்த உதயை செய்து தருகின் றார். நான் போட்டிகளில் பங்கு பற்றுகின்ற போது அப்பா நாள் வேலையை விட்டு எனக்கு ஒத்தாசைகளை செய்து தருவார். மற்றும் அம்மா, அண்ணா, தம்பி, தங்கை எல்லோரும் எனக்கு வேண்டியளவு ஒத்துழைப்புத் தருவார்கள் எனது சகோதரர்களும் விளையாட்டுத் துறையில் ஆர்வம் கொண்டவர்கள் என்பதனால் எனக்கு முழு ஒத்துழைப்பை அவர்கள் தருகின்றனர்.

***பாடசாலையில் உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்கள் பற்றி?***
நான் ஆரம்ப கல்வியை வவுனியா சுந்தரபுரம் அ.த.க பாடசாலையில் கற்று வரும் போது அதிபரான சகாயராஜா அவர்களும் எனது உடற்கல்வித் துறையின் ஆசிரியர் ஜெயநேசன் மற்றும் ராதா ஆசிரியரும் எனக்கு முழுமையான உதவிகளை விளையாட்டுத் துறைக்காக செய்து தந்துள்ளனர். நான் உயர் கல்வியினை கற்பதற்காக வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயத்தில் இணைந்த பொழுது எனது திறைமைகளை இனங்கண்டு கொண்ட பாடசாலை சமூகம் எனக்கு பாடசாலை விளையாட்டுத்துறை சார்ந்த உதவிகளையும் ஏனைய உதவிகளையும் செய்து தந்தது. இதில் பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் மேலும் உடற்கல்வித்துறை பொறுப்பாளரான ராஜகாந்தன் ஆசிரியர் என அனைவரினதும் பங்கு அளப்பரியது.

***பயிற்றுநர் பற்றிக் கூறுங்கள்?***
நான் ஜெயநேசன் ஆசிரியர் அவர்களிடம் ஆரம்ப பயிற்சிகளை பயின்று வந்தேன். அவர் எனது மேலதிக பயிற்சிகளுக்காக என்னை வவுனியா மாவட்ட மெய்வன்மை பயிற்றுநர் விஜிதரன் ஆசிரியரிடம் சேர்த்து விட்டார். அன்றிலிருந்து இன்றுவரை அவரிடமே எனது பயிற்சிகளை தொடர்கின்றேன். நான் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவள் இதனால் எனக்கு இருக்கும் பொருளாதாரப் பிரச்சனைகளை இனங்கண்டு எனக்கு போதுமான உதவிகளை செய்து தந்துள்ளார். நான் மாகாண மற்றும் தேசிய ரீதியில் சாதித்ததில் பயிற்றுவிப்பாளர் விஜிதரனின் பங்கு அளப்பெரியது.

***இது வரையில் நீங்கள் பங்குபற்றிய போட்டிகள் பற்றி கூறுங்கள்?***
2009ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரை சற்று அதிகமாக போட்டிகளில் பங்குபற்றி வருகின்றேன். நான் முதற் தடவையாக 17 வயதுப்பிரிவில் வடமாகாண பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டியில் 1500மீற்றர் ஓட்டத்தில் தங்கப்பதக்கம் வென்றேன்.
அனைத்திலும் தங்கப்பதக்கம் வென்று படிப்படியாக முன்னேறி தேசிய மட்டத்திலும் பங்கெடுத்துள்ளேன். சாதனைகள் என்று பார்க்கின்ற பொழுது 5000மீற்றர், 1500 மீற்றர், 800மீற்றர் ஆகிய பிரிவுகளில் மாகாணமட்டத்தில் ஆறு சாதனைகளை நிலைநாட்டியுள்ளேன். மாகாண மட்ட திறந்த போட்டியிலும் ஊர்சுற் றும் ஓட்டம், 42கிலோமீற்றர் மரதன் ஆகிய போட்டிகளிலும் ஐந்து சாதனைகளை நிலைநாட்டியுள்ளேன். இந்த சாதனைகளுக்காக வடமாகாணத்தின் விளையாட்டுக்கான உயரிய விருதான வர்ணவிருதினை கடந்த நான்கு வருடங்களாகாக நான் பெற்றேன்.

***நீங்கள் எதிர்நோக்கிய பிரச்சனைகள் பற்றி கூறுங்கள்?***
நான் மட்டுமல்ல பொதுவாக என்னைப் போன்ற வடமாகாண விளையாட்டுவீரர்கள், வீராங்கனைகள் அனைவரும் எதிர்கொள்ளும் பொதுவான ஒரு பிரச்சனை வளப்பற்றாக்குறையே. இங்குள்ள வீரர்கள் அனைவரும் திறைமையானவர்கள்.
போதிய பயிற்சியின்மையும், பயிற்சிகள் பற்றிய தெளிவின்மையும், தேசிய, சர்வதேச தரமுடைய வளங்களின் பற்றாக்குறையுமே எம்மை முடக்குகின்றது. இவையே தற்பொழுது நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்.

***இந்த விளையாட்டில் ஈடபடவுள்ளவர்களுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்? உங்களது எதிர் கால இலட்சியம்?***
இந்த விளையாட்டில் மட்டுமல்ல பொதுவாக விளையாட்டுத்துறையை பொறுத்த மட்டில் எப்போதும் அர்பணிப்புடன் செயற்பட வேண்டும். நாம் உயர்வான நிலைக்கு செல்லவேண்டும் என்ற இலக்கை எப்போதும் எமது மனத்தில் வைத்துக் கொண்டு பயிற்சிகளை குறித்த இலக்குடன் பயிற்றுநருக்குக் கீழ்ப்படிந்துப் பயிற்சிகளை செய்து வந்தால் இந்த துறையில் மட்டுமல்ல எந்தத் துறையிலும் உயர்வான நிலையை அடைய முடியும்.
சாளினிக்கு மட்டுமல்ல சாளினியைப் போன்ற பல வீர, வீராங்கனைகளின் விசேட தேவையான வளப்பற்றாக்குறை தீர்க்கப்பட்டு சர்வதேச தரத்துக்கு நிகரான பயிற்சிகளும் பக்கச்சார்பற்ற வாய்ப்புக்களும் கிடைக்கப்பெறும் பட்சத்தில் வடமாணத்தில் இருந்தும் வீரர்கள் சாதிக்கத் தயாராவார்கள். இதற்கு இந்த நேர்காணலில் வரும் சாளினியே ஒரு எடுத்துக்காட்டு.



# சிமித்துக்கு ஒரு மடல்...

■ பிரகாஸ்

அன்புள்ள சிமித்துக்கு நான் நலம், நீங்கள் எப்படியும் நலமாக இருக்க மாட்டீங்கள் எண்டு எனக்கு தெரியும். என்ன பண்ணுறது எல்லாம் விதி. ஏனெண்டா பாருங்கோ கடந்த வருட கடைசியில் அறிமுக மற்றும் அனுபவம் இல்லாத வீரர்களை கொண்டு டெஸ்ட் ஆட்டங்களில் களமிறங்கிய இந்திய அணியைப்போட்டு புரட்டி எடுத்தீர்கள். அறிமுக, அனுபவம் இல்லாத வீரர்களைக்கொண்டு ஒருநாள் ஆட்டங்களில் விளையாடுவது என்பதே கஸ்டம் டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடுவது என்பது அதைவிட கஸ்டம். இதெல்லாவற்றையும் விட அந்நிய மண்ணில் அறிமுக வீரர்களைக்கொண்டு களமிறங்குவது தற்கொலைக்கு செல்லுவது போன்றது. இப்படி பலவீனமான நிலையில் இருந்த இந்திய அணியை போட்டுப்புரட்டி எடுத்துவிட்டு பெருமை வேறு.
இப்பொழுது எங்கட பிரச்சினை என்னவென்றால் உலகக்கிண்ண தொடரில் எனது அதிரடி தொடரும் எண்டு ஒரு வார்த்தை நீங்கள் சொன்னது தான். ஏனெண்டு கேட்டா பாருங்கோ, நீங்கள் அதிரடியை தொடரப்போறியள் எண்டு மற்ற வேலையையெல்லாம் விட்டுட்டு எழுந்து தொலைக்காட்சிக்கு முன்னால் இருந்தால் இங்கிலாந்துடன் 5 ஓட்டங்களுடன் நடையை கட்டினீர்கள். நியூஸிலாந்துடன் 4 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினீர்கள். ஓ இதுதான் உங்கட அதிரடியோ! ஏன் உங்களுக்கு இந்த வேண்டாத வேலை. போர்மில் இருந்தமா, ஓட்டங்களை குவித்தமா, பேசாம வீட்டுக்கு போனமா எண்டு இருக்காம இப்பிடி தேவையில்லாத அறிக்கையெல்லாம் எதுக்கு. உங்கட கெட்ட காலம் பங்களாதேஷ் ஆட்டத்தை மழை வந்து குழப்பிட்டு. இல்லாட்டி பங்களாதேஷ் அணியை ஒரு வெளுவை வெளுத்திருக்கலாம். இதுவரைக்கும் இந்த உலகக்கிண்ண தொடரில் நீங்கள் எடுத்த மொத்த ஓட்டங்களின்ர எண்ணிக்கை எப்பிடி கூட்டிப்பாத்தாலும் 09 தான் வருது. அதிகூடிய ஓட்டம் 05. போற போக்கை பார்த்தா உலகக்கிண்ண அணியில் நீங்கள் கடைசிவரை இருப்பதே சந்தேகமா இருக்கு. இந்த எண்ணம் உங்களுக்கும் இருக்கத்தான் செய்யும் நீங்கள் ஒண்டுக்கும் பயப்பிடாதேங்கோ உங்களுக்காகவே உங்கள் குழுவில் ஆப்கான், ஸ்கொட்லாந்து போன்ற அணிகள் காத்துக் கிடக்கின்றன. போய் விளாசித் தள்ளுங்கோ. நீங்கள் தான் செத்த பாம்பை அடிக்கிறதில விண்ணனாச்சே. ஆனாலும் கொஞ்சம் கவனமாக இருப்பது நல்லது. இனிமேல் இப்பிடி புளுகிக்கொண்டு இருக்காதேங்கோ பிறகு மதிக்க மாட்டாங்கள். நன்றி.
(தொடர்ந்து எழுதுவோம்) ■

# தேசியத்தில் ஆதிக்கம் செலுத்தும் யாழ்.பல்கலை



யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் அபிகரன் இலங்கைப் பல்கலைக் கழக விளையாட்டு சங்கத்தினால், இலங்கைப் பல்கலைக்கழக தேசிய கூடைப்பந்தாட்ட அணிக்கு தெரிவுசெய்யப் பட்டுள்ளார். இந்த அணித் தெரிவில் இலங்கைப் பல் கலைக் கழகங்களின் சிறந்த கூடைப்பந்தாட்ட வீரர்கள் கலந்து கொண்டனர். இவ் அணியானது இந்த மாதம் (06.03.2015 தொடக்கம் 22.03.2015வரை) கொழும்பில் நடைபெறவுள்ள 50ஆவது தேசிய சிரேஸ்ட கூடைப்பந்தாட்ட தொடரில் பங்குபற்றவுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவி சுபோதினி விதானகே இலங்கைப்பல்கலைக்கழக விளையாட்டு சங்கத்தினால் இலங்கைப் பல்கலைக்கழகங்களின் ஹொக்கி தேசிய பெண்கள் அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். இலங்கையின் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலிருந்தும் ஹொக்கி வீராங்கனைகள் இத்தெரிவில் பங்குபற்றியிருந்தனர். யாழ். பல்கலைக் கழகத்திலிருந்து மேற்படி அணிக்கு பெண் வீராங்கனை ஒருவர் தெரிவுசெய்யப்பட்டிருப்பது இதுவே முதல்தடவையாகும்.



# குழந்தை பெறும் குழந்தைகள்!

ஸ்டெபானி சின்க்ளெயர்

இப்போது 14 வயதாகும் சாண்ட்ராவுக்கு 3 ஆண்டுகளுக்கு முன்னால் திருமணம் நடந்தது. அவருக்கு இப்போது 5 மாதத்தில் அலெக்சான்டர் என்ற ஆண் குழந்தை இருக்கிறது. கணவருக்கு வயது 26. இது கவுதமாலா நாட்டில் வியப்பளிக்கும் செய்தியே அல்ல. அந்நாட்டில் திருமணத் தகுதி வயது 14தான். பெற்றோரின் சம்மதத்துடன் திருமணம் செய்துகொள்ளலாம் என்கிறது சட்டம். இதுகூட கட்டாயம் அல்ல, வெறும் யோசனைதான்.

அந்த நாட்டின் சமூகச் சூழல் காரணமாக, இளம் பெண்களுக்கு வெகு விரைவிலேயே திருமணம் செய்துவிடுகின்றனர். எனவே சிறுமியா, குமரியா, பெண்ணா? என்று தீர்மானிக்க முடியாத பருவத்தில் இருக்கும் பலர், இளம் கர்ப்பிணிகளாக மருத்துவமனைகளில் காணப்படுகின்றனர்.

நாட்டின் வடக்கில் உள்ள பெடன் என்ற பகுதியில் இந்த 14 வயது என்பதுகூட மதிக்கப்படுவதில்லை. அதற்கும் முன்னரே பெண்கள் திருமணம் செய்து வைக்கப்படுகின்றனர் அல்லது கருத்தரித்துவிடுகின்றனர். எனவே, சான் பெனிடோ பகுதியில் மருத்துவ ஆலோசனைக்காகவும் மருத்துவ சோதனைகளுக்காகவும் இந்த இளம் தாய்மார்கள் போவதும் வருவதுமாக இருப்பதைப் பார்க்க முடிகிறது.

### மிக இளம் வயதுத் திருமணம்

புழுதி படிந்த சாலைக்ளைக் கொண்ட கிராமப் பகுதிகளிலிருந்து துணைக்கு அம்மாவையோ மாமியாரையோ அழைத்துக்கொண்டு மருத்து வமனைகளுக்கு வருகின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டு நிதியம் என்ற அமைப்பும், திருமணத்துக்கு மிகவும் இளையவர்கள் – கவுதமாலா என்ற தன்னார்வத் தொண்டு அமைப்பும் இணைந்து இத்தகைய தாய்மார்களின் நலனுக்கான களப் பணியில் இறங்கியிருக்கின்றன. அவர்களின் சார்பில் நானும் சென்று இளம் பெண்கள் பலரைப் பேட்டி கண்டேன்.

மிக இளம் வயதிலேயே திருமணம் செய்துகொண்டு கர்ப்பவதியாகும் பெண்கள் அதிகமுள்ள நாடுகள் என்ற வரிசையில், நான் சுற்றிப் பார்க்கும் பத்தாவது நாடு இது. 2003 முதல் இப்படிப் பேட்டி கண்டு காணொலிக் காட்சிகளாக ஆவணப்படுத்தி வருகிறேன். முதலில் ஆப்கானிஸ்தானில்தான் இப்படிச் சிலரைப் பார்த்தேன். 18 வயதுக்கு முன்னாலேயே பெண்களுக்குத் திருமணம் செய்துவைக்கும் வழக்கம் உலகில் 50க்கும் மேற்பட்ட நாடுகளில் இப்போதும் இருக்கிறது. வளரும் நாடுகளின் கிராமப்புறங்களில் நிலைமை இன்னும் மோசமாக இருக்கிறது. கவுதமாலாவின் கிராமங்களில் 20 முதல் 24 வயது வரையிலான பெண்களைப் பேட்டி கண்டதில் அவர்களில் 53% பேர் 18 வயதுக்கு முன்னரும், 13% பேர் 15 வயதுக்கு முன்னரும் திருமணம் செய்துகொண்டவர்கள் என்று தெரியவந்தது.

### உயிருக்கே ஆபத்து

மிக இளம் வயதில் திருமணம் செய்துகொள்ளும் பெண்கள் அனுபவிக்கும் துயரங்கள் அனைத்தும் இவர்களுக்கும் ஏற்படுகின்றன. முதலில் இவர்களுடைய கல்வி பாதிக்கப்படுகிறது. பள்ளியிறுதி வகுப்பைக்கூடத் தொட முடிவதில்லை. ஏராளமானோர் ஆரம்பக் கல்வியுடன் படிப்பை நிறுத்திவிடுகின்றனர். உடல் ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் துன்புறுத்தப்படுகின்றனர். மகப்பேறு என்பது உயிருக்கே ஆபத்தானதாகப் பலருக்கு மாறிவிடுகிறது. ஊட்டச்சத்துக் குறைவு, போதிய மருத்துவக் கவனிப்பு இல்லாமை போன்றவையும் அவர்களை வாட்டுகின்றன.

இந்தப் பெண்கள் கருத்தரித்தாலும் அவர்கள் மருத்துவ ஆலோசனை பெறுவதும், மருந்து மாத்திரைகள் வாங்கி உட்கொள்வதும் வீட்டில் உள்ள பெரியவர்களின் அனுமதியைப் பொறுத்துதான் இருக்கிறது. பெரும்பாலான பெரியவர்கள் (ஆண்கள்), பெண் என்பவள் வீட்டு வேலையைச் செய்வதற்கும் கணவனுக்கு சுகம் கொடுப்பதற்காகவும்தான் என்று கருதுகின்றனர். இயல்பாக உடலில் இருக்கும் சக்தியே போதும், மருத்துவ ஆலோசனையோ மருந்துகளோ அவசியம் இல்லை என்று தடுத்துவிடுகின்றனர். இதனால் தாயும் சேயும் ஊட்டச்சத்துக் குறைவால் பாதிக்கப்படுகின்றனர்.

மருத்துவமனைகளுக்குக் கிராமங்களிலிருந்து செல்ல மணிக்கணக்கில் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. பிரசவத்தின்போது தாய் இறப்பது கவுதமாலாவில் 1 லட்சம் குழந்தைகளுக்கு 172 என்ற அளவிலும், சிசு இறப்பு ஆயிரத்துக்கு 40 என்ற வீதத்திலும் இருக்கிறது.

சம்மதத்துடன் திருமணம் செய்துகொள்ளலாம் என்கிறது சட்டம். இதுகூட கட்டாயம் அல்ல, வெறும் யோசனைதான். அந்த நாட்டின் சமூகச் சூழல் காரணமாக, இளம் பெண்களுக்கு வெகு விரைவிலேயே திருமணம் செய்துவிடுகின்றனர். எனவே சிறுமியா, குமரியா, பெண்ணா என்று தீர்மானிக்க முடியாத பருவத்தில் இருக்கும் பலர், இளம் கர்ப்பிணிகளாக மருத்துவமனைகளில் காணப்படுகின்றனர். நாட்டின் வடக்கில் உள்ள பெடன் என்ற பகுதியில் இந்த 14 வயது







### குழந்தை ' அதிசயங்கள்

மருத்துவமனைக்கு நான் சென்றபோது, பிரசவத்துக்குப் பிறகு குழந்தைகள் கவனிப்புப் பிரிவில் நான்கு சிசுக்களே இருந்தன. அந்த நான்கும் 14 வயதுத் தாய்மார்களுக்குப் பிறந்தவை. இந்தக் குழந்தைகளை நாங்கள் அதிசயங்கள் என்றே அழைக்கிறோம். ஏனென்றால், ஒன்றரை பவுண்டு எடைகூட இல்லை ஒவ்வொன்றும் என்கிறார் டாக்டர் டேனியல் ஆல்வாரெஸ்.

இவ்வளவு சிறிய குழந்தைக்கு சிகிச்சை தர எங்களிடம் கருவிகள்கூட இல்லை என்கிறார் அவர். இந்த சிசுக்களை மருத்துவமனையிலிருந்து வீட்டுக்கு அழைத்துச் சென்ற பிறகுதான் இந்த இளம் தாய்மார்களுக்குப் பிரச்சினைகள் ஆரம்பமாகின்றன.

இந்த இளம் தாய்களை அவர்களின் கணவர்கள் அப்படியே விட்டுவிட்டுப் போய்விடுகின்றனர். குடும்பத்தைக் காப்பாற்றச் சம்பாதிப்பது அல்லது வீட்டுவேலைகளுக்குப் போவது என்ற பொறுப்புடன் சிசுக்களை வளர்க்கும் கடமையும் சேர்ந்துகொள்கிறது.

அராஸ்லி என்ற பெண்ணின் துயரம் இன்னும் கடுமையானது. அவர் 4 மாதக் கர்ப்பம் என்று தெரிந்ததும் அவருடைய கணவன் கோபப்பட்டு, இது என்னுடைய குழந்தை அல்ல, இனி நான் உன்னோடு வாழ மாட்டேன் என்று கூறிச் சென்றுவிட்டான். 15 வயதாகும் அவர் இப்போது தனியாளாக அந்தக் குழந்தையையும் சேர்த்துப் பார்த்துக் கொள்கிறார். குழந்தை தொடர்ந்து அழுதால், அதன் காரணம் என்ன என்றுகூடத் தெரியாத நிலைதான் இந்த இளம் பெண்களிடம் காணப்படுகிறது.

“நான் கர்ப்பமாக இருந்தபோது என் கணவர் வந்துகூடப் பார்க்கவில்லை. செலவுக்கும் பணம் தரவில்லை. எனக்கு ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு இப்போது 1 வயதாகிறது. நான்தான் காப்பாற்ற வேண்டியிருக்கிறது” என்று கண்ணீருடன் கூறினார். இவர் மட்டுமல்ல, அனேக இளம் பெண்கள் இப்படித்தான் குழந்தையும் கவலையு மாக இருக்கிறார்கள் கௌதமாலாவில்.

2015இல் மட்டும் 5.5 லட்சம் கவுதமாலா பெண்கள் தங்களுடைய 18 வயதுக்கு முன்னாலேயே திருமணம் செய்துகொண்டுவிடுவார்கள் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகை நிதியம் என்ற அமைப்பு தெரிவிக்கிறது. சராசரியாகத் தினம் 1,500 பெண்களுக்குத் திருமணம் நடக்கிறது. இது ஒரு தொடர்கதை!

*(மூலம்: நியூயோர்க் ரைம்ஸ்)*

